வரு.74 இல. 35 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2022 ஓகஸ்ட் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

August 28 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-






03
திடீர் தேர்தல் மூலம் எந்தப் பயனுமே கிடையாது!



07
சர்வகட்சியை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி



12
மண்ணெண்ணெய் கிடுகிடு விலையேற்றம்!



24
தலை நிமிர்வதற்கான நேரம்...

## தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வு காண சரியான காலம் கனிந்துள்ளது;

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாகம் அவசியம்



**தமிழ் கட்சிகள் தமக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அதற்கான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்**

**ஈ. பி .டி. பி கட்சியின் செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்க அழைப்பு**

நமது நிருபர்

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் சூழல் தற்போது இல்லாத பட்சத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தமக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்து இடைக்கால நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது அழுத்தத்தை ஒருமித்த குரலில் கொடுக்க வேண்டுமென ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம், கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்க கோரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் இதுவரை காலமும் தமக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்ட வரலாற்றை நாங்கள் இனியும் தொடர முடியாது. அதனை மாற்றியமைத்து எமக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி அதனை மத்திய அரசாங்கத்தின் தலைமைக்கு கொண்டு வர வேண்டிய ஒரு சரியான சந்தர்ப்பம் இப்போது எழுந்துள்ளது.

எனவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக தமிழ்க் கட்சிகள் தமக்கிடையே இதய சுத்தியுடன் ஒற்றுமைப்பட்டு ஒரு தீர்வைக் கண்டு அதனை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க முன்வர வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் நம்பிக்கை கொண்டு செயல்படுகின்ற நிலைமையை நாங்கள் காண்கின்றோம். அதேபோன்று அவரும் சிறுபான்மை கட்சிகளின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் சரியாக பயன்படுத்தி ஒரு தீர்வைக் காண முன்வர வேண்டும்.

30 வருட கால யுத்தம் குறித்து இனியும் பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை. அது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அதில் சரி, பிழை, தவறு என்று இனியும் காலத்தைக் கடத்தத் தேவையில்லை. அதனால் எந்தப் பிரயோசனமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அதனால் தமிழ் மக்களின் 04

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு
# 07 வருடங்கள் தேர்தலில் போட்டியிட முடியாது



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க 07 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாதென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். நிபந்தனைகளுடன் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு அரசியல்வாதியும் 06 மாத காலத்துக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டால், அவரது குடியுரிமை 07 வருடங்களுக்கு இரத்துச் செய்யப்படும். எனினும் அரசியலமைப்பின் 34 (2) பிரிவின் கீழ் மன்னிப்பு வழங்கப்பட்டால் ஜனநாயக உரிமை வழங்கப்படும். எனினும் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அரசியலமைப்பின் 34 (1) (ஈ) பிரிவின்படியே 04

# IMF - ஜனாதிபதி பேச்சுவார்த்தை சாதகமான கருத்துகள் பரிமாற்றம்

## 31 ஆம் திகதி மற்றுமொரு சந்திப்பு




நாட்டில் தற்போது நிலவும் நிதி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுக்குமிடையில் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் (26) பிற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க Zoom தொழில்நுட்பத்தினூடாக கலந்துரையாடலில் இணைந்துகொண்டதுடன், இரு தரப்பிலும் சாதகமான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மின் கட்டணத் திருத்தம் மற்றும் மதுவரிச் சட்டம் உள்ளிட்ட 04



புனர்வாழ்வு பெற்ற முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவருக்கு இராணுவத்தினரால் முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட புதிய வீடொன்று யாழ். பருத்தித்துறையில் கையளிக்கப்பட்டது.கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர் விஸ். நடராஜா என்பவரின் நிதிப் பங்களிப்பில் இராணுவத்தின் 551 ஆவது படைப்பிரிவின் ஆளணி உதவியில் கட்டி முடிக்கப்பட்ட இந்த வீடு இராணுவத் தளபதி ஜெனரல் விகும் லியனகேயினால் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்ட போது... (படம்: கரவெட்டி தினகரன் நிருபர்)

## அமைச்சர் ஹாபிஸின் அதிரடி நடவடிக்கை
# மணல் மாபியா அலுவலகம் முற்றுகை போலி ஆவணங்களுடன் சிலர் கைது

## குருநாகல், போக்கரல்லயில் சுற்றிவளைப்பு



குருநாகல் போக்கரல்லயில் கடந்த ஐந்து வருடங்களாக செயற்பட்டு வந்த சட்டவிரோத மணல் மாபியாக்களின் அலுவலகமொன்று (24) முற்றுகையிடப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் அதிரடி நடவடிக்கையையடுத்தே இந்த அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அமைச்சின் அதிகாரிகள் மற்றும் 04

# மூன்றரை கோடி ரூபா தங்க நகைகளுடன் பிரான்ஸிலிருந்து வந்தவர் கைது



வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 36,219,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்றுக் (27) காலை கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸிலிருந்து 04

# ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த பொலிஸார் தொடர்பில் விசாரணை

ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்து புகைப்படம் எடுத்த பொலிஸார் மற்றும் ஜனாதிபதி மாளிகைக்குள் பல இடங்களில் புகைப்படம் எடுத்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 04

## மலையகத்தில் சீரற்ற காலநிலை
# நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு அபாயம்




ஹற்றன் விசேட நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து பல பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன.

கினிகத்தேனை, நாவலபிட்டி பிரதான வீதியில் பஹதுலவ பகுதியில் நேற்று ஏற்பட்ட மண்சரிவு காரணமாக ஹற்றன் – கண்டி, கினிகத்தேனை – நாவலபிட்டி உள்ளிட்ட பிரதேசங்களுக்கான பொதுப் போக்குவரத்துகள் 04

## எங்கள் கருத்து...

# அமைச்சர் டக்ளஸ் விடுத்த நல்லிணக்க அறைகூவல்!

இலங்கைத் தேசம் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்றது முதல், கடந்த சுமார் முக்கால் நூற்றாண்டு காலமாக தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். சுதந்திர இலங்கையில் தமிழினத்தின் சாத்விகப் போராட்டம் சுமார் அரைவாசிக் காலம் நீடித்தது. அதன் பின்னர் மீதியான காலப்பகுதியில் மூன்று தசாப்த காலம் ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழினத்தின் அத்தனை போராட்டங்களும் மௌனித்துப் போய் விட்டன. இருவிதமான போராட்டங்களாலும் எதுவித நன்மையும் விளையவில்லையென்பதே உண்மை. அழிவுகள் மட்டுமே எஞ்சின. இதற்கான காரணம் பெரும்பான்மையினத்தின் இனவாதப் பிடிவாதம் மாத்திரமல்ல. தமிழினத்தின் அரசியல் தலைமைகளுக்கிடையில் நல்லிணக்கமும், ஒற்றுமையும் இல்லையென்பதுதான் அரசியல் போராட்டங்களின் தோல்விகளுக்கான பிரதான காரணம்!

ஆயுதப் போராட்டம் வேருடன் ஒழிக்கப்பட்டு விட்டதென்பதை தமிழ்த் தரப்பிலுள்ள பிரிவினைவாத எண்ணம் கொண்ட சிறுபிரிவினர் முதலில் ஒப்புக் கொள்ள வேண்டும். சாத்விகப் போராட்டமென்பதன் பேரில் மீண்டும் கண்ணுக்கெட்டாத தொலைவை நோக்கி வீண்பயணம் தொடங்குவதற்கு தமிழ் மக்களுக்கு இனிமேல் திராணி கிடையாதென்பதையும் ஒட்டுமொத்த தமிழ்த்தரப்பும் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறென்றால், தமிழினம் மண்டியிட்டபடி, அரசியல் அநாதைகளாக வாழவே தயாராக வேண்டுமென்று அர்த்தம் கொள்ளலாகாது! 04

# குழந்தைகள் உட்பட எட்டு இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடியில் தஞ்சம்

- தமிழக கரையோர பொலிஸாரினால் மீட்பு
- தமிழகம் சென்றோர் எண்ணிக்கை 157ஆக உயர்வு



திருச்சி ஷாஹுல் ஹமீட்,யாழ். விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்

இலங்கையிலிருந்து படகு மூலம் அகதிகளாக தனுஷ்கோடிக்கு அடுத்துள்ள 01ஆம் மணல் திட்டில் குழந்தைகளுடன் தஞ்சமடைந்த இலங்கை தமிழர் 08 பேரை இந்திய கடலோர பொலிசார் மீட்டுள்ளனர். 04

# நீர்க் கட்டண அதிகரிப்பு: செப்டம்பர் முதல் அமுல்

## அதி விசேட வர்த்தமானி வெளியீடு



நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக்குரிய கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தம் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் நீர் வழங்கல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 04

# டீசல், பெற்றோல் விநியோகம் இரண்டு நாட்களுக்குள் சீராகும்

## CPC கையிருப்பை முகாமைத்துவம் செய்கிறது

எரிபொருள் விநியோகம் நாளை திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை மீண்டும் சீராகுமென மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களினால் செய்யப்பட்டுள்ள முன்பதிவுக்கமைய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் விநியோகம் செய்யப்படாமையின் காரணமாகவே நிரப்பு நிலையங்களுக்கருகில் மீண்டும் வரிசைகள் உருவாக ஆரம்பித்துள்ளன. எவ்வாறிருப்பினும் நாளை திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை நிலைமை சீராகுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

டீசல் மற்றும் பெற்றோல் ஆகிய இரண்டையும் 04

## கம்பஹா துப்பாக்கிச் சூடு;
# இரண்டு பெண்கள் உட்பட 06 சந்தேக நபர்கள் கைது

கம்பஹா பிரதேசத்தில் உள்ள சிகை அலங்கார நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 06 சந்தேக சபர்கள் (26) விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 06 ஆம் திகதி கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள சிகை அலங்கார நிலையமொன்றில் அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் உட்பட சந்தேக நபர்கள் 04



நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் 'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் திரு, திருமதி கேதீஸ்வரன் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி அம்ரிதா கேதீஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

# 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்'

## நூல் வெளியீட்டு விழா

ஊடக அனுசரணை

தினகரன் THINAKARAN — தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

லேக் ஹவுஸ், நிறுவனத்தின் வெ ளியீடுகளான தினகரன்,தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல் பத்திகளின் தொகுப்பான 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று பி. ப 2.30 மணிக்கு கொழும்பு - 3 மென்டரினா ஹோட்டலில் நடைபெறும்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் ஏற்பாட்டில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொள்கிறார்.

**நூல் அறிமுக வுரை:** லண்டனிலிருந்து...) பொறியியலாளர் இர்பான் இக்பால். சிரேஷ்ட ஊடகவியலாளர்.

**ஆசியுரை :** ரி. செந்தில்வேலவர், (பிரதம ஆசிரியர் தினகரன்,தினகரன் வாரமஞ்சரி)

**வாழ்த்துரைகள் :**

1. ரவூப் ஹக்கீம் பா.உ தலைவர்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.
2. ரிஷாட் பதியுத்தீன் பா.உ தலைவர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.
3. ஊடகவியலாளர் என். எம். அமீன் தலைவர், முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா.
4. எம். எம். பீர்முஹம்மது தலைவர், மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை.

**நூல் கருத்துரை :**

1. ஏ. எம் நஹியா (முன்னாள் பணிப்பாளர் நாயகம், புனர்வாழ்வு மீனவர் ,வீடமைப்பு மீனவர் நலன்)
2. கவிஞர் ரா. நித்தியானந்தன் (முன்னாள் விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

**நூலாசிரியர் உரை :** இக்பால் அலி

**ஏற்புரை :** சஹீட் எம். ரிஸ்மி (தேசியத் தலைவர், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை)

நூல் வெளியீட்டு விழாவில் அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நாட்டின் உயர்ச்சிக்காகவும் மக்களின் மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி வரும் மக்கள் நலன் பேணும் துறை சார்ந்த இளம் தலைமைத்துவங்களையும் ஊடகத் துறை சார்ந்தவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் உள்ளடங்கும்.












1. **T.SENTHIL VELAVAR** Chief Editor Thinakaran & Varamanjari
2. **Marlin Marikkar,** Associate Editor, Thinakaran & Varamanjari
3. **S. Shrikanth,** Chief Sub Editor, Thinakaran & Varamanjari
4. **J.G. Stephan,** Asst. News Editor – Virakesari, Executive Member: UpCountry Education Development society. Former Secretory – Sri lanka Parliament Journalist Association
5. **k.R.P Haran,** Chief editor, Thinakkural News paper.
6. **M.H.F Husna,** Sub Editor, Thinakkural News paper.
7. **A.R.A.Fareel.** Senior Sub Editor , Vidivelli.
8. **M. Siddique Haniffa,** Senior News Editor ITN, Vasantham TV
9. **M.S.M. Irfan,** Assistant Manager News & Programme Vasantham TV
10. **C.M.B. Ziyam,** Director Tamil News, Sri Lanka Rupavahini Corporation.
11. **M. J. F. Rinoosiya,** Head of the Muslim Service, Sri Lanka Broadcasting Corporation.
12. **Ashraff** A. Samad, Freelance Journalist

## நூல் அணிந்துரையில்...

அகில இலங்கை முஸ்லிம் வாலிப சங்கப் பேரவையின் 54 ஆவது தேசிய தலைவர் எம்.எஸ்.எம். ரிஸ்மி பற்றி இக்பால் அலி ஆக்கியுள்ள 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' என்ற இந்நூல் வரலாற்றுக்கண் கொண்டு பார்ப்பவர்களுக்கு மிகுந்த பிரயோசனமுடையது. மத்திய மாகாண பாத்ததும்பர பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள மடவளையில் பிறந்தவர் ரிஸ்மி. டச்சுக்காரர் கால சமயமாற்றப் பேரலையிலிருந்து தம்மையும் தம் உடன்பிறப்புக்களையும் பாதுகாத்துக் கொள்ளும்

பொருட்டு திருகோணமலையிலிருந்து வெளியேறி கலாவெள ஊடாக பொலன்னறுவைக்கு இடம்பெயர்ந்து, அதன் பின்னர், கண்டியை அடைந்து மடவளையில் குடியமர்ந்தவர்களே ரிஸ்மியின் மூதாதையர்களான மடவளை முஸ்லிம்கள். அவர்களின் குடியமர்வு 1638 1680 இற்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தது. ரிஸ்மி பற்றிய இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.



நூலாசிரியர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்
**இக்பால் அலி**

**அணிந்துரை**

மடவளை மதீனா பாடசாலையிலும் பின்னர் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியிலும் கற்றவர் ரிஸ்மி. உள்ளூராட்சி மன்ற ஆளுகை நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றியிருக்கிறார். மடவளை வை.எம்.எம்.ஏ. யினூடாக தம் சமூகப் பணியை ஆரம்பித்த இவர் காலப்போக்கில், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் மாவட்டப் பணிப்பாளராக, தேசிய பொதுச் செயலாளராக, தேசிய உப தலைவராக வெல்லாம் பணி செய்து அதன் 54 ஆவது தேசியத் தலைவராக இப்போது பணி செய்கிறார். நாடளாவிய ரீதியில் 150 இற்கும் மேற்பட்ட கிளைகளை வை.எம்.எம்.ஏ. தேசிய பேரவை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் கண்டியில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலத்தில் கண்டி முஸ்லிம் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் அதன் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டார். 1915 இலிருந்து இயங்கி வந்த இக் கண்டி முஸ்லிம் சங்கம் 30 வருடங்களின் பின் 29.07.1944 இல் தன் பெயரை கண்டி வை.எம்.எம்.ஏ. என மாற்றிக் கொண்டது.ரிஸ்மியின் ஊரான மடவளையிலும் வை.எம்.எம்.ஏ. இயக்கம் 04.11.1944 இல் தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வியக்கமே மக்கா, மதீனா முதலான சவூதி அரேபியா நகரங்கள் பஞ்சத்தில் சிக்கித் தவித்த போது, பஞ்ச நிவாரண நிதி சேகரித்து அம்மக்களுக்கு உதவிக் கரம் நீட்டியது. அந்த அளவுக்கு தாராள மனம் கொண்ட சமூகப் பற்றாளர்கள் நிறைந்து வாழும் ஊர் மடவளை ஊர். அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் தலைமையில் 02.04.1950 இல் நிகழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் இளைஞர் இயக்கங்கள் அனைத்தையும் ஒரு மத்திய அமைப்பின் கீழ் ஒன்றிணைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது,அதற்கான அங்குராப்பண வைபவம் 30.04.1950 இல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் நிகழ்ந்த போது 17 வை.எம். எம்.ஏ. க்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய 67 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் தான் 'அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை' தோற்றம் பெற்றது. ரிஸ்மியின் கிராமமான மடவளை ஊரில் இயங்கிக் கொண்டிருந்த வை.எம்.எம்.ஏ. யின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். வை.எம்.எம்.ஏ. பேரவையின் முதலாவது தலைவராக எ.எம்.எ. அஸீஸ் தெரிவானார். 1950/51இ 1951/52இ 1952/53 களில் அதன் தலைவராகவும் அதன் காப்பளராகவும் பணி செய்து முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டியாக, இளைஞர் தலைமைத்துவத்தின் செயற்பாட்டு வடிவமைப்பாளராக அஸீஸ் விளங்கினார். 1956




பெப்ரவரியில் கொழும்பு, தெமட்டகொட வீதியில், அதன் தலைமைக் காரியாலயம் அமையும் வரை அஸீஸின் பாண்ஸ் பிளேஸ் இல்லமே வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைமைக் காரியாலயமாக விளங்கியது.

நம்பிக்கை, ஒற்றுமை, கட்டுப்பாடு என்பன இவ்வியக்கத்தின்தாரக மந்திரம் என்பதை அறியும் எவரும் ரிஸ்மி எதை நாடிச் செயற்பட்டார் என்பதைப் புரிந்து கொள்வர். முஸ்லிம் விவாகரத்துச் சட்டம் சம்பந்தமாக முஸ்லிம்களிடையே காணப்பட்ட பிளவுபட்ட கருத்துக்களை அடையாளம் கண்ட வை.எம். எம்.ஏ. பேரவை உயர் நீதிமன்ற நீதிபதி சலீம் மர்சூப், ஜனாதிபதி

சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா முதலானோரின் தலைமையில் இயங்கிய குழுக்களிடையே உடன்பாடு காணும் முயற்சியில் ஈடுபட்டமையும், இவ்விடயமாக 10.09.2018 இல் மொன்டரினா ஹோட்டலில் நிகழ்ந்த கூட்டமொன்றை வை.எம்.எம்.ஏ. பேரவை ஏற்பாடு செய்திருந்தமையும் கவனத்திற்குரியது. சட்டத்தரணி ஜாவிட் யூசுப் நெறிப்படுத்திய மேற்படி கூட்டத்தில் அமைச்சர் அலி சப்ரி முக்கிய உரை நிகழ்த்தினார். வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைவர் கே. டீன் தலைமையில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் ரிஸ்மியின் பங்கும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக

அமைந்திருந்தது. 'வக்ப்' சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக அஸீஸ் தலைமையிலான வை.எம்.எம்.ஏ. தூதுக் குழு அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஏ.பி. ஜயசூரியாவை அவரின் அமைச்சில் சந்தித்துக் க லந் து ை ர யாடியமை போன்ற நிகழ்வுகளும் இச் சந்தர்ப்பத்தில் எம் கவனத்தை ஈர்க்கின்றன. கொரோனாவினால் உயிர் நீத்த முஸ்லிம்களின் நல்லடக்க விடயத்தில் ரிஸ்மி தலைமையில் வை.எம்.எம்.ஏ. பேரவையின் உயர்பீட அங்கத்தவர்களின் கரிசனையும் கவனத்திற்குரியது. கொரோனாவினால் மரணமடைந்தவர்களை ஓட்டமாவடி 'மஜ்மா நகர்' மையவாடியில் நல்லடக்கம் செய்ய ஒத்துக் கொண்டமைக்காக ரிஸ்மியின் வை.எம்.எம்.ஏ.பேரவை ஓட்டமாவடி பிரதேச சபைக்கு விருது வழங்கி கௌரவித்தது.

'இப்பிரதேச மக்களும் ஓட்டமாவடிப் பிரதேச சபையும் கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்யும் விவகாரத்தில் பாரிய தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் செய்துள்ளார்கள். இம்மக்கள் உடல்களைத் தூக்கித் தூக்கி அடக்கம் செய்தது மட்டுமல்ல அந்த மையித்துக்களுடன் வரும் அத்தனை பேருக்கும் உணவு, தங்குமிட வசதி வழங்கி உன்னத மனிதர்களாக இப்பிரதேச மக்கள் வரலாறு படைத்துள்ளனர்' என்று ரிஸ்மி பதிவிட்டிருப்பது கவனத்திற்குரியது. 'இத்தகைய சேவைப் பணியால் நிலைகுலைந்து அல்லலுற்றுக் கொண்டிருக்கும் ஓட்டமாவடி பிரதேச மக்களின் நலனில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகம் கரிசனை கொள்ள வேண்டியிருக்கிறது'

என்ற ரிஸ்மியின் மனிதாபிமானக் கருத்தும் இந்நூலில் பதிவாகி இருக்கிறது.

முஸ்லிம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென புலமைப் பரிசில் திட்டமொன்றை அப்போதைய வை.எம். எம்.ஏ. பேரவைத் தலைவர், என்னுடைய சாஹிராக் கல்லூரி மாணவன், பலஸ்தீனத்தில் இலங்கைத் தூதுவராக இருந்த பௌசான் அன்வர் 2000 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார். பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் இத்திட்டத்தினால் பயன் பெற்றனர். இத்திட்டம் பின்னால் விரிவாக்கம் பெற்று 300 மாணவர்கள் புலமைப் பரிசில் பெறுமளவுக்கு வளர்ச்சி கண்டது.

இந்த விரிவாக்கத்தில் ரிஸ்மியின் பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவமுடையது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

ஏ.எம். நஹியா ...

முன்னாள் பணிப்பாளர் நாயகம் புனர்வாழ்வு மற்றும்
முன்னாள் பணிப்பாளர் நாயகம் மீனவர் வீடமைப்பு, மீனவர் நலன்.















நாட்டின், புகழ்பூத்த கலைஞர்கள், கல்விமான்கள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரை கௌரவிக்கும் "டாப் ஹன்ரட்' நூறுபேருக்கு விருது வழங்கும் விழா அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர. இலக்கிய புரவலர் ஹாஸிம் உமர் மற்றும் சிலுமின பத்திரிகையின் ஆசிரியர் தர்மன்விக்ரமரத்ன ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். பாராட்டுப் பெறுவோர் விருதுகளைப் பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.




# திடீர் தேர்தலுக்கு செல்வதால் எந்தப் பயனுமே கிடையாது!

## நெருக்கடி ஓரளவுக்கு தீரும்வரை தேர்தல் அவசியமற்றது!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

**'திடீர் தேர்தலுக்குச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை. ஒருவேளை, இது சில அரசியல் கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். போராட்டங்கள் என்ற பெயரில் இரு குழுக்கள் செயற்பட்டிருந்தன. ஒரு குழு அமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தது, மற்றைய குழு தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களை உணர விரும்பியது' என்று கூறுகின்றார் ஆளும் கட்சியின் முதற்கோலாசானும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி ஓரளவுக்கு தீரும்வரை தேர்தலுக்குச் செல்ல முடியாது என்பதால், சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் வலியுறுத்தியிருந்தார். இவ்வாறு அமைக்கப்படக் கூடிய சர்வகட்சி அரசாங்கம் எவ்வளவு காலம் செயற்பட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில்: உண்மையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த மிகக் கடினமான முடிவு இதுவாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் 6.9 மில்லியன் வாக்குகளை நாம் இழந்துள்ளோம். எவ்வாறாயினும், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன 6.7 மில்லியன் வாக்குகளைப் பெற்று 145 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை தக்கவைக்க 113 எம்பிக்கள் இருக்க வேண்டும். ஆனால் பாராளுமன்றத்தில் 145 எம்பிக்கள் உள்ளனர். எமது கட்சிக்குப் பெரும்பான்மை இருக்கின்றபோதும் பொதுஜன பெரமுனவைச் சேராத ஒருவரை நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு விடுத்தோம்.

பின்னர் நாங்கள் முன்மொழிந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் அரசியல் நிகழ்ச்சி நிரலை நோக்கி இழுத்துச் செல்லப்பட்ட போராட்டங்களின் அழுத்தத்தின் விளைவாக பதவி விலக நேரிட்டது. எனவே, ஒரு கட்சியாக நாங்கள் பொதுவிருப்பத்திற்கு மதிப்பளிக்க முடிவு செய்தோம். இருப்பினும், தனிப்பட்ட முறையில் நான் அதை பொதுவிருப்பமாக ஏற்கவில்லை. ஒரு குறிப்பிட்ட குழுவினரின் வேண்டுகோளுக்கு இணங்க, எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மக்கள் திரண்டனர். அது இறுதியில் அந்த அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த வழி வகுத்தது. எனவே, பொதுஜன பெரமுன மிகப்பெரிய தியாகத்தை செய்து வருகிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இடைக்கால அரசாங்கத்தை அமைக்க கைகோர்க்க வேண்டுமென அவர்களின் முன்னாள் தலைவராக இருந்த இன்றைய ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யினால் இந்த வாய்ப்பை நிராகரிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமாகப் பணியாற்றினர். தமிழ் தேசிய கூட்டமைப்பும் அந்த அரசுக்கு ஆதரவு வழங்கியிருந்தது.

எனவே, அவர்கள் கைகோர்த்து இடைக்கால அரசை அமைப்பது மிகவும் எளிதாக இருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கைகோர்த்துள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினரும் தமது ஆதரவை வழங்க முடியும். எவ்வாறாயினும், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினால் மிகப்பெரிய தியாகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடி ஓரளவுக்கு தீரும் வரை எங்களால் தேர்தலுக்குச் செல்ல முடியாது. தற்போது மக்கள் தேர்தலை கேட்கவில்லை. தற்போது எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் உரப் பிரச்சினைகளுக்கு சில தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மக்களின் செலவினங்களைக் குறைப்பதற்கும் அவர்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதற்கும் நாம் ஒரு பொறிமுறைக்கு செல்ல வேண்டும். அதைத்தான் எதிர்வரும் இடைக்கால வரவுசெலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

எவ்வாறாயினும், பாராளுமன்றத்திற்கு வெளியே ஒன்றையும், உள்ளே வேறு ஒன்றையும் கூற முடியாது. சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவராக செயற்படும் போது, அவரது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று வந்து ஏன் அமைச்சர் பதவிகளை ஏற்கக் கூடாது? அவர்கள் அனைவரும் அனைத்துக் கட்சி அரசாங்கத்தின் பங்குதாரர்களாக அல்லது அமைக்கப்படவுள்ள இடைக்கால அரசாங்கத்தின் பங்குதாரர்களாக மாற வேண்டும்.

ஜே.வி.பியும் அதன் பங்குதாரர்களாக மாற வேண்டும். இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதன் ஒரே நோக்கம் அது அனைத்து அரசியல் கட்சிகளாலும் பிரதிநிதித்துவப் படுத்தப்பட வேண்டும் என்பதே. யார் வேண்டுமானாலும் அமைச்சர் பதவிகளைப் பெறலாம். இதற்குப் போதியளவு அமைச்சுப் பதவிகள் இல்லையென்றால் எமது பதவிகளை வழங்கிவிட்டு வெளியேறவும் தயாராக இருக்கின்றோம். எரியும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு உதவ வேண்டும் என்றே நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அமைச்சர்கள் தங்களின் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடாது மற்றும் அவர்களின் சலுகைகளை குறைந்தபட்சம் 50 சதவீதம் குறைக்கக் கூடாது என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். எவ்வாறாயினும், அனைத்துத் தரப்பினரையும் இலாகாக்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம், இதனால் குறைந்தது ஒன்றரை வருடமாவது தியாகங்களைச் செய்ய முடியும்.

**கே: விரைவில் மக்களிடம் புதிய ஆணையைப் பெற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**



பதில்: பாராளுமன்றதில் 145 உறுப்பினர்களின் தெளிவான ஆணையைக் கொண்ட அரசு இது. அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்கள் பற்றி நான் பேசவில்லை. இந்தப் போராட்டங்களின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்று அவர்களே இப்போது கவலைப் படுகிறார்கள்? இறுதியில் போதைக்கு அடிமையானவர்களும், பாதாள உலகக் கதாபாத்திரங்களும், தவறு செய்பவர்களும் இருந்துள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது.

உண்மையில், இதனை நாட்டின் பெரும்பான்மையான மக்கள் எதிர்பார்க்கவில்லை. அமைதியான எதிர்ப்பாளர்கள் அமைப்பு மாற்றத்தைக் கோரினர். அதைத்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செய்வதற்கு முயற்சித்தார். இருப்பினும், மக்கள் சிலர் அந்த அமைப்பு மாற்றத்திற்கு ஆதரவாக இல்லை. ஜே.வி.பி போன்று தமது அரசியல் நிகழ்ச்சி நிரலில் செயற்படும் குழுக்கள் ராஜபக்ஷ ஆட்சியை அகற்ற விரும்பின.

> **“ சஜித் பிரேமதாசவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று வந்து ஏன் அமைச்சர் பதவிகளை ஏற்கக் கூடாது? அவர்கள் அனைவரும் அனைத்துக் கட்சி அரசாங்கத்தின் பங்குதாரர்களாக மாற வேண்டும்! ”**

பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால், குறைந்தது ஓரிரு வருடங்களுக்கு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் தேர்தலுக்கு செல்வதே உசிதமானது என ஜனாதிபதி கருதினால் அவரின் முடிவின்படி செயற்பட வேண்டும்.

**கே: ஜே.வி.பி மற்றும் சில பிரிவினர், இந்த நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால், அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்கின்றனர். உங்கள் கருத்து என்ன?**

பதில்: நான் ஒப்புக் கொள்கிறேன். எனவே தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றி புதிய தேர்தல் முறையின் கீழ் தேர்தலை சந்திக்க வேண்டும். 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே மாதிரியானவர்கள் என்று சிலர் கூறினால், தேர்தலுக்குப் போன பிறகு இன்னும் 225 எம்.பி.க்களை தேர்ந்தெடுக்கக் கூடாது. இல்லையெனில் தேர்தல் முறையை மாற்றி புதிய சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். அதன் பின்னரே தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

படிக்காத சிலர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுகிறார்கள் என்று சில பிரிவுகள் கூற முயல்கின்றன. எவ்வாறாயினும், பாராளுமன்றம் வெவ்வேறு பிரிவினரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்கள் அறிவார்ந்த மக்கள் மற்றும் தொழில் வல்லுனர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணி அவர்களின் கருத்துக்களைப் பெற்று அதன்படி செயற்பட வேண்டும். அவ்வாறான பொறிமுறையை உருவாக்குவதுடன், தேர்தல் முறைமையும் மாற்றப்பட வேண்டும்.

அதுவரை, திடீர் தேர்தலுக்குச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை. ஒருவேளை, இது சில அரசியல் கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். போராட்டங்கள் என்ற பெயரில் இரு குழுக்கள் செயற்பட்டிருந்தன. ஒரு குழு அமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தது, மற்றைய குழு தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களை உணர விரும்பியது.



> **போராட்டங்களின் பின்னணியில் போதைக்கு அடிமையானவர்களும், பாதாள உலகக் கதாபாத்திரங்களும், தவறு செய்பவர்களும் இருந்துள்ளனர்**

**கே: நாட்டில் தடை செய்யப்பட்டிருந்த ஆறு சர்வதேச தமிழ் அமைப்புக்கள் மற்றும் 317 நபர்களின் மீதான தடையை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு எடுத்த தீர்மானத்தின் பின்னணியில் உள்ள நியாயம் குறித்த உங்கள் கருத்து என்ன?**

(04ஆம் பக்கம் பார்க்க)




# சுதந்திரம் பெற்று பல தசாப்தங்கள் கடந்த பின்னரும் தொடருகின்ற போராட்டங்கள்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 75 ஆவது இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் போது நாட்டை இணைக்கும் ஐந்து உயிர் எண்ணக்கருக்களை முன்வைத்திருந்தார். உறுதியோடு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதை தவிர வேறு எந்தத் தீர்வும் உலகில் இல்லை. உறுதிப்பாடு என்பதே நாட்டில் இருக்க வேண்டிய முதலாவது உயிர்மூச்சாகுமென்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

முற்றிலும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட மனநிலை இந்தியர்களுக்குத் தேவை என்பதோடு, நூறுவருட கால பிறழ்வான சிந்தனையுடனேயே இன்றும் தேசம் உள்ளதாக நரேந்திர மோடி குறிப்பிட்டார். உறுதிப்பாடு மற்றும் சுதந்திரம் முதலாவது மற்றும் இரண்டாவது உயிரென்று குறிப்பிட்ட அவர், இந்தியாவின் வரலாற்றுரிமை மூன்றாவது உயிர் எனவும் தெரிவித்தார். ஒற்றுமையும் நல்லிணக்கமும் நான்காவது உயிர் என்றும் குடிமக்களின் கடமை மற்றும் பொறுப்பு ஐந்தாவது உயிரென குறிப்பிடலாம் என்றும் மோடி கூறினார்.

அடிமைத்தன உணர்வில் இன்னும் சிக்கியுள்ள இந்தியா, பொற்காலத்தை நோக்கிச் செல்லக் கூடிய கடந்தகால உரிமைகளை மறந்துள்ளது. ஒரே பாரதம் என்ற உணர்வுடன் இணையும் மக்களின் சக்தி மற்றும் பொறுப்பு வலுவானது என தனது உரையில் அவர் குறிப்பிட்டுள்ளது முக்கிய விடயமாகும். இந்தியா காணும் கனவை நனவாக்குவதற்காக எதிர்வரும் 25 வருட காலம் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

எதிர்காலத்தைப் பற்றி காணும் கனவு பெரிதாகும் போது அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு பாரிய முயற்சி எடுக்கப்பட வேண்டும். அதற்காக சக்தியையும் இணைக்க வேண்டியுள்ளது. 1940_42 காலப்பகுதிகளில் அதுதான் நடந்தது என நரேந்திர மோடி தெரிவித்தார். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியில் இருந்து விடுபடுவதற்காக சிலர் தங்களது கையில் கிடைத்த தும்புத்தடிகளைக் கூட கையில் எடுத்ததோடு, ஒரு சிலர் தடிகளையும் எடுத்தார்கள். சிலர் புரட்சியை தேர்வு செய்ததோடு, போராட்டம் அங்கு தெரிவு செய்யப்பட்ட இன்னொரு பக்கமாகும் . இந்த பகுதிகள் ஒன்றிணைந்தன. சிறுசிறு பகுதிகளாக பிரிந்திருந்தால் அடிமைத்தனத்தை இன்னும் தொடர ஏகாதிபத்தியவாதிகளால் முடிந்திருக்கும் என பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு இணைந்ததாக இலங்கையும் சுதந்திரத்துக்காக நடவடிக்கை எடுத்திருந்தது. இரண்டு நாடுகளுக்கும் இடையேயான இடைவெளி பற்றி கவனம் செலுத்தினால் பயணித்த பாதையின் உயர்ந்த மற்றும் தாழ்வான இடங்கள் தெளிவாகத் தெரியும். அரசாங்கம் தவறவிட்ட மற்றும் சரியாக முடிவுகளை எடுத்திருக்க வேண்டிய இடங்கள் பற்றி புரிந்து கொள்ள முடியும்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கை சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளது. இலங்கை கருத்தில் கொள்ள வேண்டிய ஐந்து உயிர் எண்ணக்கரு பற்றி இன்றிலிருந்தே கவனத்தை செலுத்த வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னரான பல தசாப்தங்களுக்கு பின்னரும் கூட இலங்கை மீண்டும் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. கடந்த நாட்களில் கொழும்பு நகரத்தை மையமாகக் கொண்டு நாடு பூராவும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பொதுமக்கள் குழம்புவது இயல்பு. ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் பலவித கருத்துகள், பலவித எண்ணங்கள் தோன்றும் போது சமூகம் அமைதி இழக்கும்.

இலங்கையில் காணப்படும் அமைதியின்மைக்குக் காரணம் என்ன? பொருளாதாரம் பலவீனமாகியுள்ளது. வருமானம் குறைந்து செலவு அதிகரித்துள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளதுடன், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன்களின் சுமையும் அதிகரித்துள்ளது. மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் உள்ளது. பொருளாதாரம் மற்றும் சமூகத்தை மேம்படுத்த விரைவில் எடுக்க வேண்டிய பல முடிவுகள் உள்ளன. சமூகத்தில் ஒழுக்கத்தை உருவாக்க வேண்டும். சட்டத்தை கையில் எடுத்து செயல்படும் வன்முறையாளர்களின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக் கூடாது. பொருளாதாரத்தை சரியான பாதைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஏற்றுமதியை அதிகரித்து அந்நிய செலாவணியை சம்பாதிக்க வேண்டும். செலவை முகாமைத்துவம் செய்யும் அளவுக்கே வருமானத்தை பெற முடியும்.சில வரிகளையும் அதிகரிக்க வேண்டி நேரிடும்.

புதிதாக சிந்திக்க, புதிய கொள்கைகளை உருவாக்க கூடிய கருத்துகள் இந்தியப் பிரதமரின் உரையில் காணப்பட்டன. சுதந்திரப் போராட்டத்தை ஒன்றாக நடத்திய இரண்டு நாடுகளாக பழைய ஏகாதிபத்திய உணர்வுகளை இல்லாமல் ஒழிப்பதற்கு, புதிய மனநிலையை ஏற்படுத்துவதற்கு இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு பாரிய சந்தர்ப்பங்கள் உள்ளன. யுத்தத்தால்,இயற்கை பாதிப்புகளால் மற்றும் பொருளாதார அழிவுகளால் பாடங்களைக் கற்றுள்ள நாம் சரியான பாதைக்காக பொதுநோக்கத்துடன் போராட வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# ஏப்ரல் போராட்டத்தின் பின் பெரும்பான்மையினர் சிறுபான்மை மக்கள் தொடர்பில் நல்லபிப்பிராயம்

## எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



ஏப்ரல் 'அரகல' போராட்டத்தின் பின்னர் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிறுபான்மை மக்கள் தொடர்பில் நல்லபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

காலம் எமக்கு சாதகமாக அமைந்திருக்கும் போது விதண்டாவாதம் பேசிக்கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதனால் காலத்தை கவனத்தில் கொண்டு துரிதமாக இயங்க ஆரம்பித்துள்ளோம். விமர்சனங்களுக்கு அஞ்சி கோழைத்தனமாக ஒதுங்க முடியாது. வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் ஒரு நல்ல நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது என்றார்.

அட்டாளைச்சேனையில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு கலாணிகள் வழங்கும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினரின் மாவட்ட ஆலோசகர் எம்.ஜே.அன்வர் நௌஷாட் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (26) மாலை நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பெண் போன்று வேடமிட்டு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர் கைது

புடவையையும் நீளமான முடியையும் அணிந்து தன்னைப் ஒரு பெண் போன்று காட்டிக் கொண்டு திருட்டுக்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக நபர் ஒருவரையே களுத்துறை வடக்கு பொலிஸார் (26) கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராஜித குருசிங்க தலைமையிலான குழுவினர் சந்தேக நபரை கைது செய்ததுடன், அவர் திருடிய அரிசி, கேஸ் அடுப்பு , தண்ணீர் மோட்டர் உட்பட பல பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் பொலிஸாருக்கு வழங்கி வாக்கு மூலத்தில், பெண் வேடமிட்டு,

திருடுவதற்காக வீடுகளுக்குள் பிரவேசிக்கும்போது அயலவர்களுக்கு சந்தேகம் வராதபடி இருப்பதற்காகவே தான் புடவை அணிந்து பெண் போன்று வேடமிட்டு செல்வதாகவும் அதற்காக பயன்படுத்துவதற்கு தன்னிடம் 07 புடவைகள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அந்தப் புடவைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். களுத்துறையின் லாகொஸ்வத்த பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபரான இவரை களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## எங்கள் கருத்து

### அமைச்சர் டக்ளஸ் விடுத்த நல்லிணக்க அறைகூவல்!

'ஒற்றுமையே பலம்' என்பதை தமிழ் அரசியல் தரப்புகள் அத்தனையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் கோட்பாட்டுரீதியில் தங்களுக்கிடையேயான ஒற்றுமையைக் காண்பிக்க வேண்டுமென்பதே இங்கு முக்கியம். உலக வரலாற்றை நோக்குவோமானால், ஒற்றுமையினாலேயே பெரும் வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையின் அவசியம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சில தினங்களுக்கு முன்னர் விடுத்திருக்கும் பகிரங்க அறைகூவலானது, தமிழ் மக்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்திருக்கின்றது. மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் சூழல் தற்போது இல்லாத பட்சத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து இணக்கப்பாட்டுக்கு வந்து இடைக்கால நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தத்தை ஒருமித்த குரலில் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் அரசியல் தரப்புகள் இனிமேலும் முரண்பாடுகளுக்குள் சிக்கித் தவிக்காமல் ஒன்றுபட வேண்டுமென்றும், இந்த முயற்சிக்காக எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் தாம் தயாராக இருப்பதாகவும் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார். 'கடந்த கால தவறுகளுக்கான காரணங்களை ஆராய்வதை விட்டுவிட்டு இனிமேலாவது ஒற்றுமையுடன் பயணிப்போம்' என்பதுதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அழைப்பின் சாராம்சம்.

தமிழினத்தின் அரசியல் உரிமைகள் விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரிசனையின் வெளிப்பாடு தற்போது தென்படுவதால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பு இவ்வேளையில் பொருத்தமானதாகும். இன்றைய சாதகமான அரசியல் சூழலை தமிழ் அரசியல் தரப்புகள் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதே விவேகமானதாக அமையும்.

## மூன்றரை கோடி ரூபா தங்க ...

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சந்தேக நபர், சுமார் 10 வருடங்கள் பிரான்ஸில் பணிபுரிந்து விட்டு நாடு திரும்பியவர் எனவும் கிறீன் செனல் வழியாக வெ ளியேற இவர் முற்பட்டதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுந்தே நபர் 2414.6 கிராம் தங்க நகைகளை தனது பயணப் பையில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்ததாகவும் சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய மாலபே பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் சம்பவம் தொடர்பில் சுங்கத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## நீர்க் கட்டண அதிகரிப்பு...

இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அனைத்து நீர் பாவனையாளர்களும் தொகுதிகளாப் பிரிக்கப்பட்டு, அதற்கமைய கட்டண விதிப்பு முறைமை குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பாவனையாளர்கள் 12 தொகுதிகளாகப் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

'சமுர்த்தி பயனாளிகள் மற்றும் தோட்டக்குடியிருப்பல்லாத ஏனையோர்', 'சமுர்த்தி பயனாளிகள் அல்லாத தோட்டக் குடியிருப்பாளர்கள்', 'பொதுநீர் குழாய் மற்றும் பூங்கா நீர்குழாய்', 'பாடசாலைகள், மத வழிபாட்டுத்தலங்கள்' , 'அரச நிறுவனங்கள், சிறிய – நடுத்தர கைத்தொழில் அல்லாத ஏனைய தொழில்கள்', 'அரச வைத்திய சாலைகள்' , 'சிறிய – நடுத்தர கைத்தொழில்கள்', 'வணிக நிறுவனங்கள்' , 'துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து','முதலீட்டு சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு நீர் வழங்கல்' , 'மொத்தமாக நீர் வழங்கல்' என்பன இந்த 12 வகைப்படுத்தல்களாகும்.

அதற்கமைய சமுர்த்தி பயனாளிகளுக்கு 75 அலகுகளுக்கு மேல் ஒவ்வொரு அலகுக்கும் 140 ரூபா பாவனைக் கட்டணமும் 1,600 ரூபா வரை சேவைக்கட்டணமும் அறிவிடப்படவுள்ளது. சமுர்த்தி பெறுனர்கள் மற்றும் தோட்டக்குடியிருப்பல்லாத ஏனையோருக்கு 75 அலகுகளுக்கு மேல் ஒவ்வொரு அலகுக்கும் 245 ரூபா பாவனைக் கட்டணமும் 3,500 ரூபா வரை சேவைக்கட்டணமும் அறிவிடப்படவுள்ளது

## நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு...

பாதிப்புக்குள்ளாகியுள்ளன. போக்குவரத்தை சரி செய்வதற்கான நடவடிக்கையை வீதி போக்குவரத்து அதிகார சபை ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக ஹற்றன் கொழும்பு, ஹற்றன் – நுவரெலியா, ஹற்றன் – கண்டி உள்ளிட்ட பிரதான வீதிகளில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டு, மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் இந்த வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு போக்குவரத்து போலிஸார் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக நீரேந்தும் பிரதேசங்களில் பதிவாகி வரும் அதிக மழை காரணமாக காசல்ரி, விமலசுரேந்திர, கெனியோன், லக்ஸபான, நவலக்ஸபான, மேல்கொத்மலை, பொல்பிட்டிய உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

நோர்ட்டன் பிரிஜ் பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக விமல சுரேந்திர நீர்த்தேக்கத்தில் அனைத்து வான் கதவுகளிலும் நீர் நேற்று (27) அதிகாலை முதல் வான் பாய்ந்து வருகின்றன.

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக இரவு வேளையில் அடைமழை பெய்து வருகிறது. இதனால் பல பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் காணப்படுகின்றன. இதனால் மண் மேடுகளுக்கும் மலைகளுக்கு சமீபமாக வாழும் பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டுமென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேநேரம் அதிக மழை பெய்யும் போது நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்து நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்படலாமென்பதனால் நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ்நிலப் பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான மின்சாரத்துறை பொறியியலாளர்கள் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## ஜனாதிபதியின் ஆசனத்தில்...

கொழும்பு கோட்டை நீதவானிடம் பொலிஸார் இதனை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போது கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதவான் திலின கமகே முன்னிலையில் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே ஜனாதிபதியின் நாற்காலியில் அமர்ந்தமை மற்றும் ஜனாதிபதியின் கொடியை பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு பெண்கள் ...

06 பேர் கொனஹென விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23, 24, 26, 29 மற்றும் 39 வயதுடையவர்களெனவும் அவர்கள் பெதியகொட, மாகேவிட மற்றும் கொடுகொட பிரதேசத்தை சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்களிடமிருந்து துப்பாக்கி மற்றும் காரொன்றும் மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொனஹென விசேட அதிரடிப்படையினர் மற்றும் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் .

## குழந்தைகள் உட்பட எட்டு இலங்கை...

அவர்களை அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்து வந்து விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளதாக தமிழ் நாடு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி கடல் வழியாக தமிழகத்துக்குள் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர்.

தனுஷ்கோடி அடுத்துள்ள ஒன்றாம் மணல் திட்டில் குழந்தைகளுடன் இலங்கை தமிழர்கள் தவித்து வருவதாக மீனவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை(27) காலை கரையோர பொலிசார் விரைந்து சென்று தஞ்சமடைந்திருந்த இலங்கை தமிழர்களை பத்திரமாக மீட்டு மண்டபம் அழைத்து சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்த ஜெயந்தி மற்றும் அவரது மூன்று குழந்தைகள்,தலைமன்னாரை சேர்ந்த சசிகுமார் மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் மற்றும் மன்னாரை சேர்ந்த 65 வயது மூதாட்டி இந்துமதி என மொத்தமாக 08 பேர் நேற்றுமுன்தினம் இரவு (26) கண்ணாடி இழை படகில் புறப்பட்டு நேற்று (27) அதிகாலை சுமார் 02 மணியளவில் தனுஷ்கோடி வந்திறங்கியது தெரிய வந்தது. சுமார் 04 இலட்சம் ரூபாய் கொடுத்து படகில் தமிழகத்துக்கு அகதிகளாக வந்து தமிழக முகாம்களில் தங்கியுள்ள தங்களது உறவினர்களுடன் சேர்ந்து வாழலாமென தனுஷ்கோடி வந்ததாகவும்.

தங்களை அழைத்து வந்த படகு தனுஸ்கோடி முதல் திட்டில் இறக்கி விட்டு சென்றதாகவும், அதிகாலை முதல் உணவின்றி கடும் சூறைக் காற்றுக்கு மத்தியில் உயிரை பாதுகாத்து கொண்டு தாங்கள் அணிந்திருந்த ஆடைகளை காட்டி அருகில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்களிடம் காப்பாற்றுமாறு உதவி கோரியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் நேற்று வரை இலங்கையிலிருந்து 157 இலங்கை தமிழர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## டீசல், பெற்றோல் விநியோகம்...

ஒரே தாங்கியில் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுவதனாலேயே பெற்றோல் விநியோகத்தில் நெருக்கடி ஏற்படுவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மீண்டும் எரிபொருள் வரிசைகள் தோற்றம் பெற்றுள்ளமை தொடர்பில் தனியார் எரிபொருள் தாங்கி உரிமையாளர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் டீ.வி.ஷாந்த சில்வா தெரிவிக்கையில் ,

பெற்றோல் விநியோகம் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் , அதனைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படலாம். டீசல் விநியோகத்திலும் கடந்த ஓரிரு தினங்களாக நெருக்கடிகள் காணப்பட்ட போதிலும், முத்துராஜவெல மற்றும் கொலன்னாவை முனையங்களிலிருந்து டீசல் விநியோகம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் டீசல் தட்டுப்பாடு நாளை திங்கள் அல்லது செவ்வாய் கிழமைகளில் சீராகுமென்றார். எவ்வாறிருப்பினும் சில அரச டிப்போக்களில் தமது வாகனங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுவதனால் நாளை திங்கட்கிழமை பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதில் சிக்கல்கள் ஏற்படக் கூடும் என்று அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவை சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வாரம் வருகை தரவிருந்த டீசல் கப்பலொன்று ஒரு நாள் தாமதமாக நாட்டுக்கு வருகை தந்தமையின் காரணமாகவே டீசல் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## IMF ஜனாதிபதி...

திறைசேரி தொடர்பான இக் கலந்துரையாடலில், தேவையான மேலதிக தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கிணங்க, நாளை திங்கட்கிழமைக்குள் தகவல்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆலோசகர்கள், சட்ட ஆலோசகர்கள் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதுடன், எதிர்வரும் புதன்கிழமை (31) அடுத்தச் சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் சபையின் தலைவர் பீட்டர் ப்ரூயர் (Peter Breuer), பிரதித் தலைவர் ஒசைரோ கொசைகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டொபாகன்ஸ், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் உட்பட மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## மணல் மாபியா அலுவலகம் முற்றுகை...

புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியக புலனாய்வு அதிகாரிகள் ஆகியோருக்கு அமைச்சர் விடுத்த பணிப்புரைக்கமைய இரண்டு கிழமைக்குள் இந்த அதிரடி சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியகத்தின் அரச இலட்சினையை போலியாகப் பயன்படுத்தி, மணல் வியாபாரம் மற்றும் நில அகழ்வுக்கு அனுமதி வழங்கிய இடமாக இந்த அலுவலகம் இயங்கி வந்துள்ளது.

இதனோடு தொடர்புடைய சிலரும் இதன்போது கைது செய்யப்பட்டனர். இங்கிருந்த இரண்டு டிப்பர்களையும் பொலிஸார் கைப்பற்றினர். இவை, சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவையென நம்பப்படுகிறது.

அமைச்சின் புலனாய்வுப்பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பில் இந்த இடம் கண்டு பிடிக்கப்பட்டதுடன் இந்த அலுவலகத்திலிருந்து 500 அனுமதிப்பத்திரங்கள் (லைசன்ஸ்) நாளொன்றுக்கு

வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தால் 2,000 ரூபா அறவிடப்படும் ஒரு லைசன்ஸுக்கு இவர்கள் தலா 6,000 ரூபா வீதம் அறவிட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு சட்டவிரோதமாக நாளொன்றுக்கு 30,00,000 இலட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளதாகவும் இச் சட்டவிரோத செயற்பாடுகளை இயக்கி வந்த இவர்களது அலுவலகம் குருநாகல் போக்கரல்ல என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்தார்.

பொலன்னறுவை வெலிக்கந்தயில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர்கள் முதலில் கைப்பற்றப்பட்டதாகவும் கைதானவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலைத் தொடர்ந்து இதன் பின்னணியிலுள்ளோரை கைது செய்வது மற்றும் இதுபோன்ற வேறு இடங்கள் எங்காவது இயங்குகின்றனவா என்பன தகவல்கள் பெறப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும்,சுற்றாடல் அமைச்சின் புலனாய்வுப் பிரிவு இதுபோன்ற சுற்றிவளைப்புக்களை நாடு முழுவதும் நடத்த உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு...

எதிர்காலம் குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். நமக்கிடையே தலைமை யார்? என்கின்ற போட்டியைத் தவிர்த்து தமிழ் மக்களின் எதிர்காலத்துக்காக சிந்தித்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். இதனையே தமிழ் மக்களும், தமிழ் புத்திஜீவிகளும் மதத்தலைவர்களும் கல்விமான்களும் வர்த்தகர்களும், மாணவ சமூகமுமென அனைத்து தரப்பினரும் விரும்புகின்றனர். எனவே நாங்கள் இந்த விடயத்தை தட்டிக் கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்க வேண்டும்.

தமிழ்க் கட்சிகள், தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டிய ஒரு கால கட்டத்தில் இருக்கின்றோம். இந்த முயற்சிக்கு நான் தயாராகவே இருக்கின்றேன். எனக்கு தலைமை தாங்க வேண்டுமென்ற எண்ணம் துளி அளவும் இல்லை. இந்த நல்ல விடயத்துக்கு யார் முன் நின்று தலைமை தாங்கி நடத்தினாலும் அவர்களுடன் இணைந்து செல்ல, இணைந்து பயணிக்க நான் தயாராகவே இருக்கின்றேன்.

எனவே, பூனைக்கு யார் மணி கட்டுவது? என்பதை விடுத்து சகலரும் ஒன்றிணைந்து இந்த நல்ல பணியை முன்னெடுப்போம் என்று அனைத்து தமிழ்க் கட்சி தலைமைகள் மற்றும் உறுப்பினர்களுக்கு நான் பகிரங்கமாகவே அழைப்பு விடுக்கின்றேனென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன் சில வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அரங்கம் எனும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை மீளவும் செயல்படுத்த விரும்பினால் அதற்கு நான் தயாராக இருக்கின்றேன். இல்லை, அது வேண்டாம் நாங்கள் புதிதாக ஒன்று கூடுவோம் என்று கூறினால் அதற்கும் நான் தயாராக இருக்கிறேனென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## திடீர் தேர்தலுக்கு செல்வதால்... (03ஆம் பக்கத் தொடர்)

பதில்: போராட்டங்களின் போது காலிமுகத்திடலில் விடுதலைப் புலிகளை நினைவுகூர நடவடிக்கை எடுக்கப்பட்டதை நாம் பார்த்தோம். யாரும் அதை விமர்சிக்கவில்லை அல்லது ஊடகங்கள் கூட அதைப் பற்றி பேசவில்லை. அந்த சர்வதேச தமிழ் அமைப்புகளின் மீதான தடையை நீக்க பாதுகாப்புப் படையினர் சில வழிமுறைகளை பின்பற்றுவார்களா என்று எனக்குத் தெரியவில்லை. பாதுகாப்புப் படையினர் எப்போதும் சர்வதேச புலனாய்வு அமைப்புகளிடம் இருந்து தகவல்களைப் பெற்று அதன்படி செயல்படுகின்றனர். உண்மையில், அரசாங்கத்தின் மீது சேறு பூசுவதற்காக சில பிரிவுகள் இந்தப் பிரச்சினையை முன்னிலைப்படுத்துகின்றன. எவ்வாறாயினும், காலிமுகத்திடலில் விடுதலைப் புலிகளை நினைவுகூரும் போது அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இந்தச் செயல்களுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

**கே: இந்த நிலையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதை விட அல்லது 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதை விட மக்களின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே முக்கியமானது என்று கூறுபவர்கள் உள்ளனர். இந்தக் கருத்துடன் உடன்படுகின்றீர்களா?**

பதில்: உண்மையில், நானும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றேன். அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்துக்கு வந்து சர்கட்சி அரசாங்கத்துடன் கைகோர்க்கும் என்ற நம்பிக்கையில் 22 ஆவது திருத்தம் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் அத்தகைய ஒருமித்த கருத்தை எட்டவில்லை என்றால், 22 ஆவது திருத்தத்தை கொண்டு வர வேண்டிய அவசியம் உள்ளதா என்பதை நாம் இருமுறை யோசிக்க வேண்டும். இன்று நாட்டுக்கு தேவைப்படுவது 21ஆவது அல்லது 22 ஆவது திருத்தம் அல்ல.

1978 அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, இது 20 முறை திருத்தப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேவைக்கு ஏற்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழு ஏற்கனவே தனது அறிக்கையை கையளித்துள்ளது. அந்த அறிக்கை உடனடியாக அரசியலமைப்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். அனைத்து தரப்பினரும் ஒப்புக்கொண்டால், அந்த பரிந்துரைகளை செயல்படுத்தலாம். இல்லாவிட்டால், அது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, பின்னர் புதிய அரசியலமைப்பை நாட்டுக்கு அறிமுகப்படுத்தலாம். இத்தருணத்தில், இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து எப்படி விடுபடுவது என்பதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

## 07 வருடங்கள் தேர்தலில்...

ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 07 வருடங்களுக்கு அவரால் தேர்தலில் போட்டியிடவோ அல்லது வாக்களிக்கவோ முடியாது.

எவ்வாறிருப்பினும் தேவையான சந்தர்ப்பங்களில் ரஞ்சன் ராமநாயக்கவை தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கலாமென நீதி அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இவ்வாறான நிபந்தனைகளுடன் கூடிய மன்னிப்பே வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அவருக்கு முழுமையான மன்னிப்பு வழங்கப்பட்டு தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததையும் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

## நூல் அணிந்துரையில்... (02ஆம் பக்கத் தொடர்)

மடவளையில் வட்டி ஒழிப்பின் அடையாளமாக அமைந்துள்ள 'அந்நூர் இஸ்லாமிய நிதியம்' வங்கி அமைப்பாக உருமாறிய நிகழ்வும் ரிஸ்மியுடன் சம்பந்தப்படுகிறது. அவ்வமைப்பின் ஆலோசகராகவும், பணிப்பாளர் சபை உறுப்பிராகவும் ரிஸ்மி இருபது வருடங்களாகச்

செயற்படுவதையும் இந்நூல் எமக்கெல்லாம் அறியத் தருகிறது.சமூகம் முன்னேற வேண்டும் என்ற உணர்வை ரிஸ்மியிடம் நான் காண்கிறேன். ரிஸ்மியின் சமூக உணர்வு, சமூகப் பற்று, அதன் வெளிப்படுத்துகை என்பனவற்றைச் சமூகத்தின் கவனத்திற்கு எத்தி வைப்பதன் மூலம் சமூகப் பற்றாளர்கள் பலரை உருவாக்கும் நல்லதொரு முயற்சியைச் செய்திருக்கின்ற இக்பால் அலியும் பாராட்டப்பட வேண்டியவராகிறார். இக்பால் அலியின் இம்முயற்சி சமூக உணர்வு

கொண்ட ரிஸ்மி போன்ற இன்னும் பலரை நிச்சயமாக உருவாக்கும் என நம்பலாம்.

இந்நூலாசிரியர் இக்பால் அலி, 'முற்றத்துக்கு வாருங்கள்','புள்ளிகள் சில புள்ளிகள்' என்ற கவிதை நூல்களை ஆக்கியவர். 'நான் மூன்ற சக்கரக்காரன்', 'அன்பு பெருக' என்ற இரு பாடல் நூல்களையும், 'நல்லதொரு பயணம்' என்ற சிறுவர் கதை நூலையும் இன்று 'முஸ்லிம்களின் வரலாற்றில், கலாநிதி கே.எம்.எச். காலிதீன்' என்ற நூலையும் 'நயனம்' கலை இலக்கிய சஞ்சிகையையும் வெளிக் கொணர்ந்தவர். பிரபல இலத்திரனியல் ஊடகங்களினதும், தேசியப்

பத்திரிகைகளினதும் பிராந்திய செய்தியாளராகச் செயற்படும் இவர் கடந்த 30 வருடங்களாக இலக்கியப்பணி செய்து வருகிறார் என்பதும் பதிவிடற்குரியது. தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவியொருவர் இவரின் கவிதை பற்றிய ஆய்வில் ஈடுபடுவதும் குறித்துச் சொல்லப்பட

வேண்டிய முக்கியத்துவமுடையது. அந்த வகையில் இந்நூல் ஆசிரியர் இக்பால் அலி உயர்வாகப் பேசும் ரிஸ்மி சமூகத்தின் கவனத்திற் குரியவராகின்றார். அவரின் சேவைகளும் சமூகக் கணிப்பில் உயர்வாகத் தெரிகின்றன.

# சர்வகட்சி அரசாங்கத்தில் தமிழர் தரப்பு பங்குபற்றலாமா? இல்லையா?

**தற்போது நாட்டில் அதிகம் பேசப்படும் விடயமாக சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் நடந்துக்கொண்டிருக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள அதிரடியான அரசியல் மாற்றங்களை தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ரணில் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க அனைத்து தரப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ள நிலையில் தமிழர் தரப்பு அதனை எவ்வாறு நோக்குகிறது. சர்வகட்சி அரசாங்கத்தில் தமிழர் தரப்பு பங்குபற்றலாமா? இல்லையா? என்பது தொடர்பில் அவர்களின் கருத்துக்களை கேட்ட போது...**

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**தமிழ் மக்கள் கூட்டணி**



மொட்டுக் கட்சிகளின் அங்கத்தவர்களைக் கொண்டு அரசாங்கம் அமைக்க ஜனாதிபதிக்கு போதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். அப்படி இருந்தும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முயற்சி எடுப்பது ஏன்?

முதலாவது ஜனாதிபதி மொட்டுக் கட்சியின் உறுப்பினர் அல்ல. அவருக்கு சார்பான மற்றைய கட்சிகளின் ஆதரவு அவருக்குத் தேவையாக உள்ளது. இரண்டாவது, விரைவில் ஐக்கிய நாடுகளின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் தொடங்க இருக்கின்றது. அதற்கு முன் தாம் நாட்டின் சிறுபான்மையினருடன் நல்ல உறவில் இருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கின்றது. எனவே தமிழ் பேசும் சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்தில் இடம்பெற வேண்டும் என்று ஜனாதிபதி நினைக்கின்றார். அதனார்தான் நல்லூரான் ஆசியை அண்மையில் நாட்டுக்கு வேண்டியிருந்தார்.

மூன்றாவது, தம்மை எதிர்க் கட்சிகள் தொடர்ந்து விமர்சிப்பதைத் தவிர்க்க இது நல்லதொரு பொறிமுறையாக இருப்பதை அவர் அடையாளம் கண்டுள்ளார்.

நான்காவது, புலம்பெயர் தமிழர்களிடம் இருந்தும் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளில் இருந்தும் முதலீடுகளைப் பெற தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் உறுதுணையாக இருப்பர் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு. இதனால்தான் சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களின் தடையை நீக்கியுள்ளார்.

ஐந்தாவது, பூகோள ரீதியாகப் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. அரசாங்கத்திற்கு முக்கியமாக மேற்கத்தைய நாடுகள், இந்தியா போன்றவற்றின் உதவி வேண்டி இருக்கின்றது. ஆனால் அரசாங்கக் கட்சியான மொட்டுக் கட்சி தனது நிலைப்பாட்டை இதுவரையில் சீனாவின் பக்கமே சார்ந்து காட்டி வந்துள்ளது. இதனை மாற்றியமைக்க மேற்கத்தைய நாடுகளுடனும் இந்தியாவுடனும் சுமூக உறவைத் தற்போது ஏற்படுத்த ஜனாதிபதியின் ஒத்த கருத்தைக் கொண்ட சிலர் பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் இடம் பெற வேண்டும் என்று நினைக்கின்றார்.

ஆகவே தனித்துத் தலைமைத்துவம் வழங்கும் தற்போதைய ஜனாதிபதிக்கு, சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அத்தியாவசியம் ஆகின்றது. இவ்வாறான ஒரு சூழலில்தான் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

இவற்றை மனதில் வைத்தே ஜனாதிபதியுடன் அண்மையில் நடந்த எனது சந்திப்பானது அமைந்திருந்தது. நடந்தவற்றை முன்வைத்து எனது நிலைப்பாட்டை உங்களுக்கு எடுத்தியம்பலாம் என்று நினைக்கின்றேன்.

நாட்டின் நலன் கருதி நாம் சேர்ந்து பயணிப்போம் என்று ஜனாதிபதி கூறிய போது எமது கோரிக்கைகளை உங்கள் முன் வைத்துள்ளோம். அவை பற்றி என்ன செய்யப் போகின்றீர்கள் என்பதை எமக்குக் கூறுங்கள் என்றேன். அவை யாவும் படிப்படியாக தீர்த்து வைக்கப்படும் என்று அவர் கூறிய போது உங்கள் நல்லெண்ணத்தையும் தமிழ் மக்கள் மீதான மனமாற்றத்தையும் எடுத்துக் காட்டுங்கள், அதன் பின் சேர்ந்து பயணிப்பது பற்றித் தீர்மானிப்போம் என்றேன். அதுவரையில் நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்து உங்களுக்கு ஆதரவு வழங்குவோம் என்றேன். அது அவருக்குத் திகைப்பை அளித்தது. முதலில் சேர்ந்து பயணியுங்கள். வேண்டுவதை நான் தருவேன் என்று அவர் பேசினார். ஆனால் அதற்கு நான் இடம் அளிக்கவில்லை. தமிழ் மக்களின் உரித்துக்கள் சம்பந்தமான உங்கள் கருத்துக்கள் அரகலயவின் பின்னர் மாற்றமடைந்துள்ளது என்பதை நாம் உய்துணர வேண்டும். ஆகவே நம் கோரிக்கைகளை முதலில் நிறைவேற்றுங்கள் சேர்ந்து பயணிப்பது பற்றி நாம் பின்னர் பரிசீலிக்கலாம் என்றேன்.

அடுத்து வடகிழக்கு மாகாணக் காணிகளை தொல்பொருள் ஆராய்ச்சி ஆணைக்குழு கையேற்றது தொடர்பாகக் கதைத்தபோது இரண்டு ஏக்கருக்கு மேல் அவர்கள் கையேற்கலாகாது என்று கூறினார். அதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்து எந்தக் காணிகளையும் மத்தி கையேற்பதானால் அது மாகாண சபையின் அனுமதி பெற்றே நடைபெற வேண்டும் என்றேன்.

அடுத்து தேசிய கல்லூரிகள் பற்றிய பேச்சு எழுந்தது. ஆயிரம் அல்லாமல் 50 கல்லூரிகளையே மத்திய அரசாங்கம் கையேற்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார். ஆனால் அதற்கும் நான் மறுப்புத் தெரிவித்து மாகாண சபையின் கீழ் வரும் கல்லூரிகள் எவற்றையும் மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது என்றும் அது சட்டத்திற்கு முரணானது என்றும் கூறி, எமது கூட்டுக் கட்சியானது இதுபற்றி நீதிமன்றத்தை ஏற்கனவே நாடியுள்ளது என்றும் கூறினேன்.

எமது நிலைப்பாடு என்று கூறும் போது நாம் ஒரு முக்கிய விடயத்தை வலியுறுத்த வேண்டும். எமது வடகிழக்கு பிரச்சினைகள் தேசியப் பிரச்சினைகளுடன் தொடர்பில்லாதன. அவை தனித்துவம் வாய்ந்தவை. சர்வ கட்சி அரசாங்கத்துடன் சேர்வதால் எமது தனித்துவமான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படப் போவதில்லை. நாம் வெளியில் நின்று அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதில் பிழையில்லை. அமைச்சுப் பதவிகளைப் பெற்றால் நாம் எமது சுதந்திரத்தைப் பறிகொடுத்து விடுவோம். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பானது எம்மைக் கட்டுப்படுத்தி விடும்.

ஆகவே எனது கருத்துப்படி எதிர்க் கட்சியில் இருந்து நாம் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டு எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே. ஆனால் சில பல காரணங்களுக்காக அதிகாரம் மிக்க பதவிகளை ஏற்கவேண்டி வந்தால் பின்வரும் விடயங்கள் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

ஒன்று, வட கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய பதவிகளைப் பெற வேண்டும்.

இரண்டு, அமைச்சர்களானால் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு கட்டுப்பட்டு நாம் எமது சுதந்திரத்தை இழக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மூன்று, புலம்பெயர் எமது உறவுகளின் முதலீடுகளை வடகிழக்கில் நிலைபெறச் செய்யும் விதத்தில் எமது அதிகாரம் அமைய வேண்டும். அதற்கான கட்டமைப்புக்களை அமைக்க நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

நான்கு, ஐக்கிய நாடுகள் கூட்டம் செப்ரெம்பரில் நடக்க முன் நாம் அதிகாரங்களை பெற முயற்சிக்கக் கூடாது.

ஐந்து, வடகிழக்கு மாகாண வளங்களை வெளியார் சூறையாட விடாது தடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

ஆகவே என் கருத்து எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு வேண்டும் போது அரசாங்கத்திற்கு ஆதரவு அளிக்கலாம். ஆனால் சூழ்நிலை எம்மைக் கட்டாயப்படுத்தி அதிகாரத்தை எம்மீது திணிக்க முயன்றால் கவனத்துடன் நாம் செயற்பட வேண்டும். எமது கோரிக்கைகளை மூன்று மாதங்களுள் நடைமுறைப்படுத்தாவிட்டால் நாங்கள் கட்டாயமாக அமைச்சர் பதவிகளைத் தூக்கி எறிவோம் என்ற நிபந்தனையில் கூட அரசாங்கத்தில் பங்குபற்றலாம்.

**மாவை சேனாதிராஜா –**
**தலைவர் இலங்கை தமிழரசு கட்சி**



சர்வ கட்சி அரசாங்கம் அமையக் கூடிய சாத்தியக் கூறு இதுவரை தென்படவில்லை. அப்படி அமையுமாக இருந்தால், முதலில் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்பு நிறுத்தப்படல் வேண்டும், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படல் வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கும் இனிவரும் காலங்களில் நிறைவேற்றவுள்ள தீர்மானங்களுக்கும் ஒத்துழைப்பு நல்கி அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவே இவ்வாறான பிரச்சினைகளை ஒரு குறுகிய கால எல்லைக்குள் தீர்க்கப்பட வேண்டும் அதற்குரிய நிகழ்ச்சி நிரல் எமக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும்

இதனைவிட முக்கியமான ஆறு மாதம் தொடக்கம் ஒரு வருடத்திற்குள் தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு உத்தரவாதம் இருக்க வேண்டும். அதாவது ஒரு அரசியல் அமைப்பினூடான அரசியல் தீர்வுக்கான உத்தரவாதம் கிடைக்க வேண்டும், அந்த நம்பிக்கை ஏற்படுத்தப்படல் வேண்டும்

மேலும் மாகாண சபை தேர்தல் உடனடியாக நடாத்தப்பட வேண்டும் அல்லது அதுவரைக்கும் வடக்கு மாகாணத்தின் நிர்வாகம், மற்றும் பொருளாதார பணிகளுக்காக இடைக்கால நிர்வாகம் அமைப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்படல் வேண்டும்

அப்போதுதான் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதாக இருந்தாலும் சரி அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பரிசீலிக்க முடியும். ஆனால் அந்த நம்பிக்கை இதுவரை ஏற்படவில்லை.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் –**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**



சர்வ கட்சி அரசாங்கத்தில் பங்குபற்ற முடியாது. தமிழ்த்தேசிய அரசியலை பொறுத்தவரை தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படாது இருக்கும் வரைக்கும் எந்தவொரு அரசாங்கத்துடனும் சேர்வதில்லை என்று. சலுகை அரசியலை நிராகரித்து உரிமை அரசியலுக்காக விட்டுக்கொடுக்காது செயற்பட வேண்டும் என்பது தமிழ்த்தேசிய அரசியலின் மரபு இதனை விட தெற்கில் உள்ள சிங்கள தேசம் தாங்கள் இரண்டு வருடங்களுக்கு முன் கொடுத்த ஆணையை வாபஸ் பெற்று ராஜபக்ச அரசையும் அவர்களுடைய பாராளுமன்றத்தையும் நிராகரிக்கும் நோக்கோடுதான் போராட்டத்தை நடாத்தி கொண்டிருக்கின்றார்கள். சரித்தரத்தில் இல்லாதவாறு 13 இலட்சம் மேலதிக வாக்குகளால் கிடைத்த ஆணையை மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதனை உணர்ந்துதான் கோட்டாபாய தனது பதவியை இராஜினாம் செய்தார்.

எனவே மக்கள் கோட்டா கோ கம என்பது தனியே அவரை மட்டுமல்ல அந்த சிந்தாந்தை அந்த ஆணையை வாபஸ் பெறுவது என்பதே அர்த்தம். எனவே அதன் தொடர்ச்சியாக இருக்கும் பாராளுமன்றம் இருக்கும் வகையில் சிங்கள மக்களின் போராட்டத்திற்கும் அவர்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் துரோகம் இழைப்பதாகத்தான் இருக்கும். ஜனநாயக விரோத நியமனத்திற்கு மக்கள் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அங்கீகாரத்தை பெறுகின்ற நாடகமே சர்வ கட்சி அரசாங்கம் ஆகும்.

ஆகவே இந்த நாடகத்திற்குள் நாங்கள் ஒரு நாளும் சிக்கிக்கொள்ள கூடாது. தமிழ்த் தேசம் சிங்கள தேச மக்களுடன் இருக்க வேண்டுமே தவிர இந்த ஆட்சியாளர்களுடன் சேர முடியாது. சேரவும் கூடாது.

**செல்வம் அடைக்கலநாதன் பா.உ,**
**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**



என்னை பொறுத்தவரை பங்குபற்றக் கூடாது. காரணம் தமிழ் மக்களுக்கு நிறைய பிரச்சினைகள் உண்டு. அரசியல் கைதிகளின் விடுதலை, நில ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயம், மற்றும் தமிழ் மக்களின் உரிமைசார்ந்த விடயங்களில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் அரசுடன் இணைய முடியாது. அத்தோடு எங்களுடைய கட்சியை சேர்ந்த 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் சில வேளைகளில் விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் தரப்பினர் உள்ளிட்ட எங்களுடைய தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் முக்கியமான விடயங்களில் ஆதரவளிப்பது பற்றி யோசிக்கவேண்டும் அல்லது நல்லெண்ண விடயத்தில் சாதகமான நிலைமை இல்லை எனில் எதிர்த்து வாக்களிப்பதையும் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு எங்களுடைய வாக்குகளின் பெறுமதி தெரியும். ஆகவே இதனை விடுத்து நாம் அரசுடனோ அல்லது அமைச்சரவையிலோ இணைய முடியாது.

**முருகேசு சந்திரகுமார் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், சமத்துவக் கட்சி)**



முதலில் சர்வ கட்சி அரசாங்கம் அமையுமா? கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசாங்கம் அமையுமா என் பதில் இன்னும் தெளிவில்லை. அப்படி சர்வகட்சி அரசாங்கமொன்று அமையுமாக இருந்தால் அதில் வெளிப்படைத் தன்மை வேண்டும். நாட்டின் தேசியப் பிரச்சினைகளான பொருளாதாரப் பிரச்சினை, இனப்பிரச்சினை அனைத்துக்குமான உத்தேசத் தீர்வு என்ன? அல்லது அவற்றை உருவாக்குவதற்கு தயார் என்று சொல்ல வேண்டும். கூடவே, உரிய கால அட்டவணையில் இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான செயற்திட்டமும் வகுக்கப்பட வேண்டும். கட்சி நலன்களை விட மக்கள் நலன், நாட்டு நலன் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். இப்படியான ஒரு நிலையில்தான் தமிழர் தரப்பு சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதைப்பற்றிச் சிந்திக்க முடியும்.

இல்லையென்றால் நெருக்கடிகள் மேலும் மேலும் அதிகரிப்பது மட்டுமல்ல, அந்நிய சக்திகளின் காலடியில் சிக்கி, அவர்களின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டி வரும். அது எமது இறைமையை இல்லாதொழிக்கும். இதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அதாவது, எமக்கிடையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவும் இணங்கி வாழவும் தயாரில்லாமல் இருக்கிறோம். அதேவேளை எந்த விதமான யோசினையும் இல்லாமல் வெளிச்சக்திகளுக்குக் கட்டுப்படுகிறோம். இது எவ்வளவு தவறான தற்கொலைக்கு ஒப்பான விடயமாகும். இதைப்பற்றி நான் முன்பு பாராளுமன்றத்திலும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே இந்த உண்மையைப் புரிந்து கொண்டு ஜனாதிபதியும் அரசாங்கமும் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்துவோம்.

இதற்கு அளிக்கப்படுகின்ற உத்தரவாதமும் அது உண்டாக்கும் நம்பிக்கையும் தான் ஏனையோரிடம் சாதக நிலையை உருவாக்கும். அதேவேளை நாமும் (தமிழர் தரப்பும்) வெளிப்படைத்தன்மையுடன் இருப்பது அவசியம். எம்மையிட்ட தவறான புரிதல்களுக்கும் திரிபுபடுத்தல்களுக்கும் நாம் இடமளிக்கக் கூடாது.

இதேவேளை கடும்போக்கைக் கடைப்பிடித்து மேலும் வாய்ப்புகளை இழக்கக் கூடாது. அடுத்து வரும் ஆட்சிக்காலம் எப்படியாக இருக்கும் என்று நாம் அறுதியிட்டுக் கூற முடியாதல்லவா. அது இப்போதையும் விட மோசமாக இருக்கக் கூடும். ஆகவே நமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு தாமதமின்றி முயற்சிக்க வேண்டும். எந்தச் சூழலிலும் நாம் படகோட்டுவோம் என்ற உறுதிப்பாடும் நம்பிக்கையும் நமக்கு அவசியம். அதுவே நாம் மக்களுக்குச் செய்கின்ற பெரும் பணியாகும். எனவே சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதன் மூலம் நமக்கு என்ன நன்மைகள் கிடைக்கும்? அவற்றை எப்படியான பொறிமுறைகளுக்கூடாக, தந்திரோபாயங்களுக்கூடாகப் பெறுவோம் என்று சிந்திப்போம். கடல் அமைதியாக இருந்தால்தான் படகோட்ட முடியும் என்றால் ஒரு போதும் நாம் அதிலே பயணிக்க முடியாது.

**அங்கஜன் இராமநாதன் பா.உ.**
**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி**



சர்வ கட்சி அரசாங்கத்தின் தேவையை உணர்த்துவது தற்போதைய கால சூழ்நிலை. அதாவது பொருளாதார நிலைமை அதனால் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மை எனவே அரசியல் ஸ்திர தன்மையை உருவாக்குவதற்கே சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க முயற்சி செய்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றுதான் எங்களுடைய பொருளாதார பிரச்சினையை தீர்க்க வேண்டும் எனில் அவர்கள் கூறுகின்ற கடன் மறுசீரமைப்பு அவசியம் அதனை மேற்கொள்ள அனைத்து கட்சிகளின் இணைக்கப்பாடு தேவை. இந்த இணக்கப்பாட்டை ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற முறையில் பெறுவது கடினம். எனவே இணக்கப்பாட்டை பெறுவதாக இருந்தால் சர்வகட்சி அரசாங்கம் அல்லது சர்வ கட்சி ஆட்சி உருவாக வேண்டும்.

எனவே இதில் தமிழர் தரப்பு விதிவிலக்காக இருக்க முடியாது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழ் மக்களும் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இந்த பாதிப்புக்களுக்கு தீர்வு காணவேண்டும் எனில் தமிழ்த் தரப்பும் சர்வ கட்சி அரசில் இணைந்துகொள்வது அவசியம்

**தர்மலிங்கம் சித்தார்த்தன் பா.உ.**
**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**



என்னைப்பொறுத்தவரை சர்வ கட்சி அரசோ அல்லது எந்த அரசிலோ தமிழர் தரப்பு தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்கும் வரைக்கும் எந்த அரசிலும் பங்குபற்றக் கூடாது. அதற்கான காரணம் அரசில் இருந்துகொண்டு எங்களுடை பிரச்சினைகளை எடுத்துக் கூற முடியாது ஏனென்றால் அரசுடன் இணைந்துகொண்டு கூட்டுப்பொறுப்புக்குள் வந்துவிட்டால் பின்னர் எங்களுடைய பிரச்சினைகளை கூற முடியாது. இன்று இருக்கின்ற சூழ்நிலையில் நாடு இருக்கின்ற பொருளாதார பின்னடைவில் அதனை கருத்தில் கொண்டு பிரச்சினைகளின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு கட்டாயமாக ஆதரவளிக்க வேண்டும். அதாவது அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும்.

அத்துடன் எங்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக தொடர்ந்து எங்களது குரலை உறுதியாகக் கொடுக்க வேண்டும்.

இதனை தவிர சர்வகட்சி அரசாங்கத்தில் பங்குபற்றினால் எங்களுடைய பிரச்சினைகளை வெளிப்படையாக எடுத்துக் கூற முடியாது. சர்வதேசத்திலும் இதனை மேற்கொள்ள முடியாது. எனவே சர்வ கட்சி அரசாங்கத்தில் நிச்சயமாக பங்குபற்றக் கூடாது.



**மு.தமிழ்ச்செசல்வன்**

தங்கமான மனம் இருக்கிற இடத்தில் தான் தங்கத்தை வைக்க வேண்டும்



• செயல்படுத்தும் கட்டணங்கள் அறவிடப்படுவது இல்லை
• நீண்ட வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை
• விரைவான வாடிக்கையாளர் சேவை
• தங்க ஆபரணங்களை மீட்கும் போது முன்னறிவித்தல் அவசியமில்லை

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.115,000/-
*நிபந்தனைகளிற்குட்பட்டது
011 200 88 88 www.seylan.lk
செலான் தங்கக் கடன்
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: 'A (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வங்கி

**பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள இலங்கையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசாங்கம் இது தொடர்பில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.**



# 2022ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டத்தில் திருத்தம்; நாளைமறுதினம் பாராளுமன்றத்தில் விவாதம் ஆரம்பம்

இதன் ஒரு அங்கமாக 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தில் (வரவுசெலவுத் திட்டம்) திருத்தம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பாராளுமன்றத்தின் ஊடாகப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்து மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையில் இது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

2021ஆம் ஆண்டுக்கான 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் (2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம்) திருத்தங்கள் கொண்டு வரப்படும். விரைவில் இது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி கூறியிருந்தார்.

இதற்கமைய 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் கடந்த 09ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது எதிர்வரும் 30ஆம் திகதி முதல் செப்டெம்பர் 02ஆம் திகதி வரை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய 30ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான ஆரம்ப உரையை நிகழ்த்தவுள்ளார். சுமார் ஒரு மணிநேரம் அவருடைய உரை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பாராளுமன்றம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்படும்.

இதன் பின்னர் ஒகஸ்ட் 31ஆம் திகதி, செப்டம்பர் 01 மற்றும் 02ஆம் திகதிகளில் விவாதம் நடைபெறும். செப்டெம்பர் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 4.30 மணி வரை இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்று பின்னர் குழுநிலையில் திருத்தங்கள் முன்வைக்கப்படவுள்ளது. அதன் பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தில் (வரவுசெலவுத் திட்டம்) அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு அமைச்சுக்களின் சேவைச் செலவீனங்களுக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறு பில்லியன் ரூபாவாகவிருந்த மதிப்பிடப்பட்டிருந்த செலவினத் தொகை மூவாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து பில்லியன் ரூபாவாக அதாவது அமைச்சுக்களுக்கான செலவீனத் தொகைக்கான மதிப்பீடு 929.4 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் அல்லது அதற்கு வெளியே பெற்றுக் கொள்ளக் கூடிய கடன்பெறுகையானது 3,200 பில்லியன் ரூபாவிலிருந்து 4,082 பில்லியன் ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய பாராளுமன்றத்தின் அனுமதியின் கீழ் கடன்பெறக் கூடிய தொகையின் எண்ணிக்கை 892 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கிறது.

2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்படும் போது 32 அமைச்சுக்கள் மற்றும் 43 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செலவுகளுக்கே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், தற்பொழுது திருத்தம் மேற்கொள்ளப்படும் போது ஒட்டுமொத்த செலவீனங்களும் 29 அமைச்சுக்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும் என பாராளுமன்ற ஆய்வுப் பிரிவு தயாரித்துள்ள ஆவனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பார்க்கும் போது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் செலவீனங்களை காலத்தின் தேவைக்கு ஏற்ப மேற்கொள்வதற்கான திருத்தங்களைக் இதன் ஊடாகச் செய்ய முயற்சிக்கின்றது.

இது பற்றிய விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்தும், அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்குப் பொருத்தமான வரவுசெலவுத் திட்டமொன்றை இவ்வருட இறுதியில் சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.




## நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்குப் பொருத்தமான வரவுசெலவுத் திட்டத்தை இவ்வருட இறுதியில் சமர்ப்பிக்க நடவடிக்கைகள்

இவ்வாறான நிலையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடியுள்ளது. இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ள நிலையில், மற்றுமொரு உயர்மட்டக் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. இந்தக் குழுவினர் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்ததுடன், மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு இவ்வருட இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற முடியும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

## இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள்; I.M.F உயர்மட்டக் குழுவின் இலங்கை வருகையையடுத்து, இவ்வருட இறுதிக்குள் கடனைப் பெற முடியுமென நம்பிக்கை

இது இவ்விதமிருக்க, அரசாங்கம் சரியான பாதையில் செல்வதைக் கண்காணிக்கும் வகையில் பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோப், கோபா, அரசாங்க நிதி பற்றிய குழு போன்றவற்றுக்குப் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இது தவிரவும் மேலும் மூன்று நிலையியற் குழுக்கள் அமைக்கப்படவிருப்பதாகவும் சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அதேநேரம், அரசாங்கத்தின் கொள்கைத் தயாரிப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பாராளுமன்றத்தில் அமைக்கப்படும் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. 19 துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் விரைவில் அமைக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக பாராளுமன்றத்தில் எவ்வித பதவிகளையும் வகிக்காத பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலான உறுப்பினர்களைக் கொண்டதாக துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் காணப்படும்.

ஆராயப்படும் விடயம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற தரப்பினரை அழைத்து அவர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரம் இந்தக் குழுக்களுக்கு உள்ளது. அது மாத்திரமன்றி ஆராயப்படும் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று நேரில் கண்காணிப்பதற்கான அதிகாரங்களும் இக்குழுக்களுக்கு உள்ளது. இது போன்ற குழு முறைமையின் ஊடாக நாட்டின் நிதிப் பயன்பாடு, கொள்கைத் தயாரிப்பு போன்ற விடயங்களை நெறிமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**பி.ஹர்ஷன்...**

---

**இந்தியாவில் 1977 ஆம் ஆண்டு சுமார் 63% மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வந்தார்கள். ஆனால், 2011–ஆம் ஆண்டு அது 20% என்கிற அளவுக்குக் குறைந்–திருக்கிறது. 1990– ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆ–ம் ஆண்டு வரையிலான காலத்–தில் மட்டும் சுமார் 17 கோடி பேர் வறுமைக் கோட்டிலிருந்து மீட்கப்பட்டார்கள்.**



# சுதந்திரத்தின் பின்னர் இந்திய பொருளாதாரத்தை உச்சத்துக்கு உயர்த்திய தலைவர் நரேந்திர மோடி

மனித வரலாற்றில் மிகப் பெரிய செல்வமிக்க தேசமாக இருந்த இந்திய நாடு 1947 ஆம் ஆண்டு காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட போது, ஆங்கிலேயர்களால் சுரண்டப்பட்டதால் மிகவும் ஏழ்மையான நாடாக மாறியிருந்தது. அப்படிப்பட்ட நிலையிலிருந்து இன்று வரையிலான 75 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் அடைந்திருக்கும் வளர்ச்சி மகத்தானதாகும்.

கடந்த 75 ஆண்டுகளில் இந்தியா அடைந்திருக்கும் பொருளாதார, சமூக வளர்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலனியாதிக்கம் இந்தியாவுக்கு ஒரு பேரழிவாக இருந்தது. ஏனெனில், காலனியாதிக்கத்துக்கு முன்பு நன்கு வளர்ச்சியுற்றிருந்த இந்திய தொழில்களான ஆடை உற்பத்தி, கப்பல் கட்டுதல், இரும்பு உற்பத்தி போன்ற பல தொழில்கள் ஆங்கிலேயர்களின் வருகையால் சீரழிந்தன.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அடியெடுத்து வைத்தவுடன் அவர்களுடைய பொருட்ளுக்கான சந்தையை விரிவுபடுத்தும் நோக்கத்தில் இந்தியாவில் பிரபலமாக இருந்த தொழில்களுக்கு எல்லாம் பாதிப்பு ஏற்படும் வண்ணம் அனைத்து மூலப்பொருள்களையும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நாடாக இந்தியா தள்ளப்பட்டது. இந்த மூலப்பொருட்களைக் கொண்டு அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை அதிக விலைக்கு இறக்குமதி செய்யும் நிலைக்கு இந்தியா மாறியது.

அதற்குப் பிறகு கடந்த 75 ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் இந்தியா பல மடங்கு வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக கொவிட் என்கிற பெருந்தொற்றுக்கு காரணமாக வளர்ச்சி வீதம் சற்றுக் குறைந்தது. கொவிட் தணிந்துள்ளதால் இந்திய பொருளாதாரம் மீண்டும் வளர்ந்து வருகின்றது. இனி வரும் ஆண்டுகளிலும் இந்தியாவின் வளர்ச்சிப் போக்கு தொடரும் என நம்பப்படுகிறது.

உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவின் தரவரிசை 2010 ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுக்குமிடையே நன்றாக வளர்ச்சி அடைந்து உலக அளவில் 9 ஆம் இடத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு 5 ஆம் இடத்துக்கு வந்திருக்கிறது.

இன்னொரு பெரிய சாதனை என்னவெனில், வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருந்த மக்களை அந்த நிலையிலிருந்து மீட்டெடுத்ததாகும். கடந்த 75 ஆண்டுகளில் சுமார் 50 கோடி பேர் வறுமைக் கோட்டிலிருந்து மீட்கப்பட்டு இருப்பதாக உலக வங்கி அறிக்கை கூறுகிறது. இருப்பினும், கடந்த 18 மாத பெருந்தொற்றுக் காலத்தில் பல இலட்சக்கணக்கான பேருக்கு வேலையிழப்பு ஏற்பட்டதால், வறுமைக் கோட்டின் விளிம்பில் இருந்தவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளப்பட்டிருக்கின்றனர். இது ஒரு தற்காலிகப் பின்னடைவாக இருக்கும்.

## வறுமைப் பிடியிலிருந்து இந்திய மக்கள் பெருமளவில் மீட்பு!

மனிதவள மேம்பாட்டைப் பொறுத்தவரையில், ஆரோக்கியத் திலும் கல்வியிலும் இந்தியா தொடர்ந்து மேம்பாடு அடைந்து வருகிறது. 1981 ஆம் ஆண்டு வயது வந்தவர்களின் படிப்பறிவு சதவீம் 40 ஆக இருந்தது. ஆனால், 2011 ஆம் ஆண்டு இது சுமார் 75 சதவீதத்தைத் தொட்டிருக்கிறது. இது போல, இந்தியர்களின் ஆயுட்காலமும் 40 ஆண்டுகளிலிருந்து 70 ஆண்டுகள் என்கிற அளவுக்கு கடந்த 59 ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. இது போல, குழந்தை இறப்பு, தாய்மார்கள் இறப்பு சதவீதமும் வெகுவாகக் குறைந்திருக்கிறது.

உள்கட்டமைப்பிலும், நிதி சார்ந்த துறையிலும் இந்தியா நன்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மின்சாரம் உபயோகிப்பவர்களின் எண்ணிக்கையும் சமீப காலத்தில் அதிகரித்திருக்கிறது. 1995 ஆம் ஆண்டு இந்தியாவில் 50% மக்கள் மட்டுமே மின்சாரத்தை உபயோகிப்பவர்களாக இருந்து வந்தார்கள். இது 2010 ஆம் ஆண்டு 76 சதவீதமாகவும், இப்போது 97 சதவீதமாகவும் அதிகரித்திருக்கிறது. மத்திய அரசின் 'ஜன் தன்' திட்டத்தின் கீழ் சுமார் 40 கோடி பேர் புதிதாக வங்கிக் கணக்கை ஆரம்பித்திருக்கிறார்கள்.

உலக அளவில் பல துறைகளில் இந்தியா தலைமைத்துவ நிலையை அடைந்திருக்கிறது. குறிப்பாக, மென்பொருள் மற்றும் வணிகச் செயல்முறை அயலாக்கம் (Business Process Outsourcing) ஆகிய தொழில் துறைகளில் இந்தியா நன்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இன்றைக்கு உலக அளவில் பெரும் நிறுவனங்களாக இருக்கும் மைக்ரோ சொப்ட், ட்விட்டர் போன்றவற்றின் தலைமைப் பொறுப்பில் இந்தியர்கள் இருந்து வருகிறார்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## உலக வர்த்தக சந்தையில் பெரும் ஆதிக்கம் செலுத்தும் இந்திய தேசம்; 'Made in China' என்பதை விட 'Made in India' பொருட்களுக்கே இன்று உலகமதிப்பு!

**எஸ்.சாரங்கன்...**

# சர்வகட்சி அரசை அமைக்கும் தீவிர முயற்சியில் ஜனாதிபதி








சம்யுக்தன்

**நாட்டு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்கேற்புடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரப்படுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதுடன், இவ்விவகாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது என்றும் கூற முடியும். இதன் அடிப்படையில் எதிர்வரும் நாட்களில் புதிய அமைச்சரவை பதவியேற்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் கட்சி சார்பிலும், தனிப்பட்ட ரீதியாகவும் உறுப்பினர்கள் அணுகப்படுகின்றனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினரை ஜனாதிபதி தனித்தனியாகச் சந்தித்திருந்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கேற்காவிட்டாலும் வெளியே இருந்து அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார். அதேபோன்ற கருத்தையே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் இந்த இரண்டு கட்சிகளையும் சார்ந்த சில உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கவும், சிலர் அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தயாராக இருப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நாட்டை இன்றைய நெருக்கடியான சூழலிலிருந்து மீட்டெடுக்கும் பொருட்டு சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கும் விடயத்தில் ஜனாதிபதி மிகவும் கவனமாக முயற்சிகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில், இன்றைய பதவியில் எஞ்சியிருக்கும் ஆட்சிக் காலத்தில் அவர் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளாரோ, அதேயளவு எச்சரிக்கையாகவும் இருக்கின்றார். காரணம், எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தி விட்டார் என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்வதற்குஅவர்விரும்பவில்லையென அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேநேரம், அரசாங்கத்தில் பெரும்பான்மையானவர்கள் பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அவர்கள் மத்தியில் அதிகமான அமைச்சுப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான அக்கறைகளும் காணப்படுகின்றன.

எதிர்க்கட்சியில் உள்ளவர்களையும் இணைத்துக் கொண்டு சர்வகட்சி அரசாங்கத்துக்குச் செல்வதாயின் அமைச்சுப் பொறுப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் காணப்படுகிறது. இதற்கான சட்ட ஏற்பாடுகள் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது குறித்து தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கிறது.

இருந்தபோதும் அமைச்சுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதை நாட்டு மக்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள் என்பது தொடர்பிலும் சிந்திக்க வேண்டியதாகவுள்ளது.

அதேவேளை, தற்பொழுது காணப்படும் நிலையில் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவராலும் தனித்து செயற்பட முடியாது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறியுள்ளது.

> **"இன்றைய பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதில் எவராலும் தனித்து செயற்பட முடியாது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்!**

எனவே சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டாலோ அல்லது எந்தப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ளாமல் விட்டாலோ அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் வெறுமனே விமர்சனங்களை வைத்துக் கொண்டிருக்காமல் ஆக்கபூர்வமாக ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். மறுபக்கத்தில், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காவிட்டாலும் பாராளுமன்றத்தின் குழு நடைமுறை உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.

தமது சொந்த இலாபங்கள் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான காலம் என்பதைக் கருத்தில் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.





## 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் முயற்சிகள் பற்றியும் கலந்துரையாடல்கள்

இது இவ்விதமிருக்க, 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் முயற்சிகள் பற்றியும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட 22வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ இதனைச் சமர்ப்பித்திருந்தார். இவ்வாறான நிலையில் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக 9 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள விடயங்கள் இதன் ஊடாக மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என அரசாங்கம் கூறியுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதிக்குக் காணப்படும் அதிகாரங்கள் பாராளுமன்றத்துடன் பகிரப்படவிருப்பதுடன், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான அதிகாரங்கள் அல்லது பொறுப்புக்கள் வலுப்படுத்தப்படவுள்ளன.

## அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதில் அதிக அக்கறை; பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தில்!

இருந்தபோதும், அரசாங்கத்தில் தற்பொழுது பெரும்பான்மையாகவுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் சிலர் உத்தேச அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலத்தில் உள்ள சில விடயங்களுடன் உடன்படவில்லையெனத் தெரியவருகிறது. இவ்வாறான நிலையில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றும் விடயத்தில் மீண்டும் சவால்கள் ஏற்படலாம்.

## புதிய அமைச்சரவை பதவியேற்பதற்கான சாத்தியம் தென்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தகவல்!

இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவைப்படலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூறியிருந்தார்.

எனவே நாட்டு மக்கள் அநாவசிய செலவுகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவுப் பொருட்களை சேமித்து வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் பசியையாவது போக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தான் பிரதமர் பதவியை முதலில் ஏற்றுக் கொண்டதாகவும், அதன் பின்னர் ஜனாதிபதிப் பதவியை ஏற்க நேரிட்டதாகவும் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார். பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முதலில் தீர்வு காணவிருப்பதுடன், அதன் பின்னர் தேசிய ரீதியில் காணப்படும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கம் எடுக்கும் இவ்வாறான முயற்சிகளுக்கு அரசியல் கட்சிகள் அனைத்தினதும் ஒத்துழைப்பு அவசியம் என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் செப்டெம்பர் மாதத்துக்கான கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை நடைபெறவிருக்கும் அமர்வில் இலங்கை விவகாரம் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பயன்பாடு உள்ளிட்ட விடயங்கள் இக்கூட்டத்தொடரில் கவனம் செலுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நிறைவேற்றப்படுமென சர்வதேசத்துக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதற்கும் அரசாங்கம் பதில் வழங்க வேண்டியுள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை சார்பில் பல்வேறு உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. இவை நிறைவேற்றப்பட்டனவா என்பது தொடர்பில் தற்பொழுது கேள்வி காணப்படுகிறது. இருந்தபோதும், நாட்டின் தற்போதை நிலைமையைக் கருத்தில் கொண்டு இலங்கைக்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் நியாயம்.

# 17 வயது ரமணியின் துயர் மரணம்

## மற்றொரு சிறுமியின் மரணமாக மறக்கப்பட்டுவிடுமா?



மஸ்கெலியா மொக்க கீழ்ப்பிரிவு தோட்டத்தில் வசிக்கும் 17 வயதுடைய ஆர். ரமணி என்ற சிறுமியின் சடலம் கடந்த 21 ஆம் திகதி கம்பகஹா நைவல வீதியில் மீட்கப்பட்டுள்ளது. வீட்டு வேலைக்காக சென்ற சிறுமியின் சடலம் வீட்டிலுள்ள நீச்சல் தடாகத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்த சிறுமி வேலைக்காக சென்ற வீடு நாட்டின் பிரபல அரசியல்வாதியொருவரின் உறவினர் வீட்டிலிருந்து மீட்ப்பட்டதாகவும் நீச்சல் தடாகத்தினை சுத்தம் செய்வதற்கு சென்றபோது நீரில் மூழ்கியே குறித்த சிறுமி உயிரிழந்ததாகவும் ஆரம்பத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. இவ்வாறு வீட்டு வேலைக்காக சென்ற சிறுமி கடந்த ஆறு மாதங்களில் மஸ்கெலியாவில் உள்ள வீட்டுக்கு வரவில்லை என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளன. இந்த சம்பவம் கடந்த 19ம் திகதி இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று இந்த வீட்டில் சிறுமி மாத்திரமே இருந்துள்ளதாகவும், அன்றைய தினம் வர்த்தகரான வீட்டின் உரிமையாளர் தமது மனைவி மற்றும் பிள்ளைகள் இருவருடன் தன் மகனின் றகர் விளையாட்டை பார்வையிடுவதற்காக கொழும்பு சென்றிருந்ததாக தெரிய வந்துள்ளது.

அன்றைய தினம் மாலை இந்த வீட்டின் விளக்குகள் ஒளிராததன் காரணமாக அயல் வீட்டிலிருந்த வர்த்தகரின் 75 வயது மதிக்கத்தக்க தந்தை வீட்டை நோட்டமிட்டபோது இந்தச் சிறுமியின் உடல் நீச்சல் தடாகத்தில் மிதப்பதைக் கண்டிருக்கிறார். உடனே உடலை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்கள். அனுமதிக்கும் போதே அவரின் உயிர் பிரிந்திருந்ததாகவும் நீச்சல் தடாகம் ஐந்து அடி ஆழமுடையது என்றும் சிறுமியி; உயரம் 4 அடி எட்டு அங்குலம் என்றும் இவர் இந்த ஆழமான பகுதிக்கு சென்றபோது உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகப்படுவதாகவும் தேசிய சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறிருந்த போதிலும் இது இன்று ஊடகங்களினதும் அரசியல் வாதிகளினதும் பேசும் பொருளாக மாறியிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் அல்லது ஒவ்வொரு மாதமும் ஏன் ஒவ்வொரு நாளும் கூட இவ்வாறு எமது நாட்டில் எங்கோ ஒரு சிறிமி வீட்டு வேலைக்கு சென்று மரணிக்கும் சம்பவங்கள் பதிவாகிக் கொண்டு தான் இருக்கின்றன.

மரணம் சம்பவித்ததைத் தொடர்ந்து அதற்கு எதிராக போராட்டங்கள் செய்வதும் வீதி நாடகங்கள் போடுவதும், விழிப்புணர்வு ஊட்டுவதும் துண்டு பிரசுரங்கள் வெளியிடுவதும் ஒரு வாடிக்கையான விடயமாக மலையகப் பகுதியில் காணப்படுகின்றன.

மலையகப் பகுதியில் ஒவ்வொரு சிறுமியின் இறப்பின் போதும் மிகப்பெரிய அளவில் பேசப்பட்டு அதற்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் இவை அனைத்தும் மறைந்து போய்விடும்.

இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு எமது நாட்டின் சட்டத்திலோ அல்லது சமூத்தில் உள்ள அரசியல் தலைவர்களிடமோ அல்லது புத்திஜீவிகள் என்று கூறப்படும் அல்லது சமூக ஆர்வலர்கள், குறிப் பாக படித்த சமூகத்திடமோ முறையான வழிநடத்தல்கள் வேலைத்திட்டங்கள் இல்லை என்றே கூற வேண்டும்.

இவ்வாறு வீட்டு வேலைகளுக்கு செல்லும் சிறுமிகள் எவ்வாறானவர்கள் என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். குறிப்பாக, மஸ்கெலியா மொக்கா கீழ்ப்பிரிவு தோட்டத்தில் அண்மையில் மரணமடைந்த சிறுமி ஆர். ரமணி தரம் 10 வரை கல்வி கற்றவர். இவரின் தந்தை ரமணியின் சிறுவயதிலேயே குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார். தாய் இன்னுமொருவரை திருமணம் செய்து கொண்டார். எனவே சிறுமி தனது மாமாவின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்திருக்கிறார். ஆறு மாதத்திற்கு முன்னரேயே இந்த வீட்டில் வேலை செய்யச் சென்றிருக்கிறார். இவை அயலவர் சொல்லும் தகவல்கள். இச்சிறுமியின் உறவினர்கள் தகவல்கள் தருவதற்கு மறுப்பதுடன் நடந்து முடிந்துவிட்டது இனி அதைப்பற்றி பேசுவதில் பயனில்லை என்று கைவிரிக்கின்றனராம்.



மலையகப் பகுதியிலிருந்து பணக்காரர் வீடுகளுக்கு வேலைக்குச் செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் தாய் தந்தை அரவணைப்பின்றி தங்களது நெருங்கிய உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிறுமி தரம் 10 வரை கல்வி பயின்றுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். பொருளாதார நெருக்கடி, கல்வி நிலையில் காணப்படும் போட்டித்தன்மை காரணமாகவும். கற்பதற்கான உதவி கிடைக்காமை போன்ற காரணங்களினால் கல்வியைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கலாம்.

அத்தோடு வீட்டு சூழலில் ஏற்பட்ட நெருக்கடிகளும் சிறார்களின் மனதை பெரிய அளவில் பாதிக்கலாம். அது மாத்திரமின்றி, கவனிப்பாரற்ற நிலையும், அன்பு அரவணைப்பின்மையும் இவ்வாறான சிறுவர்கள் வாழ்க்கையில் பிடிப்பின்றி தறிகெட்டுப் போகிறார்கள். இறுதியில் இவர்கள் பாடசாலை கல்வியை இடை நடுவே கைவிட வேண்டியதாகிறது.

பாடசாலைகளில் பெறுபேறுகளை மாத்திரம் இலக்கு வைத்து கல்வி கற்பித்தல் நடத்தப்படுவதால் பெருமளவு மாணவர்கள் தங்கள் கல்வியை இடை நடுவே கைவிட நேர்கிறது. பொருளாதார வசதி குறைவு காரணமாக ஏனைய மாணவர்களுடன் போட்டி போட்டு படிக்க முடிவதில்லை.

வெளி மாவட்டங்களுக்கு வேலைக்கு சென்றுவிட்டு திருவிழாவுக்காகவோ அல்லது தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளுக்காகவோ வரும்போது இந்த இளைஞர்கள் கவர்ச்சிகரமான ஆடைகள் அணிந்து அலைபேசியை வைத்து கொண்டு சுதந்திரமாக மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதாக வெளிக்காட்டும்போது இந்த சிறுவர்கள் கொழும்புக்கு வேலைக்கு போனால் சந்தோஷமாக வாழலாம் என்று கருதத் தொடங்குகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமே.

பெருந்தோட்டப் பெற்றோர்களில் பலர் கல்வி அறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களின் வாழ்க்கை வறுமை சார்ந்தது. இவ்வாறு வறுமையில் வாடும் குடும்பங்களையே இடைத் தரகர்கள் இலக்கு வைக்கிறார்கள். அவர்கள் படும் துயரங்களைக் கண்டு முதலை கண்ணீர் வடிப்பதாக நடித்து இவர்களின் மனதை மாற்றி இந்த சிறுவர்களுக்கு மிகவும் ரம்மியமான சூழலில் வசதியான வாழ்க்கையை ஏற்படுத்தப்போவதாக கதையளந்து சிறுவர்களை செல்வந்தர்களுக்கு விற்பனை செய்துவிடுகின்றனர். தாம் எத்தகையோர் வாழும் வீட்டுக்குப் போகிறோம் என்பதை அறியாத அப்பாவி சிறார்கள், அது தவறான வீடாக அமையும்போது இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கு காரணமாகின்றது.



பெருந்தோட்ட சிறார்கள் வீடுகளில் எடுபிடிகளாக அனுப்பும் கலாசாரத்துக்கு முடிவே இல்லையா?

கொஞ்சம் பின்நோக்கி 2003 ஆண்டுக்கு செல்வோம். கொழும்பு மிரிஹான பகுதியில் வீட்டு வேலைக்கு சென்று 11 வயது சிறுவன் அர்ச்சுனன் லோகநாதன் உயிரிழந்தார். 2004 ஆண்டு காலப்பகுதியில் வெலிஓயா பகுதியில் விக்னேஸ்வரன் கிருஷ்ணவேணி (வயது 16) இதே பிரதேசமான மஸ்கெலியா முள்ளுகாமத்தைச் சேர்ந்த சுமதி, ஜீவராணி, ஒரே வீட்டில் வேலை செய்து உயிரிழந்தனர்.

கடந்த வருடம் முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீனின் வீட்டு வேலைக்கு சென்று எரிகாயங்களுடன் மிகவும் மர்மமான முறையில் கடந்த 2021 ஜுலை 15 திகதி ஜுட்குமார் ஹிசாலினி என்ற சிறுமி உயிரிழந்தார். இதனைக் கேள்விப்பட்டு முழு நாடே கொந்தளித்தது. இதற்கு நீதி கோரி நாடெங்கிலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களும், கவனயீர்ப்பு போராட்டங்களும் அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெற்றன.

ஜுட்குமார் ஹிசாலினிக்கு சட்டம் தன் கடமையை செய்ய வேண்டும் என வலியுறுத்தி பல போராட்டங்கள் நடைபெற்றன. பல பிரதேசங்களில் பேரணிகள் இடம்பெற்றன. அரசியல் தலைவர்கள் வாய்கிழிய அறிக்கை விட்டனர். எனினும் உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை.

சிறுவர்கள் வீட்டு வேலைக்கு செல்வதைத் தடுப்பதற்கு மூன்று தலைமுறைகளாக அரசியல் செய்பவர்கள் இவர்களின் வாழ்க்கையினை ஒளிமயமாக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள்? வறுமை மிக்க குடும்பத்து மாணவர்களுக்கு சிறு வயது முதல் சிறந்த கல்வியும் பாதுகாப்பும் பெற்றுக்கொடுக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள்?

பெருந்தொகையான சிறுவர்கள் பசி பட்டினியுடனும் சத்துணவு குறைபாட்டுடனும் பொருத்தமற்ற சூழலிலும் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். இன்றும் கூட இத்தகைய குடும்பங்களுக்கான பொருளாதார வளர்ச்சிக்கு எந்தவித வேலைத் திட்டமும் இல்லை. தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி. கோயில்களுக்கு நாட்காலி, செம்பு, சட்டி பானை, சேகண்டி, சங்கு சக்கரம் என்று வழங்கி இந்த மக்களை மாய வலைக்குள் வீழ்த்தி தலைமுறை தலைமுறையாக ஏமாற்றி வருகிறார்கள்.

ஏதாவது ஒரு சம்பவம் நடந்து விட்டால் அதனை தங்களுக்கு சாதமாக பயன்படுத்தி ஊடக சந்திப்புக்களை நடத்தி அதனை அரசியல் லாபம் தேடும் நிலைமையே காணப்படுகின்றன.

இந்த சம்பவங்கள் முற்றாக நிறுத்துவதற்கோ, அல்லது கல்வியினை மேம்படுத்துவதற்கோ, அல்லது. பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கோ எந்த ஒரு திட்டமும் மலையக அரசியல் தலைவர்கள் முன்வைக்காமையும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாவதற்கு பெரும் காரணிகளாக அமைந்துள்ளன.

இது இவ்வாறிருக்க எமது நாட்டில் சிறுவர் பாதுகாப்புக்கு என்று அமைச்சு உள்ளது. சிறுவர் பாதுகாப்பதற்காக எத்தனையோ அமைப்புகள் உள்ளன. எனினும் சிறுவர்களை வேலைகசு அமர்த்தும் செல்வந்தர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

உயிரிழந்த எந்த ஒரு சிறுமிக்காவது நீதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்பதே பதில்.

இந்த நாட்டில் மலையகம் மாத்திரமே வறுமையில் வாடும் பிரதேசமல்ல. ஏனைய பிரதேசங்களிலும் வறுமை நிலை காணப்படவே செய்கிறது.

எனினும் அப்பிரதேசங்களில் இவ்வாறு அடிக்கடி சம்பவங்கள் பதிவாவதில்லை. அப்படி என்றால் இதற்கு பிரதான காரணம் என்ன என்பதும் ஆராயப்பட வேண்டியதே.

அதே நேரம் படித்தவர்கள் நாகரீகமாக நடந்து கொள்வார்கள், அவர்களிடமிருந்து நீதி நேர்மையினை எதிர்பார்க்கலாம் என்றொரு போலியான நம்பிக்கை எம்மிடையே உண்டு. ஆனால் அது தவறு என்பதை முன் உதாரணங்கள் மூலம் இப்போது புரிந்து கொண்டிருக்கிறோம்.

எது எவ்வாறாயினும் பிள்ளைகள் தொடர்பான பொறுப்புணர்வு பெற்றோர்களுக்கே அதிகமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் பெறும் போது ஒவ்வொரு பெற்றோரும் அந்த பிள்ளையின் வாழ்க்கை தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டும்.

இதற்கான விழிப்புணர்வு சமூக மட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தோடு மக்கள் பிரதிநிதிகளும் சமூக அக்கறை கொண்டவர்களும் பெருந்தோட்ட சமூகத்தின் பொருளாதார மேம்பாடு சட்டத்திட்டங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் அதிக அக்கறை கொள்ள வேண்டிய அவசியத்தை ரமணியின் துயர்மிக்க மரணம் மறுபடியும் உணர்த்தியுள்ளது.

**மலைவாஞ்ஞன் ...✍**
(படங்கள் : ஹட்டன் விசேட நிருபர்)

## காலை உணவின்மை, சத்தான சாப்பாடு இல்லை, இடை விலகல்...

# மலையகக் கல்வியில் தொடரும் மந்த நிலை

**'6984 இற்கும் அதிகமான பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இலவசமாக காலை உணவு வழங்கும் திட்டத்துக்குள் சில மலையக பாடசாலைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. எனினும் இது போதுமானதல்ல. அனைத்து மலையக பாடசாலைகளிலும் இந்த இலவச உணவு விநியோகம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுவது அவசியம்'**

பன். பாலா

கொவிட் பெருந்தொற்று, அதனைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடியின் பின் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. இருந்தும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் திருப்தியாக இல்லை. நீண்ட விடுமுறையும் நீடித்து நிற்கும் விலைவாசி உயர்வும் ஒரு அயர்ச்சியை உண்டாக்கி விட்டதுபோல தெரிகிறது.

மாணவர்களிடையே கற்பதில் ஒரு அசமந்தப் போக்கு நிலவுவதாக படுகிறது. பண்டாரவளை கல்வி வலயத்தைச் சேர்ந்த ஒரு நகர தமிழ் பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கற்கும் மாணவர் பாடசாலைக்கு செல்ல மாட்டேன் என்று அடம் பிடித்தமையும் காவல்துறை இதில் தலையை நுழைந்து எச்சரித்து பாடசாலை செல்ல வைத்ததையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு பாடசாலை இடைவிலகலுக்குச் சில பிரத்தியோக காரணங்கள் இருக்கவே செய்கின்றன. ஏற்கனவே பெருந்தோட்டச் சிறார்களே பாடசாலை செல்லாதோர் பட்டியலில் முதலிடம் வகிக்கின்றார்கள். இங்கு அடிப்படைக் காரணமாக குடும்ப நிலவரமே இதற்குத் தூண்டுகோளாக இருப்பதாகவே ஆய்வுகள் சுட்டுகின்றன. இதனை மறுப்பதற்கு இல்லை. சத்தான ஆகாரமின்மையால் துவண்டு போனவர்கள் பெருந்தோட்டப் பிரதேசத்திலேயே அதிகம்.



காலை ஆகாரம் இல்லாமலே பல சிறுவர்களின் பொழுதுகள் இங்கு ஆரம்பமாகின்றன. வெறும் வயிற்றுடன் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் ஏராளம். இப்படி காலை உணவை இழப்பதன் மூலம் உடல் மற்றும் உள ரீதியாக பல்வேறு பாதிப்புகள் உருவாகுவதாகவே சுகாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். முக்கியமாக ஞாபகசக்தி குன்றல், பலவீனமான மனநிலை, உடல் வளர்ச்சி குன்றுதல் என்பன ஏற்படுவதாகவே எச்சரிக்கின்றனர். இதனால் பாதி வயிற்றோடு பாடசாலை செல்பவர்களும் மேற்படி தாக்கங்களுக்கு உள்ளாகவே செய்கின்றார்கள். ஏனெனில் அந்த பாதி வயிற்று உணவு கூட போஷாக்கு நிறைந்தது அல்லவே!



படிக்க வேண்டும் என்னும் ஆர்வம் இருந்தாலும் போஷாக்குக் குறைந்த ஆகாரம் காரணமாக அசிரத்தையே மேலோங்குகிறது. போஷணை குறைபாடு என்பது பெருந்தோட்டத்துறை சிறுவர்களை போட்டு வதைசெய்யும் ஒரு சாபக்கேடு. இன்றைய நிலையில் ஊட்டம் தரக்கூடிய தானியங்கள் (பயிறு, கவ்பி, கடலை, சோயா, பீன்ஸ்) வாங்கி உண்பது என்பது இலேசுபட்ட காரியமா என்ன! தவிர பால், முட்டை, மீன், நெத்தலி போன்றவைகளின் விலைகள் கைக்கெட்டும் தூரத்திலா இருக்கின்றது. மாதம் ஒருமுறை (சம்பள நாள்) சத்தான சாப்பாடு உண்பதே பெரும்பாடு ஆகியுள்ள நிலையில் தினந்தோறும் சத்தான காலை சாப்பாடு சாத்தியமாகுமா? யோசிக்க வேண்டியதும் கவனம் செலுத்தப்பட வேண்டியதுமாகும்.

அதேவேளை 6984 இற்கும் அதிகமான பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இலவசமாக காலை உணவு வழங்கப்படுகின்றது. இந்த திட்டத்துக்குள் சில மலையக பாடசாலைகளும் உள் வாங்கப்பட்டுள்ளன. எனினும் இது போதுமானதல்ல. அனைத்து மலையக பாடசாலைகளிலும் இந்த இலவச உணவு விநியோகம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுவது அவசியமானது.

ஏனெனில் பொருளாதார ரீதியில் பெருந்தோட்டத்துறை மிகவும் பின்தங்கியுள்ளது பெருந்தோட்டத்துறை. இதனால் வறுமை மட்டத்திலும் பின்னடைவு. இதனடிப்படையில் வறுமைக் கோட்டுக்கு கீழ்பட்ட நிலைமையிலேயே இச்சமூகம் இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு, வெளி நாட்டு ஆய்வுகளிலும் இது உறுதி செய்யப்பட்ட சங்கதி. எனவேதான் பெருந்தோட்டச் சிறார்களின் சேமநலம் கருதிய வேலைத்திட்டங்கள் அவசியம் என்பதை ஐ.நாவின் யுனெஸ்கோ நிறுவனம் வரை உணர்ந்து சில நிவாரணங்களைக் காலத்துக்கு காலம் வழங்கி வருகின்றன.

ஆனால் இவை போதுமானதல்ல. இவை தற்காலிக ஏற்பாடுகளாகவே இருக்க முடியும். எனவேதான் இந்த மந்தபோஷண அச்சுறுத்தலுக்கு நிரந்தரத் தீர்வு அவசியமாகின்றது. தவிர சிறுவர் உடல்நல, மனநல வளர்ச்சி சம்பந்தமாக பெருந்தோட்ட பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களும் தேவைப்படுகின்றன.

இல்லாவிட்டால் பெருந்தோட்டச் சிறார்கள் சோம்பேறிகளாகி விடுவதைத் தவிர்ப்பதற்கில்லை. இதை உறுதிப்படுத்துவது போலவே ஹிஷாலியின் இழப்புக்குப் பின் மீண்டும் ஒரு சாவுச்செய்தி சந்திக்கு வந்துள்ளது. மஸ்கெலியா மொக்கோ தோட்டத்தைச் சேர்ந்தவர் ரமணி. 16 வயது, 6 மாதத்துக்கு முன் கம்பஹாவிலுள்ள முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்கவின் உறவினர் வீட்டுக்கு வேலைக்காக போயிருக்கிறார்.

கடந்த 19ஆம் திகதி நீச்சல் தடாகத்தில் மூழ்கி மூச்சித் திணறி இறந்துவிட்டதாக கூறப்படுகிறது. தற்பொழுது உடலும் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது. குடும்ப வறுமைச் சூழல் பாலகியொருத்தியை பலிவாங்கியிருக்கிறது. அப்பா ஏற்கனவே குடும்பத்தை கைவிட்டு போய்விட்டாராம். அம்மா மறுமணம் செய்து கொண்டாராம். அநாதையான ரமணிக்கு அடைக்கலம் கொடுத்தவர் அவரது மாமா. இருந்தும் என்ன! அவருக்கு குடும்பச் சுமை. வேலைக்காக அனுப்பினார் ரமணியை. அது ரமணியின் உயிருக்கு உலை வைத்து விட்டது. இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தான் பெருந்தோட்டச் சமூகம் பால்ய வயது சிறுவர், சிறுமியரைப் பலிகடாக்களாக்கப் போகின்றதோ!.

**பன். பாலா ...✍**

இன்றைய நாளது வரை சிறுவர் தொழிலாளர்கள் பெருந்தோட்டப் பிரதேசங்களிலேயே அதிகம். அதிலும் இவர்களின் பலர் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனா். வயதுக்கு மீறிய வேலைப்பளு காரணமாகவே உபத்திரவங்களும் சில வேலைகளில் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. 18 வயதுக்கு குறைந்தவர்களே வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றம். எனினும் இக்குற்றத்தைப் புரிவோர்களுக்கான தண்டனை வழங்கப்படுவதாகத் தெரியவில்லை.

குடும்ப கஸ்டத்தைக் காணச் சகிக்காத நிலையிலேயே அநேக சிறுவர்கள் பாடசாலை இடைவிலகளுக்கு தள்ளப்படுகிறார்கள். இவ்வாறானவர்களைப் பிடிக்க எப்போதும் தமது ஏமாற்று வலையோடு தரகர்கள் மலையகத்தில் உலா வருகின்றனர். இவர்களின் பொய்யுரைகளை நம்பி தமது இளம்பராய பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி வைக்கிறார்கள் பெற்றோர். இதனால் ஏற்படும் விபரீதங்களை உணராமல் சிறார்களின் எதிர்காலத்தை நாசப்படுத்துகின்றார்கள்.

ஹிஷாலினி, ரமணி போன்ற பலருக்கு ஏற்பட்டது போன்று ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து அதை ஊடகங்களும் சிவில் அமைப்புகளும் பிரதானபடுத்தி குரல் எழுப்பும்போது மட்டும் அறிக்கை விடும் அமைச்சர்கள் அப்புறம் அதை அப்படியே மறந்து விடுகின்றனர்.

சிறுவர் என்ற ரீதியில் வேலைக்கு சென்று உயிரிழப்பவர் பட்டியலிலும் பெருந்தோட்டத்துறையே முன்னணி வகிக்கின்றது. பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி இடை விலகலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் சிறுவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய சமூக அபிவிருத்தி இன்னும் இங்கே ஏற்படவில்லை. ஏற்படும் என்பதற்கான எவ்வித அறிகுறிகளும் தென்படவில்லை.

இதே சமயம் மண்ணெண்ணெய் விலை ஆகாயத்தை எட்டிவிட்டது. எரிவாயு விலை அதிகரிப்பின் காரணமாக பல குடும்பங்கள் மண்ணெண்ணெய் அடுப்புகளிலேயே உணவு சமைக்கின்றன. எனவே தற்போது மண்ணெண்ணெய் விலை பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தோட்ட மக்களை மேலும் சங்கடத்தில் தள்ளிவிட்டுள்ளது. இதனால் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள மீனவ சமூகத்துக்கும் பெருந்தோட்டச் சமூகத்துக்கும் நிவாரணம் வழங்கப்போவதாக அமைச்சர் காஞ்சன கூறியிருக்கிறார். ஆனால் அது எவ்வாறு அமையும் என்பதில் விளக்கம் போதுமானதாக இல்லை.

# திரைகடலோடியும் திரவியம் தேடு
# அரசின் அறிவிப்பின் பலாபலன்கள் என்ன?

"அரச ஊடகத்துறை, பெற்றோலியம் கூட்டுத்தாபனம், மின்சார சபை, ஏயார் லங்கா, துறைமுக அதிகாரசபை, புகையிரதத்திணைக்களம், தபால் திணைக்களம் என அரச நிறுவனங்கள் பலவும் நட்டத்தில் இயங்குகின்றன – தொடர்ந்தும் இப்படியே இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்று தினமும் அரசாங்கத்திரப்பிலிருந்து அறிவிக்கப்படுகிறது. அமைச்சரவைப் பேச்சாளரான பந்துல குணவர்த்தன இதைப்பற்றிய புள்ளி விவரப் பட்டியலை தினமும் ஊடகவியலாளர்களிடம் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறார்.

இதேவேளை அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கூடி விட்டது. ஆட்குறைப்பைச் செய்வதைப்பற்றி அரசாங்கம் ஆராய்கிறது. விரும்பியவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணி செய்யலாம். அவர்களுக்கான சேவைக் கால விடுமுறையை அரசாங்கம் வழங்கத் தயார். அல்லது விருப்ப ஓய்விலும் செல்ல முடியும் என்றும் அரசினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இது பற்றிச் சில நாட்களுக்கு அனுராதபுரத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார். ஒழுங்காக வேலை செய்ய முடியாத அரச உத்தியோகத்தர்கள் வீட்டுக்குப் போகலாம். அல்லது வெளிநாடுகளுக்குச் சென்று அந்நியச் செலாவணியை ஈட்டித் தரலாம் என்று சற்றுச் சீற்றமாகவே சொன்னார் ஜனாதிபதி.

இந்த அறிவிப்பும் சலுகையும் எந்தளவுக்கு வேலை செய்யும்? என்று தெரியவில்லை. ஆனால், நாட்டை விட்டு வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் பலரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மை. அப்படி பலரும் வெளியேறினால் உடனடியாக அரசாங்கத்துக்கு அந்நியச் செலாவணி கிடைக்கக் கூடும். இது இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொருளாதார ரீதியிலான ஆறுதலைத் தரக்கூடும். சிறிய பயனைத் தரக்கூடும்.

நாடோ வீடோ நெருக்கடிச் சூழலில் இருக்கும்போது அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக விரைந்து செயற்பட வேண்டியது மக்களுடைய கடமை. அதிலும் அறிவாளிகள், ஆற்றலர்களுக்கு இதில் கூடுதல் பொறுப்புண்டு. திரை கடலோடியும் திரவியம் தேடு என்பதைப்போல இலங்கையை மீட்பதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதை எல்லோரும் செய்ய வேண்டும். எங்கும் செல்வதற்குத் தயாராக வேண்டும். இதில் மறு கருத்தில்லை.

ஆனால், நீண்டகால அடிப்படையில் நாட்டுக்கு நட்டமே இதனால் ஏற்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இப்படி வெளியேறுவோர் பெரும்பாலும் அறிவாளிகள், பணி அனுபவமுடையோராக உள்ளனர். இவர்களுடைய இந்த வெளியேற்றமானது, இவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் அனுபவத்தையும் இழக்க வைக்கும். இது நாட்டுக்குப் பேரிழப்பாகும். பதிலாக இதை விட இன்னொரு தரப்பினராக மிக இளையோரில் ஒரு தொகுதியினரை அனுப்புவதற்கு முயற்சிக்கலாம். அவர்கள் அங்கே பெற்றுக் கொண்டு வரும் அனுபவமும் அறிவும் பின்னர் எங்கள் நாட்டுக்குப் பயன்படக் கூடியதாக இருக்கும். அதை இங்கே செலவழிக்கக்கூடிய – பயன்படுத்தக் கூடிய வயது – கால எல்லையும் அவர்களுக்கிருக்கும்.

ஒரு நாடு தனக்குரிய அறிவாளிகளையும் ஆற்றலாளர்களையும் உருவாக்குவதற்கு ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்தக் கால அளவு மட்டுமல்ல, இதற்காக – இவர்களுக்காக கல்வி (இலவசக் கல்வி உயர்கல்வி வரை) மருத்துவம் மற்றும் இதர சேவைகளைச் செய்திருக்கிறது. அவ்வளவும் மக்களுடைய வரிப்பணத்தில்தான்.

அப்படிச் செலவுகளைச் செய்து அறிவு ஆற்றலர்களை உருவாக்கி விட்டு, அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் குறித்த நாடுகள் மிகச் சுலபமாக இந்த அறிவையும் ஆற்றலையும் எடுத்துக் கொள்கின்றன. இது அந்த நாடுகளுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய கொடையாகும். அதாவது நமக்கு இழப்பு. அவர்களுக்குக் கொடை. இதுதான் நம்முடைய நிலை.

இதேவேளை இந்த மாதிரி அறிவாற்றலுடைய அடுத்த அணியை நம்முடைய நாட்டுக்காக உருவாக்குவதற்கு அரசாங்கத்துக்கு ஏகப்பட்ட செலவும் கால அவகாசமும் தேவைப்படுகிறது. இதற்காக மக்கள் தொடர்ந்தும் தமது வரிப்பணத்தைச் செலுத்த வேண்டும். ஆனால், அப்படிச் செலுத்தப்பட்ட வரிப்பணத்திற்காக இவர்களின் சேவையைப் பெற முடியாது ஆக்கப்படுகின்றனர். இவர்களுடைய ஆற்றலை இங்கே பெற முடியாது. மட்டுமல்ல, இந்த மக்களின் வரிப்பணத்தில் இந்த நாட்டிலேயே படித்து, இந்த நாட்டிலேயே வேலை செய்யவும் வாழவும் முடியாது என்ற நிலையும் வந்து விடுகிறது.

உண்மையில் ஒரு நாட்டின் வளங்களில் முக்கியமான ஒன்று அந்த நாட்டிலுள்ள ஆளணி வளமாகும். அதிலும் அறிவாற்றலும் தொழிலனுபவமும் உள்ளவர்களுடைய வளம் என்பது இன்னும் முக்கியமானது. இதை எப்படி இழக்க முடியும்? இவ்வாறு இங்கே குறிப்பிடுவதன் மூலம் இதை தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கும் சிந்தனைக்கும் மாறான நிலைப்பாடு என்று கருதத் தேவையில்லை. இன்றைய நெருக்கடி நிலையை மனதிற் கொண்டே இந்த விசயங்கள் பேசப்படுகின்றன. எவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்? எது நன்மையானது, எது சரியானது? என்ற புரிதலுக்காகவே இவை இங்கே கவனப்படுத்தப்படுகின்றன.

வாழ்க்கையிலோ ஆட்சியிலோ அவ்வப்போது நமக்கு ஒவ்வொரு விதமான நெருக்கடிகள் தோன்றும். அதற்காக அந்த நெருக்கடிகளை உடனடியாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் பொறுப்பற்றுச் செயற்படக் கூடாது. உதாரணமாக, அன்று வேலையற்றோ

**கருணாகரன்...**

ருக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தது உண்மை. படித்த பட்டதாரிகள் தமக்கான வேலை வாய்ப்பைக் கோரி பல போராட்டங்களை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தை தொடர்ந்து பொறுத்துக் கொள்ள முடியாது என்பதற்காக, அதைச் சமாளித்துக்கொள்வதற்காக அதிகரித்த அளவில் பணி நியமனம் செய்யப்பட்டது.

இது தவறான ஒரு நடவடிக்கை என்று பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். வேண்டுமானால் அந்தப் பட்டதாரிகளுக்கு இலகு கடனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அவர்களைச் சுய முயற்சியில் ஈடுபட வையுங்கள். அதற்கான பொருளாதாரக் கொள்கையை உருவாக்குங்கள். பயிற்சிகளை அளியுங்கள். இந்த மாதிரி அரசாங்கக் கதிரைகளை நோக்கி அவர்களை இழுக்க வேண்டாம் என்று.



ஆனால், அதை யாருமே பொருட்படுத்தவில்லை. அதுவே இன்று சுமையாகி நிற்கிறது. ஆகவே அப்படிச் செயற்பட்டவற்றின் பாதகமான விளைவையே நாம் இன்று சந்தித்திருக்கிறோம், அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு – அந்தத் தவறுகளுக்குப் பரிகாரம் காண விளைகிறோம்.

அன்றைய நெருக்கடிக்கு அவசப்பட்டு தவறான முறையில் செயற்பட்டதைப்போல இன்றைய நெருக்கடியைத் தீர்க்க வேண்டும் என்று இன்னொரு பொறிக்குள் நாம் சிக்குண்டு விட முடியாது. அதாவது. சட்டிக்குள்ளிருந்து தப்புவதற்காக அடுப்புக்குள் வீழ முடியாது. அல்லது இருமலை விட்டுத் தும்மலை வாங்கக் கூடாது.

எந்தத் திட்டமும் நடைவடிக்கைகளும் நீண்ட கால நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மையாக நாட்டுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள் 10 லட்சம் மட்டுமே என்று கூறப்படுகிறது. இப்பொழுது இதை விட மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர் இருக்கின்றனர்.

இந்த மேலதிக உத்தியோகத்தர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்? அதற்கான அமைச்சரவை – திறைசேரி அனுமதி எப்படி வழங்கப்பட்டது. இதையெல்லாம் செய்தது யார்?

இப்போதுதான் இது உங்களுக்குப் பிரச்சினையாகத் தெரிகிறதா? இவ்வாறு அதிக எண்ணிக்கையில் ஆட்சேர்ப்பைச் செய்வது நியமனங்களை வழங்குவது தவறு என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தபோது அதை ஏற்காமல், பாராமுகமாக இருந்தது ஏன்?

படித்தவர்களுக்கு பட்டதாரிகளுக்கு கட்டாயமாக அரச உத்தியோகம்தான் வழங்கப்பட வேண்டும் என்று எந்த நாட்டில் நடைமுறை உண்டு ? என்று கேட்டிருந்தோம்.

அந்தக் கேள்வி பொருட்படுத்தப்படவேயில்லை.

படித்தவர்கள் சுயாதீனமாக வேலைகளை உருவாக்கக் கூடிய பொருளாதாரப் பொறிமுறை பொருளாதாரக் கொள்கை வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதெல்லாம் அன்று இலகுவாகப் புறக்கணிக்கப்பட்டன.

இங்கேதான் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. அது தேர்தற்கால வாக்குறுதிகளைக் கோரி நிபந்தனை விதிக்கும்போது அதற்கு அரசியற் கட்சிகள் அடிபணிந்தன. அரசு பணிந்தது.

தேர்தல் வெற்றிகளுக்காக வேலை வாய்ப்பு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக நியமனங்கள் வழங்கப்பட்டது. இப்படித் தவறுகளைச் செய்தது யார்?

இது தவறென்று உரைத்தபோது நம்மைப் பலரும் கோவித்தனர்.

இப்பொழுது பிற தரப்புகள் சொல்லும்போதுதான் இதையெல்லாம் புரியக் கூடியதாக உள்ளதா?

அப்படியென்றால் அரசாங்கத்தை விட சக்தி வாய்ந்த நிலையில்தானே குறித்த தரப்புகள் உள்ளன?

என்றாலும் நம்முடைய கேள்வி எழுந்தே தீரும்.

எந்த அடிப்படையில் என்ன நியாயத்தின்படி தேவைக்கு அதிகமாக இந்த நியமனங்கள் செய்யப்பட்டன?

இதைக் கண்டறிந்து, இதற்கான பொறுப்பை உரியவர்கள் மீது சுமத்துவதற்கு ஏன் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை? அதாவது இதற்கும் இந்த மாதிரி இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகளுக்கும் பொறுப்புச் சொல்லப்பட வேண்டும். ஆம், முதலில் செய்யப்பட வேண்டியது பொறுப்பேற்றலும் பொறுப்புக் கூறுதலுமாகும்.

இதையே கடந்த பத்து ஆண்டுகளாக சர்வதேச சமூகமும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இதைக் காதில் போட்டுக் கொள்ள யாரும் தயாரில்லை. என்றால் இதன் பொருள் என்ன? தவறுகளுக்கு யாரும் நாம் பொறுப்பாளிகள் இல்லை என்றுதானே அர்த்தமாகும். அப்படியானால் இந்தத் தவறுகளைச் செய்தவர்கள் யார்?

அவர்கள் அனைவரும் இன்னும் பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும்தான் உள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மாறி மாறி ஆட்சிப்பொறுப்பிலிருந்த அனைவரும் உள்ளேதானே இருக்கிறார்கள்.

அவர்கள் மீது ஏன் கேள்வி எழுப்பப்படவில்லை? அல்லது நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் நியமனங்கள் மட்டுமல்ல, மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள், நிறுவனத்தலைவர்களின் மாற்றம், அமைச்சுச் செயலாளர் நியமனம் என அனைத்தின் தவறுகளும் இன்று மக்களுக்கான சுமையாக மாறியுள்ளது.

இந்த உத்தியோகத்தர்கள் என்ன தாமாகவே வந்து அந்தக் கதிரைகளில் (பதவிகளில்) குந்தினார்களா?

உத்தியோகத்தர்களிடத்தில் காணப்படும் பொறுப்பின்மைகள், வினைத்திறன் போதாமைகள், மக்கள் நலன் பேணாமை போன்ற பல குறைபாடுகள் உள்ளன என்பது உண்மையே.

(15ஆம் பக்கம் பார்க்க)

அரிசி அரசியல் 05

**அருள் சத்தியநாதன்**

# அரை இறத்தால் பாணுக்காக அதிகாலையிலேயே வரிசையில் நின்ற மக்கள்!

உள்நாட்டு ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் உற்பத்தியில் வீழ்ச்சி; போதிய வெளிநாட்டு செலாவணி கையிருப்பில் இல்லாமை, அரிசி உற்பத்தியில் வீழ்ச்சி மற்றும் அரிசியை அதிகவிலை கொடுத்து இறக்குமதி செய்ய முடியாத நிலை...

அரிசியை சந்திரினில் இருந்தாவது கொண்டு வந்து தருவேன் என்று உறுதிமொழி வழங்கியிருந்தாலும் அரிசியையும் மாவையும் தாராளமாகக் கிடைக்கச் செய்ய முடியாத நிலையில் ஸ்ரீமாவின் அரசாங்கம் அரிசி பங்கீட்டை அரைக் கொத்தாகக் குறைத்தது. தாராளமாகக் கிடைத்து வந்த பாணை பங்கீட்டு முறைக்குள் கொண்டு வந்தது.

அது குடும்ப அட்டையும் அரிசி புத்தகமும் நடைமுறையில் இருந்த காலம். அச் சமயத்தில் அடையாள அட்டை நடைமுறையில் இல்லை. அரிசி பங்கீட்டு புத்தகத்தை கையில் வைத்திருப்பது இன்றைக்கு அடையாள அட்டையை வைத்திருப்பதற்கு சமம். அதைத் தொலைத்து விட்டால் திரும்பப் பெறுவது மிகக் கடினம். எனவே மக்கள் அரிசிப் புத்தகத்தையும் குடும்ப அட்டையையும் மிகப் பத்திரமாக வைத்திருந்தார்கள். கிழமைக்கு ஒரு நபருக்கு ஒரு கொத்து அரிசி 25 சதத்துக்கு சங்கக் கடைகளிலும் லைசன்ஸ் (உத்தரவு பெற்ற பல சரக்கு கடைகள்) கடைகளிலும் வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் ஆறு நபர்கள் என்றால் ஆறு கொத்து அரிசி கிடைக்கும். செத்தல் மிளகாய், மாசி, கடுகு, சீரகம் போன்றவை ஒரு குடும்ப உறுப்பினருக்கு இத்தனை அவுன்ஸ் என்ற அடிப்படையில் குடும்ப அட்டை மூலம் அவ்வப்போது வழங்கப்பட்டன. இது நாடு சுதந்திரம்பெற்றநாள் முதல் நடைமுறையில் இருந்து வந்த பங்கீட்டு நடைமுறை. பாணையும் இந்த முறையில் பங்கீடு செய்ய அரசு முடிவு செய்தது. கோதுமையை போதுமான அளவில் இறக்குமதி செய்ய முடியாத நிலை. உலக சந்தையில் மாவுக்குத் தட்டுப்பாடு. விலை அதிகம். இறக்குமதி செய்யவும் கையில் டொலர் இல்லை. எனவே கோதுமை மா நேரடியாக பேக்கறிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. விடியற் காலையில் பேக்கறிகள் பாணைத் தயாரித்து சங்கக் கடைகளுக்கு அனுப்பி வைத்தன. ஒரு குடும்பத்துக்கு அரை இறாத்தல் என்ற வகையில் பாண் பங்கீடு செய்யப்பட்டது. பத்துப் பேர் கொண்ட குடும்பம் என்றால் 5 இறாத்தல் பாண் தினமொன்றுக்குக் கிடைக்கும். அதே குடும்பத்துக்கு கிழமைக்கு அரைக் கொத்து என்பதாக ஐந்து கொத்து அரிசி 25 சதம் என்ற விலையில் வழங்கப்பட்டது.

இப்போது பெற்றோலுக்கு டீசலுக்கும் நீண்ட வரிசைகள் காணப்பட்டதைப் போலவே அன்றைக்கு அதிகாலையிலேயே சங்கக்கடைகளில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. அப்போது நான் பாடசாலையை விட்டு விலகி வீட்டில் இருந்தகாலம். எனவே சங்கக் கடைக்கு சென்று அரிசி வாங்கி வருவது, தினசரி பாண் கியூவில் நின்று பாண் வாங்கி வருவது என்பன எனக்கு அளிக்கப்பட்டிருந்த பிரதான கடமைகள்.

விடியற் காலையில் நான்கு மணிக்கு எழுந்து விடுவேன். துவாலையை எடுத்து தலைப்பாகையாகக் கட்டிக் கொள்வேன். வாங்குவதற்கு கடைகளில் தொப்பிகள் விற்பனையில் இல்லை. கட்டைக் கால் சட்டை, முரட்டு கைத்தறி ஷர்ட்டுடன் கையில் தெரு நாய்களை விரட்ட ஒரு தடியுடன் சங்கக் கடை நோக்கிக் கிளம்பி விடுவேன். வழியில் மேலும் இரண்டு வேலை வெட்டி இல்லாத நண்பர்கள் ஓலைப் பைகளுடன் என்னுடன் சேர்ந்து கொள்வார்கள். ஒரு பத்து நிமிட நடையில் சங்கக் கடையை அடைந்து விடுவோம். அந்த நேரத்தில் 25.30 பேர் எங்களுக்கு முன்பாக வரிசையில் நின்று கொண்டிருப்பார்கள்.

விடியற் காலையிலேயே வரிசையில் நின்றால் தான் முதல் டெலிவரியிலேயே பாண் கிடைக்கும். இல்லையேல் இரண்டாவது தொகை பாண் வந்துசேர ஏழரை மணியாகிவிடும். ஐந்தரை மணியளவில் சங்கக் கடைக்கு பாண் வந்து விடும். அன்றைய விறகடுப்பு பாண். இன்றைய பாண் மாதிரி மெத்தென்று இருக்காது. கடினமானதாகவும், நடுவே ஓட்டைகளுடனும், சில சமயம் சரியாக வேகாமலும் இருக்கும். எப்போதாவது இறந்த வண்டுகளையும் காணலாம். மஞ்சள் நிறத்தில் திட்டுதிட்டாகவும் இருக்கும். அவற்றை பிய்த்து எறிந்து விட்டு சாப்பிட வேண்டும். பாண் விநியோகத்துக்கென ஒரு பாண் கார்ட் கொடுத்திருந்தார்கள். அதை நீட்டியதும் குடும்ப உறுப்பினருக்கு அரை இறாத்தல் என்றபடி பாணைத் தருவார்கள். எங்கள் குடும்ப எண்ணிக்கை பத்து. எனவே ஐந்து இறாத்தல் கிடைக்கும். அப்போது உண்மையில் வீட்டில் வசித்தவர்கள் ஆறுபேர் தான். எனவே ஐந்து இறாத்தல் பாணை வைத்து முழு நாளையும் ஓட்ட முடிந்தது.

அக்காலத்தில் மைசூர் பருப்பெல்லாம் கிடையாது. பால் சொதி, சம்பல், சீனி சம்பல் வகையறாககளை செய்து வைப்பார்கள். மூன்று அல்லது நான்கு துண்டு பாணை சொதி அல்லது சம்பலுடன் தொட்டு சாப்பிட்டு விட்டு அடுத்த வேலைக்கு கிளம்பி விடுவேன். எங்கே மரவள்ளி அல்லது வற்றாளைக் கிழங்கு கிடைக்கும் எனத் தேடிப்போக வேண்டும். கிடைத்தால் இரவில் மரவள்ளி சாப்பாடு. கோதுமை மாவை கரைத்து தோசையாக சுட்டுத் தருவார்கள். பகலில் மாத்திரம் சோறு. வீட்டில் கோழி வளர்ப்பு இருந்ததால் எப்போதாவது முட்டைக் கறி வரும். ஒரு முட்டையின் விலை 22 சதம் என்பதால் வீடுகளில் கோழி வளர்ப்போர் முட்டைகளை உண்ணாமல் விற்றுகாசாக்கி விடுவதே வழக்கம்.

அக் காலத்தில் சாப்பாட்டுக் கடைகளின் பாடு பெரும்பாடாகி விட்டது. கிழமையில் இரண்டு நாள் அரிசி சோறு பரிமாறத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கோதுமை மாவை களவாகப் பெற்றுத்தான் மாவு தோசை, ரொட்டி தயாரித்து விற்றார்கள். சேமன் கிழங்கு, மரவள்ளி, வற்றாளை என்பனவற்றை அவித்தும், கறி செய்தும், அவித்து பசையாகக் கிண்டி அதில் மார்ஜரின் சேர்த்தும் சாப்பாட்டுக் கடைகளில் விற்றார்கள். மூன்று வேளையும் ஹோட்டல்களில் சாப்பிட்டவர்கள் திண்டாடிப் போனார்கள். அக் காலத்தில் ஸ்ரீமா அரசு அரிசியை இடத்துக்கு இடம் எடுத்துச் செல்வதைத் தடை செய்திருந்ததால் அம்பாறை, பொலன்னறுவை போன்ற வயல் பிரதேசங்களில் இருந்து அரிசியை கொழும்புக்கும் வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்ல முடியாதிருந்தது. சிங்களத்தில் இதை 'சஹால் பொல்ல' என அழைத்தார்கள். பம்பலப்பிட்டியில் இயங்கிய ஒரு தரமான உணவகத்துக்கு வந்த வாசுதேவ நாணயக்கார, மசிக்கப்பட்ட வற்றாளையை 'சிக்கன் டெவலு'டன் சேர்த்து சாப்பிட்டுச் சென்றது நினைவுக்கு வருகிறது.

அக் காலத்தில் சங்கக் கடை, லைசன் கடைகளைத் தவிர ஏனைய பலசரக்கு கடைகளில் அரிசி, டின் மீன், பருப்பு, மா, செத்தல் மிளகாய் போன்ற பண்டங்கள் விற்பனையில் இருக்கவில்லை. அப்பிள், திராட்சை, பட்டர், ஜேம், மைசூர், தோரம் பருப்பு கட்டித் தயிர், யோகட், பால் வகைகள் கிடைப்பதில்லை. நெஸ்பிரே பால்மா கிடைத்ததாக நினைவு. இறக்குமதி செய்யப்பட்ட, விலை உயர்ந்த பொருட்கள் விற்பனையில் இல்லை என்பதால் மக்களும் பெரிதாக எதற்கும் ஆசைப்படவில்லை. பாண், பணிஸ் என்பனவற்றை வெளியே எங்குமே வாங்க முடியாது. மக்கள் மத்தியில் பணப் புழக்கம் குறைவாகவே இருந்தது. பணப் வைத்திருப்பவர்களினால் பொருட்களை வாங்க முடியவில்லை. மேலதிகமாக பொருட்கள் சந்தையில் இல்லை என்பதால் பணத்தை கையில் வைத்திருந்ததும் பிரயோசனம் இருக்கவில்லை.

நாட்டில் என்ன நடக்கிறது என்பது மக்களிடம் போய்ச் சேரவில்லை. இலங்கை வானொலியும் லேக்ஹவுசும் அரசு கட்டுப்பாட்டில் இருந்தன. அரசு விரும்பியபடியே அவை செயல்பட்டன. தொலைக்காட்சி வசதி அப்போது கிடையாது. நூற்றுக்கு 80 சதவீதமானோரிடம் தொலைபேசி வசதி இல்லை. அச் சமயத்தில் நடு நிலையில் நின்று உண்மை நிலையை குணசேன நிறுவனம் நடத்திய தவச குழுமப் பத்திரிகைகள் மட்டுமே வெளிக் கொண்டுவந்தன. இக் குழுமத்தில் இருந்து தவச, ரிவிரெஸ, சன், வீக் எண்ட், தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன. நாட்டில் நிலவும் உணவுக்கான திண்டாட்டம், வேலை வாய்ப்பின்மை, தொழில்கள் நசிந்து வருவது, தனி மனிதர்கள் படும்பாடு, போஷாக்கின்மையால் வறியவர்களும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டிருப்பது தொடர்பான செய்திகளும் கட்டுரைகளும் வெளிவருவது ஸ்ரீமா அரசுக்கு எரிச்சலூட்டியது. தவச பத்திரிகை போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த வயிறு ஊதிப்போயிருந்த ஒரு சிறுமியின் படத்தை வெளியிட்டிருந்தது. இது போலியான படம் எனத் தெரிவித்த அரசாங்கம் அதிரடியாக தவச பத்திரிகைக் குழுமத்தை முடியாது.



1977ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன பதவிக்கு வந்த பின்னர் தவச குழுமத்துக்கு நஷ்ட ஈடாக பெருந் தொகையை வழங்கினார். அக் குழுமம் மீண்டும் பத்திரிகைகளை வெளியிட ஆரம்பித்தது.

இரண்டு கொத்து அரிசியை வழங்குவேன் என்ற பிரதான தேர்தல் வாக்குறுதியை அளித்து பதவிக்கு வந்த ஸ்ரீமா அரசு ஒரு வருட முடிவில் அரசைக் கவிழ்க்கும் ஒரு ஆயுத போராட்டத்தையும் அதன் பின்னர் ஒரு பெரும் உணவு நெருக்கடியையும் சந்திக்க நேர்ந்தது. இதைப் பற்றி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பின்னர், நாங்கள் வாழ்தலுக்காக போராட வேண்டியிருந்தது என்றும் பொருளாதார நெருக்கடி ஏறக்குறைய எமது கழுத்தையே நெரித்துவிட்டது என்றும் அன்றைய சூழலை வர்ணித்திருந்தார். ஒன்றுமே செய்ய முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, கடுமையான உணவு பங்கீட்டு முறையை அமுல் செய்ய வேண்டியதாயிற்று. உள்நாட்டில் உணவு உற்பத்திசெய்ய வேண்டும், ஒவ்வொருவரும் தமது வீடுகளில் எதையேனும் பயிரிட வேண்டும் என்ற கொள்கையை கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது.

இந்த அரிசி அரசியலை எடுத்துக் கொள்ளும்போது பிரதான கட்சிகள் தாம் ஆட்சிக்கு வந்தால் போதும் என்ற கொள்கையை தேர்தல் அரசியலை மட்டுமே கை கொண்டு வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு முடிவு கட்டி, அரிசி அரசியலுக்கு பதிலாக அபிவிருத்தி அரசியலுக்கு செல்ல வேண்டும் என இக்கட்சிகள் கருதவில்லை.

(15ஆம் பக்கம் பார்க்க)

# "ரணில் விக்கிரமசிங்கவை ஒரு கட்சியின் தலைவராக அல்லாமல் நாட்டின் தலைவராக பாருங்கள்"

## 52% பெண் வாக்காளர்கள் நினைத்தால் குறைந்தது 100 பெண்களையாவது பாராளுமன்றம் அனுப்ப முடியும். ரோஹினா மஹரூப்

**ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளராகவும் திருகோணமலை மாவட்ட அரசியலின் தனிப்பெரும் அரசியல் அடையாளமாகவும் திகழ்ந்த முன்னாள் துறைமுகங்கள், மற்றும் கப்பல் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் M.E.H. மஹரூபின் இரண்டாவது புதல்வியும் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மூதூர் தொகுதி அமைப்பாளருமான ரோஹினா மஹரூப் தினகரன் வாரமஞ்சரி நேயர்களுக்காக வழங்கிய நேர்காணல்......**

நேர்காணல்:
இர்ஷாத் இமாமுதீன்
*(கிண்ணியா தினகரன் நிருபர்)*



தினகரன்: ***உங்கள் சமூக சேவை மற்றும் அரசியல் பிரவேசம் தொடர்பாக ஓர் அறிமுகத்தை தரமுடியுமா?***

ரோஹினா மஹரூப்:
எனது தந்தை அரசியல் தலைமையாக இருந்ததால் எனது இரத்தத்திலேயே சமூக உணர்வு இயல்பாகவே இருந்தது. 2016 ம் ஆண்டில் ஒரு நாள் சமூக வலைதளத்தில் பயணிக்கலாம் என முகப்புத்தக கணக்கொன்றைத் திறந்தேன். பெண்களுக்கு எதுவும் பாதுகாப்பில்லை எனினும், பல ஆண் நண்பர்களை இணைத்துக் கொண்டு எனது பதிவுகளை, சமூக அரசியல் சார்ந்த கருத்துகளைப் பதிவு செய்தேன். நல்ல வரவேற்பையும் பெற்றுக்கொண்டேன். பல ஆண்கள் என்னை ஊக்குவிக்கும் முகமாக தங்கள் பின்னூட்டங்களை இட்டிருந்தார்கள். இது என்னை செயல்ரீதியாக மேலும் சமூக சேவைகளைச் செய்யத் தூண்டியது. ஊரின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பலரது அபிப்பிராயங்களைக் கேட்டறிந்த போது, அரசியல் அங்கீகாரம் இருந்தால் மேலும் பல விடயங்களை சாதிக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கியது. படிப்படியாக UNP இன் " லக்வனிதா" மகளிர் அமைப்புடன் எனது அரசியல் பயணம் மெல்லத் தொடர்ந்தது.

கடந்த 2020 ல் நடந்த பொதுத்தேர்தலின் போது கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாக, ஐ.தே.கட்சி சார்பாக திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளராக களமிறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையே எனது திடீர் அரசியல் பிரவேசத்திற்கு ஏதுவாக அமைந்தது.

தினகரன்: ***முஸ்லிம் அரசியலில் பெண் தலைமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடம் குறித்து உங்கள் கருத்தை தெரிவிக்க முடியுமா?***

ரோஹினா மஹரூப்:
52% பெண்க வாக்காளர்களைக் கொண்ட நமது நாட்டில் முஸ்லிம் சனத்தொகை வெறும் 9.7% மாத்திரமே. அதிலும் நமது திருகோணமலை மாவட்டத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கேனும் பெண்கள் அரசியலில் இல்லை என்பதுதான் உண்மை. பெண்களுக்கு 25% ஒதுக்கப்பட வேண்டுமென்ற ரணில் விக்ரமசிங்கவின் 2016 உள்ளூராட்சி மன்ற கோட்டா நடைமுறைக்கு வந்த போதே சில பெண்கள் நமது மாவட்டத்திலும் அரசியலில் உள்வாங்கப்பட்டனர்.

எனினும் நம் சமூகத்தைப் பொறுத்தவரை பெண்களுக்கான இடமென்பது விலக்காகவே இன்றளவும் கருதப்படுகிறது. தலைமைத்துவப் பண்பை ஒரு பெண் முன்வந்து வளர்த்துக் கொண்டாலும் அதற்கான அங்கீகாரம் பல வேளைகளில் பெண்களாலேயே மறுக்கப்படுகின்றதும் யதார்த்தம்தான். அதற்கான காரணம் பெரும்பாலான ஆண்களின் ஆதிக்க மனப்பாங்கே. எல்லா விமர்சனங்கள், முட்டுக்கட்டைகள் என்பவற்றைத் தாண்டி பெண்களால் அரசியலில் சாதிக்க முடியாதுள்ளதும் முஸ்லிம் சமூகத்தின் சாபக்கேடாகும். பெண் தலைமைத்துவத்தின் கீழ் ஆண்கள் எதற்கு அணிதிரள வேண்டுமென்ற தாழ்வு மனப்பான்மையும் இதற்கான முக்கிய காரணமாகும். காலங்காலமாக அடிபணியக் கற்றுக்கொண்ட பெண்கள் மேலும் விழிப்படைந்தால் அரசியலில் பெண்கள் பலர் எதிர்காலத்தில் மேலோங்கக் கூடிய சந்தர்ப்பம் அமையலாம் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

தினகரன்: ***உங்கள் தந்தையின் அரசியல் பயணத்தையும் திருகோணமலை மாவட்ட அரசியலின் தவிர்க்க முடியாத அவரின் அடையாளத்தையும் எப்படிப் பார்க்கிறீர்கள்?***

ரோஹினா மஹரூப்:
எனது தந்தையைப்போல இன்னொருவர் இனி ஒருபோதும் உருவாகவே முடியாது. அவரது சாயலையோ குணாதிசயங்களையோ எந்த அரசியல்வாதியிடமும் நான் கண்டதில்லை. அவர் நடந்து சென்ற பாதை இன்னும் வெறிச்சோடிக் கிடக்கின்றது. யாருடைய கால்தடங்களும் அதில் பதியப்படவில்லை. அதில் என்னுடையதும் அடங்கும். திருகோணமலை அரசியலில் அவர் ஒரு பொக்கிஷம். மீண்டும் அது உருவாவதில்லை. எனது சிறுவயதுமுதல் அவரை நான் அவதானித்திருக்கிறேன். அவரது அணுகுமுறையும் பிரச்சினைகளைக் கையாளும் விதமும் மிக அலாதியானது. எதற்கும் கோபப்பட மாட்டார். பொறுமைக்கு மறுபெயர் என்றால் M.E.H. மஹரூப் என்று சொல்வேன். சாந்தமான அவர் முகத்தில் எப்போதும் ஒரு புன்னகை இருக்கும். சிங்கள , தமிழ், முஸ்லிம் மக்கள் என மூவினமும் தூக்கி வைத்துக் கொண்டாடிய ஒரு தலைமை அவர். எனது தந்தை சிறுபான்மைக் கட்சிகளை வெறுத்தார். அவை மக்களிடையே பெரும் பாகுபாட்டைத் தோற்றுவிக்கும் என்று அன்றே எதிர்வு கூறினார், இப்போதுள்ள இனவாதமும், கட்சி வெறியும் அவர் எதிர்வு கூறியதையே பறை சாற்றுகின்றன. இயலுமான வகையில் அவரது உத்திகளை நானும் கையாள முயற்சிக்கிறேன், ஆனால், இக்காலகட்டத்தில் அவை எந்தளவுக்கு சாத்தியப்படும் எனப் புரியவில்லை.

தினகரன்: ***திருகோணமலை மாவட்டத்தில் உமது தந்தைக்குக் கிடைத்த இடம் உங்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றதா?***

ரோஹினா மஹரூப்:
அவரது இடம் இப்போதும் காலியாக இருப்பதால் அந்த இடத்தைப் பிடிக்க முயற்சி செய்வதில் தவறில்லை. ஆனால், 100% அவரது இடம் எனக்கு கிடைக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில், அவரது காலப்பகுதி 1972 முதல் 1997 என்பது வித்தியாசயமான அரசியல் , சமூக நிலைமைகளைக் கொண்டிருந்தது, இப்போதயை நிலைமை நாம் நினைப்பது போலல்லாமல் பாரியளவு வித்தியாசத்தைக் கொண்டுள்ளது. மூலைக்கொரு கட்சி கட்சிக்கொரு தலைவன் என எங்கே பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் அரசியலையே அலசிக் கொண்டிருக்கிறார்கள். Quantity கூடுதலாக இருக்கிறதே தவிர quality எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் வாயை மூடிக்கொண்டு, காதைத் திறந்து வைத்திருந்த வாக்காளர் மத்தியில் நாம் வாழ்ந்தோம். இப்போது அநேகர் வாயைத் திறந்து கொண்டு காதுகளை மூடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசியலில் குறிப்பாக, பெண்ணாக களமிறங்குவதில் நம் மாவட்டத்தில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தினகரன்: ***உங்கள் சகோதரரான பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூபின் அரசியல் உங்கள் அரசியல் பயணத்திற்கு தடைகளை ஏற்படுத்துகிறதா?***

ரோஹினா மஹரூப்:
இல்லை. அவரது பயணம் வேறு எனது பாதை வேறு. இருவரும் ஒரே இலக்கை நோக்கிச் செல்லும் போதுதான் ஒருவருக்கொருவர் போட்டியாக இருக்க முடியும். அவர் அரசியலில் நிலைத்து நிற்பதற்கு பல உத்திகளைக் கையாளுகிறார். குறிப்பாக அனுதாப வாக்குகளைச் சேகரிப்பதில் அவரது அணுகுமுறை, நான் வாக்கு சேகரிப்பதிலிருந்து மாறுபடுகிறது அது. நான் பரிதாப அலையை என் பக்கம் திருப்ப முயற்சிக்கவில்லை. நாம் எதை இழந்தோம் என்பதைவிட நம்மால் என்ன முடியும் என்பதையே வாக்காளர்களுக்கு உணர்த்த வேண்டும். நான் எனது தலைவர் ரணில் விக்ரமசிங்க போல சில வியூகங்களை அமைத்து அதன் மூலம் வெற்றிபெறப் போராடுபவள்.

தினகரன்: ***திருகோணமலை மாவட்டத்தில் பெண்களின் மேம்பாட்டுக்காக உங்களிடமுள்ள செயற்றிட்டங்களை விபரிக்க முடியுமா?***

ரோஹினா மஹரூப்:
வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை அழிவுகளாலும் முன்பு சுனாமியின் தாக்கத்தாலும் வன்செயல்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் நம் திருகோணமலை. இதில் பெரும்பாலானவர்கள் விதவைகள் மற்றும் வயோதிபத் தம்பதியினர். பெண்களுக்கான பாதுகாப்பான சுயதொழில் திட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தி அவர்களது வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்பது எனது பொதுவான குறிக்கோள். வெளிநாட்டுக்கு பணிப்பெண்களாக வேலைக்குச் செல்வதனால் பல குடும்பங்கள் இன்று சிதறிப்போய் இருக்கின்றது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் , சிறுபிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் போன்ற அடிப்படை உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. எனவே, இதற்கான தீர்வாக பயிற்றப்பட்ட பெண்களைக் கொண்ட ஒரு ஆடைத் தொழிற்சாலை என்பதை நம் ஊரிலேயே அமைத்துக் கொடுத்தால் பாதி சனத்தொகையின் வருமானம் அதிகரிக்கின்ற வாய்ப்பு ஏற்படும்.

மேலும் தூரப் பிரதேசங்களிலிருந்து நடந்து பாடசாலை வருகின்ற பிள்ளைகளுக்கான ஒரு வாகன வசதி சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதும் இதில் முக்கியமாக அமையும். பின்தங்கிய கிராமப்புற பிரதேசங்களில் உள்ள மருத்துவ க்ளினிக் களின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் பிறக்கின்ற குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க முடியும். இடியப்பம் அவித்தல், அப்பம் சுடுதல் போன்ற சில்லறை வியாபாரம் செய்கின்றவர்களுகக்கு உபகரணங்கள், மற்றும் எரிபொருள் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் அவர்களது வருமானத்தை உறுதிப்படுத்த வழிவகுக்கலாம் என்பது எனது செயற்பாட்டுத் திட்டங்களில் சிலவாகும்.

தினகரன்: ***இலங்கை அரசியலில் பெண்களுக்கான இடம் தொடர்பில் திருப்தியடைகிறீர்களா?***

ருஹினா மஹரூப்:
இல்லை. ஏனெனில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நம் நாட்டில் வெறும் 10/ 12 பேர் மாத்திரமே பெண் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இது எந்த வகையிலும் யாராலும் திருப்திப்பட முடியாத காரணியாகும். நான் முன்பே சொன்னதுபோல பெண்களை ஓரம் கட்டுவதில் சில நேரங்களில் பெண்களே கூட காரணமாக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. 52% பெண் வாக்காளர்கள் நினைத்தால் குறைந்தது 100 பெண்களையாவது பாராளுமன்றம் அனுப்ப முடியும். அவ்வாறான ஒரு மாற்றம் வரவேண்டும். வந்தால் நாட்டின் பாதிப்பிரச்சனை தீர்ந்து விடும் என்பதே எனது கருத்து. காரணம் பெண்கள் குரல் கொடுக்கும் பொழுது நம் சமூகம் அதனைக் கூர்ந்து அவதானிக்கிறது.

தினகரன்: ***ஒரு நெருக்கடியான சூழலில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி பொறுப்பை ஏற்றிருக்கிறார். இந்த சூழ்நிலையை அவர் வெற்றிகொள்வார் என்ற நம்பிக்கை இருக்கிறதா?***

ரோஹினா மஹரூப்:
நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையை அவர் நிரூபித்தும் இருக்கிறார். பதவிக்கு வந்து குறைந்தது 20 நாட்களுக்குள் எரிபொருள் வரிசையை இல்லாமல் செய்திருக்கிறார். 1 1/2"வருடங்களுக்குத் தேவையான கேஸ் கையிருப்பில் வைத்திருக்கிறார். பல மணிநேரங்கள் இருந்த மின்துண்டிப்பு தற்போது ஒரு மணி நேரமாக மாறி இருக்கிறது. எனவே, மக்கள் எதிர்பார்த்தவைகள் மெல்ல வழமைக்குத் திரும்புகின்றன. எனவே, இதுவே ஒரு நல்ல சகுனம்தான். மேலும், நமது பொருளாதாரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாடுகளின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே தலைவர் என்ற பெருமையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிச்சயம் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. கட்சி அரசியல் பேசிக்கொண்டு பலரும் அந்த மூளைசாலியை புறக்கணிக்கப் பார்க்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், அவரை ஐ.தே.கட்சித் தலைவராகப் பார்க்காமல், நாட்டு மக்களின் ஜனாதிபதியாக குறைந்தது ஆறுமாத காலமாவது அவகாசம் கொடுங்கள் என்பதே ஆகும்.

தினகரன்: ***ஐக்கிய தேசியக் கட்சியை மீளக்கட்டி எழுப்புவதற்கான செயற்றிட்டத்தில் திருகோணமலை மாவட்டம் வெற்றியடையுமா?***

ரோஹினா மஹரூப்:
வெற்றியடையும்.ஆனால் அந்த வெற்றி மிக மெதுவாகவே நடைபெறும் என்பதுதான் இன்றைய சூழ்நிலையின் யதார்த்தம். ஏனென்றால், கிட்டத்தட்ட பூஜ்ஜியத்திற்குள் விழுந்து விட்ட கட்சியை உடனே தூக்கி நிறுத்திவிட முடியாது. அதற்கான காலமும் இதுவல்ல. பொருளாதார நெருக்கடியில் வரலாறு காணாத விலையேற்றத்தில் மக்கள் தினமும் அல்லலுரும் இவ்வேளையில், கட்சியின் நல்லது கெட்டதைச் சொல்லி மக்களைத் திசை திருப்பும் மனநிலையில் எந்த அமைப்பாளரும் இல்லை. ஆனால், தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற்றுவிட்டால், கட்சியின் தலைவராக அவர் வெற்றி பெறுவதோடு, ஐ.தே.கட்சியை திருகோணமலை மாவட்டத்திலும் வெற்றி பெறச் செய்யலாம். மாற்றம் என்பது சாத்தியம் ஆனால் உடனே சாத்தியமில்லை.

# மாற்றமடையும் பயங்கரவாத தடைச்சட்டம்

**பொ**ருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் சகல வழிகளையும் திறந்து விட்டுள்ள அரசாங்கம், இயலுமானவரை மீண்டெழும்ப முயற்சிக்கிறது. இந்த முயற்சிகளில் சில விமர்சனங்களும் இருக்கவே செய்கின்றன. சந்தர்ப்பம் வாய்த்தால் இவ்விமர்சனங்கள் வீரியமடையலாம். இதற்காக அரசியல் நோக்கில் எவரும் காய்நகர்த்தவும் கூடாது. அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அதிரடி நகர்வுகள் அரசியல் களத்தை ஆட்டிப் பார்ப்பதாகவே பலரும் கருதுகின்றனர். முன்னூறுக்கும் மேற்பட்ட பொருட்களுக்கான இறக்குமதித் தடைகள், மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தமை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்ல விரும்புவோரை அவசரமாக அனுப்பும் ஏற்பாடுகள், இதில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அவசர சலுகைகள் எல்லாம் மீண்டெழுவதற்கான பிரயத்தனங்களே. இந்தப் பிரயத்தனங்களில் இப்போது பிரதானமாகப் பேசப்படுவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகமாக்கும் முயற்சிகள்தான்.

சர்வதேச அரங்கில் தனிமைப்பட்டு, உதவிகள் தடைப்படாமலிருக்க சிலவற்றைச் செய்தே தீரவேண்டிய தேவை இந்த அரசாங்கத்துக்கு உள்ளது. சிலவேளைகளில், இந்தத் தேவைகள் சிலரது தேவைகளில் மண்ணை வாருவதாக இருக்கலாம். இவ்வாறானவர்களின் அதிகார ஆசைக்கு இடமளிக்கும் நிலையில், நமது நாட்டின் பொருளாதார நிலை இல்லையே! இதற்காகத்தான், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுமென்ற உறுதிமொழி சர்வதேசத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் அமுலில் இருப்பதால், வெளிநாடுகளின் பார்வைகளில் நமது நாடு பயங்கரமாகப் பார்க்கப்படுகிறது. தனி மனிதனின் வாழ்வியல் உரிமைகளை முழுமையாக மறுக்கும் சட்டம் இதுவென்றுதான் வெளிநாடுகள் மட்டுமல்ல மனித உரிமைகள் செயற்பாட்டு அமைப்புகளும் கருதுகின்றன. ஒருவனின் வாழ்வை, அவனது ஆசைகளை, உயிரோடு முடமாக்கும் அல்லது அழிக்கும் இந்தச்சட்டம் 'ஜனாதிபதி' என்கின்ற தனியொருவரிடம் எப்படி இருப்பது?

எதிர்பாராமல் எழுகின்ற கலகங்கள் மற்றும் யுத்தங்களை அடக்குவதற்கு ஒரு காலவரையறைக்குள்ளாவது இந்தச் சட்டம் மட்டுப்படுத்துகிறதா? அப்படியும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அறிமுகமாக்கிய இந்தப் "பயங்கரவாதச் சட்டம்" நாற்பது வருடங்களாகியும் இன்னும் நிலைக்கிறது. அவரால் அறிமுகஞ்செய்யப்பட்ட அரசியலமைப்பு எத்தனை தடவைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்றங்கள் எதற்குள்ளும் இந்தச் சட்டம் திருத்தப்படவில்லை. இதுதான் இதிலுள்ள கவலை. இதைத்திருத்துமாறு பல தடவைகள் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் அவ்வப்போது எழும் சுயநல நோக்குகளால் காலங்கடந்ததுதான் கவலை.

இலங்கை அரசாங்கத்தை என்றாவது வளைத்துப்பிடிக்க வாய்ப்புக்களை எதிர்பார்த்த சர்வதேசம், நெருக்கடி நேரங்களில் கையேந்தும் போது, இலங்கைக்கு நெருக்கடி கொடுத்த சம்பவங்களை நாம் மறப்பதற்கும் இல்லை. ஜீ.எஸ்.பி வரிச்சலுகையைப் பெறவேண்டுமானால், பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாமலாக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஐ.நா என்பன விடுத்த கோரிக்கைகளை நாம் நிறைவேற்றவில்லை. நிறைவேற்றியிருந்தால் அதலபாதாளத்திலிருக்கும் இன்றைய நெருக்கடிக்கு நேசக்கரம் நீட்டப்பட்டிருக்கும். இதுபற்றிய நீண்ட அனுபவங்கள் ஜனாதிபதியிடம் இருக்கின்றன. இந்த அனுபவங்களில்தான் சர்வதேச உதவிகளை நாடிய நகர்வுகளை ஜனாதிபதி நகர்த்தி வருகிறார். இதற்காகவே பயங்கரவாதச் சட்டம் மாற்றப்படவிருக்கிறது.




இது மாற்றப்பட்டால் ஒருவரைக் கைது செய்வதற்கான உரிய காரணங்கள் சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கைதான சந்தேக நபரை வழக்குத் தொடராமல் மாதக்கணக்கில் அடைத்துவைக்க முடியாது. கைதானவர் வைக்கப்பட்டுள்ள இடத்தை பகிரங்கமாக அறிவித்தல், குடும்ப உறவினர்கள் அடிக்கடி பார்ப்பதற்கு அனுமதியளித்தல், உரிய காலத்துக்குள் கைதானவருக்கு எதிராக வழக்குத்தொடரல் மற்றும் தடுத்து வைக்கப்படும் காலத்தில் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளாரா? என்பதை அறிவதற்கு மருத்துவச் சான்றிதழைப் பெறுதல் உள்ளிட்ட விடயங்கள் உள்ளடங்கி, இப்புதிய திருத்தம் அல்லது சட்டம் வெளியாக உள்ளது. சிலநேரங்களில் 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற புதிய பெயருடனும் இச்சட்டம் அறிமுகமாகலாம்.

எவ்வாறானாலும், சர்வதேசம் திருப்தியுறும் வகையில் இந்தச் சட்டமோ அல்லது திருத்தமோ இருத்தல் அவசியம். அப்போதுதான், நாம் தேடும் சர்வதேச உதவிகள் நமது வாசல்கதவுளை தட்டும். எந்தச் சமூகங்களையும் இலக்குவைக்கும் நோக்கில் இந்தச் சட்டங்கள் இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பது 'மனித உரிமைகளுக்கு எதிரானவர்கள்' என்ற கருதுகோள் ஏற்பட்டு, சர்வதேச அரங்கில் நமது நாடு தனிமைப்பட நேரிடும்.

ஜெனீவா அமர்வுகள் மற்றும் ஐ.நா கூட்டங்களில் இங்கிருந்து சென்றோர் அரசியல் நோக்கங்களுக்காக நமது நாட்டை காட்டிக்கொடுத்த பாவங்களால்தான் நாம் பழிவாங்கப்படுகிறோம் என்பதை முதலில் அரசியல்வாதிகள் உணர வேண்டும். இவ்வாறு இவர்கள் உணர்வது, வரப்போகும் சர்வதேச உதவிகளுக்கான வாசல்களை திறக்கலாம்.

சுஐப் எம்.காசிம்





நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் 'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் கேதீஸ்வரன் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி அம்ரிதா கேதீஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நடன நெறியாள்கையில், அணிசேர் கலைஞர்களாக, குரலிசை ஆரூரன், மிருதங்கம் லோகேந்திரன், வயலின் திபாகரன், தாள தரங்கம் ரட்ணம் ரட்ணதுரை மற்றும் புல்லாங்குழல் பிரியந்த ஆகியோரின் பங்களிப்புடன் அரங்கேற்றம் நடைபெறவுள்ளது. இவ்வரங்கேற்ற நிகழ்விற்கு 'கலைமாமணி' ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷன் (இயக்குனர் நிர்த்தனா பரத கலைக்கூடம்) பிரதம விருந்தினராகவும், ஆசிய இன்டர்நேஷனல் கல்லூரியின் அதிபர் ஹர்ஷன பெரேரா கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




யாழ். புங்குடுதீவு, ஆலடிப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான அமைப்பினர் இப்பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கினர். கனடாவில் வாழும் புலம்பெயர் மக்களின் உதவியுடன் இலங்கைக்கான தலைவர் தேசமானிய நா.தனேந்திரனின் தலைமையிலான நிர்வாகக் குழுவினர் இவற்றை வழங்கினர். படம் வேலணை குறூப் நிருபர்

## விமர்சன அரங்கு




பிரமிளா பிரதீபனின் விரும்பித் தொலையுமொரு காடு (சிறுகதைத் தொகுப்பு) விமர்சன அரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்தில் நடைபெறவுள்ளது.

ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் தலைமையில் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையாற்றுகிறார் குந்தவி ஸ்ரீகாந்த். கவிஞரும் கல்விப் பணிப்பாளருமான சு. முரளிதரன் 'கதைகளும் குறியீட்டுக் கதைகளும்' எனும் தலைப்பிலும், எழுத்தாளரும் தகவம் செயலாளருமான வசந்தி தயாபரன் 'சிறுகதைகளின் அக உளவியல்' எனும் தலைப்பிலும், இலக்கிய செயற்பாட்டாளர் சேவுகன் இராஜேந்திரன் 'மொழி அழகியல்' எனும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். ஏற்புரையும் நன்றியுரையையும் எழுத்தாளர் பிரமிளா பிரதீபன் ஆற்றவுள்ளார்.



"வவுனியாவில் மகத்தான பணிசெய்துவரும் சான்றோருக்கு வழங்கும் உயர் விருதினை" வவுனியா நகரபிதாவும் உப நகரபிதாவும் மாவீரன் பண்டாரவன்னியன் விழாவில் வைத்து தமிழருவி தம்பிராசா சிவகுமாருக்கு வழங்கி கௌரவித்தார்கள்.



அவுஸ்திரேலியா 'இணைந்த கரங்கள் ' நிறுவனத்தினர் யாழ். ஊரெழு கணேச வித்தியாசாலையில் தெரிவுசெய்யப்பட்ட வசதிகுறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

## இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று பாடகர்களின் பாடல்களுடன் கலைக்கமலின் "கீத்ராத்"



நீண்ட இடைவெளிக்குப் பிறகு அநேக ரசிகர்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் 56ஆவது "கீத்ராத்" இசை நிகழ்ச்சி எதிர்வரும் 9ஆம் திகதி இரவு 7மணிக்கு கொழும்பு 07 ஜே. ஆர் ஜெயவர்தன மண்டபத்தில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது. கலைப் புரவலர் ஸைட் சிவாஜி மௌலானா பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இந்நிகழ்வுக்கு தெஹிவளை மாநகர சபை உறுப்பினர் ஜனாபா. முஸ்தபா ஷரினா, கலைச்செல்வி கௌசல்யாதேவி கோவிந்தப்பிள்ளை முன்னிலை வகிக்கவுள்ளனர். சிறப்பு அதிதிகளாக கலாபூஷணம் டாக்டர் தாஸிம் அகமது, கவிமணி நஜ்முல் ஹுசைன், நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் கவிஞர் பிரேம்ராஜ், சமூகசேவகர் ரமீஸ் ஹாஜி, செல்லமுத்து ரவீந்திரன் தம்பதிகளும் கௌரவ அதிதிகளாக முருகேசு செந்தில் நாதன், "இலக்கியச் செம்மல்" ரஷீத் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றனர்.

இசைமுரசு இஸ்லாமிய கீதங்களுடன் முஹம்மது ராபியின் ஹிந்தி, டி.எம். சௌந்தரராஜனின் திரைப்பாடல்களையும் இந்நிகழ்வில் கலைக்கமல் பாடவிருக்கிறார். இசையமைப்பாளர் அமீர்கான், அயாஸ் சலாஹிர், ஹாரிஸ் மாஸ்டர், ஸியாட் உட்பல பிரபலங்கள் இசை வழங்கவுள்ளனர். கவிக்கமல் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கவுள்ளார்.





# திருவள்ளுவர் கூறும் முகாமையாளருக்கான செயற்பாடுகள்



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன்

21



**முகாமையாளர்கள் என்று சொல்லப்படுபவர்களுடைய அனைத்து நடவடிக்கைகளும் நிறுவனத்தின் மதிப்பைக் காப்பதிலும், சமூக நெறிமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் நேர்மறை எண்ணங்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். முகாமையாளர் ஒருவரின் நடவடிக்கைகள் இத்தகைய நோக்கங்களைக் கொண்டு நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தவில்லை என்றால் அவரால் ஒரு தலைவராக இருக்க முடியாது.**

"ஒரு தலைவரை வளர்ப்பதற்கு முழுச் சமூகமும் தேவை." என்ற ஒரு ஆபிரிக்கப் பழமொழியின்படி ஒரு தலைவர் பல வெளிப்புறச் சமூக சக்திகள் மற்றும் சமூக சிந்தனைகளால் வடிவமைக்கப்படுகிறார். எனவே தலைவர் என்பவர் ஒரு சமூக சீவி. அவரை வடிவமைத்த அல்லது உருவாக்கிய துடிப்பான சமூகத்தின் ஒரு பகுதியாக அவர் உள்ளார் . எனவே அவருக்குத் தனது சமூகம் பற்றிய பிரக்ஞை அதாவது போதுமான சமூக உணர்வு இருக்க வேண்டும். இந்தச் சமூக உணர்வு அவரை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒருவர் தனது சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து செயல்படாத வரை, சமூகம் அவரை அடையாளம் கண்டு அவரைத் தகுதியான நிலைக்கு உயர்த்தாத வரை அவரால் தலைவராகச் செயற்பட முடியாது. எனவே, தலைவராக இருக்க விரும்பும் ஒருவர் தனது சமூகக் கட்டமைப்பிற்குக் கேடு விளைவிக்கும் எதையும் செய்யக் கூடாது.

தலைவர்கள் பொதுவாக அவர்களின் செயல்களால் மதிப்பிடப்படுகிறார்கள். அவர்களின் செயல்களை மதிப்பீடு செய்வதன் மூலம் மட்டுமே சமூகம் அவர்களை ஒரு தலைவராக ஏற்றுக்கொள்ளும் . ஒருவர் செய்கின்ற செயல் அவரைப் பெரிய ஒருவராகக் காட்டினாலும் அந்தச் செயலினால் அவரது சமூகத்துக்கு எந்தவிதமான நன்மையும் இல்லையானால் அவரினால் தலைவராக இருக்க முடியாது.

எனவே முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய தலைமைப்பண்பு என்னவெனில் தனது சமூகமாகிய நிறுவனத்திற்கும் தனது பணியாளர்களிற்கும் தீங்கு தரக்கூடிய எந்த செயலையும் செய்யக் கூடாது . இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாகக் கூருகிறார் .

"இன்றி யமையாச் சிறப்பின் ஆயினும்
குன்ற வருப விடல்" (குறள் 961)

அதாவது ஒரு முகாமையாளர் என்பவர் இன்றியமையாத சிறப்புத் தரக்கூடிய செயல்களே ஆயினும் அவற்றால் மானம் கெட நேரின் அதாவது தனது நிறுவனத்திற்கு அதன் பணியாளர்களிற்கு தீங்கே ஏற்படுமாயின் அவர் அச்செயல்களை மேற்கொள்ளாமல் விட்டுவிட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் .

'இன்றியமையாச் சிறப்பின' என்று சொல்வதன்மூலம் கட்டாயம் செய்ய வேண்டிய சிறப்புடைய செயல்கள், அல்லது 'இவற்றைச் செய்யாமல் வாழ முடியாது' என்னும் சிறப்புடைய செயல்கள் அல்லது தவிர்க்கமுடியாத சிறப்புடைய காரியங்கள் என்று பொருள் கொள்ளலாம். அவை எவ்வளவு இன்றியமையாததாக இருந்தாலும் அதனால் தீங்கு வருமாயின் அதனை முகாமையாளர் தவிர்த்து விடவேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

முகாமையாளர்கள் என்று சொல்லப்படுபவர்களுடைய அனைத்து நடவடிக்கைகளும் நிறுவனத்தின் மதிப்பைக் காப்பதிலும் , சமூக நெறிமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் நேர்மறை எண்ணங்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

முகாமையாளர் ஒருவரின் நடவடிக்கைகள் இத்தகைய நோக்கங்களைக் கொண்டு நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தவில்லை என்றால் அவரால் ஒரு தலைவராக இருக்க முடியாது.அவர் ஒரு தலைவராக வருவதைக் கனவிலும் நினைக்க முடியாது . இக்கருத்துக்களைக் கீழ்வரும் ஈரடியில்

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்". (குறள் 975)

அதாவது புகழ் பெற்ற பெருமைக்கு உரிய குணம் உடைய முகாமையாளர்கள் செய்வதற்கு அரியசெயல்களை அல்லது முன்மாதிரியான அனைத்து செயல்களை அல்லது ஒருவராலும் செய்யமுடியாத செயல்களை தனது நிறுவனத்திற்காக முறையாகச் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவராவர்கள் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே முகாமையாளர்கள் தனது நிறுவனத்திற்கு தனது பணியாளர்களிற்கு நல்ல பயனைக் கொடுக்கும் செயல்களை செய்யும் நெறிமுறைகளை அறிந்து அவற்றின்படி முறையாகச் செய்து செய்து முடிக்கவல்ல தலைமைப் பண்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை திருவள்ளுவர் "ஆற்றுவார் ஆற்றின்" என்ற தொடரின் மூலம் விளக்குகிறார் .

முகாமையாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய தலைமைப் பண்பு பணிவு .

அவர்கள் சாதாரணமானவர்களிடையே ஒரு ராஜாவைப் போலவும், ராஜாக்களிடையே ஒரு சாதாரணமானவனைப் போலவும் நடக்க வேண்டும்.

இதனைத் திருவள்ளுவர்

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து". (குறள் 978)

என்ற ஈரடியில் விளக்குகின்றார் . அதாவது பெருமைப் பண்பு உள்ள முகாமையாளர் எக்காலத்திலும் பணிந்து நடந்து கொள்வார் ஆனால் சிறுமையான குணம் உடையவர்கள் தன்னைத்தானே வியந்து பாராட்டிக் கொள்ளுவர் என்கிறார் திருவள்ளுவர். பெருமை கொண்டவர் எனச் சொல்லப்படுபவர் சிறப்பான நிலையில் உள்ளபோதும் செருக்கு இல்லாமல் பணிவு கொண்டு நடப்பார்கள் ஆனால் சிறியவர்களோ சிறப்பு இல்லாத போதும் தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டு அலைவார்கள் பொருட்செலவு செய்தும் புகழ் தேட விரும்புவார்கள்.

செருக்குடன் திரிகின்ற இச் சிறியவர்கள் பெருமை உடையவர்கள் அல்லர். எனவே ஒரு தலைவராக இருக்க விரும்பும் முகாமையாளர் அல்லது தலைமைப் பதவிக்கு ஆசைப்படுபவர் பணிவு குணத்தை வெளிப்படுத்துவது முக்கியம் என்ற திருவள்ளுவர் இந்தத் தலைமைப்பண்பினை

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து" (குறள்125)

என்ற குறளிலும் வலியுறுத்துவதைக் காணலாம் .

பொதுவாகத் தலைவர்கள் வெளிச்சவீடு எவ்வாறு இருளில் கரையைத் தேடும் மீனவனுக்கு வழிகாட்டும் கொள்கைக்காக தன்னிலையில்மாறுபடாது அடக்கமுடன் நிலைத்து நிற்கின்றதோ அவ்வாறு தங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் கொள்கைகளிலும் அடக்கமுடன் நிலைத்து நிற்க வேண்டும் .

அப்போதுதான் அவர்களை நம்பிப் பின்பற்றும் பலரின் எண்ணங்கள், செயல்கள் மற்றும் அவர்கள் பயணிக்கும் பாதைகளை ஒளிரச் செய்யமுடியும்.

இத்தகைய தலைவர்கள் தங்கள் நல்லொழுக்கத்தால் பயனடைபவர்கள்... சலுகைகளுக்குப் பின்னால் செல்ல முற்படுவதில்லை.

அங்கீகாரத்தையும், புகழையும் தேடுவதில்லை. அதன்காரணமாக அவர்கள் மக்களால் போற்றப்படுகிறார்கள், மதிக்கப்படுகிறார்கள். எனவே முகாமையாளர்கள் நல்ல தலைவர்களாக இருக்க வேண்டும் என்றால் எப்போதும் தனது பணியாளர்கள் தன்னைப் பின்பற்றும் வண்ணம் நிலையான தன்மை கொண்டவர்களாக அடக்கமுள்ளவர்களாக முன்மாதிரியாக நடக்க வேண்டும் .இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார் .

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது" (குறள் 124)

தன் நிலையிலிருந்து மாறுபடாது அடக்கமாய் நடந்து கொள்பவனுடைய தோற்றம் மலையைவிட மிகப் பெரிதாகும் என்பது இந்தக் குறளின் பொருள்.

எவ்வாறு மலை ஆடாமல் அசையாமல் ஆரவாரமில்லாமல் அமைதியாகக் காட்சி அளிக்கிறதோ எவ்வாறு அதன் வலிமையை நிலையை தோற்றத்தை புற ஆற்றல்களால் மாற்ற முடியாதோ, எவ்வாறு அது பலவகையான பருவ மாறுதல்களையும், புயல், இடி, மழை போன்றவற்றையும் எதிர்கொண்டு காலங்கள் பல கடந்தும் தன் நிலை மாறாமல் அடக்கமாக நிற்கின்றதோ அத்தகைய அடக்கமும் தனது செயலில் எண்ணத்தில் நிலையான தன்மையும் கொண்ட முகாமையாளர்கள் பணியாளர்கள் மற்றும் நிறுவனத்தின் மரியாதைக்குரியவர்கள் என்கிறார் திருவள்ளுவர் .

(தொடரும்)

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

### பெருந்தோட்ட சமூகத்தையும் மீனவர்களையும் பாதித்திருக்கும்

# மண்ணெண்ணெய் கிடுகிடு விலையேற்றம்!

**இலங்கையில் 21.08.2022 நள்ளிரவிலிருந்து மண்ணெண்ணெய் விலை வரலாறு காணாத பெரும் அளவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை ஒரே இரவில் 253 ரூபாவினால் உயர்த்தப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். இதன்படி 87 ரூபாவிலிருந்த லீற்றர் ஒன்றின் விற்பனை விலை 340 ரூபாவாக 291 சதவீதத்தினால் கிட்டத்தட்ட மும்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.**

அண்மைக்காலமாக இலங்கை அரசாங்கம் பெற்றோலியப் பொருட்களின் விலைகளை மிகப்பெரிய சதவீதங்களில் அதிகரித்து பொருளாதாரத்தில் உள்ளக அதிர்ச்சிகளை (internal shocks) ஏற்படுத்தி வந்துள்ள போதிலும் மண்ணெண்ணெய் விலையில் பெரிதாகக் கைவைத்திருக்கவில்லை. குறைந்த வருமானம் பெறும் மக்கள் அதிகம் பயன்படுத்தும் எரிபொருள் என்றவகையில் அதற்கு மானிய விலை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த மானியம் முற்றாக நீக்கப்பட்டு முழுச்சுமையும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

சந்தை விலையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும், மானியங்களை முற்றாக அகற்ற வேண்டும் என்ற விலைக் கொள்கையின் ஓர் அங்கமாகவோ இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. விலையதிகரிப்பின் பின்னர் துறைசார்ந்த அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில் பாதிக்கப்படும் நிலையில் உள்ள குறைந்த வருமானம் பெறும் விளிம்பு நிலை மக்களுக்கு நேரடி பண ரீதியான மானிய உதவிகள் (direct cash subsidy) வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டது.

ஆனால் அத்தகைய ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் விலை அதிகரிப்பை மேற்கொண்டிருப்பின் அம்மக்களுக்கு நிவாரணம் கிடைத்திருக்கும். ஆனால் விலையதிகரிப்பு உடனடியாக அமுலுக்கு வர மக்கள் அடுத்த கணமே பாதிப்பை எதிர்நோக்குகின்றனர். அதற்கான தீர்வை விலையதிகரிப்பின் பின்னர் யோசிப்பது என்பது வெறும் கண்துடைப்பாக மட்டுமே அமையும்.

மண்ணெண்ணெய் விலையதிகரிப்பினால் மிக மோசமாகப் பாதிக்கப்படும் மூன்று பிரதான குழுக்களாக பெருந்தோட்டத் துறை சார்ந்த மக்களும், மீனவ சமூகமும், நகர்ப்புற வறியவர்களும் உள்ளனர். இப்போது மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்குவது பற்றி பேச்சுவார்த்தைகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கிறார்கள். மற்றைய இரு குழுக்களுக்கும் எவ்வாறு நிவாரணங்கள் வழங்கப்படப் போகின்றன என்பது பற்றிய விபரங்கள் இதுவரை வெளிவரவில்லை.

இலங்கையின் வறியவர்களுக்குள்ளும் மிக வறிய சமூகமாக உத்தியோகபூர்வத் தரவுகளுக்கமைய அடையாளங்காட்டப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்கள் இந்த விலை அதிகரிப்பினால் படு மோசமாகப் பாதிக்கப்படும் நிலையில் உள்ளனர் என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே அம்மக்கள் அதிகம் நுகரும் அரிசி, பருப்பு, சீனி, கோதுமை மாவு, டின்மீன் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் துரித அதிகரிப்பைச் சந்தித்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட 267 சதவீத மின் கட்டண அதிகரிப்பும் இம்மக்களையே அதிகம் பாதித்துள்ளது. ஏற்கெனவே மரத்தில் இருந்து விழுந்து எலும்புகள் முறிந்து துடித்துக்கொண்டிருப்பவரை மாடு சீறிக் கொண்டு வந்து ஏறி மிதித்ததுபோல மண்ணெண்ணெய் விலை மும்மடங்கு அதிகரித்து அம்மக்களை தமது வாழ்க்கையை முன்கொண்டு செல்ல முடியாத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பிலே தலையிட்டு உரிய நிவாரணங்கள் தகுதியானவர்களைச் சென்றடைய உதவவேண்டும்.

இலங்கை வாழ் பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்களைப் பொறுத்தமட்டில் மண்ணெண்ணெய் அவர்களுடைய நாளாந்த வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. பிரித்தானியர்கள் பெருந்தோட்டத்துறைக்கு அறிமுகப்படுத்திய பொருட்களில் கோதுமை மா, மண்ணெண்ணெய் மற்றும் அரிக்கேன் லாம்பு (hurricane lamp) எனப்படும் லந்தர் விளக்குக்கும் முக்கிய இடமுண்டு. காலையில் ஐந்தரை



மணிக்கு வேலைக்குச் செல்லு முன்பு தொழிலாளி சமையலை முடிக்க வேண்டும். விறகுகள் மழை அல்லது பனி காரணமாக நனைந்திருக்கும். இலகுவில் அடுப்புப் பற்றாது. அதனால் மண்ணெண்ணெய் அடுப்பேற்ற உறுதுணையாக இருந்தது. கோதுமை மா உடனடியாக சில ரொட்டிகளைச் சுட்டெடுக்க உதவியது. லாந்தர் விளக்கு பாதுகாப்பாக வெளிச்சத்தைப் பெறவும் அதை இடத்திற்கிடம் கொண்டு செல்லவும் பயன்பட்டது. விறகுளைச் சேகரித்து வைக்க லைன் வீடுகளில் பரண்கள் இருந்தன.

பிற்காலங்களில் மின்சாரம், எரிவாயு என்பன பெருந்தோட்டத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் மண்ணெண்ணெயின் முக்கியத்துவம் குறையவில்லை. குறிப்பாக எரிவாயு விலை பலமடங்கு அதிகரித்த பின்னர் பலர் மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கு மாறினார்கள். முன்பு போல பெருந்தோட்டத்துறையில் விறகுகளைப் பெற்றுக் கொள்வதும் இப்போது இலகுவான காரியமல்ல. எனவே தான் மானிய விலையில் பெருந்தோட்ட மக்களுக்கு மண்ணெண்ணெயைப் பெற்றுத்தருவது அவர்களது உயிர் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது.

இலங்கை மானியங்களால் நிறைந்த தேசம் என்றும் அரசாங்கம் மானியங்களை வழங்குவதாலேயே வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்ற பொதுவான ஒரு அபிப்பிராயம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

எனவே, மானியங்களை நீக்குவது அரசாங்கத்தின் முன்னுரிமைப்பட்டியலில் உள்ளது. ஆனால் அந்த நடவடிக்கை படிப்படியாக கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். ஓரிரவில் அவற்றை நீக்குவது மிகப்பெரிய சமூக பொருளாதார பாதிப்புகளை ஏற்படுத்தும். இவை ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் கையில் உள்ள கத்தியைப்போல கவனமாகப் பிரயோகிக்கப்பட வேண்டியவையாகும்.

இப்போது செய்யப்படுவதைப் போல எல்லாப் பக்கங்களிலும் நெருக்கடிகள் அதிகரிக்கும் நிலையில் செய்வதறியாது குரங்கின் கையில் கிடைத்த வாளைப் போல எல்லாப் பக்கமும் வெட்டிச் சாய்த்துக்கொண்டு செல்வது ஒரு விவேகபூர்வமான நடவடிக்கையல்ல. ஒருபுறம் வறுமை தணிப்பு சமூக ஒப்புரவு என்பன தொடர்பில் இலங்கை இதுவரை கொண்டிருந்த எல்லாச் சாதனைகளையும் இந்த நடவடிக்கைகள் முழுமையாகச் சிதறடித்துவிடும். மறுபுறம் எல்லாச் சுமைகளையும் மக்கள் மீது நேரடியாகச் சுமத்துவதென்றால் ஒரு அரசாங்கம் எதற்கு என்று மக்கள் நேரடியாகவே கேட்கிறார்கள்.

உண்மையில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு பொதுமக்களா காரணம்? என்ற கேள்வி எழுகிறது.

**இலங்கையின் வறியவர்களுக்குள்ளும் மிக வறிய சமூகமாக உத்தியோகபூர்வத் தரவுகளுக்கமைய அடையாளங்காட்டப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்கள் இந்த விலை அதிகரிப்பினால் படுமோசமாகப் பாதிக்கப்படும் நிலையில் உள்ளனர் என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை**

ஒரு பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றவர்களை பொருளாதாரக் கொலையாளிகள் (economic assassins) என்று கூறுவார்கள். இலங்கையின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் பொதுமக்களல்ல. வேறு யாரோ செய்த பாவங்களுக்காக பொதுமக்களைப் பலிக்கடாக்களாக்கித் தண்டிப்பது எவ்வகையிலும் நியாயமல்ல. பெருந்தோட்ட சமூகத்தையும் மீனவர்களையும் பாதித்திருக்கும்

# மேற்குலகின் தந்திரங்களையும் மீறிய ரஷ்யாவின் வெற்றிகரமான நகர்வுகள்



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உக்ரைன் ரஷ்யப் போர் ஆறாவது மாதத்தை எட்டியுள்ளது. முடிந்த வாரத்தில் உக்ரைன் முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த நாளை சுதந்திர தினமாகக் கருதும் உக்ரைன் 31 வது சுதந்திரதினத்தை 25.08.2022 அன்று அனுஷ்டித்தது. அன்றைய நாளில் சுதந்திர தினத்திற்கான கொண்டாங்களை கைவிட்ட உக்ரைனியர்கள் ரஷ்யாவின் பாரிய தாக்கதல்களை எதிர்கொண்டனர். ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் எச்சரிக்கைகளையும் கடந்து ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அறிவித்துள்ளது. போலந்து நாட்டின் ஜனாதிபதி அண்ட்ரேஸ் டூடாவுடன் ஜெலன்ஸ்கி பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது ரஷ்யாவின் தாக்குதலுக்கு பதிலடி அபாயமானதாக இருக்குமெனத் தெரிவித்துள்ளார். இக்கட்டுரையும் ரஷ்யாவுக்கு எதிரான ஐரோப்பிய நாடுகளின் நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளன என்பதை தேடுவதாக அமைகிறது.**

முதலாவது ரஷ்யா உக்ரைன் நிலப்பரப்பின் மீது தாக்குதல் மேற்கொண்டு கைப்பற்றிய பிரதேசங்களை நிர்வாக ரீதியில் ரஷ்யாவுடன் இணைக்கும் நகர்வுகளை ஆரம்பித்துள்ளதாக அமெரிக்க புலனாய்வுத் தகவல்கள் உறுதிப்படுத்துவதாக வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தி தொடர்பாளர் ஜோன் கிர்பிக் தெரிவித்துள்ளார். குறிப்பாக கெர்சன்,டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க், சபோரிஜியா மற்றும் கார்கிவ் ஆகிய பிரதேசங்களில் வாக்கெடுப்பை நடத்த திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். 2014 இல் இவ்வாறே கிரிமியாவையும் ரஷ்யா கைப்பற்றிய சில வாரங்களில் வாக்கெடுப்பு நிகழ்த்தி தனது பிராந்தியமாக அறிவித்துள்ளது. அத்தகைய அணுகுமுறையொன்றை தொடக்கியுள்ள ரஷ்யா இலகுவில் வெற்றியடையும் என்று கருத வாய்ப்புள்ளது. அத்தகைய பிரதேசங்களில் ரஷ்யாவுக்கு ஆதரவுள்ளதாகவும் இது உக்ரைனிலுள்ள மக்களை தீர்மானமெனவும் ரஷ்யத் தரப்பு குறிப்பிட்டுள்ளது. இது படிப்படியாக உக்ரைனை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான நகர்வாகவே தெரிகிறது. இது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அரசுகளின் திட்டமிடப்பட்ட இலக்கு மீதான தோல்வியாகவே தெரிகிறது. உக்ரைனை நேட்டோவுடன் இணைப்பதன் வாயிலாக ரஷ்யாவுக்கு நெருக்கடியை புவிசார் அரசியல் ரீதியாக மேற்கொள்ள முடியுமென கணக்குப் போட்ட மேற்குலகிற்கு பாரிய பதிலாக அமைந்துள்ளது. ரஷ்யாவின் புவிசார் அரசியலை வெற்றி கொள்ள முடியாத சூழலை ரஷ்யாவின் அரசியல் தலைமைகள் ஏற்படுத்தியுள்ளன.



இரண்டாவது, மேற்குலகத்தின் இன்னோர் உத்தியாக ரஷ்ய உக்ரைன் போரை நீடிப்பதன் வாயிலாக ரஷ்யாவை தோற்கடிக்க முடியுமெனக் கணிப்பிட்டு அமெரிக்கா பாரிய நிதி உதவியை உக்ரைனது இராணுவ செலவினத்திற்கு வழங்கி வருகிறது. அத்துடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யாவின் அயல் நாடுகளும் உக்ரைனுக்கு தொடர்ச்சியாக இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குகின்றன. இதன் மூலம் ரஷ்யாவுடனான போரை நீடிப்பதே நோக்கமாகவும் ரஷ்யாவினைதோற்கடிப்பதுமே இலக்காக அமைந்திருந்தது. ஆனால் ரஷ்யாவோ மறுபக்கத்தின் போரை நீடித்துள்ள மேற்குலகத்தின் உத்தியை பயன்படுத்திக் கொண்டு தான் கைப்பற்றிய பிரதேசங்களை தனது நிர்வாகத்துடன் அல்லது தனது நிலத்துடன் இணைப்பதில் அக்கறை கொண்டு செயல்படுகிறது. உக்ரைனது பகுதிகள் முழுமையாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் உட்படுவதுடன் அவற்றின் பகுதிகள் மீதான ரஷ்ய இராணுவத்தின் பலம் நிறுவப்படுகிறது. இத்தகைய பிரதேசங்கள் பின்தளமாகக் கொண்டு அடுத்த இலக்கினை நோக்கி ரஷ்யா நகர திட்டமிடுகிறது. அதாவது உக்ரைன் நிலப்பரப்பினை நோக்கி நகரும் தந்திரோபாயமாகவே தெரிகிறது. இதனால் படிப்படியாக உக்ரைனின் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் அகப்படும் நிலை சாத்தியமாக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது, அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் மிக நீண்ட காலமாக ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை ஒரு ஆயுதமாகக் கொண்டு செயல்படுகிறது. அத்தகைய பொருளாதாரத் தடையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள தேசங்களாக மேற்குலகமே மாறியுள்ளது. குறிப்பாக பெற்றோலியத்திற்கும் எரிவாயுவுக்கும் மேற்குலகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பாரிய பொருளாதார சுமையை ஐரோப்பிய மக்களுக்கு உருவாக்கியுள்ளது. பொருளாதாரச் சுமையால் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் போராட ஆரம்பித்துள்ளனர். ரஷ்யாவுக்கு எதிராக தீவிரத்தை அதிகம் கொண்டிருந்த பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சனது தோல்வியை இலகுவில் கடந்து செல்ல முடியாது. அதற்கான மூலகாரணம் பொருளாதார சுமையென்பதை மறைக்க முடியாது. அதே பாதையில் இத்தாலியும் நகர்கிறது. ஐரோப்பிய நாடுகள் ரஷ்ய வங்கிகளுக்கு விதித்த தடையை விலக்க திட்டமிட்டுள்ளதை கடந்த வாரங்களில் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டது நினைவு கொள்ளத்தக்கது. அவ்வாறே ரஷ்யாவும் ஐரோப்பாவுக்கான பெற்றோலிய ஏற்றுமதியை 80 வீதத்தால் குறைத்துள்ளது. இதற்கு பல காரணங்களை ரஷ்யா தெரிவித்தாலும் அடிப்படை ஐரோப்பாவை கையாளும் நோக்கமே அன்றி வேறு எதுவும் காரணமாக அமைய வாய்ப்பில்லை எனலாம்.

நான்காவது, ரஷ்யா மீதான ஐரோப்பிய நாடுகளது பொருளாதாரத் தடையை ரஷ்யா முறியடிக்கும் விதத்தில் மத்திய ஆசியாவையும் இதர ஆசியப் பிராந்தியங்களையும் ஆபிரிக்காவையும் நோக்கிய பொருளாதார விரிவாக்கத்தை ஆரம்பித்துள்ளது. மத்திய ஆசியாவுக்குள்ளால் தரைவழியாகக் கட்டமைத்த வர்த்தகப் பாதை சீனா ஊடாக இந்தியா வரையும் நகர்ந்திருப்பதுடன் கடல்பாதையை விட இது மிகக் குறுகிய காலப்பகுதியில் அடைவை ஏற்படுத்தியுள்ளது. மொஸ்கோவிலிருந்து மத்திய ஆசியக் குடியரசுகளுக்குள்ளால் பீக்கிங்கை அடைய 10 நாட்களே போதுமானதாக அமையும் போது கடலால் ஏறக்குறைய 45 நாட்கள் தேவைப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனுடன் ரஷ்யா நின்றுவிடவில்லை மேற்காசிய நிலப்பரப்பிலும் அத்தகைய வாணிப மார்க்கத்தை விரிவாக்கியுள்ளதுடன் துருக்கி, ஈரான், சிரியா ஊடாக ஆபிரிக்க நாடுகளை எட்டியுள்ளது. எனவே ரஷ்யாவுக்கு அதிக பொருளாதார வாய்ப்புக்களை ஐரோப்பியரது பொருளாதாரத் தடை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல, ஐரோப்பாவுக்குள் ரஷ்யா நுழையும் போது அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது. ஆனால் ஆசியாவுக்குள்ளும் ஆபிரிக்காவுக்குள்ளும் சுதந்திரமாகவும் போட்டியின்றியும் நகர வாய்ப்பு ரஷ்யாவுக்கு கிடைத்துள்ளது. அதனை ரஷ்யாவின் அரசியல் தலைமைகள் கண்டறிந்து வெற்றிகரமானதாக நகர்கின்றன. அதனையே கடந்த காலத்தில் அமெரிக்காவும் ஏனைய ஐரோப்பிய அரசுகளும் மேற்கொண்டு வந்தன.

ஐந்தாவது, ரஷ்யாவின் பொருளாதார ஒருங்கிணைப்பானது சீனாவையும் இந்தியாவையும் அரவணைத்துப் போவதாகவே தெரிகிறது. அது சீன இந்திய முரண்பாட்டை சமரசப்படுத்த உதவுவதாகவே காணப்படுகிறது. இந்தியாவின் உள்நாட்டு அரசியல் பொருளாதார இராணுவ வலுவை அவதானிக்கும் போது முரண்பாட்டை தவிர்ப்பது அவசியமானதாகவே தெரிகிறது. சீனாவுடன் ஒப்பிடும்போது பல மடங்கு இந்தியா பிந்தியே உள்ளது. அதனை சம வலுவுள்ளதாக மாற்ற வேண்டுமாயின் எல்லைப் போரையோ அல்லது இந்திய சீன போரையோ இந்தியா எதிர்பார்ப்பது அபாயமானது. இந்தியாவுக்கு அவசியமானது அமைதியான வளர்ச்சியாகும். அது இராணுவத்திலும் உள்நாட்டு சமூகக் கட்டமைப்பிலும் நிகழவேண்டும். இத்தகைய சூழலில் ஒரு போருக்குள் இந்தியா இழுக்கப்படுமாயின் அதன் உடனடி விளைவுகள் அனைத்தும் இந்தியாவுக்கே ஆபத்தானதாக அமையும். அதனால் சீனா ரஷ்யா இந்தியாவின் கூட்டின் பலத்தினால் கீழைத்தேச இருப்பு மட்டுமல்ல, மேற்குலகத்தின் வலுவை மட்டுப்படுத்தி இந்தியாவின் எழுச்சியை சாத்தியப்படுத்த முடியும். ஆசியாவின் பலத்திலேயே மேற்குலகத்தின் இருப்பு நிலவுகிறது. அதனால் இந்தியா சீனாவுடன் மோதல் போக்கினை கைவிட்டு விட்டு இந்தியாவின் வளர்ச்சியை இலக்கு வைப்பது அவசியமானது. விமானம் தாங்கிக் கப்பலை இந்தியா தற்போதே சுய தொழில் நுட்பத்தில் கட்டியுள்ளது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.

ஆறாவது, ரஷ்யாவின் ரூபிளின் எழுச்சி எற்படுள்ளதாவது நிகழ்ந்துள்ளது. அதற்கு அடிப்படையில் மேற்குலகத்தின் பொருளாதாரத் தடையே பிரதான காரணம் என்பது இதே பகுதியில் பல தடவை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் வளர்ச்சி மேலும் அதிகரித்து வருகிறது.

எனவே ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையும் உக்ரைனின் மூலமான ரஷ்யாவின் வீழ்ச்சியையும் திட்டமிட்ட மேற்குலகம் அதிக நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அவர்கள் திட்டமிட்ட உபாயத்திற்குள்ளேயே அவர்கள் வீழும் துயரத்தைக் காணமுடிகிறது. ரஷ்யாவின் எழுச்சியும் சீனா, இந்திய அணிவகுப்பும் ஆரோக்கியமாக அமையும் வரை ரஷ்யாவுக்கும் கீழைத் தேசத்திற்கும் பாதுகாப்பானதாகவே அமைய வாய்ப்புள்ளது. ஆனால் மேற்குலகத்தின் தந்திரங்களையும் திட்டமிடலையும் ரஷ்யா வெற்றிகரமானதாக மாற்றிவருகிறது. அது விளாடிமிர் புடினது தலைமைத்துவத்தினாலேயே சாத்தியமாகிறது. இவை அனைத்தும் புடின் மீதான குறிவைப்பினை அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. எதுவாயினும் ரஷ்யா எனும் இருதய நிலத்தின் இருப்பு மைக்கிண்டர் குறிப்பிட்டதுபோல் இன்னுமே காலவரைதியாகவுள்ளது.

வாழ்வாதாரமா சேதாரமா 235



தமிழ்க் கவி பேசுகின்றார்

# போர்க்கால பஸ் பயணங்களை நினைவூட்டிய சாரதி

அதெல்லாம் போகட்டும். இந்த தொடர்பாடல் உலகத்துக்கு பெரும் நன்மையை கொண்டு வந்து சேர்த்தது என்பதை மறுக்க முடியாது. பெரும் பெரும் வர்த்தக நடவடிக்கைகளில் பொருட்களை ஏற்றி இறக்குவதில் நாட்டுக்கு நாடு கொண்டு செல்வதில், ஐம்பத்து நாலு சதவீதமானவை இன்றும் கடல் மூலமாகவே நடைபெறுகின்றன. எரிபொருள் முதல் உணவுப்பண்டங்கள் வாகனங்கள் என பலவகையான ஏற்றுமதி இறக்குமதிக்கு நாடுகள் கடற்பாதைகளையும் துறைமுகங்களையும் எதிர்நோக்கியிருக்கின்றன. அங்கே சிக்கல் ஏற்படும் போது வர்த்தக நடவடிக்கைகள் மட்டுமல்ல நாடே ஸ்தம்பித்துப் போய்விடும் என்பது இன்றைய ஸ்ரீலங்கா தரும் பாடம். உள்ளூரில் மட்டும் என்ன நடக்கிறது போக்குவரத்து பாதிக்கப்பட்டால் எல்லாம் பயனற்றுப்போம்.

அப்பா உழைக்கிறார். அம்மாவும் உதவி செய்கிறாள். பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழுகிறார்கள். அப்பா வேலை செய்தாலும் தேவையற்ற ஆடம்பரங்களில் செலவைச் செய்கிறார். கடன் வாங்குகிறார். கடன் வட்டிக்கடனாகவும் இருக்கிறது. எந்த நோக்கத்துக்காக கடன் பெறப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற வில்லை கடன் மட்டும் தனது வட்டியை வளர்த்துக் கொண்டிருக்கிறது. இப்போது அந்த கடன் சுமை குடும்பம் முழுவதையும் பாதிக்க ஆரம்பிக்கிறது. தந்தை தன்னிச்சையாக செய்த காரியங்கள் எல்லாம் குடும்பத்தினரின் தலையில் விடிந்து விட்டது. இதுதான் நாட்டின் நிலையும்.

ஒழுங்கான உணவு கிடைக்கவில்லை. உடைகள் இல்லை. தமது உற்பத்திகள் மூலம் செலவிட்ட அளவுக்கு வருமானத்தை பெற முடியவில்லை. பிற உற்பத்திகளையும் தமது நுகர்வுத் தேவைக்கு பெற முடியவில்லை. காரணம் போக்குவரத்து பூச்சியமாகும் நிலைக்கு வந்துவிட்டது.

இப்போது தெரிகிறது போக்குவரவுத்துறை எவ்வளவு முக்கியமானது என்று. போர் நடந்த காலத்தில் நாங்கள் எந்த வாகனங்களையும் தொட முடியாதபடிக்கு எரிபொருள் தடை இருந்தது.

உங்களுக்கு தெரியுமா வெளிநாடுகளிலிருந்த உறவினரிடமிருந்து உதவியாக பணம் பெறவும் அவர்களோடு தொலை பேசியில் உரையாடவும். நாங்கள் ராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் போக வேண்டியிருந்தது. அதை யும் குடும்ப உறுப்பினர்களை பிணையாக வைத்துவிட்டு ஒருவர் மட்டுமே போக முடியும். இல்லையேல் போர்நடக்கும் பகுதியிலிருந்து யாரும் வெளியேற முடியாது. தொலைபேசியை வைத்திருப்பது குற்றமாக கருதப்பட்டு விசாரணையும் நடந்தது ஒரு குளிர்பானப் போத்தலை நாம் ராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வருபவர்களில் கைகளில் பார்த்து வியந்திருக்கிறோம்.

காலையில் புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவிக்குப் புறப்படும் சிற்றூர்தி மாலை ஐந்துமணிக்கே மல்லாவியை அடையும். அவ்வளவு தூரம் பயணிக்கும். புறப்பட்டு தர்மபுரம் வந்ததும் வட்டக்கச்சி வயல்வெளிக்குத் திரும்பி அப்படியே சேற்று வீதியில் ஓடி இரணைமடுக்குளக்கட்டில் ஏறும். ஆகாயத்தில் போவது போல ஒருபுறம் நீர் நிறைந்த குளமும் மறுபுறம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப்பசேலென காடும் வயலும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தாலும், எமது உயிர் எம்மிடம் இருக்காது.

குளக்கட்டிலிருந்து சரிந்து வீதிக்கு வந்தபின் ஏனைன் வீதியை தொட்டு முறிகண்டி நோக்கி ஓடும். முறிகண்டி கடந்து கொக்காவில் வீதியை அடைந்து மேலே செல்லும் தேறாங்கண்டல் வழியாகவோ, அல்லது அக்கராயன் குளத்துக்கு செல்லும் வீதிவழியே கந்தபுரம் வந்து கோட்டைகட்டியகுளம் உயிலங்குளம் வழியாக ஆலங்குளம் துணுக்காய் மல்லாவி என நீளும் பயணம். அதுவும் மாட்டு வண்டிப் பயணம்போல குலுங்கிக் குலுங்கித்தான் செல்லும் வீதிகள் அவ்வளவு மோசம். மேற்குறித்த வீதிகள் இப்போதுள்ளது போல காடுகளாக இருந்தாலும் எழுத்தாளர் நிலாந்தன் குறிப்பிட்டது போல யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்களால் நிரம்பி மண் பட்டினங்களாகவிருந்தது.

இவ்வளவு விலாவாரியாக இதை ஏன் இப்போது சொல்கிறேனா? ஆச்சரியம் வேண்டாம்.

இப்போது இலங்கையின் போக்குவரத்தும் இப்படித்தான். சென்ற வாரம் நான் கொழும்புக்குப் போனேன். இந்த போக்குவரத்து இருக்கிறதே அதை அனுபவிக்கும் போது எரிச்சலாக இருந்தாலும், வீடு வந்து சேர்ந்ததும் உறவினர்களிடமோ நண்பர்களிடமோ அந்த அனுபவத்தை பகிரும்போது சில இடங்களில் மிகையாகவும் சில இடங்களை தணிக்கை செய்தும், அளக்கும் வல்லமை பேறுபெற்ற பெருமையாகும். எனது கொழும்புப் பயணமும் அப்படித்தான் அமைந்தது.

சரியாக எட்டரைக்கு வரும் மெயில்வாகனத்தை நம்பி புகையிரத நிலையத்திற்கு சென்றால் அங்கோ மாதச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு உறக்கத்தில் இருக்கும் ஊழியர்களைக் கண்டோம். அவர்களுக்கு அதற்கும் சம்பளம் கிடைக்கிறது.

தொடரி வராது என்றதும் மீண்டும் நாம் பேருந்து தரிப்பகத்துக்கு வந்தோம் அப்படியும் நாம் செல்ல வெண்டிய இடத்துக்கு பேருந்து கிடைக்கவில்லை.

அங்கே கூடியிருந்த சிலருடன் நானும் முடிவெடுத்து கிடைத்த வாகனத்தில் வவுனியாவுக்கு பயணப்பட்டோம். அங்கே பேருந்துகளை கூவிக் கூவி விற்பார்களே அப்படி யாரும் இல்லை. நல்ல வேளையாக ஒரு பேருந்து கொழும்பு என்ற பெயர்ப்பலகையுடன் நின்றது. ஏறி வசதியாக உட்கார்ந்து கொண்டோம்.

கொழும்புக்கு கிளிநொச்சியிலிருந்து போக வர பஸ் கட்டணம், அட வாயைப்பிளக்காதிர்கள் குறைவுதான் மூவாயிரத்து ஐநூறு ரூபாக்கள்தான்.

ஆனால் அவ்வளவு தொகையான பணத்தை வாங்கிக் கொண்டு எங்களை அவசரமாக தரையிறக்க பேருந்துக்கு இஸ்டமேயில்லை எனவே கொழும்பிலிருந்து புறப்பட்ட அரை மணித்தியாலத்திலேயே பேருந்தின் அடியில் யாரோ ட்ரம் செற் இயக்கப்பழகுவது தெரிந்தது.. சாரதி லேசாக குனிந்து பார்த்துவிட்டு தொடந்து ஓட்டினார்.

அதுவும் சமர்த்தாக ஓடியது. நாங்கள் வரும்போதும் அந்த பஸ் இப்படித்தான் அதன் ஏதோ ஒரு சந்துக்கு கிளிகள் குஞ்சு பொரித்திருந்தன போலும் அவை கீச்சுக் கீச்சென கலவரப்பட்டன. எனினும் சாரதி அதை ஒரு பழைய கராச்சில் காட்டி அந்தக்கிளிகளை இறக்கி விட்டிருந்தான். நாம் உரிய நேரத்தில் போய்சேர்ந்தோம் இப்போது திரும்பிவரும் போது இந்த பஸ்ஸில் ஏறும் போதே எனக்கு கிடைத்த இடம் லவுட்ஸ்பீக்கர் பெட்டிக்கு கீழே.

"ஏம்பா நான் பிறசர் காறி நீ பாட்டுக்கு பெட்டியத்திறந்து விட்டா எனக்கு பிறசர் ஏறிரும் வேற இடம் குடுப்பா" என்று கேட்டேன் அதை பஸ்ஸிலிருந்த சிலரும் ஆமோதித்தார்கள் அவனோ "வேற இடம் இல்லையே நான் சத்தமா போடேல்ல இருங்க" என்றான் . ம்,எல்லாம் ஒரு நம்பிக்கைதான் உட்கார்ந்தேன். வரவர ட்ரம்ப் செற்காரர்கள் ஓங்கியடிக்க ஆரம்பித்தார்கள். நல்லவன் அவன் ஒரு உணவுக்கடைமுன் அதை நிறுத்தினான்.



சாப்பிட்டுவிட்டு கிளப்பினால் பேருந்து உறங்கிவிட்டது. நாமும் உறங்கித்தானே ஆகவேண்டும் பெரும்பாலானவர்கள் என்னைப்போல நேற்று இரவு கொழும்புக்கு வந்து இன்றிரவு ஊர் திரும்புவோர்கள் அனைவரும் உட்கார்ந்தபடியே உறங்க சில ஆண்கள் இறங்கி வேறு வாகனங்களுக்காக காத்திருந்து ஏறிக் கொண்டனர் சுளையாக பணத்தை கொடுத்துவிட்டு எப்படி? என்னால் முடியாது நான் ஒரு வெற்று சீற்றில் நீட்டி நிமிர்ந்து என்று சொல்ல முடியாது குறண்டிப் படுத்தேன். அதிகாலை எழுப்பி பருத்தித்துறை பஸ்ஸில் (ஏற்கெனவே நிறைந்து வந்த) எம்மையும் திணித்து அனுப்பினான் அந்த சாரதி. ச்சைக் நாங்கள் போர்க்கால பயணங்களை மறந்திருக்க மறுபடி நினைவூட்டினானே...

# இம்மாதம் சந்திரனுக்கு திரும்பச் செல்லும் NASA



கூடிய சீக்கிரம் சந்திரனில் குடிகொண்டு அங்கு தங்கி இருந்து கொண்டு விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் மிக நீண்ட கால நிகழ்ச்சிநிரலை கடந்த 50 வருடங்களாக NASA திட்டமிட்டுக்கொண்டு வருகிறது.

*2025 ஆம் ஆண்டில் மனிதனை சந்திரனில் குடியிருக்க வைக்கும் நாசாவின் மிக நீண்ட கால திட்டமான 'Artemis Program' ன் முதல் கட்டமாக நாளை ஆகஸ்ட் 29 ஆம் திகதி 'Artemis1' இனது ஆளில்லா ORION விண்கலம் சந்திரனுக்கு செல்ல இருக்கிறது.*

*'Artemis Program' இன் பிரதான கட்டங்கள் மூன்று :*

1. ***Artemis I 2022 ஆகஸ்ட் 29 சந்திரனை சுற்றி வரும் ஆளில்லா பயணம்.***
2. ***Artemis II 2024, சந்திரனை சுற்றி வரும் விண்வெளி வீரர்கள்.***
3. ***Artemis III 2025, விண்வெளி வீரர்களை சந்திரனின் மேற்பரப்பில் இறக்குதல்.***

*இம்மாதம் 'Artemis I' இனது ஆளில்லாத பயணத்தின் போது NASA வின் SLS (Space Launch System super heavylift launch vehicle) மற்றும் 'ORION' விண்கலம் ஆகிய இரண்டும் முதல் முறையாக பரீட்சிக்கப்படும். 'Artemis I' இனது பிரதான நோக்கம் 'ORION' விண்கலத்தை சந்திரனது ஒடு பாதையை (Lunar Orbit) அடையச் செய்துவிட்டு திரும்ப பூமிக்கு கொண்டு வருவதாகும்.*

*2024 ஆம் ஆண்டு 'Artemis II' பயணத்தின் போது நான்கு விண்வெளி வீரர்களை கொண்ட 'ORION' சுமார் 21 நாட்களுக்கு சந்திரனை அண்மித்து சுற்றி வரும்.*

*2025 ஆம் ஆண்டு அடுத்த கட்டமாக 'Artemis III' சந்திரனில் மனிதர்களை இறக்கும் பணியைச் செய்யும்.*

*'Artemis Program' என்பது 2025ஆம் ஆண்டுக்குள் சந்திரனின் தென் துருவத்தில் முதல் விண்வெளி வீராங்கனையையும், 13 ஆவது விண்வெளி வீரரையும் சந்திரனில் இறக்கும் நோக்குடன் NASA வினால் செயற்படுத்தப்பட்டு வரும் மிக நீண்ட கால விண்வெளிப் பயணத் திட்டமாகும். 1969 ஆம் ஆண்டு Apollo 11 விண்வெளிப் பயணத்தினூடாக சந்திரனுக்கு முதல் மனிதனை அனுப்பி சுமார் 53 ஆண்டுகளுக்குப் பிறகு NASA வின் 'Artemis I' சந்திரப் பயணம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.*







*Artemis Program ஊடாக சந்திரனில் மனிதர்கள் தங்கியிருந்து கொண்டு விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்வர். இது செவ்வாய் கிரகத்துக்கு செல்லும் அடுத்த படியாக இருந்து பேருதவி செய்யும். எதிர்காலத்தில் சந்திரனில் தரையிறங்கும் வாகனங்களை வடிவமைக்கும் பொறுப்பை SpaceX, Blue Origin, மற்றும் Dynetics ஆகிய நிறுவனங்களுக்கு NASA வழங்கியுள்ளது.*

*2019 January 3 ஆம் திகதி மனித வரலாற்றில் முதன் முறையாக .சீனாவின் Chang'e4 விண்கலம் நிலவின் இருண்ட பக்கத்தில் (சந்திரனின் மனிதன் காணாத பக்கம்) இறங்கியது. வெற்றிகரமான இத்தரையிறக்கம் சீனாவின் ஒரு முக்கிய தொழில்நுட்ப சாதனையாக பாராட்டப்படுவதுடன் சீனாவின் பரந்த விண்வெளி அபிலாசைகளை நோக்கிய ஒரு முக்கியமான நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது. இந்த பயணத்தின் போது பூமியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பருத்தி மற்றும் உருளைக் கிழங்கு விதைகள் சந்திரனில் முளைத்தது இன்னொரு சாதனையாகும். சந்திரனில் ஒரு உயிரியல் பொருள் வளர்ந்தது இதுவே முதல் முறையாகும். நீண்ட கால விண்வெளி ஆய்வுக்கான குறிப்பிடத்தக்க படியாக இது பார்க்கப்படுகிறது.*

*2019 February 22 ஆம் திகதி இஸ்ரேல் சந்திரனுக்கு அனுப்பிய 'Beresheet' விண்கலம் தோல்வி அடைந்ததை தொடர்ந்து 'Beresheet2' வை 2024 ஆம் ஆண்டு திரும்ப நிலவுக்கு அனுப்பும் முயற்சியில் இஸ்ரேல் செயற்பட்டுக்கொண்டு வருகிறது.*

*2019 September 6 ஆம் திகதி ISRO's வினது 'Chandrayaan 2' நிலவில் இறங்க இருந்து கடைசி நேரத்தில் விபத்துக்கு உள்ளாகி தோல்வியில் முடிவுற்றதால் 'Chandrayaan 3' யை 2023 ஆம் ஆண்டு திரும்ப நிலவுக்கு அனுப்பும் முயற்சியில் இந்தியா கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.*

இதே போல் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் சந்திரனில் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்க திட்டமிட்டுள்ளன.

ஹரீஸ் ஸாலிஹ் ...✍

# மணிவிழா மாண்புறும் சபாரத்னசிங்கி

வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் ஆலோசகரும் முன்னாள் தலைவரும் வட்டு. மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் என்பவற்றில் அதிபராகச் சிறப்புறப் பணியாற்றிய வருமான நடராஜா சபாரத்னசிங்கி அகவை அறுபது நிறைத்து மணிவிழாக்காண்கிறார்.

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நன்கு அறியப்பட்ட ஆளுமையாளராகவும் சமூகப் பணியாளராகவும் சிறந்த அதிபராகவும் திகழ்ந்து சமூக நன்மதிப்பினைத் தன்வசமாக்கிக் கொண்ட சபாரத்னசிங்கி அனைவராலும் அறியப்பட்டவராவார்.

மாணவப் பருவம் முதலே சமூகப்பணியிலும் தலைமைத்துவப் பண்புகளிலும் சிறந்து விளங்கிய சபாரத்னசிங்கி இன்று வட்டு. மத்திய கல்லூரி என அழைக்கப்படும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி என்பவற்றில் தன் கல்வியைத் தொடர்ந்த காலத்திலேயே தன் ஆளுமைத்திறத்தால் பலரையும் ஈர்த்தவர். வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தில் இணைந்துகொண்டு தனது சமூகப் பார்வையையும் சமூகம்சார்ந்த பணிகளையும் படிப்படியாக விரித்துக்கொண்டு இன்றுவரை சமூக நேயமிக்கவராகப் பணியாற்றுபவர்.

ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட சபாரத்னசிங்கியிடம் இருந்த ஆற்றலும் ஆளுமையும் சமூகப்பார்வையும் வினைத்திறனுள்ள நல்லாசிரியராக அவரை நிலைநிறுத்தின. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் அதிபர் சேவையினுள் இணைந்து வட்டு. மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் என்பவற்றில் அதிபராகப் பணியாற்றி அந்தப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர். கொட்டுடை, தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி கோயிலின் பரிபாலன சபைத் தலைவராகத் தொழிற்பட்டு ஆலய வளர்ச்சிக்காகச் செயற்படுபவர். தான் பணியாற்றிய அல்லது செயற்பட்ட துறைகளில் எல்லாம் தன்முத்திரை பதித்தவர் சபாரத்னசிங்கி என்பது நிதர்சனமானது.



இன்று தனது சமூகப் பணிகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களெங்கும் விரிவாக்கிச் செயற்படுகின்ற அமைப்பாகத் திகழும் கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா என தன்கிளைகளை விரித்திருக்கின்ற வட்டுக்கோட்டை இந்துவாலிபர்சங்கத்தின் ஆலோசகராகச் செயற்படுகின்ற சபாரத்னசிங்கிக்கும் சங்கத்திற்கும் உள்ள உறவானது மிக இறுக்கமானது. நூற்றாண்டை நோக்கிப் பயணிக்கின்ற வட்டு. இந்துவாலிபர் சங்கத்தின் வளர்ச்சியில் புத்தெழுச்சியில் சபாரத்னசிங்கியின் பணியும் பங்கும் நிராகரிக்கமுடியாதவை.

சங்கத்தின் தலைவராகப் பத்து வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய இவரது காலத்திலேயே சங்கம் தனது செயற்பாட்டுப் பரப்பை விரித்துக்கொண்டது. மூத்தோருக்கும் இளைஞருக்குமான உறவினைக் கட்டியெழுப்பி சங்கத்தின் வளர்ச்சிக்கும் பலத்திற்கும் அவ்வுறவினை உரமாக்குவதில் வெற்றிகண்டார் இவர்.

சங்கத்தின் செயற்பாட்டை சமூகத்தை நோக்கி பிரக்ஞைபூர்வமாகத் திருப்புவதில் முயன்று பயன்கண்டார்.

சங்கத்தின் பிற்கால வளர்ச்சிகளுக்கான உறுதியான அத்திவாரம் இவரது காலத்தில் தான் இடப்பட்டது என்பது மிகையல்ல. இவர் தலைவராக இருந்த காலத்தில் மூன்றுநாள் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்ட சங்கத்தின் மணிவிழா தொடர்பான நினைவுகள் இன்றும் பசுமையாக நினைவிலுள்ளன. அவ்விழாவில் சமூகத்திற்குப் பணியாற்றிய பல்துறைப் பணியாளர்கள் அறுபதுபேருக்கு கௌரவமளிக்க இவரெடுத்த முயற்சி சிறந்த முன்மாதிரியான பணியாகும். வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் வளர்ச்சியில் சபாரத்னசிங்கியின் பங்கு தவிர்க்கமுடியாததாக இருக்கும் அதேவேளையில் சபாரத்னசிங்கியின் சமூகப்பார்வை, தலைமைத்துவப் பண்பு, ஆளுமை முதலியவற்றின் வளர்ச்சியில் சங்கத்தின் பங்கும் இன்றியமையாததாக அமைந்தது.

வட்டு. இந்துவாலிபர் சங்கத்தினைப் போலவே சபாரத்னசிங்கி நீண்டகாலமாகச் செயற்பட்ட மற்றொரு தளம் வட்டு. மத்திய கல்லூரியாகும்.

வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் அன்று திருஞானசம்பந்த வித்தியாசாலை என்ற பெயரொடு இயங்கிய பாடசாலையுடனான சங்கத்தின் உறவினை நெருக்கமாக்கிக்கொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் சங்கத்தின் உறுதியான பங்களிப்பினை படிப்படியாக அதிகரித்தார்.

அது மட்டுமன்றி பாடசாலைக்கென பழைய மாணவர் சங்மொன்றினை ஸ்தாபித்து அதன் நீண்டகாலத் தலைவராகச் செயற்பட்டு பாடசாலையின் அபிவிருத்தியில் காத்திரமான பங்களிப்பினை வழங்கினார் சபாரத்னசிங்கி.

சிவகுருநாதன் கேசவன் ...✍
விரிவுரையாளர்
சியன தேசிய கல்விக் கல்லூரி

பாடசாலையின் அதிபர்களாகச் செயற்பட்ட அமரர் சு. சிவவாகீசர், திரு. வி. சிவஞானபோதன் ஆகியோருடன் இணைந்து செயற்பட்ட சபாரத்னசிங்கி பாடசாலையின் வளர்ச்சியை நோக்கிய ஒவ்வொரு நகர்வுகளிலும் பங்காளியாய் இருந்தார் என்பது யாவரும் அறிந்ததே. பாடசாலையின் வளர்ச்சியின் முக்கிய மைல்கற்களாய் அமைந்த க.பொ.த(உ/த) வகுப்புகளின் ஆரம்பம், வட்டு. மத்திய கல்லூரி எனப் பெயர்மாற்றங் கண்டமை, மணிவிழா மற்றும் பவள விழா ஞாபகார்த்தமான கட்டடங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் அமைக்கப்பட்டமை முதலான செயற்பாடுகளில் பிற்பலமாகவும் உறுதுணையாவும் செயற்பட்டவர்.

கல்லூரி பவளவிழா கண்டபொழுது பவளவிழாச் சபையின் தலைவராகத் திறம்படச் செயற்பட்டு மூன்று நாட்கள் விழா சிறப்புற நடைபெறவும் அதனையொட்டி கல்லூரியில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவும் உழைத்தவர். பின்னர் 2000ஆம் ஆண்டில் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்று தான் பதவி வகித்த காலத்தில் கல்லூரி பலவழிகளிலும் உயர்வுபெற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

பாடசாலைக் காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய சபாரத்னசிங்கி ஆசிரியத்தொழிலில் இணைந்து பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகத் திகழ்ந்தார்.

பின்னர் கலைப்பட்டதாரியானதோடு பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி மற்றும் விவசாயம் ஹோட்டேல் முகாமைத்துவம் என்பவற்றில் டிப்ளோமா ஆகிய உயர் பட்டங்ளையும் பெற்றுச் சிறந்து விளங்குகிறார். அதிபர் சேவையில் இணைந்து வட்டு. மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் என்பவற்றில் அதிபராகச் சிப்புறப்பணியாற்றியதோடு இன்று முதலாந் தர அதிபராக அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

அவரது சமூகப் பணிகள் என்றென்றும் தொடரும் என நம்புகிறோம். சபாரத்னசிங்கியின் ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்வு ஒளிமயமாதாய் மிளிரவும் இறையருள் கிடைக்கட்டும்.






# நட்சத்திரங்களின் அரசன்

ரதிதேவி,
மானிப்பாய்

விண்மீன்கள் வீழ்ந்து வணங்கிட
பொன்மதி சூடிய புத்த பெருமான்
போதி மர நிழல் அரியணை மன்னன்
என் மனதிலும் ஏறி அமர
அகந்தை அழிந்ததே
நிந்தன் திருவடி சரணம் பேரன்பொளியே



# மனமே மறவாதே

"ஏறூர்க்கவி"
எச்.எம்.எம்.றஃீம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

பணம் பணமென நாளும்
பாரெங்கும் பரபரக்கும் மனமே
நற்குணமொன்றே நம்மை
நாட்படப் பேசும் மறவாதே

பழி, பாவம் தேடும்
பகை, சதியெமக்காகாதே
பண்பு, பாசம் நிறைந்ததொரு
பண்பாடு வளர்த்திடு

மற்றவர் புகழுற மெச்சும்
மனித மனதினில் சிறந்திடு
உற்றவ ரோடிணைந்த வாழ்வே
உன்னைப் போற்றிடுமே

துன்பத்தில் அல்லலுறும்
துயர்தனை தீர்க்க விரைந்திடு
வன்மம் கொண்டெவரையும்
வஞ்சம் தீர்க்கத் துணியாதே

உனக்கல்லாப் பொருளெதையும்
உரிமை கொள்ள நினையாதே
வறுமையில் மாண்டாழுமே
வார்த்தைகளால் உயர்ந்திடு

இருப்பவைகளில் வாழ்வோம்
இல்லாதவைகளுக் கலையாதே
நல்லவைகள் விட்டு
நாடி நன்மைகள் பெற்றிடு

பொல்லாச் சுயநலம்
பள்ளத்திலுனைத் தள்ளுமே
உள்ளத்தில் பொதுநலனையே
உறைவிடமாய்க் கொண்டிடு

# நேற்றைய என் நிழல்கள்...

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு

காலங்கள் கனிந்த கதவுகள்
நேற்றுவரை எந்தன் அரங்கிலே
வாழ்க்கையின் நிழல்களின் நாடகம்
இன்றென் நிசங்களின் தரிசனம்

நிசமென நினைத்த உறவுகளும்
நிலைக்காத உழைத்த செல்வமும்
நேற்றுவரை எந்தன் நிழல்களாக
இன்றென் தனிமையிலே பயணம்

வசந்தத்தின் வாசனை உறவுகள்
வேதனைக்கும் சாதனைக்கும் நிழலாக
நேற்றுவரை துணை இருந்தாலும்
இன்றென் தனியாக மரணம்

நேற்றுவரை என்னோடு நிழலாய்
நேசத்தோடு பயணித்த தோழன்
இன்றென்னை தோளில் சுமந்து
இறுதிப் பயணத்தில் மயானம்வரை

உடலும் உயிரும் கட்டிக்கொண்டு
எலும்பும் தசையும் ஒட்டிக்கொண்டு
நேற்றைய எந்தன் உயிரானது
இன்று நிழலின்றி முடிவானது

குருதியென்ற நீர்ப் பொருளும்
மூச்செனும் காற்றுப் பொருளும்
நேற்றைய நிழல்களின் நிசங்கள்
இன்று யாக்கையில் பயணமானது

நேற்றுவரை சுவைத்த இன்பங்கள்
நிலையாக வரவில்லை இன்றுவரை
இனி மண்ணறைதான் தின்னும்
என்னையும் சுவைத்து பசியாறும்

# தலைமுறைக்கான வரம்

விவேகவெளி தமிழேந்திரன்
பாண்டிருப்பு.

என் இலைகள் பசுமை இழந்து
பழுத்து விழுகின்றன
நிலத்தில் சருகாக

அப்போதும் நானோ
உன்னை நேசித்தபடி
உனக்கான பச்சை மரமாக

நீயோ, பட்டமரம் என்று
வெட்ட வருகிறாய்
விறகு வெட்டியாக

ஓ... இப்போது
'இலையுதிர் காலம்' என்பதை
அறியாத அறிவிலியாக

அடேய்... தறிக்காதே தள்ளிப்போ
நான் உன்
தலை முறைக்கான வரம்...
தரணியையே தாங்கும் கரம்...



# ஈகை

குப்பிளான்
குமரன்

ஈடு இணையற்ற
மக்கள் செயற்பாடாக
ஈகை என்பதை
நமது கலாசாரம்
காலாகாலமாக
போற்றுகின்றது

ஈகையின் சிறப்பை
ஈகை செய்பவரே
அறிந்து மகிழ்வர்
ஈகை அவசியம்
இன்னலுற்றோருக்கே
ஈகை இளையோரை

வலிமைமிக்க
உடற் கட்டமைப்பு
கொண்டவரை
சோம்பேறியாக
இடமளித்தல் ஆகாது

அது சமூகத்தின்
அபிவிருத்தியை
அழித்துவிடும்
உணர்ந்து கொண்டு
செயற்படுவோம்



# பனிதம் பூக்கும்!

அன்புடன்
கவிஞர் கலைமதி றபாய்தீன்
காத்தான்குடி

உள்ளம் வெள்ளையானால்
கள்ளம் கலைந்து போகும்
பிள்ளைநிலை தொடர்ந்தால்
தொல்லை தொலைந்து போகும்
நல்லதாய் எண்ணியிருந்தால்
நல்லதாய் வாழ்வு அமையும்
நல்லோர் ஆசிஇருந்தால்
நலங்கள் வந்து சேரும்
தாயில் வாய்மை கண்டால்
தத்துவம் தானே சுரக்கும்
நேர்மை நெஞ்சை தொட்டால்
தூய்மை வாழ்வில் சுரக்கும்
தலைமை தவறாதிருந்தால்
நிலைமை என்றும் உயரும்
பொறுமை நீயும் கொண்டால்
பொக்கிஷமாய் வாழ்வு அமையும்
தர்மம் செய்துவிட்டால்

தலைக்கு வருவது குறையும்
நீதி நிமிர்ந்து விட்டால்
அநீதி அழிந்து போகும்
நன்மைசெய்துவிட்டால்
தீமைவிட்டு விலகும்
பகையை புதைத்துவிட்டால்
புனிதம் வாழ்வில் பூக்கும்
கடமை நன்றாய் செய்ததால்
கண்ணியம் உன்னில் மலரும்
புண்ணியம் நீயும் கொண்டால்
புதுமை உன்னில் பிறக்கும்
தன்னைஅறிந்துகொண்டால்
மண்ணில் மனிதம் இருக்கும்





# இலஞ்ச ஒழிப்பு மாநாடு

ஷெல்லிதாசன்
திருகோணமலை

இலஞ்ச ஒழிப்பு மாநாடு
அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல்
அரங்கில் களைகட்டியது

உள்நாட்டு வெளிநாட்டு
உயர் அதிகாரிகளால்
நிரம்பியது மண்டபம்

உயர்தர உணவு வகைகள்
விலையுயர்ந்த உற்சாக பானங்கள்
தங்குமிட வசதிகள்
தாராளமான செலவுகளுடன்!

"இலஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும்
நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும்
நாம் செய்யும் பெருந் துரோகம்

எடுக்கும் சம்பளத்துக்கு மேலாக
எந்த ஒரு சதக்காசேனும்
தெரிந்தோ தெரியாமலோ
வாங்குவதும் இலஞ்சமே

இலஞ்சமென்பது
இனியுமில்லை எப்பொழுதுமில்லை"
என்ற சத்தியப் பிரகடனத்துடன்
முடிவுக்கு வந்தது மகாநாட்டு

இந்த மகாநாடு சிறப்பாக நடந்தேறுவதற்கு
அனுசரணை வழங்கிய தனியார் கட்டட
ஒப்பந்தக் நிறுவனத்துக்கு நன்றிகள்
என்ற நன்றியுரையுடன்
நிறைவேறியது லஞ்ச ஒழிப்பு மாநாடு



# புலரும் காலைப்பொழுது

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

புலரும் காலைப் பொழுதின் இன்பம்
மலரும் பூக்களில் மகிழ்ந்திடும் முறுவல்

குளிர்ந்த காற்றும் கூதலைக் கூட்டிடும்
களிப்பில் குருவிகள் கானம் இசைத்திடும்

மலையின் இருளும் மடிந்து ஓடிடும்
அலைகளின் வேகம் அழகைப் பொழிந்திடும்

புல்லின் நுனியில் பனிக்குடம் உடைந்திடும்
சில்லிடும் சூழலில் சுகமோ விரிந்திடும்

விடியல் வானில் வெளிச்சம் பரவிடும்
விடிவெள்ளி கண்சிமிட்டி விடைபெற்றுச் சென்றிடும்

இலைகள் களிப்பில் ஆடி அசைந்திடும்
தொலைவில் அருவியும் தேனிசை தந்திடும்

செந்நிறச் சூரியன் சோதியில் மிளிர்ந்திடும்
மந்திர ஒளியிலே மண்ணுலகம் உயிர்த்திடும்

எந்திர உலகம் இயக்கம் பெற்றிடும்
சந்திரன் மௌனமாய் சஞ்சாரம் செய்திடும்

# வேண்டாம் சீதனம்..!

ஏரூர்
எம்.ரி.எம்.அன்ஸார்.

வசதிபடைத்த மனிதர்களோடே
ஏழைகளும் வாழ்கின்றார்கள்
உதவி செய்திடத்தான்
யாருமின்றித் தவிக்கின்றார்கள்

பெண்பிள்ளை பிறந்ததும்
கண்கலங்கிடும் பெற்றோர்கள்,
தன்மானமிழந்தே சீதனத்திற்குப்
பிச்சையெடுத்திடும் பரிதாபங்கள்

விதி விதைத்திட்ட
ஏழைக் குமரிகளை
மதியிழந்து கடந்திடும்
குருடர்களாய் இளைஞர்கள்
மாடிமனையும் சொத்துமே
அவர்களின் நோக்கம்,
வாடிவதங்கிடும் பெண்ணுக்கு
வாழ்வளிப்பதில் தயக்கம்

பட்டமும் பதவியும்
வந்ததினால் ஆடுகிறாய்
ஓட்டம் நின்றுவிட்டால்
அடங்கிடுவாய் ஆறடிக்குள்

நீகண்ட மனிதர்கள்
மரணத்தைத் தழுவிட்டார்கள்
உனக்கெதற்குப் பேராசை
வாழ்வும் நிரந்தரமில்லையே..!
பொன்னகை இழந்து
புன்னகை மறந்து,
பிறந்ததற்காய் வாழ்ந்திடும்
ஏழைக்குமரிகள் கண்ணீரில்..!

சீதனப் பிசாசு
சிதைக்கின்றது வாழ்வை,
சீயென ஒதுக்கியே
வாழ்வுகொடு ஏழைக்கு..!



## சுதந்திரத்தின் பின்னர் இந்திய... (06ஆம் பக்கத் தொடர்)

அனைவராலும் வாங்கக் கூடிய அளவுக்கு பிராண்ட் எதுவும் இல்லாத பொது மருந்துகள் (generic pharmaceuticals) தயாரிப்பில் இந்தியா உலக அளவில் முன்னணியில் இருந்து வருகிறது. கொவிட் பெருந் தொற்றின்போது தடுப்பூசித் தயாரிப்பிலும் இந்திய தனது தலைமைத்துவத்தை நிரூபித்ததோடு உலகெங்கிலும் தேவைப்பட்ட தடுப்பூசிகளில் சுமார் 50 சதவீதத்தை விநியோகித்து இலட்சக்கணக்கான மனித உயிர்களைக் காப்பாற்றியிக்கிறது.

இது மட்டுமல்லாமல் அடக்கமான கார்கள் (compact cars), இருசக்கர வாகனங்கள் தயாரிப்பிலும் உலக அளவில் முன்னணியில் இருந்து வருகிறது. பால் உற்பத்தியில் இந்தியா முதலிடமும், அரிசி, கோதுமை, கரும்பு, நிலக்கடலை, காய்கறிகள். பழங்கள், பருத்தி உற்பத்தியில் இரண்டாவது மிகப் பெரிய உற்பத்தியாளராகவும் இந்தியா இருக்கிறது. ஆக, கடந்த 75 ஆண்டுகளில் இந்தியா அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. குறிப்பாக, 1991 ஆம் ஆண்டு தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் என்கிற பொருளாதாரக் கொள்கைக்குப் பிறகு வளர்ச்சியானது வேகமெடுத்தது.

1947 ஆம் ஆண்டுதான் இந்தியா சுதந்திரம் அடைந்திருக்கலாம். ஆனால் நரேந்திர மோடி பிரதமரான பிறகுதான் 2014 ஆம் ஆண்டு இந்தியா பொருளாதார சுதந்திரம் அடைந்தது. மேலும் நவீன இந்திய வரலாறு 'மோடிக்கு முந்திய மற்றும் பிந்திய காலம் என்று பிரிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். பிரதமர் மோடி ஆட்சிக்கு பிறகுதான் இந்தியாவின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்திய தேசத்தின் பொருளாதாரத்தைப் பார்க்கும்போது, பெருமளவானோர் பா.ஜ.க அரசு பொருளாதாரத்தை திறம்படக் கையாண்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இன்றைய நிலையில் இந்தியப் பொருட்களுக்கு உலக நாடுகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இந்தியா தயாரிக்கும் பொருட்களின் தரம் அதற்கு ஒரு காரணம் என்றாலும், ஏற்றுமதியில் இதுவரை சிறந்து விளங்கிய சீனப் பொருள்களின் மீது வெளிநாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா தன்மையும் ஒரு காரணமாக இருக்கிறது. அதனால், சீனாவுக்கு கிடைக்க வேண்டிய ஏற்றுமதி வாய்ப்புகளில் பெரும்பாலான ஓர்டர்கள் இந்தியாவுக்குக் கிடைத்து வருகின்றன. 'மேட் இன் சீனா' என்று இருக்கும் பொருளை வாங்குவதை விட, 'மேட் இன் இந்தியா' என்று இருக்கும் பொருளைத்தான் உலக மக்கள் வாங்க ஆசைப்படுகிறார்கள்.

## திரைகடலோடியும் திரவியம்... (09ஆம் பக்கத் தொடர்)

அது வேறு. அதற்கான வழிகாட்டல்கள் செய்யப்பட வேண்டும். அதை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கலாம். எடுக்க வேண்டும்.

அவர்களைக் கையாள்வதற்கான பொறிமுறைகள் பலதுண்டு. அதற்கான சட்டவரைபு, அதற்கான விதிமுறைகள் போன்றவற்றை உருவாக்கலாம். அதன்படி பணிப்பரப்பை அறிவித்து, அந்த இலக்கை எட்டுவோர், பூர்த்தி செய்வோருக்கு பதவி உயர்வு, சலுகைகள் போன்றவற்றை வழங்கலாம். அதைப்போல திறனாளராக இயங்கி மேம்பாடுகளை உருவாக்குபவர்களுக்கும் சிறப்பு வாய்ப்புகள் வழக்கப்படலாம். இப்படி ஊக்குவிப்புச் சாத்தியங்களை உருவாக்கினால் நாடு முன்னேற்றத்தை நோக்கி நகரும். அதுவேளை புதிய நியமனங்களில் வரையறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மாற்ற ஒழுங்குகளைப் பற்றி – புதிய முதலீடுகளுக்கான ஊக்குவிப்பு, தொழில் வாய்ப்புகளைப்பற்றிய சிந்தனைக்குச் செல்ல வேண்டும்.

இதேவேளை நாம் ஒரு சரியான கேள்வியைக் கேட்கவும் வேண்டும். அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கூடியிருப்பதைப்போலத்தான் படையினரின் எண்ணிக்கையும் கூடியிருக்கிறது .

யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கடந்த பிறகும் யுத்தச் செலவு படைத்துறைக்கான செலவு குறைக்கப்படவில்லை. அதைப்போல படையாட்குறைப்பும் செய்யப்படவில்லை. இப்பொழுது உருவாகியுள்ள தேசியப் பொருளாதார நெருக்கடிக்கு படையினரின் பங்களிப்பையும் கோர வேண்டும். அவர்களையும் பொருளாதார மேம்பாட்டுக்காக பயன்படுத்த வேண்டும். ஏற்கனவே இதைச் சிறிய அளவில் அவர்கள் செய்து வருகின்றார்கள்தான். ஆனால் இதை முழு மேலும் வலுப்படுத்தும் வகையில் விரிவாகத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். பொருத்தமான வெளிநாட்டுப் பணிகளிலும் படையிரை ஈடுபடுத்த முடியும். அதேவேளை சுமையாக இருக்கின்ற தொகையைக் குறைக்கவும் வேண்டும்.

தவறுகளைக் களைய வேண்டுமே தவிர, அவற்றை பூசி மெழுகிச் சமாளித்துக் கொண்டிருக்க முடியாது. அரசாங்கம் இன்னும் வெளிப்படைத்தன்மையாகச் செயற்படத் தயாராகவில்லை என்ற குற்றச்சாட்டு எழுவதற்கு இடமளிக்கக் கூடாது. அப்படி இருக்குமானால் அது இன்னும் சரியாகச் சிந்திக்க அதனால் முடியவில்லை என்றே அர்த்தமாகும். இது அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் பின்னடைவையே தரும். இப்படியே இந்த இழுபறிகள் சீராக்கப்படாமல் நீடிக்குமாக இருந்தால் இப்போதைக்குப் பிரச்சினைகள் எதுவும் தீராது.

## அரை இறத்தால் பாணுக்காக... (09ஆம் பக்கத் தொடர்)

அரிசியை பிரச்சினையாக்கி அரசியல் செய்வது அல்லது தமிழர்களை நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்ற அபிப்பிராயத்தை உருவாக்கி அரசியல் செய்து ஆட்சிக்கு வருவது என்பதே இக் கட்சிகளின் ஏமாற்று அரசியலாக இருந்திருக்கிறது.

1970இல் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோவின் சோஷலிச கூட்டணி, முதலில் நாட்டின் நிதி நிலையை அவதானித்திருக்க வேண்டும். லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை அவசர அவசரமாக சுவீகரித்தது, காணி உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தது, பெருந்தோட்டங்களை அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது, தமக்கு வேண்டாதவர்களின் சொத்துகளை சுவீகரிப்பின் மூலம் அரசியல் பழிவாங்கியது, திரைப்படக் கூட்டுத்தாபனத்தை உருவாக்கியது, ஐ.தே.க ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட தொழில் முயற்சிகளை முடக்கியது என்று அன்றைய அரசு அடுத்தடுத்து செய்த பொருளாதாரத் தவறுகளின் விளைவாகவே மக்கள் உணவுக்காக கஷ்டப்பட வேண்டியதாயிற்று. ஆட்சிக் கட்டிலில் எப்படியாவது ஏறி அமர்ந்தால் போதும் என்ற சிந்தனை அபிவிருத்தி அரசியலுக்கு உதவாது.

அன்றைய தேர்தல்களில் கொள்கை அரசியல் கோஷங்கள் அரிது. ஏனெனில் கொள்கை, அபிவிருத்தி, தன்னிறைவு என்பனவற்றைப் பேசினால் அவற்றைப் புரிந்து கொண்டு வாக்களிக்கும் வாக்காளர்கள் மிகவும் குறைவு. அரசியலில் அறிவுக்கு பதிலாக உணர்வுகளுக்கு, முதன்மை அளித்த பழகிப்போன வாக்காளர்களிடமிருந்து வாக்குகளை அள்ள வேண்டுமானால் ஒன்றில் வயிறார உணவு தருவேன் என்று சொல்ல வேண்டும். அல்லது தமிழர்களை ஒடுக்கி வைப்பேன் என்று சொல்ல வேண்டும் என்பதைக் கட்சிகள் நன்றாகவே புரிந்து வைத்திருந்தன.

(அடுத்த இதழில் தொடர் முடியும்)


## 2022 வருடாந்த பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல்

எலைன்ஸ் பினான்ஸ் கம்பனியின் PLC (PQ 93) வருடாந்தப் பொதுக் கூட்டம் 2022 செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு - கலப்புக் கூட்டமாக (Hybrid Meeting) நடாத்தப்படவுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்து கொள்பவர்கள் வரையறுக்கப்பட்டவர்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி நேரடியாகப் பங்குபற்றலாம். கூட்டமானது இராஜகிரிய, 772, கோட்டே வீதி, எலைன்ஸ் பினான்ஸ் கம்பனி PLC அலுவலகத்தில் இடம்பெறும்.

இது தொடர்பிலான தகவல்கள் சகிதமான பொதுக்கூட்ட அறிவித்தல் மற்றும் கூட்டம் பற்றிய நிகழ்ச்சி நிரல், Proxy படிவம் மற்றும் பதிவு செய்வதற்கான படிவம் என்பவற்றிற்கு கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் https://www.cse.lk மற்றும் நிறுவனத்தின் இணைய பக்கத்தில் https://www.alliancefinance.lk பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலை தயவு செய்து பார்க்கவும்.

பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற விருப்பமுள்ள பங்குதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து கூட்டம் நடைபெறுவதற்கு ஆகக் குறைந்தது 48 மணித்தியாலத்திற்கு முன்பாக alserve@sltnet.lk எனும் முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**எலைன்ஸ் பினான்ஸ் கம்பனி PLC**
**எலைன்ஸ் மெனேஜ்மன்ட் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிட்ட்,**
**செயலாளர்கள்.**
**2022 ஆகஸ்ட் 29ஆம் திகதி கொழும்பில்.**



## கொழும்பு பல்கலைக்கழகம்

### விலைக்கோரலுக்கான அழைப்பு

**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகம், TLA செயற்பாடுகளுக்கான மினி தியேட்டருக்காக தற்போதுள்ள கட்டிடத்தை மேம்படுத்துதல்**
**(AHEAD/RA2/ELTAELSE/CMB/SPC/WORKS/02)**

1. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகம், TLA செயற்பாடுகளுக்கான மினி தியேட்டருக்காக தற்போதுள்ள கட்டிடத்தை மேம்படுத்துதல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் AHEAD செயற்றிட்டத்தின் சார்பில் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார். செயற்றிட்டத்தின் பூர்வாங்க மதிப்பீடு 7,500,000.00 ரூபாவாகும் (வெட் இன்றி).
2. நிர்மாணக் காலம் 180 நாட்களாகும்.
3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை பின்பற்றப்பட்டு விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதிருக்க வேண்டும் என்பதுடன் CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (3/2000 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டிட நிர்மாணத்தில் C6 மற்றும் C7)
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு பல்கலைக்கழகம், AHEAD செயற்றிட்டம் பெறுகைக்கான பிரதி பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பல்கலைக்கழகத்தின் இதே அலுவலகத்தில் 2022-09-21ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம் (தொடர்பு இல.: 011-2595953/011-2559638) அல்லது ஆவணங்களை பரீட்சிப்பதற்காக பல்கலைக்கழகத்தின் http://cmb.ac.lk/procurements என்ற இணையத்தை நாடலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 505170600013 எனும் கணக்கிலக்கத்தைப் பயன்படுத்தி மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரதான சேகரிப்பு கணக்கிற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 2,500.00) ஒரு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலமும் கொழும்பு பல்கலைக்கழகம், AHEAD செயற்றிட்டம் பெறுகைக்கான பிரதி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரிலும் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். விலைமனு ஆவணங்களை 2022.08.29ஆம் திகதி முதல் 2022.09.21ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்களை 2022 செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுக்களை இரு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) பின் அவற்றை வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் “ கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகம், TLA செயற்பாடுகளுக்கான மினி தியேட்டருக்காக தற்போதுள்ள கட்டிடத்தை மேம்படுத்துதல்” எனக் குறிப்பிட்டு ஒன்றில் பதிவுத் தபால் மூலம் அல்லது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2022-12-20ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள மாதிரி வடிவத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் பெறப்பட்ட தொண்ணூறாயிரம் ரூபாவிற்கான (90,000.00 ரூபா) நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதமொன்று பிணை முறியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ஹொரண, வேவல, கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீபாளி வளாகத்தில் 2022 செப்டெம்பர் 12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
11. மதிப்பீடு மற்றும் தெரிவு செய்யும் முறை: விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள மதிப்பிடும் முறையின் பிரகாரம் விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு (கீழ் நிலை),**
AHEAD **செயற்றிட்டம்,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்,**
**94, குமாரதுங்க முனிதாச மாவத்தை,**
**கொழும்பு 03.**
**2022 ஆகஸ்ட் 24ஆம் திகதி.**



## தேவை

முஸ்லிம் கலியாண புரோக்கர் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய
**தொலைபேசி இல: 077 8642850**



## அடகுப் பொருட்கள் ஏல விற்பனை

கம்பஹா மேரிபிசோ மாவத்த, வோட் சிட்டி இல. 18, என்ற முகவரியில் அமைந்துள்ள PB 5391 எனும் சவி அபிமானீ கம்பனி லிமிட்டட் நிறுவனத்தில் பகிரங்க அடகுப்பொருட்கள் ஏல விற்பனை 2022 ஒகஸ்ட் 31ம் திகதி நடைபெறும்.






# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### மோட்டார் வாகனங்கள்

119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

சிறந்த கொடுக்கல், வாங்கல்/ பாவித்த வாகனங்களின் துரித விற்பனை கூடிய கோரிக்கைக்கு. லொறி, மிட்சுபிஷி, 2 க்ரூ கெப், JM C லொறி, இசுசு சியம்பலாபேயில். கார் ஹைஉண்டாய், 04 D/ Cab மிட்சுபிஷி D/ Cab, டொயோட்டா 3 சிங்கிள் கெப் டாட்டா. கொழும்பு03 இல் பாிசீலனை. காலம் 2022.08.29 முதல் 2022.09.09. பரிசீலனை நேரம் 0900 மணி முதல் 17 வரை. தொடர்பு நபர்கள் சுராஜ் 077 4780466, கொழும்பு3, சனூஜா 0766141908 கொழும்பு3, திமுத்து 077 8350950 சியம்பலாபே (★ ஓர் மீளளிக்கப்படாத வைப்பு ரூ. 5000/= உண்டு). 049649

### வேலைவாய்ப்பு

309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

ACCOUNTS ASSISTANT - Wanted Female AAT part or fully qualified Accounts Assistant with experience between 05 to 10 years. Candidate should be computer literate, fluent in English andQB knowledge required. Preference will be given candidate residing within Colombo Municipal limits. Please email CV's to careerke @gmail.com Contact-0705363099. 048591

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

கம்பஹா வீல் எலய்ன்மன்ட் நிறுவனத்திற்கு தொழில்நுட்பக் கலைஞர் தேவை. உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். அழையுங்கள்: 071 8008717, 076 2978810, 077 2830826. 049548

பியகமவில் அமைந்துள்ள முதல்தர நிறுவனத்திற்கு மெஷின் பிட்டர், வெல்டர் பிட்டர் மற்றும் மின் தொழில் நுட்பவியலாளர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் 2500 இற்கும் 3000 இற்கும் இடையில். 075 9456893, 077 7866208. 048929

318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

சாரதிகள் தேவை. 35 வருட பாவனையாளர் நம்பிக்கையை வென்ற நெட்கோ நிறுவனத்திற்கு சாரதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். களுத்துறை, பாணந்துறை, இரத்மலானை, தெஹிவளை, நீர்கொழும்பு, வென்னப்புவ அருகில் தேவை. ரூ. 45000/ கூடுதல் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அழையுங்கள் 0777 263954, 076 7639155 விண்ணப்பத்தை எமக்கு அனுப்புங்கள். முகவரி இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 046457

படித்த சாரதி தேவை. 0765310353. 049555

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பணிப்பெண்கள். வீட்டுப் பணிப் பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்கு கீழே அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம். வேலை நிபந்தனைகள் உண்டு. தொடர்பு முகவரி 75/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு 6. தொலைபேசி 2591169. 0777 452447, 0755 091379. 047049

பெண் ஊழியர் அல்லது ஆண் ஊழியர் தனி ஒருவர் வசிக்கும் வீட்டிற்கு தேவை. 0765310353. 049559

80 வயதிற்கு மேற்பட்ட முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கு அனுபமுள்ள 40 வயதிற்குக் குறைந்த பெண் ஒருவர் தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். ஆங்கிலத்தில் உரையாடல் கட்டாயமாகும். அழைக்கவும். 0705 363099. 048347

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

ஹொரண பிரதேசத்தில் பங்களாவொன்றில் மற்றும் தென்னந் தோட்டத்தில் தங்கி வேலை செய்வதற்கு இருவர் அல்லது குடும்பம் தேவை. 0706316107. 049635

322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

பியகமவில் அமைந்துள்ள முதல்தர நிறுவனத்திற்கு மேசன் பாஸ் மற்றும் உதவியாளர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் 2500 இற்கும் 3000 இற்கும் இடையில் 075 9456893, 0777 866208. 048928

### சொந்த விடயம்

528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 6 வெள்ளவத்தை, பெண் பாதுகாப்பு ஊழியர்களுள்ள தொடர்மாடி, அறைகள், இணைக்கப்பட்ட குளியலறைகள், உணவு அறை, சமையலறை, குக்கர். துணி கழுவும் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி. 75/1, W.A. சில்வா மாவத்தை. தொலைபேசி 011 2591169, 075 5091379, 0777 452447. 047089

### காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இரத்மலானை ஜயசுமனாராம வீதி மாடி வீட்டின் கீழ் மாடி விற்பனைக்கு. கராஜ் உண்டு. 077 3270698, 071 8798174. 049395

சிறப்பு விற்பனை கொட்டஞ்சேனை கல்லூரி வீதி, 15 பேர்ச் காணி ரூ. 12 மில்லியன் ஒரு பேர்ச் தொடர்புகள் 0788 250250 049297

நாவல கொஸ்வத்த, இல. 17 சுவர்ணதிசி பிளேஸ் 08 பேர்ச் வெற்றுக் காணி ஒரு பேர்ச்சின் பெறுமதி ரூ. 5 மில்லியன் (ரூ. 50 லட்சம்) 077 3039343. 049194

வீடுகள், காணிகள் வாடகைக்கு. விலைக்கு எடுத்துக் கொடுக்கப்படும். 077 5141889, 0743310540, 081 2304109. 049814

619 வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

பொல்கஹவெல கனேகொடவத்த pch180 விற்பனைக்கு. விலை ரூ. 14500000 அதிவேக பிரவேசத்திற்கு 20 விநாடிகள் ரயில் நிலையத்திற்கு. 05 விநாடிகள். 077 3008511. 049355



641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

பிட்டகோட்டே, ஆனந்த பாலிகா மாவத்தையில் சகல வசதிகளுடனான பெரிய வீட்டின் தரை மாடி வாடகைக்கு. 3 படுக்கையறைகள், பெரிய மண்டபம், பென்றி, சாப்பாட்டு அறை, குளியலறை, கார் நிறுத்துமிடம், அழகான பெரிய தோட்டம். கொழும்புக்கு அருகில். 5 10 நிமிட ஓட்டம். 20 அடி அகலமான வீதி, அமைதியான சூழல் மற்றும் குடியிருப்புப் பிரதேசம். மற்றும் சிறந்த அயலவர்கள். தயவு செய்து தரகர்கள் வேண்டாம். சகல விசாரணைகளுக்கும் அழையுங்கள்: 0776058268. 049697

### மணமகள்

அழகிய முஸ்லிம் மணமகளுக்கு தகுந்த வரணை (மாப்பிள்ளை) பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். 081 23044109, 077 5141880, 074 3310549. B185855

தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65






தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

**எஸ். அகஸ்தியரின் பிறந்த தினத்தையொட்டி (29.08.1926 - 08.12.1995) 'பொறி' என்ற (1975 தாமரை) அவரது சிறுகதை பிரசுரமாகின்றது.**




தம்பிமுத்துச் சம்மாட்டியின் இயந்திரப் படகுகள் ஆழ்கடலில் ஓடத் தொடங்கிய பின் களங்களில் விரிக்கப்பட்ட தங்கள் படுப்பு வலைகளில் மீன் பிடிபாடு குறைந்து விட்டதென்ற உண்மை, ஒரு சிலருக்கு அதிக நாட்களுக்குப் பின்பே தெரிய வந்தது.

இவர்கள் தங்கள் படுப்பு வலைகளைக் கட்டுமரங்களில் சென்று பரவைக் கடலில் தான் விரிப்பார்கள்.

இனிமேல் படுப்பு வலைகளை நம்பிக் கட்டுமரங்களில் சென்று ‘சிறுதொழில்’ செய்ய முடியாதாகையால், ‘எத்தனை காலமாக வாய்வயிற்றைக் கட்டிப் பஞ்சம் பட்டினியோடு சீவிக்கிறது’ என்று தொழிலாளர்கள் வெகு நாட்களாகவே நச்சரிக்கத் தொடங்கிய போதும், அவர்களுக்கு இதிலிருந்து மீளவும் சரியான மார்க்கம் தெரியவில்லை.

ஒரே முழிசாட்டம்தான்.

தாங்களும் தம்பிமுத்துச் சம்மாட்டியைப் போல் இயந்திரப்படகு வாங்கிப் ‘பெருந்தொழிலி’ல் இறங்கவேணுமென்று தொழிலாளர்கள் ஒருநாள் கூடித் திட்டம் போட்டும், அந்தத் திட்டம் இன்றுவரை வெறும் வாய்ப் பேச்சில் தான் கிடக்கிறது.

தங்களின் இந்தக் கையாலாகாத் தனத்தையும் அவர்கள் உணர்ந்துதானிருந்தனர். ஆனால், ‘திட்டமிடுவதன்படி ஏன் இயங்க முடிவதில்லை?’ என்பதைப் புரிந்து கொள்ளச் சிரமமாகவேயிருந்தது.

தற்போதைக்கு ஊர்கூடி ஒரு இயந்திரப் படகென்றாலும் வாங்கித் தங்கள் துறைமுகத்துக்குக் கொண்டு வந்துவிட்டால் தம்பிமுத்துச் சம்மாட்டியின் கொள்ளையையும், தனியாதிக்கத்தையும் ஒழித்துக்கட்டி அவனைச் ‘சமன்படுத்தி’ வைத்துவிடுவதோடு, பின் எந்த அலைகடலையும் எதிர்கொண்டு சமாளித்து ஆழ்கடல் சென்று தாங்கள் தொழில் புரியலாம் என்பது அவர்கள் எண்ணம்.

ஆனால், இந்தத் திட்டத்திற்கு வயது முதிர்ந்த சில ஊர்ப் பெரியவர்கள் குறுக்கே நின்றதால் தாங்கள் தீட்டும் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் அவர்களால் முடியவில்லை.

இதனால், கிழவர்களோடு ‘சச்சரவு’ப் படுவதே இளைஞர்களுக்கு ‘முழுநேர வேலை’ யாகியும் விட்டது.

தம்பிமுத்துச் சம்மாட்டி ‘மிஷின் போட்’ வைத்து ஓடுவதால் கண்ணுக்கெட்டாத தூரக் கடலுக்குச் சென்று ‘பெருந் தொழில்’ செய்ய முடிகிறதென்றும், தங்கள் துண்டு துணுக்கான சிறுசிறு படுப்பு வலைகள் அந்த இயந்திரப் படகுகளால் கீலங்கீலமாகக் கிழிந்து சீரழிந்து போவதோடு, ஆழ் கடலில் கிளைகட்டிக் களம் நாடி வருகின்ற மீன்கள் பரவைக் கடல் தேடி முகம் வைப்பதில்லை யென்றும் இப்படியே ஒவ்வொன்றாக – புண்ணும் சொல்லிப் புண்ணுக்கு மருந்தும் சொல்வது போல் இளைஞர்கள் பெரியவர்களுக்கு எடுத்துச் சொல்லிப் பார்த்தார்கள்.

கிழவர்கள் அப்பவும் இளந் தொழிலாளர்கள் கூற்றை மறுத்து விட்டனர்.

‘தம்பிமுத்துச் சம்மாட்டி’ பெரும் பணக்காரன்... படகு, தோணி துரவு, தேட்டம் பாட்டம், சாதி சனம் உள்ளவன். அவன் பெரிய திமிங்கலம் விழுங்கி முதலாளி நாங்கள் அன்றன்றாடம் தேகம் மாஞ்சு கடல் அடிச்சு உழைக்கிறனாங்கள். அவனோடு மோத முடியாது’ என்று வயது வந்தவர்கள் எடுத்துக்கூற, ‘தங்கள் பலவீனத்தையும் பயத்தையும் மறைப்பதற்காகவே கிழவர்கள் இப்படி ‘நாயம்’ சொல்லி எங்கள் போராட்டத்தைத் திசை திருப்ப முனைகிறார்கள்’ என்று இளைஞர்கள் நினைத்தனர்.

இந்தக் கோலத்தில் சருமம் ‘இழுபறி’ப்பட்டுக் கொண்டிருந்ததே தவிர. இரு பகுதியார் போட்ட திட்டங்களில் ஒன்றும் கைகூடுவதாயில்லை.

தங்களுக்குள் வெடித்த இந்த முரண்பாட்டைக் தங்களுக்குள் தீர்த்துக் கொள்ளாமல், கிழவர்கள் மாத்திரமன்றி, இளந் தொழிலாளர்களுமே தம்பிமுத்துவை எதிர்த்து வழிக்குக் கொண்டுவருகிற சரியான மார்க்கம் தெரியாமல் தத்தளித்தார்கள்.

ஒரு நாள் இளைஞர்கள் கூடி ஊருக்குள் கூட்டம்போட்டு, ’நாங்கள் தனியத் தனியப் பறைஞ்சு ஆகப்போகிது ஒன்றுமில்லை. ஆனபடியால் எல்லாரும் ஒருமிக்கச் சேந்து ஒரு சங்கம் அமைச்சு – அதுக்குக் ‘கடல் தொழிலாளர் சங்க’மெண்டு பேர் வைச்சு – அதன் மூலமாகக் கருமம் ஆற்றுவோம்’ என்று ஆலோசித்தார்கள்.

அதுக்கும் கிழவர்கள் ஒத்து வரவில்லை.

‘தொழிலாளர் சங்கமும் மண்ணாங்கட்டியும், உங்கட போக்கைப் பார்த்தால், நாங்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்துகொண்டு வந்த கட்டுமரத்தொழிலைக் கை விட்டு, மிசினுகளோட மாரடிக்கிறதா? என்று பெரியவர்கள் மறுத்துக்கொண்டே வந்தார்கள்.

என்றாலும், இஞைர்கள் தளரவில்லை. கடற்சாதாளையிற் தேங்கிய கணைமாதிரி தங்கள் ‘பிடி’யை விடாமல் தர்க்க வாதங்களால் கிழவர்களைத் திணறடிக்க வைத்தார்கள்.

‘சா பிணங்களான உங்களுக்கு ‘அறளை’ பேந்திட்டுது. எதிர்காலத்தைப் பற்றி உங்களுக்கு அக்கறையும் இருக்காது. நீங்கள் எப்பவும் பழமை – மரபு பேசியே அநியாயமாகக் காலங்கழிக்கிறனீங்கள். ஆனமட்ட, நாங்கள் செய்யிறதைத் தடுக்காமல் பார்த்துக்கொண்டு கிடவுங்கோ’ என்று இளைஞர்கள் ‘நக்கல்’ பண்ண, பெரியவர்களோ, ‘டேய், முந்த நாள் பேஞ்ச மழைக்கு நேத்து முளைச்ச களான்களான உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் இளம் பொடியள், இள ரத்தம் துடிச்சுக்கொண்டு தானிருக்கும். உங்களுக்கு உலக நடப்புகள் தெரியாது. ஆனபடியால் எப்பவும் தீவிரமாகத்தான் பேசுவியள். உந்தத் தீவிரப் பேச்சுகள் நடைமுறைக்கு ஒருநாளும் ஒத்துவராது’ என்று இளைஞர்கள் மீது திருப்பித் தாக்கினார்கள்.

இளம் தொழிலாளர்களோ தங்கள் ‘கட்சி’யை விட்டுக் கொடுக்கவேயில்லை. நாளாவட்டத்தில் ஊருக்குள்ளே இளைஞர்களின் கரங்களே மேலோங்கி வந்தன.

இளஞர்கள் போட்ட திட்டத்தின் பிரகாரம் ஒருநாள் மின்னாமல் முழங்காமல் ஊருக்குள்ளே ‘கடற் தொழிலாளர் சங்கம்’ உதயமாகியே விட்டது.

தொழில் தோட்டுப் பாய் ஒரு பக்கமும், சங்கத்து வேலைகள் மறுபக்கமுமாக இளைஞர்களுக்கு இப்போது ஓய்வே இல்லை. போதாக் குறைக்கு ஒரு கிழமைக்கு முன் சோளக்காத்தால் கிழக்கு வாட்டாகப் பெயர்ந்த சூறைக்காற்றின் பேயடிப்பு இன்னும் விட்டபாடாகவில்லை. அதுவேறு இன்னும் கழித்து வாங்கி மூசி அடிக்கிறதால் கடற்கரையோரமெங்கும் ஒரே கண்ட சீருக்கு ‘ஓ’வென்ற விண் கூவல் அலறி இரைச்சல் போடுகிறது. கடலோ அம்மாறு கொண்டு அலையடித்துக் குமுறி எழுந்து கரை விழுங்கிபோல் பொங்கிக்கொண்டிருக்கிறது.

தொழிலாளர்கள் ஒரு வாரத்துக்கு மேலாகவே குடிசைகளுக்குள் அடங்கிப் போய்க் கிடந்தார்கள். கரைக்குச் சென்று கடல் பக்கம் முகங் கொடுக்கவும் அவர்களால் முடியவில்லை. சுவக்கீன் கிழவன் கெண்டைக் கால்களை உருவி விட்டு, சிக்கராகத் தலைப்பாகைக் கட்டிக்கொண்டு, வீச்சு வலையைக் கைத்தாவாகத் தூக்கியபடி கடலை பார்த்து நடந்தார்.

‘கிழவன் இவ்வளவு துணிச்சலோடு வெளிக்கிட்டிருக்கே?’ என்று ஏக்கத்தோடு பெண்களும் இளைஞர்களும் கிடுகி வேலிகளாலும், பனை இடுக்குகளாலும், சன்னஞ் சன்னமாக நின்று எட்டிப் பார்த்தார்கள்.

அவர் கடற்கரையைத் தேடியே நெஞ்சு நிமிர்த்திப் போய்க்கொண்டிருந்தார்.

‘இந்தக் கிழவன் சாகப் போகுதே?’

கடற்கரைக்குச் சென்ற கிழவன் நெற்றியைச் சுருக்கி குத்துக்கண் வைத்துக் கடலைப் பார்த்தார்.

‘சீர் வம்பு சரிப்பட்டு வரேல்ல’ என்பது போல் அவர் முகம் சுளித்துக்கொண்டது. அந்த வாக்கில் கோயில் முகப்புப் பக்கமாகத் திரும்பி, நெஞ்சில் ஒரு சிலுவை கீறி ‘முணுமுணுப்புச் செபஞ்’ சொல்பவராய் கரையோரமாகத் திரும்பி வந்து, கரையில் இழுத்துப்போட்ட கட்டுமரங்களில் ஒன்றிலே ஏறியிருந்த கிழவர், வீச்சு வலையை விரித்துக் கெண்டைக் கால்களில் போட்டு உலாவத் தொடங்கினார்.

‘வரியம் முந்நாற்றியறுபத்தைஞ்சு நாளும் கடலில் புடிச்சு மாஞ்சாலும், ஆன வாக்கில வாய் வயித்துக்கு ஊத்தக் கஞ்சியில்லை. இந்தக் கோசும் காத்தடிக்குது. இதுக்குள்ள பொடியள், ‘மிசின்போட்’ வேண்டி மேலைக் கடலுக்குப் போய் ‘பெருந்தொழில்’ செய்யத் துடிக்கிறாங்கள். ஆண்டவர் அவே அவேக்குத் தக்க மாதிரி அளந்த படியை அன்றன்று அனுபவிக்காமல் இவனுகளுக்கு இப்ப ஆவல் புடிச்சிட்டுது. ‘பணக்காரன் மோட்சம் போவதானால் ஊசியின் காதுக்க ஒட்டகம் புந்த மாதிரி’யெண்டு ஏசுநாதர் சொன்னதையும் பொடியங்கள் அசட்டை பண்ணிப்போட்டுப் பெரிசா ஆசைப்படுறாங்கள். ஆனால் ‘பேராசை பெரும் தரித்திரம்’ என்றெல்லாம் தன் பாட்டில் ‘அறளை’ கொட்டிக்கொண்ட சுவக்கீன் கிழவனுக்கு, சடுதியாக மனசில் ஒரு கிலேசம் தட்டியது.

பனங் கூடல்களை ஊடறுத்து ஊர்ப்பக்கம் திரும்பிப் பார்த்தார்.

தொழிலாளர்கள், பெண் புரசுகள், சிறுவர் சிறுமிகள் தெட்டந்தெறியனாக ஊர்த் தோப்புக்குள்ளே நின்று மிலாந்திக் கொண்டிருந்தார்கள்.

‘இள மட்டப் பொடியங்கள் சங்கத்தைக் கூட்டித்தான் போட்டாங்கள். தம்பிமுத்துச் சம்மாட்டியோட இனிமேல் கொழுவல்தான். அவன் பாவி காசுக்காரன். ஆளும் அழுங்குப் பிடியன். எக்கணம் ஏதன்டையில்தான் வந்து முடியும். எனக்கென்ன, ஆர் பிடிச்சும் மீனா கட்டன்’ என்று கிழவன் ஒரு சவாய்ப் ‘புறு புறு’த்தார். என்றாலும், கிழவரிடம் எழுந்த ஏதோ ஒரு வாஞ்சை – தான் சார்ந்த வர்க்கத்தில் கொண்ட பாச உணர்வு, தனது இதயத்துள்ளே அருக்கூட்டித் துடிப்பதை அவர் உணர்ந்தாரெனினும், அது இன்னதென்று விவரிக்கத் தெரியாமல் மனசு அழுந்தித் தவித்தார்.

தனது சொல்லைத் தட்டிய இளைஞர்கள் மீது அவர் வசைபாடிய போதும், ‘அவர்களின் கிருத்தியங்கள் சிலவேளை சாத்தியமாகலாம்’ என்றும் கிழவனுக்கு ஓர் ஐயம் எழுந்தது.

சண்டை மாருதங்களான இயந்திரப் படகுகளைத் தனது ஊரவர்கள் கண்ணுக்கு முன்னே – சிறு சிறு கட்டுமரங்களில் அன்றாடம் மாய்ச்சல்படுகிற தனது ஊர்த் தொழிலாளர்கள் பார்த்திருக்க அவர்கள் கண்கள் எதிரே கொண்டுபோய் பெருந்தொழில் நடத்துகின்ற முதலாளி தம்பிமுத்துச் சம்மாட்டியில் இப்போது கிழவனுக்கு ஆத்திரம் பீறிட்டது.

தம்பிமுத்துவின் வீட்டுப் பக்கம் வெறித்துப் பார்த்து வெறுப்போடு ஒரு பாட்டம் செருமிக் காறித் துப்பினார்.

அப்போது மாலைத் திருந்தாதி மணி அடிக்கிற சத்தம் கேட்டது. ‘சடா’ரென்று கெண்டைக்கால்களை மடக்கிக்கொண்டு கோயில் முகப்பைப் பார்த்துவிட்டு, காற்று வீசும் கன்னையில் முகம் திருப்பிப் பெருமூச்சு விட்டார்.

சங்கக் கூட்டத்தாரின் அமர்க்களம்அப்பொழுது கிழவன் காதுகளில் சாடையாகக் கேட்டது.

‘கடலும் கலங்கித்தானே தெளியும்? ஆனமட்ட நடக்கிற காரியம் நடந்து முடியட்டும்’ என்று தனக்குள் சமாளித்த கிழவன், ‘எழும்பிப்போய், ‘சங்கக் கூட்டத்தில் என்ன பேசுறாங்கள் என்பதைப் பாப்பம்? என்று யோசிக்கலானார்.

அவ்வேளை மேகம் இடிந்து முழங்குவதுபோல் தெற்கே பெருஞ் சத்தம் கேட்டது. முகம் திரும்பிப் பார்த்தார்.

கண்ணுக் கெட்டாத தூரத்திலே தம்பிமுத்துச் சம்மாட்டியின் ஏழு எட்டு இயந்திரப் படகுகள், கடல் உறுமிபோல் இரைந்தெழுந்த வண்ணம், சமுத்திர அலைகளையும் கிழித்துக்கொண்டு வரிசையாகக் கரைநாடி வந்துகொண்டிருந்தன.

கிழவனின் நெஞ்சு உக்கின வலைக்கண்கள் ‘சடக்’கிட்டு அறுந்த மாதிரி ஒரு பாட்டம் குலுங்கி அம்மியது.

என்ன நினைத்தாரோ, ஏதோ ஒரு ஆவேசத்துடன் ‘அவக்’கென்று உன்னி எழுந்து சங்கக் கூட்டத்தைத் தேடி விரைந்தார்.

கிழவன் போய்ச் சேர்வதற்குள் சங்கக் கூட்டம் கலைந்துவிட்டது.

சுவக்கீன் கிழவன் தங்களைத் தேடியே வருகிறார் என்பதைத் தெரிந்தும் அவர்கள் கிழவனுக்காகக் காத்து நிற்கவில்லையாதலால், அவர்கள் தன்னை அசட்டை பண்ணி வெறுப்புக் கொண்டிருப்பதாக யூகித்த கிழவனின் மனசு அவருள் அந்தகாரித்தபோதும், தான் காட்டிய அசமந்தமே இளைஞர்களின் வெறுப்பிற்குக் காரணம் என்று கிழவனுக்குப் புரிந்தது. இருந்தும் கிழவன் அதனைப் பொருட்படுத்ததாமல் வீச்சு வலையை ஒரு பூவரசங் கதியாலில் கொழுவி விட்டு ரோட்டுக்குச் சாய்வாக வந்து நின்று ஒரு வித உரிமை பாராட்டிப் பலமாகக் கத்தினார்.

‘டேய் தம்பிமாரே, எப்பனுக்கு உதில நில்லுங்கோடா’

அவர்கள் ஆங்காங்கே தெட்டத் தெறியனாக நின்றார்கள்.

தன்னுள் கிளர்ந்த மன அசத்தையும் பாராமல், தானே அவர்களைத் தேடிப்போய், ‘சங்கத்தில கூட்டம் போட்டுப் பேசினியளே, கடைசியில அது என்னவாய் முடிஞ்சுது!’ என்று ஆவலோடு கேட்டார்.

‘இப்ப ஒரு முடிவும் எடுக்கேல. நாளைக்குத்தான் பேசி ஒரு முடிவு எடுக்கப்போறம்’

‘மெத்தச் சரி, அதுதான் நல்லது. எதுக்கும் ஒரு முடிவு காணத்தான்வேணும். உருவி எடுத்த வாளைக் கீழ போடாதையுங்கோ’ என்றார்.

அவர் முகத்தில் புன்னகை பளிச்சிட்டது.

அடுத்த நாள் சங்கக் கூட்டம் ஊரின் அதே தோப்புக் கடவையில் நடந்தது.

சிறு படுவலைத் தொழில் காறரெல்லாம் ஒன்று முதலாளி தம்பிமுத்துச் சம்மாட்டியின் இயந்திரப் படகுகளை ஊர்த் துறை முகத்துக்குப் பக்கத்தில் நங்கூரம்போட வேண்டாமெனக் கேட்பதென்றும், சம்மாட்டி இணங்காவிட்டால் ‘நேரடியாகவே எதிர்த்து’ப் போராடுவதென்றும் தீர்மானமாயிற்று.

சங்கம் இந்தத் தீர்மானத்துக்கு வந்த பின் பெண் புரசுகள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆகியோர் மத்தியில் ஒரு வித பதட்டம் நிலவிய போதும், சுவக்கீன் கிழவன் வலு உஷாராகவே காணப்பட்டார்.

‘கலம்பகம் எந்த நேரமெண்டில்லாமல் சடுதியாக வரும்போலிருக்கே. எக்கணம் இதால பெருஞ் சில்லெடுப்புத்தான்’ என்று பெண்கள் மத்தியில் நிலவிய பயம், கடைசியாக அவர்கள் தங்கள் புத்திரர்களுக்குப் போதனை செய்யவே தூண்டியது. இருந்தும், தங்கள் தாய்மார்களுக்கு இளைஞர்கள் சரியாகவும் முறையாகவும் தர்க்க நியாயத்துடன் பதிலளித்த விதத்தைச் சுவக்கீன் கிழவன் கண்டபோது உண்மையில் வியந்தே போனார்.

‘அடக்கப்படும், ஒடுக்கப்படும், சுரண்டப் படும் மக்களின் விடுதலைக்கு அவர்களின் ஒற்றுமையான போராட்டமே சிறந்த வழி’ என்று கூட்டத்தில் தொழிலாளர் உறுதியாகவும், அறுதியாகவும் சொன்ன வார்த்தைகள் சுவக்கீன் கிழவனைச் சொக்க வைத்தன.

திட்டமிட்டால் மீண்டும் ஊர்த் தோப்புக்குள் கடல் தொழிலாளர்களின் சங்கக் கூட்டம் ஆரம்பித்தது.

பகல் இரண்டு மணிக்குத் தொடங்கிய கூட்டம் பொழுது உறைந்து பனைக் கூடலுக்குள் மறைந்து செக்கலாகியும் கறிச்சந்தை போல் ‘கீச்சு மாச்சு’ப் பட்டது.

கடைசியில் இளைஞர்களான தொழிலாளர் பக்கத்துக்கே முடிவு வாசியாகத் தேறியது.

‘முதலில் மனிதாபிமானத்தோடு, நீதியாக, நேரிற் சென்று கேட்கிறது. சம்மாட்டி இணங்காவிட்டால் நேரடிப் போராட்டம்’ என்பது தீர்மானம்.

ஊருக்குள் இத்தனை காலமாக நிலவிய ‘அமைதி’ அன்றைக்குப்பின் ‘இழந்து’ தான் போய்விட்டது.

ஓவ்வொரு இளைஞர்களும், தொழிலாளர்களும் பெண்புரசுகளும் மறுநாள் நிகழப்போகின்ற போர்க் காட்சிகளை மானசீகமாக ‘அதீத கற்பனை’ பண்ணிக்கொண்டிருந்ததால் அன்று இரவு அவர்களுக்குத் தூக்கமே வர மறுத்தது.

‘சம்மாட்டியுடன் நேரடியாகப் போராடுவது’ என்று அவர்கள் எடுத்த முடிவின் எதிரொலி, யாழ்ப்பாணப் பிரதேசம் எங்கும் அடிபட்டது. காக்கைத் தீவுதொட்டு ஆனைக்கோட்டை, நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஈறாக எவர் வாயிலும் இதே பேச்சுத்தான்.

பொழுது காலித்துக் கொண்டிருந்தது, வழக்கம்போல காலைத் திருந்தாதி மணி கேட்டுத் தொழிலாளர்களும், பெண்களும் குடிசைகளிலிருந்து வெளியே வந்த போது...

அவர்களின் ஆசனக்கோயில் முகப்புக் கருகே, முதலாளி தம்பிமுத்துச் சம்மாட்டி காரிலிருந்து பவ்வியமாக இறங்கி கோயில் விறாந்தையில் ஏறி நின்று, நாலா திக்குகளையும் சுழன்று பார்த்தார்.

‘நேரடிப் போராட்டத்தில் குதிப்பது’ என்று நேற்றுத் தங்கள் சங்கம் எடுத்த முடிவை அறிந்த தம்பிமுத்தச் சம்மாட்டி நன்றாகப் ‘பயந்து’ போய், இப்போது தானாகவே ‘இறங்கி’வந்து தங்கள் காலடியில் சரணடைந்து விட்டார்’ என்று அவர்கள் தங்களுக்குள் அடைந்த பெருமிதமும் குதூகலமும், ‘நாங்கள் அவரைத் தேடிப்போய்க் கதைக்காமலிருக்க, அவரே எங்களை நாடி வந்து கதைக்க வேணும்’ என்ற நினைப்போடிருந்த அவர்களின் மான ரோஷமும் ஆவேஷமாகத் தூண்டியதால் அவர்கள் ஒரே நிலையாக ஆங்காங்கே ‘திடும்’ போடு நின்றார்கள்.



(தொடரும்)

**எஸ் அகஸ்தியர் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 37



திரு/திருமதி.செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ........................................
........................................
........................................

........................ ........................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 37
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 37

**இடமிருந்து வலம்**

*(01)* குற்றமற்றவர்.
*(04)* வித்து
*(06)* தனக்குரிய அல்லது தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்வது.
*(07)* சுலபமாக இல்லாத தன்மை. (குழம்பியுள்ளது)
*(10)* பெரும்பாலான விலங்குகளுக்கு இது உண்டு.
*(11)* தூய்மையானது. (திரும்பியுள்ளது)
*(12)* பின்னப்பட்ட தலைமுடி. (திரும்பியுள்ளது)
*(13)* ஆவல், விருப்பம்.
*(15)* மன்னர் முதலான பெருந்தலைவர்களின் வாசஸ்தலம்.
*(17)* இருபத்துநான்கு மணி நேரம் கொண்ட கால அளவு. (திரும்பியுள்ளது)
*(20)* ஓர் உறவுமுறை.
*(22)* வேகமாக ஓடக்கூடிய விலங்கு.
*(24)* ஒன்றைச் செய்வதற்கு கிடைக்கும் இன்றியமையாத பெரும் உதவி.
*(25)* முள், ஊசி போன்றவற்றின் கூரான பகுதி. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

*(01)* பரபரப்பு அல்லது அவசரம் இல்லாத நிலை.
*(02)* உணவு இல்லாமல் பசியோடு இருக்கும் நிலை.
*(03)* விளக்கு எரிக்கப் பயன்படுவது.
*(04)* நன்றி உணர்வு அல்லது மாறாத பற்று.
*(05)* பெண்.
*(08)* இதுவும் ஒரு நாட்டியம்.
*(09)* வில்லிருந்தால் இதுவும் தேவை. (குழம்பியுள்ளது)
*(14)* முற்காலத்து போர் வீரர்களின் ஆயுதம்.
*(15)* இது மழைக்காலம்.
*(16)* பிரதியுபகாரம்.
*(18)* இளம் பசுக்கன்று.
*(19)* காத்திரமான காட்டு மரம். (குழம்பியுள்ளது)
*(21)* இவளும் பெண்தான்.
*(23)* இது ஒரு தானியம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 36

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*(01) விலைவாசி (04) சோகம் (06) சுந்தரம் (08) கத்தி (10) அம்புலி (12) பேதம் (13) நிதி (14) அபயம் (17) ஆம் (19) பாரதி (20) ஆதிவாசி (22) மித்திரன் (23) கீரி*

**மேலிருந்து கீழ்**

*(01) விவேகம் (02) வாந்திபேதி (03) சிசு (04) சோம்பு (05) கதலி (07) அபாரம் (09) நித்தம் (11) அபாயம் (15) சிரம் (16) பதி (17) ஆசாமி (18) திரள் (20) ஆதி (21) வான்*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 35

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எல்.எம். அஸ்வர்,**
*இல. 60, தேவாநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10.*

**2. வி. பழனியாண்டி,**
*1/6, சக்கரன்கொட்டுவ, கஹட்டபிட்டிய, கம்பளை.*

**3. ஜே.என். மஸீதா,**
*15, சிறிமல்வத்த வீதி, மடவளை பஸார், கண்டி.*

**4. கே. சித்திரவேலாயுதன்,**
*இல. 57, ஹஸ்கிசன் வீதி, திருகோணமலை.*

**5. ஐ.எல். லதீபா,**
*இல. 80/06, கலீல் ஹாஜி வீதி, வனகம,இறக்காமம் 2.*

**6. எம்.பீ.எம். அஸூஹதி,**
*இல. 34/2ஏ, தனிப்பொல்கஹ சந்தி, முதலாம் ஒழுங்கை, காலி.*

**7. ஏ. சந்தியாகு,**
*34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.*

**8. வேல்நாயகம் ராஜேந்திரன்,**
*இல. 88, விபுலானந்த வீதி, காரைதீவு 01.*

**9.எஸ். சத்தியவதனி,**
*பிரதான வீதி, பாலமுனை, மண்டூர்.*

**10.ஆர். ஜயந்திமாலா,**
*இல. 17, பண்டாரநாயக்க பெதஸ்ஸ, புசல்லாவை.*

**11.ஆர். லக்ஸ்மி,**
*குருமணவெளி 11 கிழக்கு, களுவாஞ்சிக்குடி.*

**12.என். கவிநயா.**
*32, லக்ஷ்மன் பிளேஸ் கிருலப்பனை*

★ ★ ★



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 20

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் முன்னோடி கவிஞர் எம். ஏ. நுஃமான்

சமகால இலங்கைத் தமிழ்க் கவிதையில் இனத்துவ முரண்பாடுகளின் தாக்கம்| என்ற கட்டுரையை எம்.ஏ.நுஃமான் ஞானம் சஞ்சிகையின் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழில் எழுதியுள்ளார் (நவம்பர் 2012). அக்கட்டுரையில் அரசியல் எதிர்ப்புக் கவிதைகள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

“இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் அரசியல் எதிர்ப்புக் கவிதைகள் என்றொரு புதிய இலக்கிய வகை 1977முதல் தோன்றி வளர்ந்தது. இக்கவிதை வகை 1950களில் எழுதப்பட்ட மொழித் தேசியவாதக் கவிதைகளின் பொருளிலும் வடிவத்திலும் இருந்து பெரிதும் வேறுபட்டது.

1977இல் யாழ்ப்பாணத்தில் அரச காவலர்களால் இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு உடனடி எதிர்வினையாக ‘துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும், நேற்றைய மாலையும் இன்றைய காலையும்| என்னும் தலைப்புகளில் நான் இரண்டு கவிதைகள் எழுதினேன். நான் அறிந்த வரை இவைதான் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் 1970க்குப் பிந்திய இரண்டாம் கட்ட அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் முதல் வருகையாகும். முதல் கவிதை அடக்கு முறைக்கு எதிரான குரலையும் இரண்டாவது கவிதை வன்முறையின் அவலத்தையும் வெளிப்படுத்தின. உருவம், உள்ளடக்கம் என்பவற்றைப் பொறுத்தவரை கடந்த முப்பது ஆண்டுகளில் இலங்கையில் எழுதப்பட்ட மிகப் பெரும்பாலான போர்க்காலக் கவிதைகள் இவ்விரு கவிதைகளின் வெவ்வேறு வகைகள் என்றே சொல்ல வேண்டும். அக்கவிதைகள் இரண்டையும் நான் இங்கு தருகிறேன்.

துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்
நாளையக் கனவுகள் இன்று கலைந்தன
நேற்றைய உணர்வுகள் இன்று சிதைந்தன
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடினர்
ஒரு பெரும் நகரம் மரணம் அடைந்தது
வாழ்க்கையின் முடிவே மரணம் என்போம்
ஆயின் எமக்கோ
மரணமே எமது வாழ்வாய் உள்ளது
திருவிழாக் காணச் சென்றுகொண்டிருக்கையில்
படம்பார்க்கச் செல்லும் பாதிவழியில்
பஸ் நிலையத்தின் வாசலில் நிற்கையில்
சந்தையில் இருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டு இறக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்
உத்தரவாதம் அற்ற வாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்குமுறைக்கு அடிபணிவதே
அரசியல் அறமா?
அதை நாம் எதிர்ப்போம்
தனிநாடு அல்ல எங்களின் தேவை
மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்
மனிதனுக் குரிய கௌரவம்



வாழ்க்கைக்கான உத்தரவாதம்
யார் இதை எமக்கு மறுத்தல் கூடும்?
மறுப்பவர் யாரும் எம்மெதிர் வருக
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடுக
போராடுவதே மனிதனின் விதியெனில்
போராட்டத்தில்
மரணம் அடைவதும் மகத்துவம் உடையதே
நேற்றைய மாலையும் இன்றைய காலையும்
நேற்று மாலை
நாங்கள் இங்கிருந்தோம்
சனங்கள் நிறைந்த யாழ்நகர்த் தெருவில்
வாகன நெரிசலில்
சைக்கிளை நாங்கள் தள்ளிச் சென்றோம்
பூபால சிங்கம் புத்தக நிலைய
முன்றலில் நின்றோம்
பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தோம்.
பஸ்நிலையத்தில் மக்கள் நெரிசலைப்
பார்த்தவாறிருந்தோம்.
பலவித முகங்கள்
பலவித நிறங்கள்,
வந்தும் சென்றும்
ஏறியும் இறங்கியும்
அகல்வதைக் கண்டோம்
சந்தைவரையும் நடந்து சென்றோம்
திருவள்ளுவர் சிலையைக் கடந்து
தபாற்கந்தோர்ச் சந்தியில் ஏறி
பண்ணை வெளியிற்
காற்று வாங்கினோம்
ஷறீகலின்| அருகே
பெட்டிக் கடையில்
தேநீர் அருந்தி சிகரட்
புகைத்தோம்
ஜாக் லண்டனின்
ஷவனத்தின் அழைப்பு|
திரைப்படம் பார்த்தோம்
தலைமுடி கலைந்து
பறக்கும் காற்றில்
சைக்கிளில் ஏறி
வீடு திரும்பினோம்
இன்று காலை
இப்படி விடிந்தது.
நாங்கள் நடந்த
நகரத் தெருக்களில்
காக்கி உடையில் துவக்குகள்
திரிந்தன
குண்டுகள் பொழிந்தன
உடலைத் துளைத்து
உயிரைக் குடித்தன.
பஸ்நிலையம் மரணித் திருந்தது
மனித வாடையை நகரம் இழந்தது
கடைகள் எரிந்து புகைந்து கிடந்தது
குண்டு விழுந்த கட்டடமாக
பழைய சந்தை இடிந்து கிடந்தது
வீதிகள் தோறும்
டயர்கள் எரிந்து கரிந்து கிடந்தன
இவ்வாறாக
இன்றைய வாழ்வை
நாங்கள் இழந்தோம்
இன்றைய மாலையை
நாங்கள் இழந்தோம்”

நுஃமான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைக்குடியில் ஆகஸ்ட் 10, 1944இல் மக்புல் ஆலிமுக்கும் சுலைஹா உம்மாவிற்கும் மகனாகப் பிறந்தார்.

இவர் தனது தொடக்கக் கல்வியைக் கல்முனைக்குடி அரசினர் ஆண்கள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைக் கல்முனை உவெசுலி உயர்தரப் பாடசாலையிலும் படித்தார். பின்னர் 15 ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். அட்டாளைச் சேனை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். இளங்கலை மொழியியல் பாடத்தை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் பயின்றார் (1973). பின்னர் முதுகலைத் தமிழ் இலக்கியப் பாடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயின்றார் (1982). அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வை மூன்றாண்டுகள் மேற்கொண்டார்.



19761982இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் மொழியியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1991இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியேற்று பேராசிரியர்நிலைக்கு உயர்ந்தார்(2001). இதன் இடையே இவர் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராக ஓராண்டு பணிபுரிந்து (1988) இலக்கணநூல் ஒன்றை உருவாக்கினார். இலங்கையின் திறந்தநிலைப் பல்கைலக்கழகத்திலும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் (1999_2000), மலேயா பல்கலைக்கழகத்திலும் (2007_2008) வருகைதரு பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

நுஃமான் தன் பதினாறம் வயதில் கவிதை எழுதத் தொடங்கியவர் 'நெஞ்சமே நெஞ்சுக்கு நேர்” என்ற ஈற்றடிகொண்டு நுஃமான் எழுதிய பாடல் வீரகேசரியில் வெளிவந்தது.

நுஃமான் நவீன தமிழ்க் கவிதையின் விமர்சன முன்னோடியாகவும் கருதப்படுகிறார். மார்க்ஸியமும் இலக்கியத் திறனாய்வும் என்ற இவரது நூல் விமர்சன உலகில் அதிக கவனிப்பைப் பெற்றது.

நுஃமான் 1969 – 1970இல் 'கவிஞன்” என்ற பெயரில் காலாண்டு இதழை நடத்தியவர்.

பலஸ்தீனக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளை மொழிபெயர்த்துத் தந்து ஈழத்துக் கவிதைகளின் போக்கில் மாறுதலை ஏற்படுத்தியவர் நுஃமான. இந்த மொழிபெயர்ப்புக்கான காரணத்தை ஞானம் சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலில் பின்வருமாறு விளக்கியுள்ளார்

“1970களின் தொடக்கத்திலிருந்தே பலஸ்தீனக்கவிதைகளை அவ்வப்போது நான் மொழிபெயர்த்து வந்துள்ளேன. பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் எனக்கிருந்த ஈடுபாடு அதற்கொரு முக்கிய காரணம். ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் எழுச்சிக்கும் அவர்களது இலக்கிய வெளிப்பாட்டுக்கும் இடையிலான உறவுபற்றிய எனது அக்கறை பிறிதொருகாரணம். 1970களின் இறுதியில் இருந்து ஈழத்தில் இன ஒடுக்குமுறை தீவிரமடைந்த சூழ்நிலையில் பலஸ்தீனக் கவிஞர்களின் உணர்வு நமக்கும் மிகவும் ஏற்புடையதாக அமைந்தமை பிறிதொரு காரணம்.

தமிழில் அரசியல் அல்லது எதிர்ப்புக் கவிதைகள் சரியான வடிவம் பெறாத அன்றைய சூழலில் பலஸ்தீனக்கவிதைகள் எமக்கு ஒரு ஆதர்சமாக அமையலாம் என்று நான் கருதினேன். இவற்றின் விளைவே எனது மொழிபெயர்ப்புக்கவிதைகள்.

1982இல் எனது பலஸ்தீனக்கவிதைகள் தொகுப்பு வெளிவந்தது. 9 கவிஞர்களின் 30 கவிதைகள் அதில் இடம் பெற்றன.”

(ஞானம் 2000 ஆகஸ்ட்;)

யாழ் நூலகம் எரிக்கப்பட்டபோது நுஃமான் எழுதிய கவிதை முக்கியமானது.

புத்தரின் படுகொலை
நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
‘எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?’
என்று சினந்தனர்.
“இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்..”
என்றனர் அவர்கள்.
“சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை”
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது.

தாத்தாமார்களும் பேரர்களும், அழியா நிழல்கள், மழைநாட்கள் வரும் ஆகியன நுஃமானது கவிதைத் தொகுதிகள். இவர், மஹாகவி கவிதைகள், மஹாகவின் ஆறு காவியங்கள், ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியருமாவார். பாரதியின் மொழிச்சிந்தனைகள் ஒரு மொழியியல் நோக்கு இவரது ஆய்வு நூல். எம்.ஏ. நுஃமான் அவர்கள் 2011ஆம் ஆண்டில் விளக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

# இனியவனே என்று பாடி வந்தேன்!

ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்



## 03 தங்கச் செயின் உடைந்தால் தங்கம் கிடைக்கும் சைக்கிள் செயின் உடைந்தால் சைக்கிள் கிடைக்குமா?

விரைந்து முன்னால் நடந்து சென்ற ஜீவகன்,

நின்று,

திரும்பி,

பிரேமைப் பார்த்தான்.

அவன் அருகில் வந்த பிரேம்,

'இன்னைக்கி பகல் பொஸ்கிட்ட 500 ரூபா கேட்டிருந்தேன். தாரேன் தாரேன்னு சொல்லிட்டு மனுஷன் கட் அடிச்சி பொயிட்டாருடா!"

ஜீவகன் அமைதியாக பார்த்து விட்டு,

"ம்... அவளுக்கு என்ன நடத்திச்சோ தெரியாதுடா..." என்று மீண்டும் அவனே சொன்னான்.

"இந்த விஷயமெல்லாம் அப்படித்தாண்டா இருக்கும்... வராட்டி விடுடா கடலில் என்ன ஒரு மீன்தான் இருக்கா..."

"ம்.... மீனென்டா நெறையா இருக்கு தான்.... ஆனா...!"

"ம்... அப்புறம் என்ன மீண்டும் வலையை வீசி புடிக்க வேண்டியது தானே...!"

"போடா நீ வேற எவ்வளவு கஸ்டப்பட்டு வலைய விரிச்சி இந்த மீனைப் புடிச்சேன் தெரியுமா ... ம்... எனது வலையில் எங்கோ ஓட்டை இருந்திருக்குடா...!"

பிரேம் சொன்னதைக் கேட்டுவிட்டு,

அவன் மீது அனுதாபப்படுவதா, அல்லது,

அவனைப் பார்த்து சிரிப்பதா என்று புரியாமல்,

அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவகன்.

★★★

அந்த தோட்டத்தில் இருக்கும் பெட்டிக்கடை அது.

அதுக்கு சொந்தக் காரர் மன்சில்.

அந்த மன்சிலுக்கு சுமார் ஐம்பத்தைந்து வயதிருக்கும்.

கொஞ்சம் வழுக்காகத்தலை.

முழங்கால் வரை நீண்டிருக்கும் ஒரு கட்டை கால்சட்டை.

அதற்கு மேல்,

ஒரு கைகட்டை பெனியன்.

சரியான வாயாடி இதுதான் மன்சிலின் தோற்றம்.

அந்த கடைக்கு வரும் இளைஞர்கள் எல்லோரும்,

மன்சில் நானா என்று தான் அவரை அழைப்பார்கள்.

ஆனாலும்,

இப்போது,

அந்தக் கடைக்கு வரும் எல்லோருக்குமே அவர்,

'மன்சில் நானாத்தான்'!

மன்சில் நானாவின் கடை என்று சொன்னால்,

இப்போது அந்தப் பகுதியில் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள்.

பார்வதியும் மன்சில் நானாவின் கடையில்தான் பொருட்களை வாங்குவாள்.

அன்றும்,

பாண் வாங்குவதற்காக,

மன்சில் நானாவின் கடைக்கு வந்தாள் பார்வதி.

பார்வதியைக் கண்டதும்,

நாற்காலியைத்தட்டித் துடைத்தார் மன்சில் நானா.

"இல்ல மன்சில் நானா எனக்கு உக்கார நேரமில்ல ரெண்டு றாத்தால் பாண் மட்டும்தாங்க!" என்றாள் பார்வதி.

"ம்... அதுக்கில்ல பார்வதி உங்கிட்ட ஒரு விஷயம் பேசனும் கொஞ்சம் இப்படி உக்காறேன்!" என்றார் மன்சில் நானா...

"எங்கிட்ட பேசனுமா...?" வியப்பை விழிகளில் கட்டிக் கொண்டாள் பார்வதி.

"அதுசரி... உன்னோட மகன். ஸ்ருடியோவுல வேலை செய்யிறனான... இல்லாட்டி முன்சிபல்ல வேலை செய்யிறானா?"

"ஸ்டுடியோவுலதான் வேல செய்யிறான்... ஏன் கேக்குறீங்க...?" "இல்ல... நான் கொலான்னாவைக்கு பகல் ரெண்டு மணிக்குபோல போகும் போது... தெமட்டகொடை சந்தியில் உள்ள பஸ் ஓல்ட்ல உன்னோட மகனும்..,. உன் ஊருக்கு புதுசா வந்திருக்கும் அந்த பொடியனும் நின்னு கிட்டிருந்ததை நான் பார்த்தேன்.."

"பஸ் வரும் வரை நின்னுகிட்டு இருந்திருப்பானுங்க!"

"மண்ணாங்கட்டி நான் கொலன்னாவைக்கு போயிட்டு... என்னுடைய வேலைய முடிச்சிட்டு வரும் போது சாயந்திரம் நாலுமணி இருக்கும்... அப்பவும் அந்த ரெண்டுபேரும் அங்க தான் நின்னுகிட்டிருந்தாங்க...!"

"ஓ... அப்படியா...! அதுவரைக்கும் என்ன பண்ணிகிட்டிருந்தாங்க...?"

"எது... எங்கிட்டயே, கேக்குறியா... அதுதானே நானும் கேக்குறேன்... நான் அவர்களைப்பார்க்கும் போது அந்த புதிய பொடியன் புடலங்காயைப் போல் பஸ் ஓல்ட்டில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான். உன்னோட தர்ம புத்திரன்... நில அளவையாளனைப் போல் அப்படியும் இப்படியும் மாறிமாறி நடந்து கொண்டிருந்தான்!"

"சரி சரி... பசங்க வீட்டுக்கு வந்ததும் நான் கேக்குறேன்!" என்று சொல்லியபடியே,

பாண் றாத்தலை வாங்கிக் கொண்டு,

அங்கிருந்து மெல்ல நடந்து சென்றாள் பார்வதி.

★★★

வியர்க்க விறு விறுக்க நடந்து வந்த,

ஜீவகனும் பிரேமும்,

அந்த மரங்களின் நிழலுக்குள் வந்ததும்,

அங்கே கிடந்த அந்த மரத்தின் வேர்மீது அமர்ந்து கொண்டான் ஜீவகன்.

கையில் இருந்து கெமரா பேக்கைக் கீழே வைத்து விட்டு.

அவனுக்கு அருகில் அமர்ந்து கொண்டான் பிரேம்.

அதே நேரம்,

பிரேமின் கெமரா பேக்குக்குள் இருந்த கெமராவைக் கையில் எடுத்தான் ஜீவகன். அதை அப்படி இப்படி திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"ச்... சா..,. சுப்பர் கெமர இல்லியா...!"

"டேய்... டேய்.... பார்த்துடா கீழே போட்டுறாத...!"

"இல்ல... இல்ல... நல்லாபுடிச்சிட்டுத் தான் இருக்கிறேன்...!"

கவரைத் திறந்து பார்த்தான்.

அவன் விழியில்,

அந்த மவுண்ட் மேரி பாதையில் இருந்து தனியார் டியுஷன் வகுப்பொன்றைவிட்டு,

வெளியே வரும் பெண்களின் கூட்டம் பட்டது.

"அடடா... தேவதைகளின் கூட்டம்!" அவனை அறியாமலேயே,

ஜீவகனின் வாய் முணு முணுத்தது.

அந்த அழகிகளின் கூட்டத்தை கெமரா வழியாக ரசித்தபடியே,

மூன்று பெண்கள் தனியாக வரும் பக்கமாக மீண்டும் கெமராவைத் திருப்பினான்.

அவர்களில்,

நடுவில் வந்த பெண்மணி மிகவும் அழகாக இருந்தாள்.

அவள் முகத்தில்,

அமைதியும், அப்பாவித்தனமும் ஆட்சி செய்து கொண்டிருந்தது.

அந்த மூன்று பேரில் அவள் பேரழகியாக இருந்தாள்.

கெமராவை அவள் முகத்துக்கு, நேராக வைத்து,

அவள் முகத்தை 'சூம்' பண்ணினான்.

ஜீவகன் அவளை படம் பிடிக்கப்போகிறான் என்பதை,

அவள் அருகில் இருந்த அவள் தோழியான ரமா பார்த்துவிட்டாள். அடுத்து,

"ஏய்... வெண்பா அங்க பார்... அவன் உன்னை படம் எடுக்கப் போறான்!"

அலறினான் ரமா.

ரமா இப்படி அலறியதும்,

வெண்பாவும் மற்றத் தோழியான சீதாவும்,

ஜீவகனைப் பார்த்தார்கள்.

"ஐயையோ... அவன் எங்களைத் தாண்டீ படம் புடிக்கிறான்...!" இரு கைகளையும் நெஞ்சில் அடித்த படியே,

பதறினாள் கீதா.

ஆனாலும்,

வெண்பாவின் அழகில் சொக்கிப் போயிருந்ததினால்,

கீதா அலறியது,

அவன் காதில் விழவில்லை.இவள் ரொம்ப அழகா

இருக்கிறாடா பிரேம்!" கமெரா கண்களைப் பார்த்தபடியே சொன்னான் ஜீவகன்.

"அடேய் ... அங்கே மூனு துண்டுகள் இருக்குடா... நீ எதைச் சொல்லுகிறாய்..." விழிகளை உருட்டிய படியே கேட்டான் பிரேம்.

"அடேய் லூசு... அந்த மூனு பேர்ல நடுவுல வாரத பாருடா"

"யார்... அந்த வெள்ளைக் குதிரை மாதிரி உயரமா இருக்காளே..! அவளா... ம்... அப்பா டா... மத்த ரெண்டும் நல்லாத்தான் இருக்கு!"

அதேநேரம்,

கெமராவின் படம் பிடிக்கும் பட்டன்,

அவளை அறியாமலே அழுத்தப்பட்டது.

இதனால்,

வெண்பாவின் முகம்,

குளோஸ் அப்பில் பதிவானது.

"டேய்... உனக்கென்னடா பைத்தியமா... ஏன்டா படம் பிடித்தாய்...!"

"இல்லடா நான் படப்பிடிக்கல்ல... தானாகவே பட்டன் தட்டுவிட்டது!"

"இப்படி கொடுடா அந்த கெமராவை!" என்று அதை வாங்கிக் கொண்டான் பிரேம்.

அச்சத்தினால் ஆடிப் போயிருந்த அந்த மூன்று பெண்களும் என்ன செய்வதென்று தெரியாமல்,

அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

(இனியவன் வருவான்)



# மஞ்சரி தொழிற்கல்வி

உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டி

☎ : 0112 429 339, 0777 270 076

## பாடசாலைக்கல்வியும் தொழில்சார் திறன்விருத்தியும்

உலக வங்கி 2019 இல் எதிர்கால வேலை உலகிற்கான உலக அபிவிருத்தி அறிக்கையில் “தொழில்கல்வி மற்றும் பொதுக்கல்விக்கிடையிலான இணைவுத்தன்மை மாற்றமுறும் தொழில்நுட்பத்தின் அதீத செல்வாக்கை கொண்டுள்ள தொழில் சந்தைக்கு ஏற்ப ஒவ்வொருவரையும் ஏற்புடையவர்களாக மாற்றுவதில் மிகமுக்கிய பங்குவகிக்கின்றது” இக்கருத்தானது பொதுக்கல்வி முறையில் தொழில்சார் கல்வியின் இணைவின் அவசியத்தை எமக்கு புலப்படுத்துகின்றது. வெறுமனே மனப்பாடம் செய்யும் கல்வி முறைக்கு மாறாக பயிற்சியுடன் கூடிய தொழில்கல்வி மாணவர்களுக்கு வழங்குவது அவர்களை சமூகத்தில் வினைத்திறன்மிக்கவர்களாக வாழ வழிவகுக்கும். உலகில் சிறந்த கல்வியை வழங்கும் முன்னிலை நாடான பின்லாந்து மாணவர்களுக்கு இடைநிலைக்கல்வியில் மூன்றுவருட தொழில்சார்சார் திறன் விருத்திக்கல்வி வழங்கப்படுவதும் இந்தியாவில் மகாத்மா காந்தியின் வார்தாக்கல்வி முறையில் இடம்பெறும் தொழில் மையக்கல்வியை (Craft-centric education) அடிப்படையாகக் கொண்ட கல்விச்செயற்பாட்டை மேற்கொள்வதும் பாடசாலைக்கல்வியில் தொழில்சார் திறன்விருத்திக் கல்வியின் முக்கியத்துவத்தை புலப்படுத்துகின்றது.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1893 இல் தொழில்கல்விமுறை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் புகையிரத மற்றும் தேயிலை தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களை பயிற்றுவித்தலை பிரதான நோக்கமாகக் கொண்டது. நீண்டதொரு கல்வி வரலாற்றை கொண்ட இலங்கை பொதுக் கல்விக்கட்டமைப்பானது தொழில்கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கையில் தொழில்கல்வி வரலாற்றில் 1893 இல் ஆரம்பிக்கப்பட்ட மருதானை தொழிநுட்பக்கல்லூரி தொழில்கல்வியை முறையாக வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட முதல் கல்லூரியாக விளங்குகின்றது. பாடசாலைக்கல்வி கட்டமைப்பில் தொழில்சார் திறன்களின் விருத்தி பிரித்தானியர் ஆட்சியிலும் பின்னர் சுதந்திரத்திற்கு பின்னரும் முக்கிய வளர்ச்சியைப் பெற்றுக் காணப்படுகின்றது. குறிப்பாக 1981 இல் முன்வைக்கப்பட்ட கல்விச்சீர்திருத்தத்தில் வெள்ளை அறிக்கையின் பிரதான கருப்பொருளாக விளங்கியது மாணவர் தொழில்சார் திறன்களின் விருத்தியாகும். இதன் ஓர் பிரதிபலிப்பே பாடசாலைக் கலைத்திட்டத்தில் வாழ்க்கைத்தேர்ச்சி (Life skill) என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது.

பாடசாலைக் கல்விக்கட்டமைப்பில் தொழிநுட்ப பாடங்களானது 1930இல் இருந்து வெவ்வேறு பெயர்கள் மற்றும் வடிவங்களில் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன அவற்றுள் வெடகுருவ, முன்தொழிற்கல்வி பாடநெறிகள், வாழ்க்கைத்திறன் அத்துடன் செயற்பாட்டு அறை போன்றன முக்கியமானவையாகும். மற்றைய முன்னெடுப்பாக செய்முறை மற்றும் தொழிநுட்பதிறன்களாக (PTS) 2007இல் பொதுக் கல்விமுறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் தொழிநுட்ப பாடங்கள் 6-11 வரையான வகுப்புக்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. PTS ஆனது தொழிநுட்பக்கல்வியின் ஐந்து பரந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன அடிப்படை தொழிநுட்பம், உணவுத்தொழிநுட்பம், ஆடைத்தொழிநுட்பம், விவசாயத்தொழிநுட்பம் மற்றும் வியாபார செயற்பாடுகள் என்பனவாகும். இவ் ஐந்து பிரிவுகளிலும் ICT உள்ளடக்கப்பட்டுள்ளது. PTS மூலமாக விசேடமாக மாணவர்களிடத்தில் பிரச்சினை தீர்க்கும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், சிந்திக்கும் திறன்கள் விருத்தி செய்யப்பட்டன.



மேலும் பாடசாலைக்கட்டமைப்பில் ஒன்பது தொழிநுட்ப பாடநெறிகள் தரம் 10-11 மாணவர்களுக்கு மூன்றாவது கூடையாக (Technical basket) அறிமுகம் செய்யப்பட்டு அதனுள் மாணவர்கள் ஒன்றை தெரிவ செய்தல் வேண்டும். அப்பாட நெறிகளாவன வடிவமைப்பு மற்றும் கட்டுமான தொழிநுட்பவியல், வடிவமைப்பு மற்றும் இயந்திரவியல் தொழிநுட்பவியல், வடிவமைப்பு மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பவியல், கலை மற்றும் கைவினை, விவசாயம் மற்றும் உணவுத்தொழிநுட்பம், நீர்வாழ் உயிர்வள தொழிநுட்பவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல், வீட்டுப்பொருளியல் மற்றும் சுகாதாரம் மற்றம் உடற்கல்வி என்பனவாகும்.

தேசியகல்வி ஆணைக்குழுவின் 2009இல் முன்வைக்கப்பட்ட அறிக்கை மற்றும் 2012 இல் மனித உரிமைகள் மற்றும் வேலைவாய்ப்பு அறிக்கை ஆகிய இரண்டும் பொதுக் கல்வித்துறையில் தொழில்சார் திறன்களின் விருத்தி தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தன. குறிப்பாக பொதுக்கல்வி மற்றும் தொழிநுட்ப மற்றும் தொழிற்கல்வி அத்துடன் பயிற்சி (TVET) ஆகியவற்றுடன் தொடர்பினைப் பேணல், பொதுக்கல்வியின் ஒவ்வொரு வெளியேறு மட்டங்களிலும் வெவ்வேறு தொழிற்கல்வி முறைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தல், கா. பொ.த சாதாரண தரத்தில் NVQ-1 இனை அறிமுகம்செய்தல், UNIVOTEC மூலமாக பாடசாலைகளில் தொழில்சார் திறன் விருத்திப்பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்களை தயார் செய்தல் போன்றனவாகும்.

இலங்கை பாடசாலைக்கல்வியில் தொழில்கல்வியை வழங்கும் முயற்சியாக தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைப்பிரிவு 1957 சுற்றறிக்கை இல 10 இன் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1970 ஆரம்பம் முதல் அதன் செயற்பாடு சரியாக இடம்பெறவில்லை. கல்வி அமைச்சு 1985 இல் தேசிய இளைஞர் சேவைமன்றத்தடன் இணைந்து தொழில் வழிகாட்டல் சேவையை ஓர் முன்னோட்ட நிகழ்ச்சித்திட்டமாக பாடசாலைகளில் அறிமுகப்படுத்தியது. இருந்தபோதிலும் இலங்கை பாடசாலைக் கட்டமைப்பில் தொழில் வழிகாட்டல் சேவையானது முழுமையான வகையில் சுற்றறிக்கை இலக்கம் 16/2006 அத்துடன் 06/2013 க்கு இணங்க கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. “பாடசாலை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்” என்ற பெயரில் அழைக்கப்பட்டது. பொதுவான வழிகாட்டல் ஆலோசனையுடன் எதிர்கால தொழிற்சந்தைக்கு ஏற்றவகையில் மாணவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவது பிரதான நோக்கமாக காணப்பட்டது. இங்கு பெற்றோர்களுக்கும் மாணவர்களின் தொழில் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.




## NCUK உடன் APIIT இல் ஏராளம் தேர்வுகள்

### உங்களை ஒரு பல்கலைக்கழகத்தோடு மட்டுப்படுத்தாதீர்கள்!



### NCUK சர்வதேச முதலாம் ஆண்டு

NCUK சர்வதேச முதலாம் ஆண்டு என்பது மாணவர்களின் அறிவு மற்றும் திறன்களை வளர்க்கும் இளங்கலை முதலாமாண்டுக்குச் சமமான திட்டமாகும். இது NCUK பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் இளங்கலைப் படிப்புகளின் இரண்டாம் ஆண்டு நுழைவுக்கான மாணவர்களை தயார்படுத்தி, தகுதி பெறச்செய்கிறது.

NCUK உத்திரவாதத்தால் குறிப்பிடப்பட்டுள்ள நிலைக்கு மாணவர் செயல்படும் பட்சத்தில், NCUK பல்கலைக்கழகம் ஒன்றில் படிக்கும் திட்டத்தில் மாணவர்களுக்கு NCUK உத்தரவாதம் அளிக்கிறது.

APIIT இப்போது சட்டம் மற்றும் வணிகம் இரண்டிலும் NCUK முதலாம் ஆண்டுக் கற்கையை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது. சட்டத்தில் NCUK சர்வதேச முதலாம் ஆண்டு முடிந்ததும், மாணவர்கள் அஸ்டன் பல்கலைக்கழகம், பிராட்.ஃபோர்ட் பல்கலைக்கழகம், ஹடர்ஸ்.ஃபீல்ட் பல்கலைக்கழகம், லீட்ஸ் பெக்கெட் பல்கலைக்கழகம், ஷெ.ஃபீல்ட் பல்கலைக்கழகம் அல்லது இங்கிலாந்தில் உள்ள ஷெ.ஃபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்திற்கு செல்லலாம்.

வணிகத்தில் NCUK முதலாமாண்டை முடிக்கும் மாணவர்களுக்கு, UK மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள பல முன்னணி பல்கலைக்கழகங்களில் வாய்ப்புக் கிடைக்கும்

### NCUK சர்வதேச அடிப்படைக் கற்கைநெறி ஆண்டு

NCUK சர்வதேச அடிப்படைக் கற்கைநெறி ஆண்டு என்பது மாணவர்கள் இடைநிலைக் கல்வியிலிருந்து மூன்றாம் நிலைக் கல்விக்கு மாறுவதற்கு உதவும் ஒரு தனித்துவமான தகுதியாகும். 1987 இல் ருமு இல் நிறுவப்பட்ட NCUK என்பது முன்னணி பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பாகும். மாணவர்கள் தங்கள் கற்கைநெறியை முடித்து பல்கலைக்கழகத்துக்கு செல்லும் வரை, தகுதிக்கான தேவையான உதவியைப் பெறுவதற்கு உதவுகிறது.

அதன் நுழைவுத் தகுதியை முன்னணி பல்கலைக்கழகங்கள் ஏற்றுக்கொண்டன!

பலதரப்பட்ட பாடங்கள் மற்றும் தகுதியான மாணவர்கள் நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு முன்னேறுவதற்கான வாய்ப்புகளுடன், NCUK ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்விக் கனவை நனவாக்குகிறது. அதன் தகுதி பல பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. NCUK சர்வதேச அடிப்படைத் தகுதியானது அதனுடன் ஒத்திசைவான பல்கலைக்கழகங்களுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றும் உயர் கல்வித் தரங்களை மொழி, படிப்பு, சமூக மற்றும் கலாசார திறன்களுடன் இணைக்கிறது.

NCUK பல்கலைக்கழகங்களுக்கு முன்னேறும் மாணவர்கள், ஆயிரக்கணக்கான வெவ்வேறு பட்டப் படிப்புகளில் ஒன்றைப் படிக்கும் விருப்பத்தைக் கொண்டுள்ளனர், பட்டப்படிப்பைத் தொடர்ந்து அல்லது கூடுதல் தகுதிகளைப் பெற்ற பிறகு, சிறந்த வாழ்க்கையை உருவாக்க இது அவர்களுக்கு உதவுகிறது.

NCUK படிப்பு திட்டங்களின் நன்மைகள்

1987 முதல், NCUK 100 தேசிய இனங்களைச் சேர்ந்த 35,000 க்கும் மேற்பட்ட சர்வதேச மாணவர்களுக்கு முன்னணி பல்கலைக்கழகங்களுக்கு அணுகலைப் பெற உதவியுள்ளது. NCUK மாணவர்களுக்கான 99% வீசா வாய்ப்பு உண்டு, NCUK மாணவர்களில் 90% மான மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்தல் மற்றும் 80மூ ஊேருமு மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெறுவது ஆகியவை முக்கிய நன்மைகளில் அடங்கும்.

APIIT மூலம் மட்டுமே இப்போது இலங்கையில் கிடைக்கும்

1999 இல் ஸ்தாபிக்கப்பட்ட APIIT Sri Lanka இலங்கையின் உயர் கல்வித் துறையில் அதன் பங்களிப்புக்காக நன்கு அறியப்பட்டதாகும். O/L தேர்வுகளை முடித்த மாணவர்களுக்கு NCUK சர்வதேச அடிப்படைக் கற்கை ஆண்டையும், A/L தேர்வுகளை முடித்த மாணவர்களுக்கு ஊேருமு சர்வதேச முதலாம் ஆண்டையும் அறிமுகப்படுத்துவதில் APIIT பெருமை கொள்கிறது.

இந்த திட்டங்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியுடன் மாணவர்களை சித்தப்படுத்தும், இது உலகெங்கிலும் உள்ள NCUK இன் உலகப் புகழ்பெற்ற கூட்டாண்மை பல்கலைக்கழகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பினை வழங்கும்.

ஊேருமு பற்றிய மேலும் தகவலுக்கு, APIIT Colombo 0765 788 788 அல்லது APIIT கண்டி 0773 577 877 இல் அழைக்கவும் அல்லது info@apiit.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். APIITஇல் கல்வி பற்றிய புதுப்பிப்புகளுக்கு எங்கள் வலைத்தளமான www.apiit.lk ஐப் பார்க்கவும்!

# மஞ்சரி தொழிற்கல்வி

உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டி

☎ : 0112 429 339, 0777 270 076

## NDB ZEE – Zee தலைமுறைக்கு பிரத்தியேக இளைஞர் கணக்கு!

**சமகால தொழில்நுட்பத்தால் உந்தப்பட்ட ஞுநந தலைமுறையினராகிய இன்றைய இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றும் புரட்சிகரமான சேமிப்புத் தயாரிப்பான 'னேடீ ஞுநந' என்ற தனித்துவமான கருப்பொருளின் கீழ் னேடீ வங்கி நாட்டின் இளைஞர்களுக்காக ஒரு அற்புதமான முன்மொழிவை வெளியிட்டது.**




வளர்ந்து வரும் மாற்றங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு வங்கியாக,NDB வங்கி, "டிஜிட்டல் சகாப்தத்திற்கு" சொந்தமான இந்த மேலாதிக்கம் கொண்ட வாடிக்கையாளர் பிரிவின் வளர்ந்து வரும் தேவைகளை பொருத்தமாக அடையாளம் கண்டுள்ளது.

ஒவ்வொரு பிள்ளையின் வாழ்க்கையிலும் கல்வி முக்கியமானது. எனவே, எங்கள் இளம் தலைமுறையினர் தொந்தரவு இல்லாத கல்வியைத் தொடர NDB விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

NDB Zee டிஜிட்டல் கணக்கு குறிப்பாக இளைஞர்கள் வாழ்க்கையில் புதிய காட்சிகளைக் கண்டறிய உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் முக்கியமான மைல்கற்களை அடைய அவர்களுக்கு வழிகாட்டுகிறது. எனவே,NDB Zee உயர் சாதனையாளர்களுக்கு வெகுமதி அளிக்க முயற்சிக்கிறது. உதாரணமாக, கணக்கு வைத்திருப்பவர் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் நாடளாவியரீதியில் 1 ஆவது இடத்தைப் பெற்றால், அவருக்கு 100,000 ரூபாவும் ஒருவர் மாவட்டரீதியில் 1ஆவது இடத்தைப் பெற்றால், அவருக்கு 10,000. ரூபாவும் வழங்கப்படும். மேலும், கணக்கு வைத்திருப்பவர்கள் தேவைப்படும்போது உயர்கல்வி கடன்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை பெற முடியும்.

வளர்ந்து வரும் தேவைகளை உணர்ந்து கவனமாகக் கையாளப்பட்ட இந்த சேமிப்புத் தயாரிப்பின் மூலம் இளைஞர்கள் சிறுவர்களாக இருந்து பெரியவராக மாறுவதற்கு உதவும் நோக்கில் தற்போதுள்ள "ஷில்ப சிறுவர் கணக்குகளை" "NDB Zee' கணக்குகளாக மாற்றவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தேவைகள் இளைஞர்களின் அபிலாஷைகள், அது உயர்கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர் கனவுகள், வெளிநாட்டுப் பயணம் அல்லது அதுபோன்ற ஏதாவதொரு இலட்சியமாக இருக்கலாம்.

இதற்கிடையில், இந்த வாடிக்கையாளர்கள் "டிஜிட்டல்" என்பதும், சமகால தொழில்நுட்பத்தின் மூலம் அவர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்துவது குறித்தும் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. னேடீ ஞுநந டிஜிட்டல் இளைஞர் கணக்கு, தொழில்நுட்பத்தில் முழுமையாக மூழ்கியுள்ள புதிய தலைமுறை இளைஞர்களுக்காக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் அம்சங்களின் வரிசையை உள்ளடக்கியதாகும். குறிப்பாக 18 முதல் 28 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்காக வடிவமைக்கப்பட்ட, NDB Zee டிஜிட்டல் இளைஞர் கணக்குபயனர்களுக்கு ஒரு தடையற்ற டிஜிட்டல் அனுபவத்தை வழங்குகிறது, இது உண்மையான டிஜிட்டல் தளத்தில் அவர்களின் அன்றாட வங்கிச் செயல்பாடுகளில் ஈடுபட உதவுகிறது. உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் (vKYC) காணொளி மூலம் கணக்கைத் திறப்பது முதல் பல வங்கிப் பரிவர்த்தனைகள் வரை, NDB Zee ஆனதுசௌகரியம் சேவையின் வேகம் மற்றும் பழைய தலைமுறையை விட அதிக தனித்துவம்ஆகியவற்றை மதிக்கும் இந்த தொழில்நுட்ப ஆர்வலரான 'GenZee' வாடிக்கையாளரால் விரும்பப்படும் டிஜிட்டல் வங்கிச் சேவைகளின் பரந்த அளவை எளிதாக்குகிறது. NDB Zee டிஜிட்டல் கணக்குதாரர்கள், மொபைல் டாப்-அப் உட்பட, வரவேற்புப் பொதி (welcome pack) உடன் கவர்ச்சிகரமான வரவு அட்டையைப் பெறுவதற்கும் தகுதியுடையவர்கள் ஆவர்.

கணக்குதாரர்கள் தங்கள் 21வது பிறந்தநாளை அடையும் போது,அவர்கள் பாராட்டுக்குரிய 'பிறந்தநாள் பரிசு வெகுமதியை' பெற தகுதியுடையவர்கள். பணியமர்த்தப்பட்டவுடன், அவர்கள் தங்கள் சொந்த கடனட்டை மற்றும் சம்பள முன்பணங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும், அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களும் சிறப்பு அட்டை சலுகைகள், மொபைல் வழங்குநர்களிடமிருந்து கழிவுச் சலுகைகள்,உடற்பயிற்சியக உறுப்பாண்மைகள், e-commerce சலுகைகள் மற்றும் அவர்களுக்குப் பொருந்தக்கூடிய பல நன்மைகளுக்குத் தகுதி பெறுவார்கள். NDB Zee கணக்குதாரர்களுக்கு உயர் கல்வி விருப்பங்கள், தொழில் முன்னேற்றம் மற்றும் தொழில் தொடங்குதல் மற்றும் வளர்ச்சி தொடர்பான ஆலோசனை சேவைகளும் கிடைக்கும். சுருக்கமாக, NDB Zee கணக்குதாரரின் வாழ்நாள் முழுவதும் வங்கிப் பங்காளியாக இருக்கும், அவர்கள் சவால்களுக்கு மத்தியில் அவர்கள் வாழ்க்கையை கடந்து செல்லும் போது,ஒரு நெகிழ்வான எதிர்காலத்தை உருவாக்க அவர்களுக்கு உதவுகிறது.

NDB வங்கியானது சமீபத்தில் Euromney ஆல் இலங்கையின் சிறந்த வங்கியாக அறிவிக்கப்பட்டது, இது உலகின் மிகவும் மதிப்புமிக்க நிதிச் சேவைகளான Euromney Global Finance மற்றும் The Banker ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட மூன்றாவது பெரிய விருதைப் பெற்றுக் கொண்டது. NDB க்கான இந்த வெற்றி LMD தரவரிசையின்படி " 2021 ஆம் ஆண்டிற்கான மிகவும் விருது பெற்ற பெருநிறுவனம்" என்று பெயரிடப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த 50 பணியிடங்களில் ஒன்றாக,ஐக்கிய அமெரிக்காவின் Great Place Work மூலம் வங்கியானது சமீபத்தில் பெயரிடப்பட்டது. NDB இலங்கையில் பட்டியலிடப்பட்ட 4 வது பெரிய வங்கியாகவும் NDB குழுமத்தின் தாய்க் கம்பனியாகவும் உள்ளது. இலங்கையில் உள்ள ஒரே நிதிச் சேவைக் கூட்டு நிறுவனமாகிய னேடீ குழுமமானது, இலங்கை மூலதனச் சந்தையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக, அதன் அனைத்து குழு நிறுவனங்களின் தயாரிப்பு மற்றும் சேவை வழங்கல்களுக்கு அதன் வாடிக்கையாளர்களுக்குத் தடையற்ற அணுகலை வழங்குவதற்காகத் தனித்துவமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
☎ : 0112 429 339, 0777 270 076
Coordinated by
S.Prasath





# படித்ததும் பகர்வதும் 109

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### சிந்தித்து செயற்படுவோம்!

எந்தவொரு விடயத்தை செய்வதற்கு முன்னர், அது பற்றி நன்கு சிந்தித்து சரியான ஒரு முடிவுக்கு வந்து, அதன்படி செயற்படுவது அவசியமாகும். "பணிண்ட்ட பெற சிதா பலனு" (பாய்வதற்கு முன்னர் சிந்தித்துப் பாருங்கள்) என்பது மிகப் பிரபலமான சிங்களப் பழமொழியாகும். ஒரு விடயம், அது சிறியதாக இருப்பினும் அல்லது பெரியதாக இருப்பினும் அதனை செய்வதற்கு முன்னர், அதனை எவ்வாறு செய்ய வேண்டும்? அதன் முடிவு என்னவாகும்? அதன் பின் விளைவுகள் எப்படி அமையும்? என்பன பற்றி அலசி ஆராய்ந்து முடிவெடுப்பதே புத்தி சாலித்தனமாகும்.



சரியான உயர் கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்தல், தொழிலொன்றை தேர்ந்தெடுத்தல், புதிய துறையொன்றில் நுழைதல், வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தல், வாழ்க்கைத் துணையை தேர்வு செய்தல், புதிய பதவிகளை பொறுப்பேற்றல், போன்ற பிரதான விடயங்கள் மட்டுமன்றி, பயணம் செல்லுதல், பொருட்களை வாங்குதல், ஏன்? சமைத்தல் போன்ற விடயங்களிலும் அவற்றைச் செய்ய முன்னர் உரிய முறையில் சிந்தித்து, அவற்றின் பின்விளைவுகளை, அல்லது இறுதி முடிவுகளை தெரிந்து கொண்டு தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

இவற்றில் சில விடயங்கள் பற்றிய தெளிவு எமக்கு இல்லையென்றால் அதுபற்றி அனுபசாலிகளிடமிருந்தும், கற்றுத் தேர்ந்தோர்களிடமிருந்தும், குறித்த துறைசார் நிபுனர்களிடமிருந்தும் ஆலோசனைகளை பெற்று முடிவெடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

புத்தகங்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்தல், இணையத்தளங்களிலும், சமூக ஊடகங்களிலும் தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்களுடன் கலந்துரையாடுதல் போன்றவற்றின் மூலம் எந்தவொரு விடயத்திலும் சரியான தீர்வை பெற்றுக் கொள்ள வழிபிறக்கும்.

அவ்வாறு செய்யாமல், அவசர முடிவுகளின் படி செயல்படும் போது பெரும்பாலும் இடையூறுகள், கஷ்டங்கள், நஷ்டங்கள், தடங்கல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனை ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை அனுபவங்கள் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். எனவே இவற்றை கருத்தில் கொண்டு நாம் செய்யும் எந்தவொரு விடயமாயினும், அது சிறியதாயினும் சரி, பெரியதாயினும் சரியே! அது பற்றி முன்கூட்டியே சரியாக சிந்தித்து தீர்மானித்து செயல்படுவது சிறந்தது. எதனையும் செய்ய முன்னர் சரியாக சிந்திப்போம்! முறையாக செயல்படுவோம்!! முடிவு நல்லதாகவே அமையும்!!!

## நெஞ்சுக்கு நீதி

செய்வன திருந்தச் செய்வதுதான் முறையன்றோ
சொன்னாரே பெரியோர் அதுவே மெய்யன்றோ
செய்யுமுன் சிந்திப்பது வெற்றியின் வழியன்றோ
செயற்படுசீர்வழியில் சிறப்புதான் உறுதியன்றோ

## நீத்தார் நினைவு

### அஸ்வர் ஹாஜியார்



கலை இலக்கியவாதிகளின் அபிமானம் பெற்ற மூத்த அரசியல்வாதியும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஏ. எச். எம். அஸ்வர் ஹாஜியாரின் ஐந்தாவது நினைவு தினம் ஆகத்து 29ம் திகதியாகும். சமூக சேவையாளர் இலக்கியவாதி, ஊடகவியலாளர், கிரிக்கெட் வர்ணனையாளர், நூலாசிரியர், அரசியல்வாதி, அமைச்சர்களின் செயலாளர், சபாநாயகரின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர் என் பல்துறை ஆளுமை இவர்.

"அஜீ" என்று நாங்கள் அன்போடு அழைக்கும் அஸ்வர் ஹாஜியார் இவ்வாறு பல்வேறு சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருப்பினும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவர் ஒரு சிறந்த மனித நேயராவார் .

கொழும்பு சாஹிரா கல்லூரி, மகரகமை கபூரிய்யா அரபுக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவர். தமிழ், சிங்களம், ஆங்கிலம் மும்மொழிகளிலும் ஒன்றுபோல் சிறப்பான புலமை பெற்றவர். சிறந்த மேடைப் பேச்சாளர், ஆற்றல்மிக்க மொழிபெயர்ப்பாளர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையம், மஹரகம கபூரியா அரபுக் கல்லூரி, கொழும்பு ஸாஹிரா கல்லூரி என பல சமூகசேவை இயக்கங்களிலும், அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகள் வகித்து தொடர்ச்சியாக மக்கள் சேவை செய்தவர்.

1950ல் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியவர், 1955ல் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து நீண்ட காலம் செயல்பட்டார். இறுதியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரானார்.

பலமுறை தேசிய பட்டியல் மூலமாகவே நாடாளுமன்ற உறுப்பினரான அஸ்வர் ஹாஜியார், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சராகவும், நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சராகவும் செயலாற்றியுள்ளார்.

"வாழ்வோரை வாழ்த்துவோம்" எனும் மகுடத்தின் கீழ் ஏராளமான இலக்கியவாதிகளுக்கு பட்டங்களும், பணமுடிப்புகளும் வழங்கி கௌரவப்படுத்தியமை இவரது சேவைகளில் தனித்துவமானது எனலாம். வாழ்வோரை வாழ்த்திய அஸ்வர் ஹாஜியாரை, அவர் வாழாதபோதும் மக்கள் வாழ்த்திக் கொண்டே இருப்பார்கள் என்பது உறுதி.

## பிரிந்தார் பெருமை

### 'தமிழ்க்கடல்' நெல்லை கண்ணன்



தமிழகத்தின் பிரபல பேச்சாளரும், அரசியவாதியுமான 'தமிழ்க்கடல்' என எல்லோராலும் அழைக்கப்பட்ட நெல்லை கண்ணன் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 18ம் திகதியன்று (2022.8.18) தனது அகவை 78ல் திருநெல்வேலியில் உள்ள தனது இல்லத்தில் காலமானார்.

நெல்லை கண்ணன் இலக்கியம், அரசியல், பொது விடயம் என் பல்துறைகளிலும் ஆற்றல்மிக்கவர். சிறந்த பேச்சாளர்; பட்டிமன்ற நடுவர்; சிறந்த எழுத்தாளர்; நூலாசிரியர், அரசியல்வாதி எனப் பன்முகம் கொண்டவர். காமராசர், கருணாநிதி, கண்ணதாசன் உட்பட பல முக்கிய ஆளுமைகளோடு நெருங்கிப் பழகியவர். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, குவைத், துபாய், அபுதாபி நாடுகளுக்குப் பயணம் செய்து பல்வேறு நிகழ்வுகளில் உரையாற்றியுள்ளவர்

இவர், பிரபல விஜய் தொலைக் காட்சியில், சில வருடங்களுக்கு முன்னர் ஒளிபரப்பான "தமிழ் பேச்சு எங்கள் மூச்சு" என்ற ஜனரஞ்சகமான நிகழ்ச்சியின் பிரதம நடுவராக இருந்து, தனது கலகலப்பான, நகைச்சுவையான பேச்சினால் இரசிகர்களைக் கவர்ந்தார்.

நெல்லைக் கண்ணன், குறுக்குத்துறை ரகசியங்கள்1, குறுக்குத்துறை ரகசியங்கள்2, எனும் கட்டுரை நூல்களையும், வடிவுடை காந்திமதியே, காதல் செய்யாதவர்கள் கல்லெறியுங்கள், திக்கனைத்தும் சடைவீசி, பழம்பாடல் புதுப்பாட்டு எனும் கவிதை நூல்களையும், 'வெளிநாட்டுப் பயணம்' பற்றிய தொகுப்பு நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

தமிழக காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ள இவர் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியை எதிர்த்தும் தேர்தலில் போட்டியிட்டுள்ளார். நெல்லை கண்ணனின் முதல் மகன் சுரேஷ் கண்ணன் திரைப்பட இயக்குநராகவும், எழுத்தாளருமாக உள்ள அதேவேளை, இரண்டாவது மகன் ஆறுமுகம் புதியதலைமுறை செய்தித் தொலைக்காட்சியில் நிகழ்ச்சியாளராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.இந்திய அரசாங்கம், முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற வகையில் 2020ல் கொண்டுவந்த குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான முஸ்லிம் அமைப்பு மாநாட்டில் பேசிய அவர், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா குறித்த சர்ச்சைக்குரிய கருத்தை பேசியதற்காக கைது செய்யப்பட்டு சிறை சென்றிருக்கிறார்

அவரை நேரில் சந்தித்து உரையாடும் வாய்ப்பு ஒரேயொரு முறை மட்டுமே எனக்குக் கிடைத்தாலும் அந்த நிகழ்வு இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

## புது வரவு

இவரது இலக்கியப் பங்களிப்பைக் கௌரவித்து, தமிழக அரசு, அண்மையில், இவருக்கு 'இளங்கோவடிகள் விருது' வழங்கி கௌரவித்தது.

### ஸஹ்றா நிஸ்பர் தரும் 'பெண்மை'



மாத்தளை ஆமினா தேசிய பாடசாலையின் தரம் 13ல் கல்வி கற்கும் மாணவி, "கவிப்புயல்' என்ற பெயரிலும் எழுதும் பாத்திமா ஸஹ்றா நிஸ்பர் எழுதி வெளியிட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு நூல் 'பெண்மை'.

பெண்களின் நலன்களை கருத்தில் கொண்டு, சீதனம், பெண்கள் மீதான வன்முறைகள், சிறு வயது திருமணமும் சிதைந்த வாழ்க்கையும், பெண் கல்வியின் முக்கியத்துவம், விவாகரத்து, பெண் ஆளுமை, கணவன்மனைவி சந்தேகம், கலைந்திடும் கனவுகளோடு நான், பெண்ணுரிமை, பெண்ணாக வாழ்வதாயின், தலைமையை ஏற்க தனித்திருக்க வேண்டுமா?, வாழ்க பெண்மை எனும் தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள பனிரெண்டு கட்டுரைகள் அடங்கிய சிறிய நூல் இது. "பெண்மை" நூலை பற்றியும் அதன் நூலாசிரியரைப் பற்றியும் சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் தனது அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "'பெண்மை' என்ற நூலை தரும் இளம் நூலாசிரியை மாத்தளை பாத்திமா ஸஹ்றா என்ற இந்த இளம் மாணவியின் குரல்தான் இங்கே பலமாக ஒலிக்கிறது. இவளுக்கு வயதோ 19 தான் ஆகின்றது. இந்த வயதில் இவ்வளவு துணிச்சலுடன் பெண்களைப் பற்றியும், பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றியும் குரல் எழுப்புவது உண்மையிலேயே வியப்பைத் தருகின்றது. எவ்வித அச்சமுமின்றி, துணிந்தெழுந்து தனது எழுச்சி மிகு கருத்துகளை முன்வைப்பது பாராட்டத்தக்கது."“பெண்மை என்ற இந்த நூலில் பெண்ணின் அவலங்களை நன்கு தெளிவுபடுத்தி எழுதியுள்ளார். இவரது கட்டுரைகள் ஒவ்வொரு தலைப்பிலும் வெவ்வேறு ஆதங்கங்கள் துளிர் விடுகின்றன. இவரது வயதையும் தாண்டிய அற்புதமான சிந்தனை எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது."உண்மையில் மாணவியொருவர், பெரியவர்களே சிந்திக்கத் தயங்கும் பெண்கள் பற்றிய பல விடயங்களை இந்நூலில் கையாண்டுள்ளமை 'இளங்கன்று பயமறியாது' என்பதனாலோ?

நூல்: பெண்மை, ஆசிரியர்: ஸஹ்றா நிஸ்பர், முதற்பதிப்பு: 2022 மார்ச், பக்கங்கள்: xii + 37, விலை: ரூபா 300/= தொடர்புகளுக்கு: 0762786034

## கைவண்ணம் காணீர்



உயிருள்ள குதிரையல்ல. அண்டோனி பஸ்டரிக்கா (Andoni Bastarrika) என்ற சிற்பியின் கைவண்ணத்தில் உருவான ஒரு சிற்பம்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207


தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845










COMMERCIAL LANDS FOR SALE
- 26 Acres land at Wanathavilluwa. Just opposite Hotel (9 CLOUD RESORT) Rs. 3 mn per Acre
- 4 Acres Land in Colombo. 6km from Port City
- 36p Land with Building facing Thimbirigasyaya main Rd
- 45p Land facing Swasthika Garden Rd - Peliyagoda.

0777 258 280
NO BROKERS OR AGENTS

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

PREMIUM PROPERTIES FOR SALE OR LONG LEASE AT THE EDGE OF GALLE RD AT DEHIWALA, MOUNT LAVINIA

30+37= 67 P contiguous , 14,619 sq ft in total in 4 Commercial / Residential house type building complex. Fully air conditioned and fully tiled. Landscaped and paved. High boundary walls and CCTV. All facilities are available in addition to a 100 Kva Power Generator with automatic transfer switches. Fully wired for Computers. 16 vehicle parks.Galle Rd entry/exit as well as two entry gates from Sylvester's Rd. Absolute ownership. Suitable for many purposes. High futuristic value. Rare land parcel.

Price Rs. 220M + 210M = Rs 430 Million (negotiable). Sale of each block i.e either 30P Or 37P (2 buildings in each property) shall be considered. Not a distress sale.

Must see property!

WhatApp Dilantha @ 0777 760 599







Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

# வாரபலன்



28.08.2022 - 03.08.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசியில் புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளதால் உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். நிகழ் காலத் தேவைகள் பூர்த்தி செய்வதற்கான உதவி கிடைக்கும். எதிரிகளின் பலம் குறையும். இதுவரை நீங்கள் செய்ய நினைத்தாலும் முடியாது போன காரியங்கள் ஒவ்வொன்றாக நடந்து வரும். 3ம் இடத்திற்கு அதிபதியாக புதன் வருவதால் சகோதர உறவு மேம்படும். வழக்குகள் சாதகமாகும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 28. அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## ரிஷபம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசிக்கு புதன் சென்றுள்ளார். உங்கள் ராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் கன்னி ராசியில் உச்சம் பெற்றுள்ளதால் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். பூமி விற்பனையால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வாக்கு, தனம்,குடும்பம் ஆகியவற்றைக் குறிப்பது 2ம் இடமாகும். எனவே கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 28 அதிர்ஷ்ட நிறம் சிவப்பு.

## மிதுனம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசியில் புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு அதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். ஆரோக்கியம் சீராகும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 30 அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## கடகம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசியில் புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு சகாய ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால் சில நன்மைகளும் நடைபெறும். சுப விரயங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். உத்தியோகத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 31 அதிர்ஷ்ட நிறம் சிவப்பு.

## சிம்மம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசியில் புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார் . உங்கள் ராசிக்கு 2ஆம் இடமான தன ஸ்தானத்திலும் 11ம் இடமான லாப ஸ்தானத்திற்கும் அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்தில் பலம் பெறும் போது தன வரவு தாராளமாகும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் மனதில் உருவாகும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 30 அதிர்ஷ்ட நிறம் நீலம்.

## கன்னி

ஆவணி 8ம் திகதி (24/08/2022) உங்கள் ராசிக்கு வரும் புதன் அங்கு உச்சம் பெற்றுள்ளார். எனவே உங்களுக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நேரம் இது. ராசிநாதன் புதன் பலம் பெறும் இந்த நேரத்தில் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். உடல் நலம் சீராகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 31 அதிர்ஷ்ட நிறம் இளம்சிவப்பு.

## துலாம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசியில் புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு விரய ஸ்தானத்தில் தனாதிபதி உச்சம் பெறுவதால் விரயங்கள் அதிகரிக்கும். உறவினர் வீட்டு மங்கள நிகழ்ச்சிகளுக்கு கொடுத்து உதவுவீர்கள். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் தோன்றும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 28 அதிர்ஷ்ட நிறம் சாம்பல் நிறம்.

## விருச்சிகம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசிக்கு புதன் சென்று சென்றுள்ளார். உங்கள் ராசிக்கு அஷ்டமலாபாதிபதியான புதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது லாபம் இரு மடங்காகும். பாக்கிகள் வசூலாகும். வாகன யோகம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும் உயரதிகாரிகளின் ஆதரவும் உண்டு. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்வீர்கள். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட்30 அதிர்ஷ்ட நிறம் ஊதா.

## தனுசு

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசிக்கு புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவதால் தொழில் வளம் சிறக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பதவிகளும் பொறுப்புகளும் கிடைக்கலாம். பயணங்கள் பலன் தரும். இக்காலத்தில் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 30 .அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## மகரம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசிக்கு புதன் சென்றுள்ளார். உங்கள் ராசிக்கு 6 , 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 9ம் இடத்தில் உச்சம் பெறுவதால் பாக்கிய ஸ்தானம் பலம் பெறுகிறது. எனவே பெற்றோர் வழியில் ஆதரவு கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறையால் புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 30. அதிர்ஷ்ட நிறம் நீலம்.

## கும்பம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசிக்கு புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் உச்சம் பெறும் போது பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். பாகப்பிரிவினையில் இருந்த தடை அகலும். பணிபுரியும் இடத்தில் தொல்லை தந்த மேல் அதிகாரிகள் இடமாற்றம் பெறுவர். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 31 அதிர்ஷ்ட நிறம் செம்மஞ்சள்.

## மீனம்

ஆவணி 8ம் திகதி (24/08/2022) கன்னி ராசியில் புதன் சென்று அங்கு உச்சம் பெற்றுள்ளார் . உங்கள் ராசிக்கு 4 ,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 7க்கு அதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 02. அதிர்ஷ்ட நிறம் நீலம்.

# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வீட்டுத்தோட்டச் செய்கை

'எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறைக்கு மத்தியில், நாட்டின் உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் மக்கள் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடுமென எதிர்வுகூறப்படுகின்றது'

பொழுதுபோக்கு நடவடிக்கையாக தன்னால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்தோட்டச் செய்கையானது, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், மரக்கறிகள், பழங்களின் விலையேற்றத்துக்கு மத்தியில் தனக்குக் கைகொடுத்து வருவதாக, வீட்டுத்தோட்டச் செய்கையாளர் ஹபீபா முகைதீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் காத்தான்குடி 2ஆம் குறிச்சியைச் சேர்ந்த 57வயதுடைய ஹபீபா, கடந்த 5வருடங்களாக தனது வீட்டு மொட்டை மாடியில் வீட்டுத்தோட்டச் செய்கை மேற்கொள்கின்றார். அவர் பயன்தரும் மரக்கறிச் செடிகளையும் பழக்கன்றுகளையும் செய்கை பண்ணுவதோடு, அவற்றின் மூலம் பயனடைந்தும் வருகின்றார்.

தனது வீட்டுத்தோட்டச் செய்கை பற்றியும் அதனால் தான் அடையும் நன்மை பற்றியும் தினகரன் வாரமஞ்சரி வாசகர்களோடு அவர் பகிர்ந்துகொள்கின்றார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எனது வீட்டுக் கடமைகளுக்கான நேரம் போக, எஞ்சும்; நேரத்தை ஏதாவதொரு வகையில் பிரயோசனமாக பயன்படுத்த வேண்டுமென்று எண்ணிய நிலையில், வீட்டுத்தோட்டச் செய்கையை ஆரம்பித்தேன். தற்போது அச்செய்கையின் மூலம் நான் மிகவும் பயனடைந்து வருகின்றேன் என்கின்றார் அவர்.

எமது வீடானது, 50 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட வளவினுள் அமைந்துள்ளதோடு, சிறு துண்டு நிலம் கூட மண்ணுடன் இல்லை. இவ்வாறான நிலையில், எமது வீட்டு மொட்டை மாடியில் வீட்டுத்தோட்டச் செய்கை மேற்கொள்ள உத்தேசித்து, அதில் வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்கின்றேன்.

வீட்டுத்தோட்டச் செய்கைக்காக பூச்சாடிகள், பிளாஸ்ரிக் பைகள், பிளாஸ்ரிக் பரல்களைப் பயன்படுத்துவதோடு, கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டி உள்ளிட்ட பல்வேறுபட்ட மரக்கறிச் செடிகளையும் மா, பலா, அன்னாசி, வாழை, மாதுளை உள்ளிட்ட பழக்கன்றுகளையும் நாட்டியுள்ளேன்.

இச்செய்கைக்காக சாதாரணவகை மண்ணைப் பயன்படுத்துவதோடு, பசளையையும் இயற்கையான முறையில் தயாரித்து பயன்படுத்துகின்றேன்.

அதாவது வீட்டில் நாளாந்தம் நாம் கழிக்கும் மரக்கறிக் கழிவுகள், பிழிந்த தேங்காய் பூ, தேங்காய் தும்பு, மரச் சருகுகள் ஆகியவற்றை சேகரித்து, அவற்றை மண்ணுடன் கலப்பதோடு, மாட்டெரு, ஆட்டெரு ஆகியற்றையும் அம்மண்ணுடன் கலந்து உக்க வைத்து இயற்கை முறையில் பசளை தயாரிக்கின்றேன்.

இதேவேளை, பயிர்களை பூச்சி, புழுக்கள் அண்டாவண்ணம் அவற்றை பாதுகாப்பதற்காக இயற்கையான முறையில் கிருமிநாசினி தயாரிக்கின்றேன். அதாவது சவர்க்காரம், வேப்பெண்ணெய், பழஞ்சோறு, வெள்ளைப்பூடு, இஞ்சி, பச்சை மிளகாய் ஆகியவற்றை தண்ணீரில் சுமார் ஒரு வாரத்துக்கு ஊற வைப்பேன். இதன் பின்னர் எல்லாம் சேர்ந்து ஊறிய அத்தண்ணீரை வடிகட்டி பயிர்களுக்கு தெளிக்கின்றேன். நான் தினமும் அதிகாலையில் 4.00 மணிக்கு எழுந்து, மத வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டு, பின்னர் காலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுதல், மரக்கறிகளையும் பழங்களையும் அறுவடை செய்தல் போன்ற வேலைகளைச் செய்வேன். அதன் பின்னர் எனது சமையல் உள்ளிட்ட வீட்டுக் கடமைகளை முடித்துவிட்;டு, மீண்டும் மாலை 4.00 மணி முதல் 6.00 மணிவரை பயிர்களுக்கு பசளை இடுதல், மண் இடுதல், தோட்டத்தை சுத்தம் செய்தல் போன்ற பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுவேன்; என்கின்றார் அவர்.

அத்தோடு, எனது வீட்டுத்தோட்டச் செய்கைக்கு எனது கணவரும் ஒத்தாசையாக இருந்து வருகின்றார் என்கின்றார் அவர்.

எனது இயற்கையான வீட்டுத்தோட்டச் செய்கை மூலம் கிடைக்கும் மரக்கறிகளிலும் பழங்களிலும் போதியளவானவற்றை எமது உணவுத் தேவைக்கு எடுக்கின்றேன். எஞ்சியவற்றை அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் பகிர்ந்தளிப்பதோடு மாத்திரமின்றி, சந்தையிலும் விற்பனை செய்கின்றேன்.

அத்தோடு, விதைகளை நாட்டி மரக்கறிச் செடிகளையும் உருவாக்கி விற்பனை செய்கின்றேன். இச்செய்கை மூலம் நான் பயனடையும் வகையில், ஓரளவு வருமானமும் கிடைக்கின்றது என்கின்றார் அவர்.

தற்போது எமது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியில், வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிக்கப்படுவது மிகவும் சிறந்ததேயாகும். ஏனெனில், நாம் இயற்கையோடு ஒன்றித்து வாழும் நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இயற்கையோடு ஒன்றித்த வாழ்க்கையால் நாம் நஞ்சற்ற மரக்கறிகளையும் பழங்களையும் உட்கொள்வதோடு, கொலஸ்ரோல், நீரிழிவு உள்ளிட்ட தொற்றா நோய்களை எதிர்க்கும் வல்லமையையும் பெற்றுக்கொள்கின்றோம்.

அத்தோடு, இவ்வீட்டுத்தோட்டச் செய்கையானது, உண்மையில் ஓர் உடற்பயிற்சியாகவும் அமைவதோடு, மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியையும் அளிக்கின்றது. மகிழ்ச்சியைத் தருகின்றது. எப்போதும் எம்மை சுறுசுறுப்பாக இயங்கச் செய்கின்றது. இதை நான் எனது அனுபவபூர்வமாக உணர்கின்றேன் என்கின்றார் அவர்.

பசுமை நிறைந்த செடி, கொடிகளும் அவற்றின் பல்வேறுபட்ட வண்ணப் பூக்களும், காய்த்துக்குலுங்கும் மரக்கறிகளும் பழங்களும், நாம் அமைதியற்று இருக்கும் சந்தர்ப்பங்களில், மனதுக்கு அமைதியை தருகின்றன.

அத்தோடு, எமது நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஈடுசெய்யும் வகையிலும், பஞ்சம் எம்மை அண்டாத வகையிலும் வீட்டுத்தோட்டம் எமக்கு கைகொடுக்கும்.

இவை மாத்திரமின்றி, தற்போதைய காலகட்டத்தில் செயற்கை உரத்தையும் கிருமிநாசினியையும் பயன்படுத்தி சந்தைப்படுத்தலை மையமாகக் கொண்டு அதிக இலாபத்துக்காக உற்பத்தி செய்யப்படும் நஞ்சு கலந்த மரக்கறிகளையும் பழங்களையும் நாம் உட்கொள்வதை விட, எமது வீட்டுத் தோட்டத்தில் இயற்கையாக நாம் மேற்கொள்ளும் பயிர்களின் மூலம் கிடைக்கும் மரக்கறிகளையும் பழங்களையும் உட்கொள்வது எமது தேக ஆரோக்கியத்துக்கு மிகவும் சிறந்ததாகும்.



ஆகவே, பெண்களுக்கு நான் கூற விரும்புவது என்னவென்றால், நீங்கள் வசிக்கும் வீட்டை அண்டிய சிறிய வளாகம் காணப்படும் பட்சத்திலோ அல்லது, வளாகம் இல்லாத பட்சத்திலுமோ உங்களால் வீட்டுத்தோட்டச் செய்கையை சிறிதளவிலாவது செய்ய முடியுமென்பதோடு, எமது நேரத்தையும் பிரயோசனமாக கழிக்க முடியுமென்பதைக் கூறுகின்றேன். உத்தியோகம் பார்க்கும் பெண்கள் அல்லது, ஏனைய வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் கூட, தங்களது வசிப்பிடத்தில் ஏதோவொரு வகையில் வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொண்டு பயனடைய முடியும். வீட்டுத்தோட்டச் செய்கையினால் எமது அவசர உணவுத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் எம்மையும் எமது குடும்பத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் பட்சத்தில், தானாகவே ஆரோக்கியமான சமுதாயம் கட்டியெழுப்படும் என்கின்றார் அவர்.

தற்போது எமது நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல் காரணமாகவும் விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவைத் தொடர்ந்து எதிர்பார்த்தளவு அறுவடை கிடைக்காமை காரணமாகவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறைக்கு மத்தியில், நாட்டின் உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் மக்கள் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடுமென எதிர்வுகூறப்படுகின்றது. இந்நிலையில், இதன் தாக்கத்தை குறைக்கும் நோக்குடன் வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுவதாக, அம்மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.ஹூசைன் தெரிவித்துள்ளார்.

## கலாநிதி எஸ்.எம்.ஹூசைன்

'ஒன்றாக நடுவோம், நாட்டை வெல்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ், உணவுப் பயிர் உற்பத்திக்கான தேசிய போராட்டம் 2022 எனும் திட்டமானது, விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், பயிரிடப்படக்கூடிய ஆனால், இதுவரையில்; பயிரிடப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதோடு, தத்தமது வீட்டுத்தோட்டங்களிலும்;; உச்சபட்சளவில் உணவுப் பயிர்ச்செய்கையை முன்னெடுக்க ஊக்குவித்தல் எமது வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

குறுகியகால மற்றும் நீண்டகால குறிக்கோளுடனும் தொழில்நுட்பப் பங்களிப்புடனும் விவசாயச் சூழல் தொகுதிக்கு பொருத்தமான ஒரு விஞ்ஞான ரீதியான முன்னெடுப்பானது, கிராம அலுவலகர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில், நாடளாவிய அவசர வேலைத்திட்டமாக அரச மற்றும் அரசசார்புடைய, அரசசார்பற்ற அமைப்புகள், தனியார் நிறுவனங்களின் உதவியுடன் விவசாயத் திணைக்களம் முன்னெடுக்கின்றது. இதன் மூலம் உணவு மற்றும் போஷனை பாதுகாப்பை உறுதிசெய்வது எமது அடிப்படை நோக்கங்களில் மற்றுமொரு அம்சமெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ், வீட்டுத்தோட்டச் செய்கையை முன்னெடுக்கின்ற 177இ403 பேர் உள்ளனர்.

இந்நிலையில், 'நிலைபேறான விவசாயக் கலாசாரம் மற்றும் சேதன விவசாயத்தை ஊக்குவித்தல்' எனும் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் நிதியுதவியுடன் இம்மாகாணத்தில் 11இ050 பேர் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அம்பாறையில் 530 கிராம அலுவலகர் பிரிவுகளில் 5,300 பேரும், மட்டக்களப்பில் 345 கிராம அலுவலகர் பிரிவுகளில் 3,450 பேரும்;, திருகோணமலையில் 230 கிராம அலுவலகர் பிரிவுகளில் 2,300 பேரும் உள்ளனர். 'பசுமை தேசத்தைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ், சமுர்த்தி திட்டத்தினூடாக 165,473 சமுர்த்திப் பயனாளிகள் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அம்பாறையில் 103,000 பேரும், மட்டக்களப்பில் 44,473 பேரும், திருகோணமலையில் 18,000 பேரும் உள்ளனர்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் 'காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினூடாக 880 பேர் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அம்பாறையில் 260 பேரும், மட்டக்களப்பில் 300 பேரும், திருகோணமலையில் 320 பேரும் உள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பெருமளவான ஆண்கள் கடற்றொழிலும், வயல் விவசாயத்திலும் ஈடுபடுவதால், வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆர்வம் காட்டுவது சற்றுக் குறைவாகவுள்ளது. ஆயினும், இம்மாகாணப் பெண்களை பொறுத்தவரையில், 90 சதவீதமானோர் வீட்டுத்தோட்டச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். வீட்டுத்தோட்டச் செய்கையின் மூலம் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்பது எமது பிரதான நோக்கமாகக் காணப்படுவதால், இரசாயனப் பசளை பயன்பாட்டை இயன்றளவு குறைத்து, சேதனப்பசளை பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டங்கள் எம்மால் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

தமது வீடுகளில் அன்றாடம் கழிக்கும் உக்கக்கூடிய கழிவுகளை பயன்படுத்தி சேதனப்பசளை தயாரிப்பை ஊக்குவிக்கின்றோம். அத்தோடு, ஓரளவு இட வசதியுள்ளவர்களுக்கு, முறையாக கூட்டுப்பசளை தயாரிப்பை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதால், குவியல்முறை கூட்டுப்பசளை தயாரிப்பை சிபாரிசு செய்கின்றோம்.

அதாவது, தாவரங்களினதும் விலங்குகளினதும்; கழிவுகளை பயன்படுத்தி, குவியல்முறை மூலம் கூட்டுப்பசளை தயாரிப்பை முன்னெடுக்க முடியும். முன்னர்; கூட்டுப்பசளை தயாரிப்புக்கு சுமார் 3மாதங்கள் பிடித்திருந்தாலும்;, தற்போது தொழில்நுட்ப வசதி காணப்படுவதால், சுமார் ஒன்றரை மாதங்களில் குவியல்முறை கூட்டுப்பசளை தயாரிப்பை மேற்கொள்ள முடியும்.

தற்போது கூட்டுப்பசளை உக்கலை விரைவுபடுத்துவதற்காக, விவசாயத் திணைக்களங்கள் ஊடாக ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவுகளுக்கும் துண்டாக்கும் இயந்திரங்கள் (ஊhழிpநச ஆயஉhiநெ) வழங்கப்பட்டுள்ளன. இவ்வியந்திரத்தை பயன்படுத்தி பாரிய இலைகள், தடிகள், விலங்குக் கழிவுகளை சிறுசிறு துகள்களாக்கி சுமார் ஒன்றரை மாதங்களில் கூட்டுப்பசளையை பயனாளிகள் தயாரிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

பயிர்களில் பூச்சி, புழுக்களின் தாக்கம் காணப்படுவது இயல்பாயினும், ஆரோக்கியமான நாற்றுகளை பயிரிடுவதால், பூச்சி, புழுக்களின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

அத்தோடு, இயற்கைமுறை பீடைநாசினியை பயன்படுத்துமாறு பயனாளிகளுக்கு அறிவுறுத்துகின்றோம். பூச்சி, புழுக்களை விரட்டுவதற்காக வேப்பிலை, ஐந்திலை கரைத்தல், வெள்ளைப்பூடு, இஞ்சி, பச்சை மிளகாய் ஆகியவற்றை ஒன்றாக அரைத்து, அதை தண்ணீரில் ஊறவைத்து, அதை வடிகட்டிய திரவத்தை பயிர்களுக்கு தெளிக்குமாறு அறிவுறுத்துகின்றோம்.



வீட்டுத்தோட்டச் செய்கையாளர் ஹபீபா முகைதீன்

ஒளிப் பொறிமுறையைப் பயன்படுத்தி பூச்சி, புழுக்களை கவர்ந்து, அவற்றை அழிக்க முடியுமென்பதையும் அறிவுறுத்துகின்றோம்.

மேலும், பயிர்களை பயனாளிகள் தினமும் அவதானிக்க வேண்டுமென்பதோடு, பூச்சி, புழுக்கள் தாக்கப்பட்ட பயிர் பகுதிகளை அகற்றி, அவற்றை ஆழமாக நிலத்தில் புதைக்க வேண்டும் அல்லது, எரிக்க வேண்டுமென்று அறிவுறுத்துவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மற்றும் பாரம்பரிய மரக்கறி, பழ விதைகளை பயன்படுத்தி, தமக்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்வதோடு, அவ்விதைகளை தொடர்ச்சியாக அடுத்தடுத்த போகங்களுக்கு பயன்படுத்தக்கூடிய வழிகாட்டல்களும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

விவசாயனப் போதனா ஆசிரியர் பிரிவுகளில் பயிர் சிகிச்சை முகாம்கள் எம்மால் நடத்தப்படுவதோடு, அம்முகாம்களில் பயனாளிகள் கலந்துகொண்டு, பயிர் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு, சிறந்த விவசாய நடைமுறைகளை பின்பற்றி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளும் விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது எமது நாட்டின் நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் போக்குவரத்துச் சீரின்மையால், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து மரக்கறிகளையும் பழங்களையும் எமது மாகாணத்துக்கு கொண்டுவருவதில் சிரமம் காணப்படுகின்றது. இந்நிலையில், வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிப்பினால், புதியதும் போஷாக்கானதுமான மரக்கறிகளையும் பழங்களையும் எமது மாகாண மக்கள் தேவையானளவில் பெற்றுக்கொள்வதை காணக்கூடியதாக உள்ளது. இது எமக்கு கிடைத்த வெற்றியாகும். எமது மக்கள் போஷாக்குமிக்க உணவை பெற்று சுகதேகியாக வாழ வேண்டுமென்பது விவசாயத் திணைக்களத்தின் நோக்கமாக உள்ளதால், நிலைபேறான வீட்டுத்தோட்டச் செய்கையை பயனாளிகள் மேற்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.



ஆர்.சுகந்தினி ...




# ஆபிரிக்க அடிமைகளால் கட்டப்பட்ட வுல்பெண்டால் தேவாலயம்

வுல்பெண்டால் தேவலாயம் (Wolvendaal Church) இலங்கையில் இருக்கும் மிகவும் பழமையான டச்சு காலத்து புரட்டஸ்தாந்து தேவாலயம். இலங்கையில் எஞ்சியிருக்கும் மிகப் பழமையான கிறிஸ்தவ தேவாலயம் இது என்றும் அழைக்கப்படுகிறது. கொழும்பு விவேகானந்தா மேட்டுத் தெரு வந்து முடியும் இடத்தில் காணப்படுகிறது. ஆட்டுப்பட்டித் தெருவும் இங்கே வந்து முடிகிறது. இதனை "ஆட்டுபட்டித்தெரு சேர்ச்" என்றும் சூழ வாழும் தமிழர்கள் பொதுவில் அழைத்து வந்தார்கள். இலங்கையின் பல வரலாற்றுக் கதைகளையும் சிறப்பம்சங்களையும் சுமார் இரண்டரை நூற்றாண்டுகளுக்கும் மேல் தனக்குள் பதுக்கி வைத்திருக்கும் ஒரு தேவாலயம். டச்சு காலத்தில் இதை Wolvendaalse Kerk என்று அழைத்தார்கள்.

இவ்வலயம் 1749 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் திகதி கட்டி முடிக்கப்பட்டது இது. சுமார் 800 பேர் அமரக் கூடிய வகையில் அன்று கட்டப்பட்ட பெரிய தேவாலயம். டச்சு கிழக்கிந்தியக் கம்பனியால் இலங்கையில் கட்டப்பட்ட ஒரே ஒரு தேவாலயம் எனலாம். VOC என்று அக்கம்பனியின் சின்னம் அடையாளமாக தேவாலயக் கட்டிடத்தில் இன்றும் காணலாம். டோரிக் கட்டிடக்கலைப்படி கட்டி முடிக்கப்பட்ட இந்த தேவாலயம், அதன் பழமை காரணமாக இன்றும் உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது.


அன்று

**ஆரம்பம்**

கோட்டைப் பகுதியில் இருந்த போர்த்துகேய ஆட்சியாளர்கள் தங்களுக்கான மயானத்தை கோட்டையிலிருந்து ஒரு மைல் தொலைவில் இங்கே அமைத்துக் கொண்டார்கள். அம்மயானத்துக்கான தேவாலயத்தையும் இங்கே அமைத்துக் கொண்டார்கள். அன்றைய கோட்டை அரசரின் அனுமதியுடன் கட்டப்பட்ட அந்த தேவாலயம் புனித லோரன்ஸ் தேவாலயம் (St Lawrence Church) என்று அழைக்கப்பட்டிருந்தது. இங்கிருந்து பார்த்தால் கோட்டையும், நகரமும், கடலும், துறைமுகமும் தெரியும் வகையில் அமைந்திருந்தது. அப்போது இந்தப் பகுதியெல்லாம் மரங்கள் அடர்ந்த காடாக இருந்தது. இது மேட்டுப் பகுதியாக இருந்ததால் தொலைவில் கொழும்பு துறைமுகத்தை எட்டும் கப்பல்களுக்கு கூட தெரியும் வகையில் தேவாலயத்தை இங்கே அமைத்துக் கொண்டார்கள்.

இங்கிருந்து கொழும்புத்துறை முகத்துக்கும், காலி முகத்திடலுக்கும், செல்லும் ஒரு சுரங்கத்தையும் அவர்கள் கட்டி இருந்தார்கள் என்று "லங்காதீப" பத்திரிகை ஒரு கட்டுரையையும் வெளியிட்டிருந்தது. டச்சுக்காரர் கொழும்பை கைப்பற்றியவேளை போர்த்துக்கேயர்கள் இந்த சுரங்க வழியால் தப்பினார்களாம். 80 களில் மீன்கடை சந்தை அமைப்பதற்கான அத்திவாரம் தோண்டும்போது இந்த சுரங்கத்தின் ஒரு முனை கண்டுபிடிக்கப்பட்டதாக 1986 இல் வெளிவந்த தினமின குறிப்பட்டது. முதலிகே மாவத்தையில் இதுபோன்ற கட்டுமானப் பணியின் போது கடலுக்குச் செல்லும் ஒரு சுரங்கப் பாதை கண்டுபிடிக்கப்பட்டதையும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

இந்த பழைய போர்த்துகேய கத்தோலிக்க தேவாலயத்தை இடித்துவிட்டு டச்சுக்காரர்கள் இந்த புரட்டஸ்தாந்து தேவாலயத்தைக் கட்டினார்கள். 1688 இல் இலங்கையில் அரசருடன் பத்தாவியாவிலிருந்த டச்சு கிழக்கிந்திய கம்பனி செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி "எந்தவொரு ரோமன் கத்தோலிக்க பாதிரியாருக்கோ, பிரசங்கருக்கோ அரசரின் ஆட்சி எல்லைக்குள் இருப்பதற்கு இடம் கொடுத்தலாகாது" என்று ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இங்கே புதிய தேவாலயம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் அப்போது இலங்கையில் டச்சு கவர்னராக இருந்த குஸ்டாவ் வில்லெம் வான் இம்ஹோப் பிற்கு (Gustaaf Willem, Baron van Imhoff) முதலில் வந்தது. ஆனால் இதற்காக டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் அனுமதி உடனடியாக கிடைக்காததால் கட்டுமானம் தாமதமானது. இறுதியாக 1749 ஆம் ஆண்டு கிடைத்த அனுமதியின் அடிப்படையில் அடிக்கல் நாட்டப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

அதுமட்டுமல்ல இந்த தேவாலயத்தைக் கட்டியவர்கள் ஆப்பிரிக்க அடிமைகள். இதைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. கொழும்பு துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த அடிமைகள் நாளாந்தம் காலையிலும் மாலையிலும் சுரங்கத்துக்கு ஊடாக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் ஒருவரோடு ஒருவராக கால்களில் கட்டி கொண்டு வரப்பட்டிருகிறார்கள்.

அதன் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1751 இல், இந்த தேவாலயத்தில் முதல் ஆராதனை பூசை நடைபெற்றிருக்கிறது. இதன் பழமை குறித்த சில விபரங்களை ஜொஹான் வுல்பங் ஹைட் (Johann Wolfgang Heydt) என்கிற அரச ஓவியர் 1744 இல் எழுதிய நூலில் காண முடிகிறது. இங்கு அடிக்கப்படும் மணியோசை அன்றைய கோட்டை வாசல் வரை கேட்டிருக்கிறது. அன்றைய கோட்டை வாசல் என்பது இன்றும் மெயின்வீதி ஆரம்பத்தில் இருக்கும் கைமன் கேட் மணிக்கோபுரம் அமைந்துள்ள இடத்தில் தான் அமைந்திருந்தது. அங்கே பணிபுரிந்தவர்கள் இந்த தேவாலயத்தின் மணியோசையை வைத்து நேரத்தை அறிந்துகொள்வார்களாம். இன்று இருப்பதைப் போல கட்டிடங்களும், சன நெரிசலும் இல்லாத அந்த காலத்தில் இது சாத்தியம் என்பதை உணர முடியும்.

ஆங்கிலேயர் இலங்கையை தம் வசமாக்கியதன் பின்னர் சிதைவுற்றிருந்த வுல்பெண்டால் தேவாலயத்தை திருத்தி 1813 செப்டம்பர் 4 அன்று விழாக்கோலமாக புறக்கோட்டை மயானத்தில் இருந்த முக்கிய கல்லறைக் கற்களைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

**Wolfendal என்ற வார்த்தையின் பொருள்**

ஆங்கிலத்தில் வுல்ப் என்றால் தமிழில் ஓனாய் என்று பொருள். எனவே, இந்த சொல் "ஓனாய்களின் இடம்" என்ற பொருள்படுகிறது. போர்த்துகேயர் காலத்தில் அழைக்கப்பட்டது போல ஆங்கிலத்திலும் அப்படியே அழைக்கப்பட்டிருகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் "Agoa de Loupe" என்று அழைக்கப்பட்டிருகிறது. ஆனால் இது கட்டப்பட்ட காலத்தில் இப்பகுதியில் ஓநாய்கள் வாழவில்லை என்றும் ஆனால் நரிகள் வாழ்ந்ததாகவும் அறியப்படுகிறது. ஆனால் போர்த்துகேயர் இந்த நரிகளை ஓநாய்கள் என்று தவறாகப் புரிந்து கொண்டதால், நரிகளுக்குப் பதிலாக, இந்த தேவாலயம் ஓநாய்கள் என்ற அர்த்தத்துடன் பெயர்கொள்ளப்பட்டிருக்கிறது.

கருங்கல்லால் ஆன அடித்தளத்தில் கட்டப்பட்ட இந்த தேவாலயம் நான்கு பக்கங்களிலும் சிலுவை வடிவில் கட்டப்பட்டுள்ளது. உயரத்தில் குவி மாடத்தில் கிரீத்துடன் சிங்கமொன்று ஒரு கையில் ஒரு வாளையும் மற்றொரு கையில் ஏழு அம்புகளையும் தாங்கியபடி செதுக்கப்பட்ட சின்னம் அமைக்கப்பட்டிருந்தது. அது டச்சு குடியரசின் ஏழு ஐக்கிய மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற சின்னம். இந்த குவிமாடம் 1856 இல் இடி விழுந்து கடுமையாக சேதமடைந்த போது அந்த சின்னமும் சேர்ந்து அழிந்துபோனது. ஆங்கிலேயர் ஆட்சியில் அது பொருட்டாக இருக்கவில்லை. இதற்குப் பிறகு 1757இல் எட்டு வருட பழுதுபார்க்கும் பணிக்குப் பிறகு மேற்கூரை இரும்பால் மாற்றப்பட்டு பொதுமக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது.

100 அடி உயரத்தைக் கொண்ட இந்த கட்டிடத்தின் சுவர்கள் சுமார் ஐந்தடி தடிப்பு கொண்ட சுவர்களைக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் செங்கற்களால் கட்டப்பட்டிருந்த மேடை 1900 இஆம் ஆண்டு உடைக்கப்பட்டு அது மீண்டும் இரும்பினாலான மேடையாக கட்டப்பட்டது. பலிபீடங்கள், ஞானஸ்தான இடம், விரிவுரை மேசை, கல்லறைகள் என இந்த தேவாலயத்திலும் அதைச் சுற்றியும் பார்க்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. உள்ளே நாட்டை ஆண்ட ஆட்சித் தலைவரும் அவரின் குடும்பத்தினரும் அமர்வதற்கான தனியாக அலங்கரிக்கப்பட்ட இருக்கைகளை இன்றும் அங்கே காணலாம். இந்த இருக்கைகளில் சேர் ஒலிவர் குணதிலக்கவும், வில்லியம் கொபல்லாவவும் தான் இறுதியாக அமர்ந்த சுதேசிய ஆளுநர்கள். இந்த தேவாலயம் மத்திய கொழும்புக்குள் அடங்குகிறது. அதே மத்திய கொழும்பிலிருந்து ஜனாதிபதியாக ஆன பிரேமதாசவுக்கு கூட அந்த இருக்கையில் அமர அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆளுநர்கள் மட்டுமே இருக்கலாம் என்கிற தேவாலய விதிக்குள் அவர் அடங்காததால் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. தேவாலயத்தின் முக்கிய உற்சவத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரும், பிரேமதாசவும் கலந்துகொண்ட போது அவர்களுக்கென்று விசேட இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் இந்த இருக்கைகள் வழங்கப்படவில்லை.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த டச்சு நாட்டைச் சேர்ந்த இலங்கை ஓவியர் ஜே.எல்.கே.வன்டோட் (J.K.L.Vandort) இந்த தேவாலத்தின் பல்வேறு காட்சிகளையும் ஓவியமாக்கியிருக்கிறார். இதைப் பற்றிய விபரங்களை இலங்கையைச் சேர்ந்த பிரபல டச்சு ஆய்வாளரான எல். ப்ரோஹியர் கொழும்பு பற்றிய தனது நூலில் பல விபரங்களைத் தந்துள்ளார்.

**கல்லறைகள்**

புரட்டஸ்தாந்து தேவாலயங்களுக்குள் அந்த நாட்டின் அரசர்கள், ஆட்சியாளர்கள், கிறிஸ்தவ மதத் தலைவர்களை புதைக்கும் வழக்கம் இப்போது இல்லை. ஆனால் அப்போது இருந்தது. ஐரோப்பா எங்கும் உள்ள பழைய புராதன சேர்ச்சுகளில் புதைக்கப்பட்டவர்களின் கல்வெட்டுகளுடன் கூடிய கல்லறைகளை இன்றும் உள்ளே காணலாம். அப்படி இந்த தேவாலயத்திலும் காணலாம். அது மட்டுமன்றி அப்படி இலங்கையை ஆண்ட ஐந்து டச்சு ஆளுநர்களின் கல்லறைகள் இங்கே உள்ளன. 1662 – 1736 க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த முக்கிய பதினான்கு கற்கள் தேவாலயத்தின் உள்ளேயும், ஐந்து கல்லறைக் கல்வெட்டுகள் தேவாலயத்துக்கு வெளியேயும் வைக்கப்பட்டுள்ளன. அங்கிருக்கும் மிகப் பழைய கல்லறைக் கல் 1662 ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்றால் உங்களால் அதன் பழைமையை விளங்கிக்கொள்ள முடியும்.




இன்று

போர்த்துக்கேயரிடம் இருந்து இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றுவதற்கான போர் நிகழ்ந்தபோது பாணந்துறை, களுத்துறை போன்ற பகுதிகளில் போர் நிகழ்த்தி அவற்றைக் கைப்பற்றியவர் ஜெனரல் அல்ஃப்ட் (Gerard Pietersz. Hulft). அவர் அடுத்ததாக கொழும்புக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கான போரின் போது காயப்பட்டு 10 ஏப்ரல் 1656 அன்று மரணமானார். அவரின் உடல் பூக்களாலும், பழங்களாலும் அலங்கரிக்கப்பட்டு காலிக்குக் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. ஆனால் கொழும்பு கைப்பற்றப்பட்டு டச்சுக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின்னர் மீண்டும் கொழும்பு கோட்டையில் (அப்போது வுல்பெண்டால் தேவாலயம் அமைந்த இடத்தையும் சேர்த்து கொழும்பு கோட்டை என்று தான் கூறுவார்கள்.) வுல்பெண்டால் தேவாலயத்துக்கு உடல் கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. அந்த கல்லறைக் கல்லும் இங்கு தான் இருக்கிறது.

இவரின் நினைவாகத் தான் அப்போது டச்சு இராணுவத் தலைமையகம் இயங்கிய பகுதிக்கு அல்ஃப்ட்'ஸ் டோர்ப்" (Hulft's Dorp, அல்ஃப்ட்டின் கிராமம்) என்று பெயரிடப்பட்டது. இன்று இலங்கையின் உயர்நீதிமன்ற வளாகம் அமைந்திருக்கும் பகுதி தான் அது.

அதுமட்டுமன்றி கத்தோலிக்க மதத்துக்கு மாறிய கோட்டை மன்னன் தொன் யுவான் தர்மபாலாவின் கல்லறையும் இங்கே தான் வைக்கப்பட்டு பின்னர் அது மாயமானதாக குறிப்புகள் கூறுகின்றன. (Lewis, J. Penry). அவர் இலங்கையின் முதலாவது கிறிஸ்தவ அரசன். 1580 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருக்கு கோட்டை ராஜ்யத்தை ஒப்பமிட்டு எழுதிக்கொடுத்தவர் அவர் தான்.

அதுமட்டுமன்றி நான்கு டச்சு ஆளுநர்களும் இந்த வுல்பெண்டாலில் தான் அடக்கம் செய்யப்பட்டு கல்லறைகள் பாதுகாக்கப்பட்டன. இலங்கையை இறுதியாக ஆண்ட இரு டச்சு ஆளுநர்களுமான வில்லெம் யாகோப் (Willem Jacob van de Graaf) யொஹான் வான் அங்கெல்பீக் (Johan van Angelbeek) ஆகியோரின் கல்லறைகளும் பிற்காலத்தில் வுல்பெண்டலுக்கு இடம்மாற்றப்பட்டது. இலங்கையின் ஆளுநராக 12.01.1725இலிருந்து 19.10.1725 வரை ஆட்சி செய்த 19 வது டச்சு ஆளுநர் யோஹன்னஸ் ஹேர்டன்பேர்க்கின் (Johannes Hertenberg) கல்வெட்டும் இங்கே உள்ளது. இலங்கையில் வாழ்ந்த பிரித்தானிய ஆளுநரான வில்லியம் கிரிகோரி இந்த தேவாலயத்தில் தனி அக்கறை காட்டியுள்ளார். அவர் இந்த தேவாலயத்தை "வெஸ்மின்ஸ்டர் சர்ச் ஆஃப் ஸ்ரீ லங்கா" என்று அழைத்தார்.

இந்த தேவாலயத்தில் கவர்னர் கிரிகோரி பரிசளித்த விலைமதிப்பற்ற கண்ணாடி ஜன்னலை இன்றும் காணலாம். 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் இங்கே ஆங்கில பாடசாலை நடத்தப்பட்டிருக்கிறது. அங்கு கொழும்பில் வாழ்ந்த காலனித்துவ உயர் ஐரோப்பியர்கள் மட்டுமன்றி சுதேசிய உயர் குழாமினரும் அங்கே கல்வி கற்றனர். இலங்கையின் சட்டவாக்கப் பேரவையின் முதலாவது தமிழ்ப் பிரதிநிதியும் இராமநாதன் சகோதரர்களின் பாட்டனாருமான கேட் முதலியார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமியும் இங்கே தான் கற்று ஆங்கிலேய ஆளுநர் தோமஸ் மெயிற்லான்ட்டுக்கு மொழிபெயர்ப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

இன்றும் இந்த தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைகள் நடைபெறுகின்றன. திங்கள்கிழமை விடுமுறை. செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை 8.30 – முதல் 4:00 மணி வரை இந்த தேவாலயத்தின் அழகையும் இரண்டரை நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டுவரும் தளபாடங்களையும், புராதன தொல்லியல் சிறப்புகளையும், யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம். டச்சு நாட்டு உல்லாசப் பிரயாணிகள் பலர் இங்கே வந்து தமது மூதாதையரின் கல்வெட்டுக்களை தேடிச் செல்கின்றனர்.

---

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் ஹாஜியாரின் ஐந்தாவது நினைவு தினம் 2022 ஆகஸ்ட் 29ம் திகதியாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**

# வாழ்வோரை வாழ்த்திய அஸ்வர் ஹாஜியார்

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் அவர் இறந்த பின் அவரைப் பற்றி மக்கள் மறக்காது நினைவில் வைத்திருக்கும் வகையில் சேவைகள் செய்து மரணிப்பது தான் அவர் இவ்வுலகில் பிறந்து வாழ்ந்ததற்கான உண்மையான பயனாக இருக்க முடியும். இந்த வகையில், தான் இறந்த பின்னரும் தன்னைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டேயிருக்கும் வகையில் நல்ல பல சேவைகளை செய்த மனிதராக காலஞ் சென்ற ஏ.எச்.எம். அஸ்வர் திகழ்கிறார் என்றால் மிகையல்ல.

பாடசாலையில் படிக்கும் காலம் தொடக்கி, தனது இறுதி நேரம்வரை பொதுநலச் சேவை, எழுத்து, கலை, இலக்கியம், அரசியல் என தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தவர் "அஸ்வர் ஹாஜியார்" என்று பலராலும் "அஜீ" என்று மிக நெருங்கியவர்களாலும் அன்போடு அழைக்கப்படும், முன்னாள் அமைச்சர் அல்ஹாட் ஏ. எச். எம். அஸ்வர். பல்வேறு விதத்திலான அவரது சேவைகள் அவருடைய நெருங்கிய அன்பர்களால் மட்டுமன்றி அணைத்துத் தரப்பினராலும் நினைவு கூரப்படுகின்றன..

இலங்கையின் முன்னணி முஸ்லிம் இயக்கங்கள் அனைத்திலுமே அவரது பங்களிப்பு நிறைந்த அளவில் இருப்பது விசேட அம்சமாகும்.

மர்ஹூம் ஷாபி மரிக்கார் முதல் அவர் இறக்கும் வரை, அகில இலங்கை முஸ்லீம் கல்வி மாநாட்டின் அனைத்து உறுப்பினர்களோடும் இணைந்து செயலாற்றி, மாநாட்டின் செயற்பாடுகள் வெற்றி பெற உழைத்தார். இவரது பங்களிப்பு இல்லாத எந்தவொரு முக்கிய நிகழ்வும் முஸ்லீம் கல்வி மாநாட்டால் நடத்தப்படவில்லை என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

இதேபோல், மர்ஹூம் பாக்கீர் மாக்கார், அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தை ஆரம்பித்த நாளிலிருந்து அதன் ஒவ்வொரு செயற்பாட்டிலும் இவர் ஈடுபட்டுள்ளார். இலங்கை முழுவதும் ஐநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் ஊர்களில் முன்னணிகள் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்ட போது அவை ஒவ்வொன்றினதும் சிறப்பான செயற்பாட்டுக்கு மர்ஹூம் பாக்கீர் மாக்காரோடு இணைந்து பெரும் பங்களிப்பு செய்தார். இவ்வாறான ஒவ்வொரு முன்னணியின் ஒரு சில அங்கத்தவர்களையேனும் பெயர் கூறி அழைக்கும் அளவுக்கு அவர்களோடு அவருக்கு தொடர்பு இருந்ததை நானறிவேன். இது அவருக்கே உரிய தனித்துவமாகும்.

அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் அன்றைய கால கட்டத்தில் வெளியிட்ட மாதமிருமுறை பத்திரிகையான "உதயம்", அதன் ஆங்கில வெளியீடான "டோன்" (Dawn) என்பவற்றை தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் வெளியிட முழுமூச்சாக செயலாற்றினார். இவை ஒவ்வொன்றிலும் அவரது ஆக்கங்கள் இடம்பெற்றே வந்துள்ளது.

இலங்கை முஸ்லிம் இயக்கங்கள், அவற்றில் சேவையாற்றும் உறுப்பினர்கள், முஸ்லிம் கலை இலக்கியவாதிகள், முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் நிறுவனங்கள் என்பன போன்ற விடயங்களில் இவர் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமாக திகழ்ந்தார். இவற்றில் எந்தவொரு விடயத்தைப் பற்றி கேட்டாலும், எவரைப்பற்றி வினவினாலும் உடன் தகவல் தரும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அவர் அறிந்திருந்த இந்தத் தகவல்களை திரட்டி ஆவணப்படுத்த நடவடிக்கை எடுங்கள் என்று நான் அவரை பலமுறை வேண்டிக் கொண்ட போதும் அது சாத்தியப்படாமல் போனமை எம் சமூகத்தின் துரதிஷ்டமாகும்.

இலங்கையில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் மலேசியாவிலும் கூட ஒரு முஸ்லிம் முக்கியஸ்தர் இறந்துவிட்டால் அவருக்காக அனுதாபச் செய்தியை உடனடியாக தவறாது வெளியிடுவார். அதில் இறந்தவர் பற்றிய முக்கிய குறிப்புகள் அடங்கியிருக்கும். ஒரு குக்கிராமத்தின் முக்கியஸ்தருக்காகவும் இவர் இவ்வாறு செய்வது அவர்களோடு இவருக்கிருந்த நெருங்கி தொடர்பை பறைசாற்றுவதாக இருந்தது. இவ்விடயத்தில் இவரைப் போன்ற ஒருவரை இனிமேலும் காண முடியுமா என்பது சந்தேகமே.

1950ல் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அஸ்வர் ஹாஜியார் 1955ல் அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியோடு தன்னை முழுமையாக இணைத்து இயங்கினார். முன்னாள் அமைச்சர்களான மர்ஹூம் எம். எச். முஹம்மத், மர்ஹூம் பாக்கீர் மாக்கார் இருவரோடும் அடுத்ததடுத்து நெருக்கமாக இணைந்து



செயல்பட்டார். பின்னர் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நெருங்கிய சகாவானார். அவராலேயே முதன்முதலாக தேசிய பட்டியல் பாராளுமன்ற அங்கத்தவராகவும், பின்னர் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சராகவும் நியமனம் பெற்றார்.

அதன் பின்னர், காலத்தின் கட்டாயத்தில் ஐ.தே க.விலிருந்து விலகி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவோடு சேர்ந்து நெருங்கிச் செயல்பட்டார். அவரும் இவரை தேசிய பட்டியல் அங்கத்தவராவும், அமைச்சராகவும் நியமித்தார். 'தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் இருந்தவர்' என்ற சிறப்பு இவருக்கே உரித்தானது. 'இவர் இக்காலகட்டத்தில் தனது பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கல்களின் கீழ் இலங்கையின் சகல மாவட்டங்களைச் சேர்ந்த பல கிராமங்களுக்கும், பல்வேறு அமைப்புகளுக்கும் நிதியொதுக்கி சேவையாற்றியிருப்பது பலர் அறியாத விடயம்.

இவர் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தபோது ஆற்றிய சேவைகள் தனித்துவமானவை. இக்காலப்பிரிவில் எழுத்தாளர்களையும், இலக்கியவாதிகளையும், கலைஞர்களையும், பத்திரிகையாளர்களையும் அவர்கள் வாழும் போதே வாழ்த்தி கௌரவிக்க வேண்டுமென்ற உன்னத செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். "வாழ்வோரை வாழ்த்துவோம்" என்ற அழகிய மகுடத்தின் கீழ் இத்தகையோரை தேர்வு செய்து "சவுத்துல் ஹக்", "தாஜுல் உலூம்", "சவுத்துல் அந்தலீப்" போன்ற அழகிய அரபுப் பட்டங்களையும், கூடவே பணமுடிப்பும் வழங்கி கௌரவித்தார். இன்றும், என்றும் தொடர வேண்டிய இந்த நற்பணியை, இவரைப் போன்று முறையாக தொடர இன்னும் எவரும் முன் வராமை கவலைக்குரியது. துரதிர்ஷ்டவசமானது.

இதே போன்று பல எழுத்தாளர்களை, கலைஞர்களை, பத்திரிகையாளர்களை தனது பாராளுமன்ற உரைகளில் பெயர் குறிப்பிட்டு உரையாற்றி கௌரவித்து அவர்களது பெயர்களையும் "ஹன்சாட்"டில் பதிவு செய்துள்ளார் என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் மும்மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்ற, இம்மும்மொழிகளிலும் ஒன்றுபோல் சரளமாக பேச, எழுத, ஆக்கங்கள் படைக்க ஆற்றல் பெற்றவர். இவரது இம்மொழியாற்றல் இவர் எங்கு சென்றாலும் உயர் நிலையடைய உதவியது என்றால் மிகையல்ல. இதன் மூலம் சமுதாயத்தின் பிரச்சினைகளை மேடைகளிலும், கூட்டங்களிலும், பாராளுமன்றத்திலும் அவ்வப்போது உரத்து ஒலிக்கச் செய்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் இவரது பங்களிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்றது. தமிழ் மொழியில் இவரது கிரிக்கட் நேர்முக வர்ணனையும் மறக்க முடியாதது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவரது சிறப்பான பங்களிப்புகள் தேவைக்கேற்ப இடம்பெற்றமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எனக்கும் அஸ்வர் ஹாஜியாருக்குமிடையில் பல்வேறு விடயங்களில் மிக நெருக்கமான உறவு இருந்தது. அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும், அதன் தேசிய தலைவராகவும் நான் செயலாற்றிய போதும், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் பொதுச் செயலாளராக இருக்கின்ற வேளையிலும் இவற்றினூடாக சமூக நலன் சார்ந்த விடயங்களை செயற்படுத்துவதில் பல்வேறு விடயங்களை நேரிலும் தொலைபேசி மூலமும் கலந்துரையாடுவது வழக்கம். எனது எழுத்தாக்கங்கள் பற்றியும் மிக ஆர்வத்தோடு பேசுவார். ஆலோசனைகள் வழங்குவார். எல்லா குடும்ப நிகழ்வுகளிலும் தவறாது பங்கு கொண்டுள்ளார்.

1991ல் நான் சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்தபோது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், கொழும்பு பிரதான வீதியில் இருந்த அதன் தலைமையகத்தில் எனக்கு ஒரு பாராட்டு நிகழ்வை நடாத்தியது. அதில் உரையாற்றிய அஸ்வர் ஹாஜியார் என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். நான் எனது மாவட்டமான கண்டிக்குச் சென்று சட்டத்தரணி தொழிலைத் தொடங்கி தொடர வேண்டும். கூடவே அரசியலிலும் என்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் கண்டி பிரதேச அரசியல் ஜாம்பவான் ஏ .சீ .எஸ். ஹமீத்துக்குப் பின்னர் கண்டியில் ஏற்படக் கூடிய முஸ்லிம் அரசியல் வெற்றிடத்தை என்னால் நிரப்ப முடியும் என்றார். அரசியலில் எனக்கு அதீத ஆர்வம் இல்லாமையினால் இந்த ஆலோசனையை நான் பின்பற்றவில்லை. ஆனால் அவரது அந்த தீர்க்கதாசினத்தின் தாத்பரியத்தை இன்று என்னால் நன்கு உணர முடிகிறது.

எல்லோருடனும் அன்போடும், நட்போடும், தோழமையோடும் பழகும் அஸ்வர் ஹாஜியாரை நாம் அன்போடு "அஜீ" என்றுதான் எமது வட்டத்தில் அழைப்போம். அவர் இதனை தனது புனைப் பெயராகக் கொண்டு நிறைய எழுத்தாக்கங்கள் படைத்ததுமுண்டு.

எல்லாம் வல்ல அல்லாஹ் அஸ்வர் ஹாஜியார் தான் வாழும் நாட்களில் செய்த நன்மைகளுக்கும், சேவைகளுக்கும் பல மடங்கு அருள்களை வழங்கி, அன்னாரது மறுமை வாழ்வை வெற்றியானதாக ஆக்கியருள்வானாக! ஆமீன்!



இலக்கியச் செம்மல்,
கலாபூஷணம் சட்டத்தரணி
ரஷீத் எம். இம்தியாஸ்...

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 26

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | 08 | |
| | 09 | 10 | 11 | 12 | |
| 13 | 14 | 15 | | 16 | 17 |
| 18 | 19 | | 20 | | 21 |
| 22 | | 23 | 24 | 25 | 26 |

பெயர் ..........................................

வகுப்பு ..........................................

தொலைபேசி இல ..........................................

பாடசாலை பெயர் ..........................................

வதிவிட முகவரி ..........................................

..........................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இது தோல்வாத்தியக் கருவி. நாதஸ்வரமும் சேர்ந்து கொண்டால், காதுக்கு இனிய கச்சேரியைக் கேட்கலாம்.

(04) முள்ளந்தண்டுள்ள பிராணிகள் பலவற்றில் காணக் கூடிய நீளமான உடலங்கம் இது. ஆனால் சில பிராணிகளில் விதிவிலக்காக இந்த உறுப்பு இல்லை. (தலைகீழான சொல்)

(09) ஜனநாயக ஆட்சிமுறை இல்லாத சில நாடுகளில் அரசாட்சிதான் இன்றும் நிலவுகின்றது. அவ்வாறான நாடுகளில் ஆட்சித் தலைவர் இவர்தான்.

(13) கண்களால் பார்த்து இரசிக்கக் கூடியது இது. (தலைகீழான சொல்)

(16) துன்பம் என்னும் பொருள் தரும் சொல்.

(18) மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்துகின்ற உபகரணங்களில் பிரதானமானது இது.

(23) இராமாயணம் படைத்ததால் கவிச்சக்கரவர்த்தியாக இன்றும் போற்றப்படுகின்ற மாபெரும் புலவன். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(01) நாடகம், நாட்டியம் போன்ற கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றுகின்ற இடம் இது.

(03) அழகிய வெண்ணிறப் பறவை. நளவெண்பாவின் கதாநாயகியான தமயந்தி இப்பறவையை நளனுக்கு தூது விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (தலைகீழான சொல்)

(04) ஆகாயத்தில் தோன்றி நிலத்தை வந்தடைந்து, பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற இயற்கை அனர்த்தம். (தலைகீழான சொல்)

(09) குழந்தைகள் பேசுகின்ற இனிய மொழி. அவர்கள் பேசுகின்ற இம்மொழி எமக்கு முழுமையாகப் புரிவதில்லை. ஆனால் கேட்பதற்கு இனிமை தருவதுண்டு.

(13) தண்ணீர் மற்றும் பானங்களை இந்தப் பாத்திரத்தில்தான் நாம் அருந்துகின்றோம். சிறிய கோப்பை இது.

(17) இலங்கைக் காடுகளில் வாழ்கின்ற மிருகம். உடலெங்கும் கரிய உரோமம் கொண்ட இவ்விலங்கு மனிதர்களைத் தாக்கக் கூடியது. (தலைகீழான சொல்)

(20) நாம் அருந்துவதற்கு திரவ ஆகாரம் தருகின்ற மிருகம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 25

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) எறும்பு (07) குகன் (11) தினம் (15) பகை
(18) காகம் (21) பார் (24) நீராவி

**மேலிருந்து கீழ்**

(02) ஆறு (04) புன்னகை (05) குடை (08) கதி
(10) மகாகவி (11) விம்பம் (17) பானை (21) நீர்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 24

### பாராட்டு பெறுவோர்

**1. T. காயத்திரி,**
தரம் 12, பது/சரஸ்வதி மத்திய கல்லூரி,
அமுனுதோவ,
மடுல்சீமை.

**2. ரா. சுவாதி திவ்யாஞ்சலி,**
தரம் 11, மா/ பாக்கியம் தேசியக்கல்லூரி,
இல. 1/2, தெஹிபிட்டிய,
வறக்காமுற உக்குவளை.

**3. தமீம் சாபில் அப்துல்லா,**
தரம் 10, அல் முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 4.

**4. எம்.ஏ. அப்துல் அழீம்,**
தரம் 08, மாறை/அல் மினா ம.வி.,
40, B, மீயல்லை, ஹக்மனை.

**5. ஸீமா மனாஸிர்,**
தரம் 07, அ.த.க. பாடசாலை,
பெரிய கரிசல், பேசாலை.

**6. ரவீந்திரன் சபரீசன்,**
தரம் 05, மட்/பட்/கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி 11, கிழக்கு, களுவாஞ்சிக்குடி.

**7. யும்னா மின்ஹாஜ்,**
தரம் 05A, மா/ஆமினா மகளிர் தேசிய பாடசாலை,
42B, போர்சலின் பிளேஸ், வறக்காமுற, உக்குவளை.

**8. வி. துவிசாலினி,**
தரம் 05, இராமகிருஷ்ண பெண்கள் பாடசாலை,
திருமால்முக வீதி, காரைதீவு 07.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 23
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல்.**

***தெளிவுரை :***
*சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும்; பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது.*

# கொடுத்து வாழ்வதே பெருமை!





அந்தத் தோட்டத்தில் பயிற்றங் கொடியும், இராசவள்ளிக் கொடியும் போட்டிபோட்டு வளர்ந்தன. பயிற்றங்கொடி வளர்ந்து பூக்கத் தொடங்கவும் வண்டுகள், தேனீகள், சின்னச் சின்ன பூச்சிகளென கொடியைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டு அன்பு செலுத்தத் தொடங்கின. பூக்களில் இருந்து பிஞ்சுகள் வெளிவரத் தொடங்கவும் அணில், கிளி, குரங்குகள் என அந்தக் கொடியை நாடிவரத் தொடங்கின. கொடியும் தன்னை நாடிவரும் உயிரினங்கள் அனைத்திற்கும் உணவளித்து மகிழ்ந்தது.

ஒருநாள் ஐந்தாறு கிளிகள் கூட்டமாக வந்து பயிற்றங்காய்கள் அனைத்தையும் கொத்திச் சாப்பிட்டு மனநிறைவோடு பறந்தன. இதை அவதானித்த இராசவள்ளி, "என்ன பிராணிகள் வந்து உனது அழகைச் சீர்குலைக்கின்றதே, உனக்கு வருத்தமாக இல்லையா?" என போலியான கவலையோடு கேட்க, அதற்கு பயிற்றங்கொடி ஒரு புன்னகையொன்றைப் பதிலுக்கு தவழவிட்டு அமைதியானது.

இராசவள்ளி "நீ எப்படி இருந்தாலும் நமக்கென்ன" எனக்கூறி, அருகில் உள்ள மரத்தை எட்டிப்பிடிக்கத் தொடங்கியது. ஆனால் பயிற்றங்கொடி படருந்தன்மையை குறைத்து நன்றாக பூத்துக் காய்த்தது. தன்னை நம்பிக்கையோடு நாடிவரும் பிராணிகளுக்கு உணவளித்து மகிழ்ந்தது.

தினமும் ஏதோ ஒரு உயிரினத்திற்கு உணவளிப்பதை அவதானித்த இராசவள்ளி, "அடுத்தவனுக்கு உதவி செய்வதால் ஏதாவது நன்மை கிடைக்கின்றதா? மாறாக உனது வனப்புதான் படிப்படியாகக் குறைகின்றது" என மீண்டும் சொன்னது.

இப்போது பயிற்றை "நண்பா..! நாம் உயிரோடு இருக்கும்வரை மற்றவர்கட்கு ஏதாவது ஒருவகையில் உதவிசெய்ய வேண்டும்" இயற்கை அன்னை நமக்கு ஏற்றவகையில் உதவி செய்கின்றபடியால்தான், நானோ, நீயோ உயிர்வாழ்கிறோம். எம்மைப்போல் எத்தனையோ உயிர்கள் வாழ்கின்றன. வந்த உயிர்கள் எல்லாம் இங்கு நிரந்தரமாகத் தங்குவதில்லை. இறந்தபின் நம்முடன் கூட வருவது நாம் செய்த தருமம் மட்டும்தான்.

எம்முடன் எந்தவொரு சொத்துச் சுகமும் வருவதில்லை. அது இயற்கையின் நியதி, சூரியன் காலையில் உதிக்கின்றது, மாலையில் மறைகின்றது. அதுபோலத்தான் நம் வாழ்வும். இருக்கும் வரை நம்மால் இயன்ற உதவிகளை அடுத்தவருக்குச் செய்வதுதான் சிறப்பு.

உன்னைப் பார், நீ எவ்வளவு அழகாய் பற்றிப் படர்ந்தாய், இப்ப உனது வேகம் குறைந்துவிட்டது, சில இலைகள் பழுக்கத் தொடங்கிவிட்டன. கஷ்டப்பட்டு தேடி மண்ணுக்குள் மறைத்து ஒளித்துவைத்த பொருள் இன்னும் சிலநாட்களில், உனக்கு தெரியாத ஒருவர் எடுத்துப் பயனடையப் போகின்றார்.

நீ எப்போ செத்துமடிவாய் என மிகுந்த ஆவலோடு உன்னைச் சூழ உள்ளவர்களில் யாரோ ஒருவர் எதிர்பார்த்து இருக்கின்றார்.

ஆனால் எனது ஒரு இலைவாடத் தொடங்கினாலே போதும் என்னைச் சூழ்ந்திருப்பவர்களின் மனமும் வாடத் தொடங்கிவிடும், எப்படியாவது என்னைக் காப்பாற்ற பாடுபடுவர்.

என் அடிப்பாகத்தை எந்தளவுக்கு ஈரலிப்பாக வைத்து இருக்கிறார்கள். காரணம், நான் இன்னும் உயிர்வாழ வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு, அதுதான் நமக்குப் பெருமை" எனக்கூறி அமைதியானது.

இராசவள்ளியும் தனது தவறை புரிந்துகொண்டு தலைகுனிந்தது.

திருமலை தேன்மொழி

## இவ்வார மழலை



விகாஷினி

சதீஸ்குமார் / சிந்துஜா ,
கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.

## சைவ மங்கையர் வித்தியாலயத்தின் வருடாந்த கல்விக் கண்காட்சி












கொழும்பு 06, வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் SPLENDEO '22 கல்விக் கண்காட்சி கடந்த 26ஆம் திகதியன்று கொழும்பு, வித்தியாலயத்தின் அதிபர் அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் ஆரம்பமானது. ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கொழும்பு பல்லைக்கழக கல்விபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபாரட்னம் அதிரதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். சைவ மங்கையர் வித்தியாலய மாணவத்தலைவியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் SPLENDEO '22 கல்விக் கண்காட்சியின் இறுதிநாள் இன்றாகும்.

## இன்பம் தரும் கல்வி... !



*காற்றுக்கு வேலி இல்லை தம்பி*
*கல்விக்கு எல்லை இல்லை*
*பாசத்தை பொழியும் தாயின்*
*அன்புக்கு நிகரும் இல்லை.*

*சோம்பலை விரட்டி வாழ்வோம் வீண்*
*சொகுசுகள் அகற்றி வாழ்வோம்*
*ஆம்பலாய் நமது வாழ்வில்*
*அன்றாடம் மகிழ்ச்சி காண்போம்.*

*பெற்றவர் துயரம் தீர்ப்போம் நாம்*
*பெரியவர் சொல்லைக் கேட்போம்*
*கற்றவர் ஆகி மக்கள்*
*கடமையை பெரிதாய் செய்வேம்.*

*அன்பாக வாழ்தல் இன்பம் நல்ல*
*பண்பாக நடத்தல் இன்பம்*
*கண்போல கல்வி தன்னை*
*கருதினால் என்றும் இன்பம்..!*

**ஷெல்லிதாசன்**
திருகோணமலை





மாத்தளை, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் தியாகராஜா தலைமையில் கடந்த 25ஆம் திகதி வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் சந்தரேக குலதுங்க கலந்து சிறப்பித்ததுடன் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பண்டார, உதவிக் கல்விப் பணிப்பாளர் ந. பிரேம்குமார் ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.






**எஸ். நிரோஷன்,**
தரம் 10, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**வை பிரசாந்தினி,**
தரம் 10, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**வி. ஜகத்காரணி,**
தரம் 07, நூரி தமிழ் வித்தியாலயம்,
தெரணியகலை.



**எஸ். நிகாசன்,**
தரம் 05, நூரி தமிழ் வித்தியாலயம்,
தெரணியகலை.

# மஞ்சரி விளையாட்டு

## வருகிறார் தர்ஜினி



ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன் ஷிப் போட்டிக்கான இலங்கை அணியில் தர்ஜினி சிவலிங்கம் இடம்பிடித்திருக்கிறார். ஆசியாவின் அதிக உயரமான வலைப் பந்தாட்ட வீராங்கனையான தர்ஜினி இலங்கை அணிக்கு இன்றியமையாதவ ராக இருந்து வருகிறார்.

இலங்கை வலைப்பந்தாட்டத்தில் மாத்தி ரமன்றி சர்வதேச வலைப்பந்தாட்டத்திலும் மிகச் சிறந்த வீராங்கனைகளில் ஒருவராக கருதப்படும் தர்ஜினி இலங்கை அணியில் இடம்பெற்றிருப்பது பெரும் நம்பிக்கை யைத் தருகிறது. அவர் உலகின் மிகச் சிறந்த சூட்டர் என்ற பெருமைக்கும் உரிய வர்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி யின் இறுதிப் போட்டியில் இலங்கை சிங்கப் பூரை 69–50 என்ற புள்ளிகளில் வீழ்த்தி சம்பியனானபோதும் அந்த வெற்றிக்கு தர் ஜினியின் பங்களிப்பு மிகப் பெரியது.

தனது அபார ஆக்கிரமிப்பு ஆட்டம் கார ணமாக அவர் அந்தத் தொடரின் நாயகி யாக விருது வென்றார். அப்போது அவர் மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பின்னரே தேசிய அணியில் இணைந்து அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தார்.

இந்த ஆண்டு மாலைதீவுகளில் நடை பெற்ற விளையாட்டு விருது வழங்கும் விழாவில் மதிப்புமிக்க 'ஸ்போர்ட்ஸ் ஐகொன்' விருதினை, இலங்கை கிரிக் கெட் அணியின் முன்னாள் ஜாம்பாவான் சனத் ஜயசூரியவுடன், தர்ஜினி சிவலிங்க மும் வென்றது இலங்கை விளையாட்டில் அவரது இடத்தை அடையாளப்படுத்துவ தாக உள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசிய வலைப்பந்தாட்ட சம் பியன்ஷிப் போட்டி 2020 ஆம் ஆண்டு நடப்படவில்லை. அந்தப் போட்டியை தென் கொரியா நடத்த ஏற்பாடாகி இருந்தபோதும் கொவிட் பெருந்து தொற்று தடங்கலாகிவிட் டது. இந்த நிலையில் இப்போது மீண்டும் அந்தத் தொடர் சிங்கப்பூருக்கு வந்திருக்கி றது.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் நடை பெற்றுவரும் ஆசிய சம்பியன்ஷிப்பில் இதுவரை அதிக கிண்ணங்களை வென்ற அணி என்ற சாதனையையும் இலங் கையே படைத்திருக்கிறது. இலங்கை இதுவரை ஐந்து தடவைகள் சம்பியனாகி இருக்கிறது.

இம்முறை போட்டிகள் செப்டெம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறும். 11 நாடுகள் பங்கேற்கும் தொடரில் நான்கு குழுக்களாக பிரிக்கப் பட்டு லீக் முறையில் நடத்தப்படும். ஏ குழுவில் இடம்பெற்றிருக்கும் இலங்கை, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் உடன் மோதுகிறது.

தர்ஜினியும் இருப்பதால் இலங்கை இம் முறையும் சம்பியன் கிண்ணத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு அதிக மாகவே இருக்கிறது.

## தலை நிமிர்வதற்கான நேரம்...

'உண்மையைக் கூறுவதென் றால் என்னிடம் பதிலில்லை. இது மிகவும் ஏமாற்றம் தருகி றது. இப்படித் தோற்பது எனக் கும் எனது முழு அணிக்கும் மிகவும் சங்கடமானது. எமது ஆட்டத்தால் முழு நாட்டை யும் நாம் தலைகுனியச் செய்து விட்டோம்.'



2018 ஆம் ஆண்டு நடந்த ஆசியக் கிண்ண போட்டிக்குப் பின்னர் அப்போது இலங்கை அணித் தலைவராக இருந்த அஞ்சலோ மத்தியூஸுக்கு மேற்சொன்னதை விட கூறுவ தற்கு வேறு வார்த்தை இருக்க வில்லை. அந்த ஆசிய கிண்ணத் தில் இலங்கை அணி சந்தித்த தலைகுணிவைப் போல வேறு ஒரு நிகழ்வு ஏற்படவில்லை.

ஐக்கிய அரபு இராச்சியத் தில் நடந்த அந்த ஆசிய கிண்ணத் தொடரின் ஆரம்ப சுற்றில் இலங்கை ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. அந்தச் சுற்றில் முதல் இரு இடங்களைப் பிடித் தால்தான் 'சுப்பர் போர்' சுற்றுக்கு முன்னேற முடியும்.

ஆனால் இலங்கை பங்களாதே ஷுடன் நடந்த தொடரின் முதல் போட்டியில் 137 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது. அது ஒரு சாதாரண தோல்வி அல்ல, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 261 ஓட்டங்களை பெற்ற போது இலங்கை 124 ஓட்டங்க ளுக்கே சுருண்டது.

பின்னர் ஆப்கானிஸ்தானை எதிர்கொண்ட இலங்கை அணிக்கு மீண்டும் அதே நிலைதான். முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கான் 241 ஓட்டங்களை பெற பதிலெடுத்தா டிய இலங்கை 158 ஓட்டங்களுக்கே சுருண்டது.

உலகக் கிண்ணப் போட்டிகள், அவ்வப்போது நடக்கும் முத்த ரப்பு மற்றும் நான்கு, ஐந்து முனை கிரிக்கெட் போட்டிகளை விட்டு விடுவோம். ஆசியக் கிண்ணத் தைப் பொறுத்தவரை இலங்கை ஒரு அசைக்க முடியாத அணி. ஆசிய கிண்ணம் ஆரம்பிக்கும் போதே அது இந்தியா, இலங்கை அல்லது பாகிஸ்தானுக்கே கிடைக் கும் என்று ரசிகர்கள் ஊகித்துவிடு வார்கள்.

1984 ஆம் ஆண்டு ஆரம்பமான ஆசியக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா ஏழு தடவை சம்பியனாகி இருப்பதோடு இலங்கை ஐந்து தடவைகள் கிண்ணத்தை கைப் பற்றி இருக்கிறது. பாகிஸ்தானால் இரண்டு முறை சம்பியனாக முடிந் தது.

கிண்ணத்தை வெல்லாவிட்டால் என்ன, இலங்கை ஆறு தடவை இறுதிப் போட்டி வரை முன்னேறி இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட இலங்கைக்கு 2018 ஆம் ஆண்டு நிகழ்ந்தது நினைத்துக்கூட பார்க்க முடியாதது. என்றாலும் அந்தத் தொடருக்குப் பின்னர் இலங்கையில் அதிரடி மாற் றங்கள் நிகழ்ந்தன. மத்தியூஸிடம் இருந்து தலைமை பதவி பறிக்கப் பட்டது. அணியில் புது முகங்கள் வர ஆரம்பித்தன.

என்றாலும் அடுத்த ஆசியக் கிண்ணப் போட்டியை நடத்து வதில் தான் இழுபறி நிகழ்ந்தது. கொவிட் பொருந்தொற்று காரண மாக 2020 இல் நடத்துவதற்கு ஏற் பாடாகி இருந்த ஆசிய கிண்ணப் போட்டி 2021 வரை பிற்போடப் பட்டது. அது பின்னர் 2022க்கு ஒத் திவைக்கப்பட்டது.

இதற்கிடையே இந்தப் போட்டியை நடத்துவதற்கு தயாராகி வந்த இலங்கை பொரு ளாதார நெருக்கடியில் சிக்க தொடர் ஐக்கிய அரபு இராச்சியத் திற்கு சென்றது. உலகக் கிண்ணப் போட்டியை எதிர்கொண்டிருப்ப தால் அதற்கு தயாராகும் வகையில் ஆசியக் கிண்ணம் டி20 தொடருக்கு மாற்றப்பட்டது.

இதன்படி ஆசியக் கிண்ணத் தொடர் நேற்று (27) எவ்வாறோ ஆரம்பமாகிவிட்டது. இலங்கை கசப்பான அனுவத்தை சந்தித்து சரியாக நான்கு ஆண்டுகளின் பின்னர் போட்டிகள் ஆரம்ப மாகி இருக்கின்றன. கடந்த முறை போல் குழுநிலைப் போட்டிகளில் இலங்கை அணி ஆப்கான் மற்றும் பங்களா தேஷை எதிர்கொள்கிறது.

குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் தான் 'சுப்பர் போர்' சுற்றுக்கு முன்னேற முடியும். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இலங்கை அணி அல்ல இப்போது இருப்பது. தசுன் ஷானக்க தலைமையிலான இலங்கை அணியில் பல மாற் றங்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த ஆசிய கிண்ணப் போட் டியில் விளையாடியவர்களில் தசுன் ஷானக்க, குசல் மெண்டிஸ் மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் மாத்திரமே இம்முறை இலங்கை அணியில் இடம்பிடித்தி ருக்கிறார்கள்.

2018 ஆம் ஆண்டு ஆசிய கிண்ணப் போட்டிக்கு இலங்கை அணி பங்கேற்றபோதும் அது பெரும் சரிவில் இருந்தது. அடுத் தடுத்த தோல்விகள் மற்றும் ஸ்திர மற்ற அணி என்று இலங்கை ஒரு தளம்பல் நிலையிலேயே அப்போது ஆசிய கிண்ணத்தில் விளையாடியது.

எனவே அந்தத் தொடரில் சந் தித்த தோல்வி இலங்கை அணியின் சீர்திருத்தத்துக்கு ஒருவகையில் கார ணமானது. அதுவே இலங்கையின் திருப்பமாகவும் இருந்தது.

கிட்டத்தட்ட இன்னும் ஒரு மாதத் தில் டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவிருக்கும் நிலையில், இம்முறை ஆசியக் கிண்ணமும் இலங்கைக்கு ஒரு சாதகமான திருப் பத்தை ஏற்படுத்தும் என்று எதிர் பார்ப்போம்.

## அர்ஜுன எதிர் இலங்கை கிரிக்கெட்: ஒரு முடிவில்லா மோதல்

அர்ஜுன ரணதுங்கவுக்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கும் இடையிலான மோதல் என்பது இன்று நேற்று உருவானதல்ல. அது ஒரு வரலாற்றுக் கதை. அவர் கிரிக்கெட் விளையாடிய காலம் தொட்டு முழு நேர அரசியலுக்கு வந்தது முதல் இலங்கைக் கிரிக்கெட்டுடன் மல்லுக்கட்டிய நாட்கள் அதிகம்.

தேசிய விளையாட்டு சபையின் தலைவராக ஒரு வாரத்திற்கு முன் அவர் நியமிக்கப்பட்டது அரசிய லுக்கு அப்பால் ஒரு நல்ல முடிவாக பார்க்கலாம். ஆனால் அது இலங்கைக் கிரிக்கெட் சபையை பாதிக்கும் என்பது ஒரு பக்க விளைவு. புதிய பதவிக்கு வந்த நாள் முதல் அவர் இலங்கை கிரிக்கெட்டை சீண்டிக் கொண்டி ருக்கிறார்.



இலங்கை கிரிக்கெட் சபையை பொறுத்தவரை அது யாராலும் தகர்க்க முடியாத கோட்டை. அங்கே வெளியாள் யாரும் நுழைவது கடினம். அர்ஜுனவுக்கும் இலங்கை கிரிக்கெட்டுக்கும் இடையில் இருக்கும் முறுகலுக்கு அடிப்படை இதுதான்.




இலங்கைக் கிரிக்கெட்டின் நிர்வாகம் பற்றி யும், இலங்கை அணியின் பின்ன டைவுக்கு அந்த நிர் வாகமே காரணம் என்றும் அடிக்கடி பேசும் அர்ஜுன வுக்கு புதிய பதவி அதற்காக லைசன் கொடுத்தது போல் இருக்கிறது. பதவி ஏற்று ஒரு சில நாட்கள் கூட செல்லவில்லை, இலங்கையில் நடைபெற வேண்டிய ஆசிய கிண்ணத்தை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு தாரைவார்த்தது பற்றி கேள்வி எழுப்பினார். அது பற்றி இலங்கை கிரிக்கெட் டுக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிட்டார்.

பின்னர் தெரண தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர் இலங்கை கிரிக்கெட் சபையை தாறுமாறாக திட்டித் தீர்த்தார். தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் அவர் இதனை எப்போதும் செய்கின்றபோதும் பொறுப்புள்ள பதவியில் இருப்பவராக அவரது பேச்சு இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஒத்துப்போகவில்லை.

அர்ஜுனவுக்கு எதிராக இரண்டு பில்லியன் ரூபா இழப்பீடு கேட்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்தது. அது பற்றிய கடிதமும் அனுப்பப்பட்டது. என்றாலும் இப்படி நினைத்த உடன் வழக்குக்கு செல்வதை அரசு அனுமதிக்குமா, என்பது பெரிய கேள்வி.

தேசிய விளையாட்டு சபை தலைவர் அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் சபை வழக்கிற்கு சென்றால் அதன் மீது கடும் நட வடிக்கை எடுக்கப்படும் என்கிறார் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலா ளர் டொக்டர் அமல் ஹர்ஷ டி சில்வா.

அரச நிறுவனம் ஒன்று அரச பணத்தை பயன்ப டுத்தி மற்றொரு அரச நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுக்கும் வழக்கம் இல்லை. அவ்வாறு வழக் குத் தொடுக்க வேண்டும் என்றால் தமது சொந்தப் பணத்தில் செய்ய வேண்டும் என்று தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப் பிட்டிருந்தார்.

இந்த மோதல் இத்தோடு முடியவில்லை. ஆசிய கிண்ணத்திற்கான இலங்கை அணித் தேர் விலும் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது. ஆசிய கிண்ணத்திற்கு தேர்வுக் குழு அணியை தேர்வு செய்து 21 நாட்களுக்கு முன்னர் ஒப்புதலைப் பெற விளையாட்டுத் துறை அமைச்சருக்கு அனுப்ப வேண்டும். ஆனால் அது நிகழ்ந்தது 15 நாட்க ளுக்கு முன்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஒப்புதலை வழங்கும் முன் தேசிய விளையாட்டுச் சபையிடம் சம்பிரதாயத்திற்கு ஆலோசனை பெற்றுக்கொள் ளும். இது சம்பியரதாயமாக இருந்தாலும் அர்ஜுன ரணதுங்க அணித் தேர்வில் இழுத்தடிப்புகளைச் செய்ததாக செய்திகள் கசிகின்றன.

அதேபோன்று ஆசிய கிண்ணத் திற்கு செல்லும் இலங்கை கிரிக் கெட் சபை அதிகாரிகளின் சில ரையும் அர்ஜுன தடுத்திருப்பதாக மற்றொரு செய்தி கசிகிறது.



இலங்கை கிரிக்கெட் சபையை பொறுத்தவரை அது யாராலும் தகர்க்க முடியாத கோட்டை. அங்கே வெளியால் யாரும் நுழைவது கடினம். ஜனநாயகம், தேர்தல், வாக்கெடுப்பு என்று கூறியபோதும் கிரிக்கெட் நிர்வா கம் தேர்வு செய்யப்படுவது ஒரு குறிப்பிட்ட குழுவின் இஷ்டத் திற்குத்தான். அதாவது ஜனாதிபதி தேர்தலில் இலகுவாக வெல்ல முடிந்தாலும் கிரிக்கெட் சபை தேர்தலில் வெல்வது இலகுவான காரியமல்ல. அர்ஜுனவுக்கும் இலங்கை கிரிக்கெட்டுக்கும் இடையில் இருக்கும் முறுகலுக்கு அடிப்படை இதுதான். அவர் அடக்க முயலும் காளை அது. அந்தக் கோட்டையை தகர்க்க முற்றுகையில் ஈடு பட்டிருப்பவர் அவர்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை கிரிக்கெட் சபை தலைவராக அர்ஜுன நியமிக்கப் பட்டார். நியமிக்கப்பட்ட நாள் முதல் கிரிக்கெட் சபையின் கட்டமைப்பை மாற்றுவதற்கு அதிரடி முடிவுகளை எடுத்து வந்தார். கடைசியில் வீரர்கள் தேர்வு தொடர்பில் எடுத்த சர்ச்சைக்குரிய முடிவி னால் அந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை வென்று தந்தவர், இலங்கையின் முதல் டெஸ்ட் போட்டி யில் அரைச்சதம் பெற்ற முதல்வர், இலங்கையின் முதலாவ மற்றும் 100 ஆவது டெஸ்ட் போட்டி யில் ஆடியவர் என்று ஏகப்பட்ட சாதனைகளை படைத்திருக்கும் அர்ஜுன ரணதுங்க என்பவரை ஒரு சாதாரண விளையாட்டு வீரராக எடுத்துக் கொள்ள முடியாது. அவரது முடிவுகள் எப்போ தும் பரபரப்பானது, துணிச்சலானது, யாருக்கும் கட்டுப்படாதது.

முரளிக்கு எதிரான நோபோல் கூறியபோது அவர் நடுவருக்கு எதிராக செயற்பட்ட விதமாகட் டும், ஆடு களத்தில் எதிரணியுடன் மோதல்களில் ஈடுபட்டதாகட் டும் எல்லாமே இலங்கை அணிக்கு சாதகமாக முடிந்திருக்கிறது. அது 1996 ஆம் ஆண்டு யாரும் எதிர்பார்க்காமல் இலங்கை உலகக் கிண்ணத்தை வெல் லுவதற்குக் கூட உதவியது. ஆனால் மைதானத்திற்கு வெளியில் அவரது முடிவுகளை முழு மையாக இந்தக் கோணத்தில் பார்க்க முடியாது. அதில் சாதக பாத கங்கள் இருக்கக் கூடும்.

மறுபக்கம் இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் பற்றி பரவலாக குற்றச்சாட்டு கள் உள்ளன. என்றாலும் அது தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்ட சுயாதீனமாக இயங்க தகுதி உடைய தனி நிர்வாகம். அதில் முழுமையாக மூக்கை நுழைக்க முடியாது. அதனை சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது, குறிப்பாக சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் அவதானித்துக் கொண்டிருக்கிறது.

சுயாதீனமான நிர்வாகத்தில் தலையிடுவது என்பதன் உச்ச கட்ட விளைவு இலங்கை கிரிக் கெட்டுக்கு தடை விதிக்கும் அள வுக்கு பாரதூரமானது. அதனை கவனமாகத்தான் கையாள வேண்டும்.

எனவே அர்ஜுனவுக்கும் இலங்கை கிரிக்கெட்டுக்கும் இடையிலான முறுகல் என்பது தனிப்பட்ட இருவரது மோதல் அல்ல. இந்த மோதல் நீண்ட நெடியது என்பதால் இலகுவாக தீர்வு காண்பது என்பதும் கடி னமானது. எதிர்காலத்தில் இது இலங்கை கிரிக்கெட் விளையாட் டுக்கு தலையிடியாக மாறாமல் இருக்கும் அளவுக்கு நல்லது.

### குறிப்பு

## முரளியுடன் சேர்ந்தார் பிரோட்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக கடந்த ஒகஸ்ட் 19 திகதி முடிவுற்ற லோட்ஸ் டெஸ்ட் போட்டியில் ஸ்டுவட் பிரோட், கைல் வரைனின் விக் கெட்டை வீழ்த்தியபோது லோட்ஸில் 100 விக்கெட்டுகளை சாய்த்தவ ராக சாதனை படைத்தார். இதற்கு முன்னர் லோட்ஸில் ஒரே ஒருவர் தான் 100 டெஸ்ட் விக்கெட்டுகளை சாய்த்திருக்கிறார். அது ஜிம்மி அன் டர்ஸன். அவர் அந்த மைதானத்தில் மொத்தம் 117 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.




என்றாலும் ஒரே மைதானத்தில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த் திய சாதனையில் இப்போதைக்கு முத்தைய முரளிதரனை யாராலும் விஞ்ச முடியாது. அவர் கொழும்பு சிங்கள விளையாட்டுக் கழக (எஸ். எஸ். சி) மைதானத் தில் மொத் தமாக 166 விக்கெட்டு களை சாய்த் திருக்கிறார். தவிர கண் டியில் 117 விக்கெட்டு களையும் காலியில் 111 விக் கெட்டுகளை யும் வீழ்த்தி இருக்கிறார். அவரின் சக பந்துவீச்சாள ரான ரங்கன ஹேரத் காலியில் 102 விக் கெட்டுகளை சாய்த்திருக்கி றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2022 ஓகஸ்ட் 28 ஞாயிற்றுக்கிழமை



இலக்கிய நயம் மிக்க
பன்முக ஆளுமையாளர்
கலாபூஷணம்
தமிழ்த்தென்றல்
அலி அக்பர்

Senthooram செந்தூரம்

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# "ஹலோ, கேட்கிறதா?"

"திரு வொட்சன் இங்கே வாருங்கள். நீங்கள் எனக்குத் தேவை" இந்த உப்புச்சப்பில்லாத வார்த்தைகள் தான் தொலைபேசியில் பேசப்பட்ட முதல் வார்த்தைகள். தொலைபேசியை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிராஹாம் பெல், அடுத்த அறையில் இருக்கும் தனது உதவியாளர் வொட்சனை முதல் முறையாக தொலைபேசியில் அழைத்து பேசினார்.

உலக வரலாற்றில் இடம்பெறும் அந்தத் தருணத்தில் அவர் சற்று முன்னேற்பாடாக சில வார்த்தைகளை பயன்படுத்தி இருக்கலாம். அதேபோன்று முதலாவது கைபேசி உரை நிகழ்ந்து இப்போது அரை நூற்றாண்டை நெருங்கிவிட்டது. 1973 ஏப்ரல் 3 ஆம் திகதி மோட்டரோலா ஊழியர் மார்ட்டின் கூபர் மான்ஹட்டனில் இருந்து நியு ஜேர்சியில் இருக்கும் பெல் லப்ஸ் தலைமையகத்தில் தனது சகாவை கைபேசியில் முதல் முறையாக அழைத்தார். இந்த உரையை கேட்டால், கிரஹாம் பெல்லே பராவாயில்லை என்று தோன்றும்.



"உங்களது பக்கம் எனது பேச்சு சரியாக கேட்கிறதா என்பதை அறியவே நான் அழைத்தேன்" என்றார் மார்ட்டின் கூபர். அதனாலோ என்னவோ, கைபேசியில் அழைப்பவர்கள் அனைவரும் இன்றும் கூட, "ஹலோ, கேட்கிறதா?" என்று பேச்சை ஆரம்பிக்கிறார்கள்.





# பயந்தவனுக்கு பறவை கூட பேய்

**இரண்டாம்** உலகப் போருக்குள் அமெரிக்கா நுழைந்து மூன்று மாதங்கள் கூட ஆகி இருக்கவில்லை. ஜப்பானின் பேர்ல் ஹார்பர் தாக்குதலே அமெரிக்காவை உலகப் போருக்குள் இழுத்தது. ஐரோப்பாவில் தீவிரம் பெற்றிருந்த இரண்டாம் உலகப் போர் எங்கேயோ இருக்கும் அமெரிக்காவை, அதன் மக்களையும் பயமுறுத்தியது.

1942 பெப்ரவரி 24 ஆம் திகதி மாலை லொஸ் ஏஞ்சல்ஸில் ஜப்பான் வான் தாக்குதல் நடத்துவதாக ஒரு தவறான செய்தி. பயந்தவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் தான். அமெரிக்காவுக்கும் அப்படித்தான். அன்று இரவு மாத்திரம் 1,440 தடவைக்கு மேல் விமான எதிர்ப்பு குண்டுகள் சரமாரியாக வீசப்பட்டன. அமெரிக்க மக்களும் இதனால் பயந்து நடுநடுங்க ஆரம்பித்தார்கள். விளைவு ஐந்து பேர் உயிரிழந்தனர். இருவர் மாரடைப்பால் உயிரிழந்தார்கள். மூவர் வாகன விபத்தில் பலியானார்கள்.

இந்த தவறான செய்தி எப்படி வந்தது என்று இன்றும் மர்மமாகத் தான் இருக்கிறது. ஒருவேளை பறவையை பார்த்து பயந்திருக்கலாம்!

# சூரியன் என்பது நெருப்பு இல்லை

**சூரியன்** என்றால் நெருப்பை ஒப்பிடுவது வழக்கமான ஒன்று.

ஆனால் அது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்குமான தொடர்பு தான். உண்மையிலே சூரியன் என்பது ஒரு வாயுப் பந்து.

அது ஒவ்வொரு விநாடியும் 700 மில்லியன் தொன் ஹைட்ரஜனை 695 மில்லியன் தொன் ஹீலியமாக மாற்றுகிறது.



இது நிகழும்போது, சக்தியானது காமா கதிர்களை வெளியிடுகிறது, அது ஒளியாக மாற்றப்படுகிறது. எனவே சூரியன் ஒளி மற்றும் வெப்பத்தைக் கக்குறிது.

ஆனால் அது நெருப்பைக் கக்குவதில்லை. ஏனென்றால் நெருப்பு பிறப்பதற்கு சூரியனில் ஒட்சிசன் இல்லை.

# சீனா எனும் இரத்த பூமி

**மனித** வரலாற்றில் பதிவான அதிக உயிரிழப்புக் கொண்ட 10 போர்களில் குறைந்தது ஐந்து சீனாவில் இடம்பெற்றிருக்கின்றன. இதில் இரண்டாம் உலகப் போரில் சீனாவின் சில பகுதிகள் ஜப்பானின் ஆக்கிரமிப்பினால் சந்தித்த கொடூரங்கள் உள்ளடக்கப்படாமலேயே இத்தனை பயங்கரமான போர்களை சீனா சந்தித்திருக்கிறது.

குறிப்பாக மிங் வம்சத்திற்கு எதிரான குயிங் வம்சத்தின் போர் உலகம் காணாத பயங்கரமானது. 1618 இல் தொடங்கிய இந்தப் போர் குயிங் வம்சம் சீனாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய 1863 வரை 45 ஆண்டுகள் நீடித்தது. இதில் மொத்தம் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 25 மில்லியன்.

1850 தொடக்கம் 1864 வரை இடம்பெற்ற டைபிங் கிளர்ச்சியில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 20 மில்லியனைத் தாண்டும். 755–763 இன் ஆன் லுஷான் கிளர்ச்சியில் பலியானோர் எண்ணிக்கை 13 மில்லியன். 1862 தொடக்கம் 1877 வரை நடைபெற்ற டங்கன் கலகத்தினால் பலியானோர் எண்ணிக்கை 10 மில்லியனுக்கு அதிகம். 1927 தொடக்கம் 1950 வரை நீடித்த சீன சிவில் யுத்தத்தில் 7.5 மில்லியன் மக்கள் பலியானார்கள்.



சீன குடியரசு மற்றும் சீன கம்யூனிஸ் கட்சி இடையே இடம்பெற்ற சிவில் யுத்தம் உண்மையில் இன்றும் அமைதி உடன்படிக்கையோ, போர் நிறுத்தமோ இன்றியே முடிவுறுது. தேசியவாதப் படை தாய்வானுக்கு தப்பியோடியது. இதன் எச்சசொச்சமாகத் தான் சீனா மற்றும் தாய்வான் முறுகலைப் பார்க்க வேண்டும்.

வரலாறு நெடுகவும் சீனா பயங்கர போர்களை சந்தித்தாலோ என்னவோ, இன்று அரசுக்கு எதிரான கருத்துகளுக்குக் கூட அங்கு அனுமதி இல்லை.

# விளக்கை ஒளிரச் செய்தாலும் தண்டனை



**வீதியில்** எதிர் பக்கமாக வரும் வாகனங்கள் தனது முன்பக்க விளக்குகள் அதிகம் ஒளிரச் செய்தால் எரிச்சல் தருவது மாத்திரமல்ல விபத்துகளும் நேரக் கூடும். தெற்கு சீனாவில் இதற்கு எதிராக விசித்திரமான வீதிச் சட்டம் ஒன்று உள்ளது. அதாவது இவ்வாறு வெளிச்சத்தைக் கூட்டி வாகனத்தை செலுத்துபவர்களை பிடித்து வாகனத்திற்கு முன்னால் அமரச் செய்து அதே வெளிச்சத்தை ஒரு மணி நேரம் பார்க்கச் செய்யப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்லாது அவர்களுக்கு 44 டொலர் அபராதமும் விதிக்கப்படுகிறது.

# செந்தூர மழலைச் செல்வங்கள்


Madhubani


Dharsil


Lakshimi


Zara


Lalithasri

# செல்ஃபி உலா


Rubi


Shasi


Kaviya


Krishanthi Krisha


Sulakshana


Sakthi


Subathra


Vinas Madhurangga


Nagiah Rajah


Swathy

# கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் எழுதிய நூல் வெளியீட்டு விழா










கொழும்பு சாஹிரா, டி.எஸ் சேனாநாயக்கா, முஸ்லிம் மகளிர் கல்லூரிகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றவரும் சிரேஷ்ட எழுத்தாளருமான ஆசிரியை கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் எழுதிய நமது வரலாற்று ஆளுமைகள் எனும் முதலாவது பாகம் 1 நூல் வெளியீட்டு வைபவம் கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நாடளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நூலின் முதற் பிரதியை முஷான் பவுண்டேசன் தலைவர் முஸ்லிம் சலாஹுதீன் பிரதம அதிதியிடமிருந்து பெற்றுக் கொண்டார். முன்னாள் ஆளுனர் அசாத் சாலி, பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கொழும்பு ஐ.தே.கட்சியின் பிரதிநிதியுமான சபீக் ரஜாப்டீன், முஸ்லிம சமய திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர். கலாநிதி ரவூப் ஸெயின், புனர் வாழ்வு புனரமைப்பு ,வீடமைப்பு திணைக்களத்தின் முன்னாள் பணிப் பாளர் நாயகம் ஏ.எம்.நஹியா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். கவி வாழ்த்துரையை இஸ்லாமிய பாடகி நூஜாஹான் மர்சூர்கும் பாடினார். இந்நூலில் முஸ்லிம் சமுகத்திலும் நாட்டுக்காகவும், கல்விக்காகவும் சேவையாற்றி மறைந்த 150 தலைவர்களது வரலாறு பதியப்பட்டுள்ளது. அறிஞர் சித்திலெப்பை, கலாநிதி ரீ.பி. ஜாயா, கலாநிதி எம். ஏ அசீஸ், நளீம் ஹாஜியார், றிபாய் ஹாஜியார், கலாநிதி எம்.ஏம். சுக்ரி, சேர் ராசிக் பரீட், எம்.எச்.எம். அஸ்ரப், என்.டி.எச்.அப்துல் கபூர், கேட் முதலியார் எம்.எஸ் காரியப்பர். ஏ.சி.எஸ் ஹமீட் உடபட 150 பேர்களின் வரலாறுகள் பதியப்பட்டுள்ளன. (அஷ்ரப் ஏ சமத்)





# அவினியா, சாகித்தியா பரத நாட்டிய அரங்கேற்றம்







கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் இயக்குனருர் நாட்டிய கலைமாமணி ஸ்ரீமதி பவானி குகப்ரியாவின் மாணவிகளான, அவினியா, மற்றும் சாகித்தியா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற மாணவிகளின் நடனத்தோற்றத்தையும், இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக சிறப்பித்த யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக முன்னாள் நடனத்துறை தலைவரும், யாழ்ப்பாணம் நாட்டியகலா கேந்திரா ஸ்தாபக இயக்குனருமான கலாநிதி ஸ்ரீமதி கிருஷாந்தி ரவீந்திரா, கௌரவிக்கப்படுவதையும், நடனத்திற்கான சான்றிதழ் பொற்றுக்கொண்ட மாணவிகளும் அணிசேர் கலைஞர்களையும் காணலாம்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**வேலைக்காரன் 1 :** ஐயாவுக்கு மூளைல ஸ்கேன் எடுக்கணும்னு சொல்லிட்டாங்களாமே.

**வேலைக்காரன் 2 :** அதுக்கு நீ ஏன் பதர்ற?

**வேலைக்காரன் 1 :** இல்லாத விஷயத்துல எப்படி ஸ்கேன் செய்வாங்க!



**முதலாளி:** இங்க நிறையா திருட்டு போகும். அதனால நீ ராத்திரி கண் முழுச்சி கவனிச்சுக்கணும்.

**வேலைக்காரன்:** தூங்கவே மாட்டேன். ஒரு சின்ன சத்தம் கேட்டா கூட நான் முழிச்சிக்குவேன் ஐயா, நீங்க கவலையே படாதீங்க.



**தரகர்:** மாப்பிள்ளை மெகா சீரியல்ல நடிக்கிறாரு..

**பெண்:** அப்ப மாப்பிள்ளை நிரந்தர வேலைல இருக்கார்னு சொல்லுங்க !



**வாடிக்கையாளர்:** வாழைப்பழம் எவ்வளவுப்பா?

**கடைக்காரர்:** பத்து ரூபாய்.

**வாடிக்கையாளர்:** அஞ்சு ரூபாவுக்கு வராதா???

**கடைக்காரர்:** அஞ்சு ரூபாவுக்கு தோல் தான் வரும்.

**வாடிக்கையாளர்:** இந்தா அஞ்சு ரூபா , தோல வச்சிக்கிட்டு பழத்த கொடு.



**வந்தவர்:** என்ன இன்டர்வியூ வந்தவங்க எல்லாருக்கும் தண்ணி கொடுத்து கண்ணுல ஊத்திக்க சொல்றாங்க ஏன்?

**வேலைக்காரர்:** வேல கிடைக்கல்லேன்னா எப்படியிருந்தாலும் இதெல்லாம் வெறும் கண் துடைப்புன்னு சொல்லப்போறீங்க. அதை நாங்க முதலயே பண்ணிட்டா பிரச்சினை இல்ல பாருங்க!



**தரகர்:** கறுப்பா இருக்கிற பொண்ணுக்குப் பத்து பவுண் போடறாங்களாம். ஒரு கால் நொண்டிப் பொண்ணுக்குப் பதினைஞ்சி பவுண் போடறாங்களாம். எது வேணும் ?

**மாப்பிள்ளை வீட்டுகாரர்:** கறுப்புக் கலர்ல நொண்டிப் பொண்ணு பாருங்களேன்.

**வந்தவர்:** அரிசி கிலோ எவ்வளவு?

**கடைக்காரர்:** பதினைஞ்சு ரூபாய்!

**வந்தவர்:** கொஞ்சம் குறைச்சுப் போடக்கூடாதா?

**கடைக்காரர்:** இப்பவே ஒரு கிலோ அரிசிக்கு தொளாயிரம் கிராம் தான் போடுறம்னு எல்லாரும் சொல்றாங்க. இன்னும் எப்படி குறைச்சுப் போடுறது ?



**ஒருவர் :** பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை ஷொக் ஆகிட்டாரே.. அப்படி என்ன சொன்னாங்க?

**மற்றொருவர் :** பொண்ணுக்கு சமைக்கத் தெரியும்னு சொன்னாங்களாம்...

**ஒருவர் :** ???



**திருடன் :** தம்பி ! உனக்கு மிட்டாய் தருகிறேன். உங்க வீட்ல நகைகளை எங்கே வைப்பாங்க சொல்லு..

**சிறுவன் :** அடகுக் கடையிலே !

**திருடன் :** ????



**அமைச்சர் :** மன்னா, எதிரி நாட்டு மன்னர் ஓலை அனுப்பியுள்ளார்.

**மன்னர் :** அரண்மனைக்கு நாம் ஏற்கனவே கொன்கிறீட் போட்டாச்சு ஓலை வேண்டாம். திருப்பி அனுப்பிவிடும்!



**ஒருத்தி :** என்னுடைய மொபைல் பில் எவ்வளவு ?

**கோல் சென்டர் பெண் :** சார் 123னு டைப் பண்ணி கால் பண்ணினால் உங்களுடைய கரன்ட் (current) பில் எவ்வளவு என்று தெரிந்து கொள்ளலாம்.

**ஒருத்தி :** ஸ்டுபிட் ! என்னோட மொபைல் பில்லைக் கேட்டா, கரண்ட் பில்லைப் பத்தி சொல்றியே !

### இலக்கிய சொற்பொழிவு, பட்டிமன்றம், கவி அரங்கம் என

# பன்முகமாய்ச் சோபிக்கும் கலாபூஷணம் தமிழ்த்தென்றல் அலி அக்பர்



தலைநகரின் தமிழ் இலக்கிய வட்டத்தில் கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் அவர்களுக்கு ஒரு தனியான இடமுண்டு. இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கவி அரங்கம் எனப் பன்முகமாய்ச் சோபிக்கும் இவர் பழகுவதற்கு மிக இனிமையானவர். கொழும்பு மாநகரிலும் இலங்கையின் பல பாகங்களிலும் பல கவி அரங்குகளைத் தலைமை தாங்கி நடாத்தி உள்ள இவர் இலங்கை ரூபவாஹினியின் நேத்ரா அலைவரிசையில் பல கவி அரங்குகளை நடாத்தி நாடளாவிய ரீதியில் அறியப்பட்டவர். கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழாக்களில் பன்முக நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருபவர்.



கவிஞர் பிறைசூடன் தலைமையில் கம்பன்விழா கவியரங்கு...

கொழும்பு புறக்கோட்டையின் வர்த்தகத்துறையில் அமிழ்ந்திருந்தாலும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத் தலைவராகவும், கொழும்பு முத்தமிழ் மன்றத்தின் செயலாளராகவும் இருந்து இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கும் சிறப்புடைய இவரை ஓர் இனிய மாலைப் பொழுதில் பேட்டி கண்டோம்.

**◆ உங்களது ஊர் விபரம், ஆரம்ப காலம் பற்றிச் சொல்லுங்களேன்?**

செழுமை மிகுந்த சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் வறக்காப்பொளை எனது ஊர். பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி என் ஆரம்பப் பள்ளி. க.பொ.த (சா/த) வரை அங்கு தான் பயின்றேன். பாபுல் ஹஸன் மேடைதான் என்னைப் பயிற்றுவித்த முதல் மேடை. அந்தச் சிறிய மேடையின் நான்கைந்து படிகள்தான் நாடளாவிய ரீதியில் பல மேடைகளிலும் நான் படியேறக் கால்கோளாக அமைந்தன. அங்கே எனக்கு ஆசான்களாக இருந்து வழிகாட்டிய மர்ஹூம்களான ஏ.சி.எல்.எம். புஹாரி, எம்.எல்.எம். ஜெலீல், எம்.ஐ.ஜுனைதீன், உவைஸுல் கர்ணைன், எம்.ஜே.எம்.அனஸ், எம்.ரி.அபுல் ஹஸன், மறைந்த அதிபர்களான ஏ.எல்.எம்.பாரூக், எஸ்.எச்.எம்.யாஸீன் ஆகியோருடன் இன்றும் ஆலோசனை கூறி வழிகாட்டும்எம்.எம்.எம். ஆமிர் ஆகியோர் என் வாழ்வில் மறக்க முடியாதவர்கள்.



ஒன்றுவிட்ட அண்ணன் S.H.M.நிஸார்

**◆ உங்களது குடும்ப விபரங்கள் பற்றிச் சொல்ல முடியுமா?**

ஆம், எனது தந்தையார் புலவர் அ. சேகுமுஹம்மது மரிக்கார். தாயார் ஹஸன் பீவி. தாயாரை என் ஒன்பது வயதிலும் தந்தையை என் நாற்பது வயதிலும் இழந்தேன்.

ஐம்பது வருடங்களுக்கு மேல் எனக்குத் தாயாக இருந்த என் சிற்றன்னை றஹ்யா பீவி அவர்களைச் சென்ற வருடம் இழந்தது என் அண்மைக் காலச் சோகம்.

எங்கள் குடும்பத்தில் என்னையும் சேர்த்து எட்டுப்பேர். எனக்கு மூன்று சகோதரிகள், நான்கு சகோதரர்கள். என் மனைவி இன்றும் என் முதல் ரசிகை மக்ஸூதா யூஸுப். எனக்கு இரண்டு ஆண் மக்கள். மூத்தவர் சித்தீக் அஹ்மத் அமானா வங்கியில் Vice President வைஸ் பிரசிடனட் ஆக இருக்கிறார்.

எனக்கு மகளாக இறைவன் தந்த மருமகள் ஷபாமா ஷாஹுல் ஹமீத். இவர்களுக்கு ஷாஹித், ராஷித் என்று இரண்டு ஆண் பிள்ளைகள். என் பேரப் பிள்ளைகள் இருவரும் றோயல் கல்லூரியில் பயின்று வருகிறார்கள். இளைய மகன் ஷாமில் அஹ்மத் அமானா தகாபுல் நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் பொறுப்பாளராக இருக்கிறார்.

**◆ உங்களது தமிழ் ஆர்வத்திற்கு காரணமாக அமைந்தவர்கள் பற்றிச் சொல்லுங்களேன்?**

தாய் தந்த தமிழ் என்று தகையோர்கள் சொல்வார்கள். நான் 'என் தந்தை தந்த தமிழ்' என்று தாராளமாய்ச் சொல்வேன். பக்கத்தில் இருந்து எந்தன் தொடையில் கிள்ளிக் கிள்ளி தொடர்ந்து தமிழ்க் கவிதைகளை சொல்லிச் சொல்லித் தருகையிலே சில வேளைகளில் தொல்லையாயும் நினைத்ததுண்டு.



கம்பன் கழகம் நடத்திய கவிக்கோ அப்துல் ரகுமானின் சிலப்பதிகார தொடர்களுக்கு தலைமை தாங்கிய போது...

ஆனால் அந்த அன்புத் தொல்லைதான் தள்ளித் தள்ளி என்னைத் தமிழின் எல்லைக்குள் கொணர்ந்து சேர்த்தன. சீறாப்புராணம், ஞானப்புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானப்பூட்டு எனப்பல இஸ்லாமிய இலக்கியங்களையும் நாலடியார் போன்ற நீதி நூல்களையும் முதலில் தந்தையின் மூலமே பயின்றவன் நான்.

உயர்தரம் பயில கொழும்பு மருதானை ஸாஹிராக் கல்லூரியில் இணைந்த பின் செல்வி ஜெயராஜசேகரம் (அப்போது) அவர்களின் வழிகாட்டல் கிடைக்கிறது.



பீ.எஸ். அப்துல் கனி



அல்ஹாஜ் கே.எம்.எஸ்.புஹாரி

இஸ்லாமிய இலக்கியங்கள் பயின்றிருந்த எந்தனுக்கு இதர இலக்கியங்கள் இசைந்த இடம் ஸாஹிராதான்.

வள்ளுவனும் கம்பனும் என் வரம்பு வந்து குறுக்கிடவும், பாரதியின் கவிவரிகள் என் நரம்புகளை முறுக்கிடவும் முளைத்த தமிழ் ஆர்வம் முழுமை பெற்றதவ்விடம் தான். திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் பரிச்சயமாகினேன்.



குடும்பம்...

இதுதான் எனது இலக்கியத்துறைக்கான அடித்தளம்.

**◆ உயர்தரம் பயின்றபின் எப்படி உங்கள் தமிழ்ப்பணி தொடர்ந்தது?**

கொழும்பு வந்தபின் எனக்குக் கிடைத்த நண்பர்கள் கவிமணி நஜ்முல் ஹுசைன், பாரம்பரியம் புகழ்எம்.எஸ்.எம்.ஜின்னா இருவரும் எனக்குக் கொழுகொம்பாக இருந்து ஒத்தாசை புரிந்தவர்கள்.

இவர்களின் மூலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் அப்போது தயாரிப்பாளராக இருந்து பின்னர் பணிப்பாளர் வரை உயர்வு பெற்றுப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஹாபிஸ் எஸ்.எம்.ஹனிபா அவர்களது தொடர்பு ஏற்பட, இவர்களின் தூண்டுதலால் அப்போது என் நண்பர்களாக இருந்த மர்ஹூம் எம்.எம்.ஜமால்தீன் மற்றும் எம்எம்.பாயிஸ், எம்.அஹ்மத்மொஹிதீன், ஆ.வு.ஆ. எம்.ரி.எம். ஸரூக் (கனடா), எம்.எம்.ரபாய்தீன் ஆகியோரும் இன்னும் சில நண்பர்களும் இணைந்து எனது தலைமையில் ஸ்ரீ லங்கா இஸ்லாமியக் கலை இலக்கிய மன்றத்தை உருவாக்கி அதன் மூலம் பணியாற்றி வந்தோம்.

**◆ புறக்கோட்டை வர்த்தகத்துறையில் எப்படி இணைந்தீர்கள்?**

நான் கொழும்பு வந்து உயர்தரம் பயில்வதற்கு ஒத்தாசை புரிந்தவர்கள் எனது மச்சான் முறையான பி.எஸ். அப்துல் கனி, ஒன்றுவிட்ட அண்ணன் எம்.எஸ்எம்.நிஸார் ஆகியோர் ஆவார்கள். அப்துல் கனி அவர்களது வர்த்தக ஸ்தாபனம் அப்போது பேங்க்சால் வீதியில் இருந்தது. அங்கே தங்கி இருந்துதான் நான் ஸாஹிராக் கல்லூரியில் பயின்றேன்.

அந்த வகையில் 1967ஆம் ஆண்டில் இருந்து நான் கொழும்பு சம்மாங்கோட்டுப் பள்ளியின்'மஹல் லாவாசி' ஆனேன். உயர்தரம் முடித்த பின் அதே புறக்கோட்டையில் இரண்டாம் குறுக்குத்தெரு புஹாரி அன்ட் கம்பனியில் இணைந்தேன். அதன் ஸ்தாபகர் மர்ஹூம் அல்ஹாஜ் கே.எம்.எஸ்.புகாரி அவர்கள் என்னைத் தனது மகன் போல அரவணைத்து ஆதரவு காட்டியவர். என்னுடைய திருமணம் (நிகாஹ்) கூட 1980ஆம் ஆண்டு சம்மாங்கோட்டுப் பள்ளியில் தான் நடைபெற்றது. இது எனக்குக் கிடைத்த பெரும் பேறு.

**வர்த்தகத் துறையில் இருந்து கொண்டு இலக்கியத் துறையிலும் சோபிப்பது எப்படி சாத்தியமாயிற்று?**

நீங்கள் நினைப்பது சரிதான். சம்சார சாகரமும், சம்பாத்திய சாகரமும் குறுக்கிட தமிழ்ப் பணிகளில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்ட வேளையில், அக்காலகட்டத்தில் மத்திய கொழும்பில் கொடிகட்டிப் பறந்த தமிழ்த் தொண்டாளர் அண்ணன் (மர்ஹூம்) கம்பளை தாசன் சாஹுல் ஹமீது என்னை மீண்டும் இழுத்து வந்து தனது முத்தமிழ் மன்றத்தின் பணிகளிலே கோர்த்து விட்டார். அவரது ஏற்பாட்டாலே இலக்கியச் சொற்பொழிவுகள், கவி அரங்கு, பட்டிமன்றம் என்று பல நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்ற வேளையில் கொழும்புக் கம்பன் கழகத்தின் ஸ்தாபகர் கம்பவாரிதி ஜெயராஜ் ஐயா அவர்களது கடைக்கண் பார்வை என்மீது படுகிறது. கம்பளையின் கைபட்டு இந்தக் கரித்துண்டு பளபளக்க மணிபோல எனைத் தீட்டி மகுடத்தில் வைத்தவர் அவர்தான்.



அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேத்ரா கவியரங்கு...

***கம்பன் கழக மேடைகளில்***
***தொடக்க உரை தந்து – பின்***
***தலைமையும் தலைமை***
***உரையும் தந்து***
***நான் தலை மயிரைப் பிய்த்துத்***
***தயாராக வென்று – ஒரு***
***சுழலும் சொற்போரிலும்***
***சுழற்றிப் போட்டெடுத்து***
***பட்டி மன்றத்தில் தள்ளி***
***தட்டிக் கொட்டிப் பார்த்துப்***
***பாராளுமன்றத்திலும்***
***ஒரு சரியாசனம் தந்து – ஆம்***
***செந்தமிழ்ப்***
***பாராளுமன்றாசனம்***
***தந்தே பரீட்சித்து***
***இறுதியாய்க் கவி அரங்கிலும்***
***நுழைத்து எனைமெருகேற்றி***
***வைத்தது கொழும்புக்***
***கம்பன் கழகம்***

அது மாத்திரமல்ல அவர்கள் 2003ஆம் ஆண்டு நடாத்திய கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களது சிலப்பதிகாரத் தொடர் உரை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகின்ற பாக்கியத்தையும் எனக்கு வழங்கினார்கள் கொழும்பு கம்பன் கழகத்தார்.

**கவி அரங்கு என்றதும் ஞாபகம் வருகிறது – கவியரங்குத் தலைமையில் உங்கள் பெயர் விசேசமாகப் பேசப்படுகிறதே அதுபற்றி:**

விசேசம் என்று எதுவும் இல்லை –நான்தலைமைக்கு அழைக்கப்பட்டால், இதர கவிஞர்களுடன் கலந்தாலோசித்து ஒரு கூட்டு முயற்சியாகச் செயல்பட்டுக் கவி அரங்கை நடாத்துவதால் நாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரமங்களுக்குப் பலன் கிடைக்கிறது.கவி அரங்குகளுக்கு ஒரு செழுமையும் முழுமையும் கிடைக்கிறது. அதன் பெருமை கவி அரங்கில் இணைந்துகொள்ளும் சக கவிஞர்களையும் சாரும்.

**உங்களுக்கு கலாபூஷணம், தமிழ்த் தென்றல் என்பவற்றோடு 'நேத்ரா புகழ்' என்றும் ஓர் அடைமொழி வழங்கி வருகிறதே. அது எப்படி?**

இலங்கை ரூபவாஹினி என்தாய் வீடு போல. அதன் நேத்ரா அலைவரிசையில் முஸ்லிம்களின் விசேஷ தினங்களில் தொடர்ந்து பதினொரு வருடங்கள் கவி அரங்குகளை நடாத்தி வந்திருக்கிறேன். இது நான் பெற்ற பெரும்பேறு. ரூபவாஹினி முஸ்லிம் பிரிவின் பணிப்பாளர் எம்.கே.எம்.யூனுஸ், மற்றும் தயாரிப்பாளர்களான மபாஹிர் மௌலானா, முபாறக்மொஹிதீன் ஆகியோருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**இதர அலைவரிசைகளில் கவி அரங்குகள் நடாத்தி இருக்கிறீர்களா?**



முன்னாள் தமிழ்ச்சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் கௌரவம்

ஆம், சக்தி டிவியில் தம்பி ஸியாவுல் ஹஸன், வசந்தம் டிவியில் தம்பி கவிஞர் பொத்துவின் அஸ்மின் ஆகியோர் எனக்கு வாய்ப்புத் தந்திருக்கிறார்கள். மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையிலும் நாடளாவிய ரீதியில் பல மேடைகளிலும் கவி அரங்குகளை நடாத்தி இருக்கிறேன்.

**இவற்றுள் உங்களால் மறக்க முடியாத கவி அரங்குகள் என்று ஏதும் உள்ளதா?**

எல்லாமே என்னால் மறக்க முடியாதவைகள்தான். ஏனென்றால் ஒவ்வொரு கவி அரங்கிலும் கவி உலக ஆளுமைகள், அதே நேரம் புது முகங்கள் என்று பலரும் என்னோடு ஒத்துழைத்து உதவிபுரிந்திருக்கிறார்கள்.

உங்கள் கேள்விக்கு பதிலாகச் சொல்வதானால்ரூபவாஹினி கவி அரங்குகளில் பாராளுமன்ற அங்கத்தவர்களுடன் நான் இணைந்து நடாத்திய மீலாத் கவி அரங்கைக் குறிப்பிடலாம்.

இதில் அமைச்சர் றவூப் ஹக்கீம், மற்றும் ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி.,பஷீர் சேகுதாவூத் எம்.பி., ஹுனைஸ் பாரூக் எம்.பி. ஆகியோர் என்னோடு சக கவிஞர்களாகக் கலந்து கொண்டனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் சர்வ சமயக் கவி அரங்காக இடம்பெற்ற மீலாத் கவி அரங்கைக் குறிப்பிடலாம். இதில் பௌத்த கவிஞராக மும்மொழி வித்தகர் கவிஞர் ஹேமச்சந்திர பத்திரன, இந்து சமயக் கவிஞராக கலைஞானச் சுடர் தேஜாஸ்வராலயா சுபாஷினி பிரணவன், கிறிஸ்தவக் கவிஞராக காவ்யஸ்ரீ மன்னார் அமுதன், முஸ்லிம் கவிஞராக Dr. அஸாத் எம். ஹனிபா ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்காக எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா றினோஸியா அவர்களுக்கு என் நன்றிகள்.

மேடைக் கவி அரங்குகளில் 2016ஆம் ஆண்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டிற்கு வருகை தந்திருந்த இந்தியக் கவிஞர்களையும் இலங்கைக் கவிஞர்களையும் இணைத்து சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் கரவாகு கலை இலக்கிய மன்ற ஏற்பாட்டில் இடம்பெற்ற கவி அரங்கையும் குறிப்பிடலாம். இதற்காக கவிஞர் எஸ். ஜனூஸ் என் நன்றிக்குரியவர்.

அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை கொழும்பு முத்தமிழ் மன்றம், பட்டிமன்றம், கருத்தரங்கு, கவி அரங்கு என்று முப்பெரும் விழாக்களாக நடாத்தியது. பட்டிமன்றத்திற்கு கலைஞர் கம்பளைதாசனும், கருத்தரங்கிற்கு முத்தமிழ் மன்றத் தலைவர் ஆர். வைத்தமாநிதியும் தலைமைதாங்க, கவி அரங்கு எனது தலைமையில் நடைபெற்றது.

கம்பவாரிதி ஜெயராஜ் ஐயா, புரவலர் ஹாஷிம் உமர், தெ. ஈஸ்வரன் ஐயா, பொலிஸ் அத்தியட்சகர் அரசரத்தினம், தேவி ஜுவலர்ஸ் அதிபர் என். சீனிவாசகம், ரவி ஜுவலர்ஸ் அதிபர் என். ரெங்கராஜன், புரவலர் அப்துல் கையூம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கவியரங்கில் கவியுலக ஜாம்பவான்களான பத்து கவிஞர்கள் என் தலைமையில் கவிபாடியதை இன்று நினைத்தாலும் நெஞ்சம் நிறைகிறது.



அறிவொளிமன்றம் கௌரவிப்பு

**தமிழகத்தில் நடந்த ஒரு கவி அரங்கின் போது சபையோர் உங்களிடம் 'வன்ஸ்மோர்' கேட்டதாக ஒரு செய்தி படித்த ஞாபகம் இருக்கிறது. அது பற்றி செந்தூரம் வாசகர்களுக்கு விளக்க முடியுமா?**

நிச்சயமாக,உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய எட்டாம் மாநாடு தமிழகத்தின் கும்பகோணத்தில் இடம்பெற்ற போது இலங்கையின் சார்பாகக் கவி அரங்கில் கலந்து கொண்டேன். 'மண்பாடும் நபிகளார் பண்பாடு' எனும் பொதுத் தலைப்பில் நான், இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத் திருப்புமுனையாக அமைந்த ஹுதைபிய்யா உடன்படிக்கை நிகழ்ந்த ஹுதைபிய்யா மண்ணாக மாறிப் பாட வேண்டும். என் கவிதையின் ஆரம்ப விளிப்புகளுக்குப் பின் நான் தலைப்புபற்றி விளக்கி ஆரம்பித்த பிரவேசம் சபையோரின் உள்ளத்தைக் கவர, அந்த வரிகளை மீண்டும் சொல்லும்படி சபையோர் 'வன்ஸ்மோர்... வன்ஸ்மோர்' என்று வேண்டுகோள் விடுக்க, ஏற்பாட்டாளர்கள் நேரக்கட்டுப்பாட்டில் கண்டிப்பாக இருந்ததை அறிந்திருந்த நான் சபையையும் தலைவரையும் பார்த்தவண்ணம் தயக்கம் காட்ட,என் தயக்கத்தை உணர்ந்த சபை மீண்டும் 'வன்ஸ்மோர்' என்று ஆர்ப்பரித்தது.

அப்போது தலைமை தாங்கிக் கொண்டிருந்த மலேஷியக் கவிஞர் சீனி நெய்னார் முஹம்மத் அவர்கள் சரி என்று ஒரு சமிக்ஞை தர நான் மீண்டும் அந்த வரிகளைப் பாடினேன். அந்தக் கவி அரங்கில் என் பங்களிப்பு பற்றி கவிக்கோ அப்துல் ரகுமான் உட்பட மதுரை சாய்பு மரைக்கார் எங்கள் கல்விமான் மர்ஹூம் எஸ்.எச்.எம். ஜெமீல் ஆகியோரும், சபையோரும் என்னை வெகுவாகப் பாராட்டினார்கள். அந்த வகையில் கும்பகோண மாநாடு எனக்கு மிக விசேஷ புகழைக் கொண்டு வந்தது. அதன் கவி அரங்கிற்கு என் பெயரை முன்மொழிந்த கவிஞர் டாக்டர் தாஸிம் அஹ்மது, மணிப் புலவர் மருதூர் ஏ. மஜீத் ஆகியோருக்கு நான் நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

**இறுதியாக வளரும் இளம் கவிஞர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?**

கவிதை கடினமானது அல்ல. ஆனால் அது எல்லோருக்கும் கைவருவதும் இல்லை. அழகிய ஒரு கவிதையை ரசிக்கும் ரசனை இருக்கிறதா? இது போன்று நாமும் எழுதலாமா என்ற எண்ணம் வருகிறதா? உங்களுக்குள்ளே ஒரு கவிஞன் ஒளிந்து இருக்கிறான். அவனை வெளியே கொண்டுவாருங்கள். எழுதுங்கள், எழுதுங்கள். எதுகை மோனைகள் எதுவுமே வேண்டாம்.எதுகைவருகிறதோ அதை எழுதுங்கள். ஆனால் உங்கள் முதல் கவிதைக்கே முழுப் பரிசும் எதிர்பார்க்காதீர்கள். குயிலுக்குக்கூட தன் முதல் கூவலுக்குப் பரிசு கிடைப்பதில்லை தண்டனை தான் கிடைக்கும்.

***'கொத்துக் கொத்தாகக்***
***கனி வந்து கொட்டும் என்று***
***குயில் குஞ்சு முதன்***
***முதலில் கூவும்***
***காக்கையின்***
***கொட்டுத்தான் பரிசாக மேவும்.'***



தந்தை புலவர்
அ.சேக் முஹம்மத் மரிக்கார்

உங்கள் கவிதை நன்றாக இருக்கிறது என்று நான்கு பேர் பாராட்டினால் அதுவே பெரிய பரிசு. விருதுகள் பின்னாலே விரைந்து வரும் !

**இன்றைய இறுக்கமானசூழ்நிலையில் தலைநகரில் தமிழ் பணிகள் எப்படி இருக்கின்றன?**

இறுக்கமான சூழ்நிலை என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள் உண்மைதான். இருப்பினும் எங்களது வலம்புரி கவிதா வட்டம் மிகக் கூடிய அளவில் தனது தமிழ்ப் பணிகளைத் தொடர்ந்து வருகிறது. தவிர்க்க முடியாத அல்லது ஒன்று கூட முடியாத சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற எல்லா மாதங்களிலும் அதன் பௌர்ணமிக் கவி அரங்கு இயங்கி வருகிறது. ஏன் கொறோனா நடைமுறைகள் உச்சநிலையில் இருந்து, ஒன்று கூட முடியாத சூழ்நிலையிலும் கூட நாம் ஸூம் அமைப்பை பயன்படுத்தி கவியரங்குகளை நடாத்தினோம். அந்தவகையில் உலகிலேயே முதலாவது ஸூம் கவியரங்கினை நடாத்திய பெருமை வலம்புரி கவிதா வட்டத்திற்குக் கிடைத்த வேளையில், அக்கவியரங்கிற்குத் தலைமை தாங்குகின்றபோது எனக்குக் கிடைத்தது. இந்த ஸூம் கவியரங்குகளில் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும் கவிஞர்கள் கலந்து கொண்டது விசேஷ அம்சமாகும்.



அண்ணா நூற்றாண்டுக் கவியரங்கில் அரச ரத்தினத்திடமிருந்து கௌரவம் பெறும் போது...

இவற்றை முன்னின்று நடாத்தும் வகவத் தலைவர் கவிமணி நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் பொருளாளர் கவிஞர் ஈழகணேஷ், ஸ்தாபகஉறுப்பினர் எஸ்.ஐ. நாகூர் கனி ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**எம்.எம்.முபாரக். மன்னார்.**



**கேள்வி:** நடிகர்திலகம் சிவாஜி கணேசனுக்காகTMSபாடிய முதல் பாடல் எது..!அது எந்த படத்தில் இடம் பெற்றது?

**பதில்:** 'தூக்குத் தூக்கி'' படத்தில் இடம்பெற்ற 'ஏறாத மலை தனிலே..'என்ற பாடலைத் தான் சிவாஜி கணேசனுக்காக Tmsமுதல் முறையாக பாடியிருந்தார். பாடலை ஸ்டுடியோவில் TMS பாடிக்கொண்டிருந்த போது ரிக்கார்டிங் தியேட்டருக்கு சிவாஜி வந்தார்.Tmsகுரலைக் கேட்டுவிட்டு மெய் மறந்து போனார் அவர்.

"நன்றாக பாடுகிறீர்கள்... இனிமேல் எனது படங்களுக்கு நீங்கள்தான் பாடவேண்டும்" என்று Tmsசிடம் சொன்னாராம் சிவாஜி கணேசன். ஒரு பேட்டியின் போது டி.எம்.சௌந்தரராஜனே சொன்ன தகவல் இது.

**எம்.மாகிரட். எலபடகம.**

**கேள்வி:** நடிகை பிரியாமணியும் வில்லியாக நடிக்க ஆரம்பித்து விட்டாராமே.. உண்மையா..?



**பதில்:** உண்மைதான். இயக்குநர் இமயம் பாரதிராஜா இயக்கத்தில் 2004ஆம் ஆண்டு வெளியான 'கண்களால் கைது செய்' எனும் திரைப் படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமானவர் நடிகை பிரியாமணி. திருமணத்திற்குப் பிறகு திரை உலகை வி ட்டு ஒதுங்கியிருந்த இவர் தற்போது தமிழில் 'கொட்டேஷன் கேங்'

என்றபடத்தில் கதாநாயகிகளுள் ஒருவராக நடித்துவருகிறார். அத்துடன் அட்லீ இயக்கத்தில் நயன்தாரா ஷாருக்கான் நடிப்பில் தயாராகி வரும் 'ஜவான்'படத்திலும் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார்.இந்நிலையில் தெலுங்கில் முன்னணி நடிகரான அல்லு அர்ஜுன் நடிப்பில் வெளியாகி வெற்றி பெற்ற'புஷ்பா'படத்தின் இரண்டாம் பாகத்தில் இவர் வில்லியாக நடிக்கக் கூடுமெனத் தெரியவருகிறது.விரைவில் அதிகாரப் பூர்வமான அறிவிப்பு வெளிவரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.இந்தப் படத்தில் நடிகர் விஜய் சேதுபதி வில்லனாக நடிக்க இருப்பதாகவும் அவருக்கு தங்கையாக பிரியாமணி நடிப்பதாகவும் படக்குழுவினர் தெரிவித்துள்ளார்கள்..ஷாருக்கான் மற்றும் அல்லு அர்ஜுனுக்கு வில்லியாக நடிக்கும் பிரியாமணிக்கு ரசிகர்கள் இப்போதே. ஆதரவளிக்கும் தொடங்கி விட்டார்கள்.

**ஆர்.கே.சுதாகர். வத்தளை.**

**கேள்வி:** 'விருமன்'படத்தின். மூலம் அறிமுகமான இயக்குநர் சங்கரின் மகள் அதிதிக்கு சிலரிடமிருந்து எதிரிப்பு கிளம்பியுள்ளதாமே... இது பற்றி அவர் என்ன கூறுகிறார்?



**பதில்** ;"பொலிவுடன் திரையுலகைப்போல் தமிழ் திரையுலகிலும் நட்சத்திர வாரிசுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இது தவிர்க்கப்படவேண்டும்" என நடிகை ஆத்மிகா ஆவேசமாக இணையத்தில் கருத்தொன்றை பதிவிட்டிருக்கிறார். அவர். சங்கரின் வாரிசான அதிதியைத் தான் குறிப்பிட்டு தாக்கிப் பேசியிருக்கிறார் என்றாலும் தமிழிலும் அதிதிக்கு எதிர்மறையான வரவேற்பு இருப்பதை பலரும் உணரத் தொடங்கி இருக்கிறார்கள். இதைதகர்க்கவேண்டுமெனில் அவர் நடிப்பில் அடுத்து தயாராகும் 'மாவீரன்' வெளி வந்த பிறகு தான் நிலைமை என்ன என்று தெரியவரும். ஏனெனில் நடிகை அதிதி சங்கர் "என் தந்தை பணியாற்றிய துறையில் நானும் பிரவேசிப்பதை பெருமிதமாக உணர்கிறேன். கடுமையாக உழைத்து என்னுடைய சிறந்த பங்களிப்பை வழங்கி திரைத்துறையில் என்னுடைய தந்தையார் ஈட்டிய நற் பெயரை மேலும் பெருமைப் படுத்துவேன். தொடர்ந்து நடிகையாக பயணிப்பேன். என்னுடைய பயணத்தில் மொழி தட்டையாக இருக்கக் கூடாது என நினைக்கிறேன். அதனால் நல்ல கதை திரைக்கதையுடன் நடிக்கும் வாய்ப்பு வந்தால் எந்த மொழியாக இருந்தாலும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்." என்றார் நடிகை அதிதி சங்கர்.

'விருமன்'படத்தில் கார்த்தியின் ஜோடியக அறிமுகமான இவர் அந்தப் படத்தில் ஒரு பாடலையும் பாடி பின்னணி பாடகியாகவும் உருவாகி இருக்கிறார்.

இதைத் தொடர்ந்து சிவகார்த்திகேயன் நடிப்பில் தயாராகிவரும் "மாவீரன்'எனும் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

**ஆர்.எஸ்.ராஜா. தியத்தலாவ.**

**கேள்வி:** நல்ல மது போதையில் இருந்தபடியே கவிஞர் வாலி ஒரு பாடல் எழுதினாராமே...அது எந்த. பாடல் என்று உங்களுக்குத் தெரியுமா?



**பதில்:** ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த' சர்வர் சுந்தரம்'படத்துக்காகத்தான் கவிஞர் வாலி அந்தப் பாடலை எழுதினார்.நடிகர் நாகேஷ் நாயகனாக நடித்த படம். கே.ஆர்.விஜயா, முத்துராமனும் ஜோடியாக நடித்திருப்பார்கள். பாடல் வரிகள். என்ன தெரியுமா"அவளுக்கென்ன அழகியமுகம்...அவனுக்கென்ன இளகிய மனம்!"

இந்த பாடலுக்கு பின்னால் பல புதுமைகளும் ஒரு வரலாறும் இருக்கிறது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**



# மகனுக்காக இணைந்த தனுஷ் – ஐஸ்வர்யா

மூத்தமகனின் பள்ளி விளையாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தனுஷ் ஐஸ்வர்யா மகன்களுடன் இணைந்து குடும்பமாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

நடிகர் தனுஷ் தமிழ் திரைத்துறை மட்டுமல்லாது இந்திய அளவில் முன்னணி நடிகராக வலம் வந்து கொண்டிருக்கிறார், ஹாலிவுட் படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார். தமிழ் திரையுலகில் முன்னணி நடிகரான இவர், நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவை, கடந்த 2004ம் ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு, யாத்ரா, லிங்கா என 2 மகன்கள் உள்ளனர். இந்நிலையில் 18 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்த இருவரும் கடந்த ஜனவரி மாதம் பிரிவதாக அறிவித்தனர். இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பதிவில், கடந்த 18 ஆண்டுகள் தம்பதியாகவும், பெற்றோராகவும் ஒன்றாகப் பயணித்ததாகவும், தற்போது தானும், ஐஸ்வர்யாவும் அவரவர் பாதையில் தனித்தனியாகப் பிரிந்து செல்ல முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தங்களது தனிப்பட்ட சுதந்திரத்திதற்கு மதிப்பளிக்கும்படி அனைவரையும் கேட்டுக் கொள்வதாகவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இந்த மணமுறிவை ஐஸ்வர்யாவும் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் உறுதிப்படுத்தி இருந்தார். இவர்களின் பிறிவு குறித்து இன்றளவும் ரசிகர்களால் சமூக வலைத் தளங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இந்நிலையில் தான் இவர்கள் குடும்பத்துடன் சேர்ந்து இருக்கும் புகைப்படம் வெளியாகி வைராலாகி வருகிறது. தனது மூத்தமகனின் பள்ளி விளையாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இருவரும் தமது மகன்களுடன் இணைந்து குடும்பமாக எடுத்துக்கொண்ட புகைப்படம் தான் தற்போது சமூக வலைத் தளங்களில் ரசிகர்களால் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

இந்த புகைப்படத்தில் பிரபல பாடகர் விஜய் ஏசுதாஸ் மற்றும் அவர் மனைவியும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.



# தனிமையே இனிமை...!
## தன்னைத் தானே திருமணம் செய்துகொண்ட நடிகை

நடிகை கனிஷ்கா தற்போது தன்னைத் தானே திருமணம் செய்துகொண்டு அதிர்ச்சி கொடுத்துள்ளார். சென்னை தன்னைத் தானே திருமணம் செய்துகொள்வது என்பது சமீபகாலமாக டிரெண்டாகி வருகிறது. கடந்த ஜீன் மாதம் குஜராத் மாநிலம் பரோடா பகுதியைச் சேர்ந்த ஷாமா பிந்து என்கிற 24 வயது பெண் ஒருவர் தன்னைத் தானே திருமணம் செய்துகொண்டது மட்டுமின்றி ஹனிமூன் சென்றும் அதிர்ச்சி ஏற்படுத்தினார். இந்நிலையில், தற்போது அதேபோல் மற்றொரு சம்பவம் அரங்கேறி உள்ளது. இந்தி சீரியல்களில் நடித்து பிரபலமானவர் கனிஷ்கா சோனி. குறிப்பாக இவர் நடித்த தியா அவுர் பாத்தி ஹம் என்கிற சீரியல் தமிழில் என் கணவன் என் தோழன் என்கிற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு வெளியாகி தமிழ் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது. நடிகை கனிஷ்கா தற்போது தன்னைத் தானே திருமணம் செய்துகொண்டு அதிர்ச்சி கொடுத்துள்ளார். சில தினங்களுக்கு முன்னர் கழுத்தில் தாலி மற்றும் நெற்றியில் குங்குமத்துடன் வீடியோ வெளியிட்ட அவர் தான் சுயநினைவோடு தான் இந்த முடிவை எடுத்ததாக கூறி உள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது : "தனிமை தான் தனக்கு மகிழ்ச்சியை தருகிறது. நான் நினைத்தபடி எந்த ஒரு ஆணையும் இதுவரை என் வாழ்நாளில் சந்திக்கவில்லை. அதனால் தனியாகவே இருக்க முடிவு செய்துவிட்டேன். திருமணம் என்பது உடல் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல அதில் காதல், நேர்மை ஆகியவையும் இருக்க வேண்டும். நான் குடித்துவிட்டு இவ்வாறு சொல்லவில்லை. எனக்கு குடிப்பழக்கமும் கிடையாது." என கூறி உள்ளார்.



# கவர்ச்சிக்கு தாவிய ராஷி கன்னா

சினிமாவில் நிலைக்க முடியும் என்று அவருக்கு சிலர் ஆலோசனை வழங்கி உள்ளனர். இதனால் கவர்ச்சியாக நடிக்கவும் தயார் என ராஷி கன்னா முடிவெடுத்திருக்கிறார். 'இமைக்கா நொடிகள்' மூலம் தமிழ் சினிமாவுக்கு கதாநாயகியாக அறிமுகமானவர் ராஷி கன்னா. இதைத்தொடர்ந்து 'அயோக்யா', 'அடங்க மறு', 'சங்கத்தமிழன்', 'துக்ளக் தர்பார்', 'அரண்மனை3' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

தனுசுடன் அவர் நடித்த 'திருச்சிற்றம்பலம்' தற்போது திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இது தவிர ஏராளமான தெலுங்கு மற்றும் மலையாள படங்களிலும் அவர் நடித்துள்ளார்.

இதுவரை கதாநாயகர்களுடன் 'டூயட்' பாடி வந்த ராஷி கன்னா, கவர்ச்சி கதாபாத்திரங்களில் நடிக்காமலேயே இருந்து வந்தார். பல வாய்ப்புகள் வந்த போதும் அதனை மறுத்தார். இதனால் எதிர்பார்த்த அளவுக்கு அவருக்கு பட வாய்ப்புகள் வரவில்லை.

தற்போது கவர்ச்சி பாதையையும் கடந்தால் தான் சினிமாவில் நிலைக்க முடியும் என்று அவருக்கு சிலர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

இதனால் கவர்ச்சியாக நடிக்கவும் தயார் என ராஷி கன்னா முடிவெடுத்திருக்கிறார். இதன் முன்னோட்டமாக தனது கலக்கல் கவர்ச்சி படங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

இந்த படங்கள் சமூக வலைத் தளங்களில் வேகமாக பரவி வருகின்றன. இனி ராஷி கன்னாவின் இன்னொரு முகத்தை பார்க்க முடியும் என்பதால் ரசிகர்களும் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.



# சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக மரியா ரியாபோஷப்கா

நடிகை மரியா ரியாபோஷப்கா 'பிரின்ஸ்' படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டதாக தெரிவித்துள்ளார். இயக்குனர் அனுதீப் இயக்கத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் நடிக்கும் 'பிரின்ஸ்' திரைப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு என 2 மொழிகளில் உருவாகி வருகிறது. இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக உக்ரைன் நாட்டைச் சேர்ந்த மரியா ரியாபோஷப்கா நடித்து வருகிறார். மேலும் இந்த படத்தில் சத்யராஜ், பிரேம்ஜி அமரன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். தமன் இசையமைக்கும் இந்த படத்திற்கு மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார். இந்த திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. இந்த நிலையில் நடிகை மரியா ரியாபோஷப்கா 'பிரின்ஸ்' படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

# நடிப்பு பயிற்சியில் ரோஜா மகள் –அன்ஷு மாலிகா



ஆந்திர சுற்றுலாத்துறை மந்திரியாக இருக்கும் நடிகை ரோஜா தனது மகள் அன்ஷு மாலிகாவை கதாநாயகியாக அறிமுகம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

ரோஜா தமிழ், தெலுங்கு மொழிகளில் 150க்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

பின்னர் குணசித்திர நடிகையானார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நடுவராகவும் பங்கேற்று இருக்கிறார். மந்திரியானதும் நடிப்புக்கு முழுக்கு போட்டு ஒதுங்கினார். இந்த நிலையில் தனது மகள் அன்ஷு மாலிகாவை நடிகையாக்க தானே நடிப்பு பயிற்சி அளித்து வருவதாக கூறப்படுகிறது. நடனப் பயிற்சியும் பெற்று வருகிறார். ரோஜாவின் கணவரும், பிரபல டைரக்டருமான செல்வமணியும் அன்ஷு மாலிகாவுக்கு நடிப்பு பயிற்சி அளிக்கிறாராம். ஏற்கனவே தமிழ், தெலுங்கு தயாரிப்பாளர்கள் அன்ஷுவை கதாநாயகியாக நடிக்க வைக்க தன்னை அணுகியதாக ரோஜா தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் தற்போது அமெரிக்காவில் உள்ள பிரபல திரைப்பட கல்லூரியில் படிக்க அன்ஷு மாலிகாவுக்கு இடம் கிடைத்துள்ளதாகவும், அங்கு சென்று நடிப்பு, இயக்குனர், திரைக்கதை எழுதுதல் போன்ற பயிற்சிகளை எடுக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. படிப்பை முடித்து நாடு திரும்பியதும் கதாநாயகியாக அறிமுகமாக இருக்கிறார்.



# மழைக் காலத்தில் காலணிகளை பராமரிப்பது எப்படி...

கோடை வெயில் முடிந்து, பருவ மழை ஆரம்பித்திருக்கிறது. வெயில் காலத்தைப் போலவே, மழைக்காலத்திலும் சரும பராமரிப்பு, சரியான உடைகளை தேர்ந்தெடுப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவது முக்கியம். குறிப்பாக மழைக்காலத்திற்கு ஏற்ற காலணிகளை அணிவதில் கவனம் செலுத்த வேண்டும். காலணிகள் தேர்ந்தெடுப்பு மற்றும் பராமரிப்பு குறித்து தெரிந்துகொள்வோம்.

★ மழைக்காலத்தில் காலணிகளை உலர்வாக வைத்திருப்பது முக்கியம். ஈரமான காலணிகளை அப்படியே அணியக் கூடாது. வெளியில் போய் வந்த பிறகு காலணிகளுக்குள் இருக்கும் நீரை வடிய வைத்து, உலர வைக்க வேண்டும். வாய்ப்பில்லாதவர்கள் காலணிகளை உலர வைக்க ஹேர் டிரையரை உபயோகிக்கலாம்.

★ ஈரப்பதத்தை உலர வைக்கத் தவறினால் பாதத்திலும், விரல்களின் இடுக்குகளிலும் பூஞ்சைத் தொற்றுகள், சேற்றுப் புண் பாதிப்புகள் வரக்கூடும்.

★ ஈரமான காலணிகளில் இருந்து துர்நாற்றம் வராமல் இருக்க சிலிக்கா ஜெல், கற்பூரம், நாப்தலின் உருண்டைகள் போன்றவற்றை போட்டு வைக்கலாம். இவை ஈரப்பதத்தை உறிஞ்சுவது மட்டுமில்லாமல், காலணிகளில் இருந்து துர்நாற்றத்தை நீக்கவும் வழி செய்யும்.

★ மழைக்காலத்தில், பாதங்களுக்கு சரியான அளவில் பொருந்தும் வகையில் காலணிகளை வாங்க வேண்டும். ஏனெனில் சாக்கடை நீர், மழைநீர் போன்றவை பாதங்களில் படிந்து கிருமித் தொற்றை உண்டாக்கும் வாய்ப்புகள் அதிகம். இதைத் தவிர்க்க தண்ணீர் புகாத, வாட்டர் புரூப் வகை காலணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதன்மூலம் நோய்த்தொற்று, கால்களில் வெடிப்பு போன்றவை வராமல் தடுக்கலாம்.

★ மழைக்காலத்தில் ஹீல்ஸ் வகை காலணிகளைத் தவிர்க்க வேண்டும். இவை எதிர்பாராமல் மழை நீரில் மாட்டிக் கொண்டால், நடக்கும்போது சிரமத்தை ஏற்படுத்தும்.

★ஷூ உபயோகிப்பவர்கள், மழை நீர் புகாத ஷூக்களை வாங்கிப் பயன்படுத்தலாம். இல்லையெனில் ஷூவுக்குள் தண்ணீர் புகாத வண்ணம் பிளாஸ்டிக் கவர்களை வாங்கி அணிந்து கொள்ளலாம்.

★ ரப்பர் அல்லது பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட 'பிளிப் பிளாப்' வகை காலணிகள், மழைக்காலத்தில் அணிவதற்கு ஏற்றவை. இவை தண்ணீரை உறிஞ்சாமல் கால்களை உலர்வாக வைக்கும்.

★ ரப்பர்சோல்ட் செருப்புகள், மழைக்காலத்தில் வீதிகளில் நடக்கும்போது நல்ல பிடிமானத்தைக் கொடுக்கும். பாசி, சகதி போன்றவை வழுக்கி விடாமல் தடுக்கும்.

★ பட்டையுடன் கூடிய காலணிகள் மழைக்காலத்தில் அணிவதற்கு பொருத்தமானவை. ஈரம்படும்போது கால்களின் பிடியில் இருந்து வழுக்காமல் இருப்பதற்கு இவை உதவும்.





# கோதுமை சீடை

**தேவையான பொருட்கள்:**

கோதுமை 1 கப்
பொட்டுக்கடலை 2 மேசைக்கரண்டி
வெண்ணெய் 3 தேக்கண்டி
எள் 1 தேக்கரண்டி
சீரகம் 1/4 தேக்கரண்டி
பேக்கிங் சோடா 1/4 தேக்கரண்டி
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு
தண்ணீர் தேவையான அளவு

**செய்முறை**

முதலில் ஒரு சுத்தமான வெள்ளைத் துணியில் கோதுமை மாவை போட்டு கட்டி, இட்லி பாத்திரத்தில் வைத்து, 15 நிமிடம் ஆவியில் வேக வைக்க வேண்டும்.

பின்னர் அதனை இறக்கி, ஒரு தட்டில் போட்டு கையால் உதிர்த்துக் கொள்ள வேண்டும். பின் அதனை சல்லடை கொண்டு ஒரு முறை சலித்துக் கொள்ள வேண்டும். பின்பு மிக்ஸியில் பொட்டுக்கடலை போட்டு பொடி செய்து கொள்ள வேண்டும். அதனையும் சலித்துக் கொள்ள வேண்டும்.

பிறகு ஒரு பாத்திரத்தில் கோதுமை மா, பொட்டுக்கடலை மா, உருக வைத்த வெண்ணெய், சீரகம், எள், உப்பு மற்றும் பேக்கிங் சோடா சேர்த்து, பின் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, மென்மையாக சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ள வேண்டும். பின் அதனை சிறுசிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும்.

ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், உருட்டி வைத்துள்ள சீடைகளை போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுத்தால், கோதுமை சீடை ரெடி!!!

## கண்கவர் ஆடை வடிவம்





# எடைக் குறைப்புக்கு அவசியமான நீர்ச்சத்து

ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்வதற்கு, உடல் எடையை சரியாக பராமரிப்பது முக்கியம். எடையைக் குறைக்க முயற்சிப்பவர்கள் பலர், சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவது, கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பது என்று உணவு முறையை மாற்றி அமைத்து பின்பற்றுவார்கள். இவற்றுடன் நீர்ச்சத்து நிறைந்த உணவுகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்வதும், தேவையான அளவு தண்ணீர் குடிப்பதும் உடல் எடைக் குறைப்பில் அவசியமானது. இதைத் தவிர்க்கும்போது எடையைக் குறைப்பதற்காக எடுக்கும் முயற்சிகள் பலன் அளிக்காது. நம் உடல் 60 சதவீதம் தண்ணீரால் ஆனது. உடலில் தண்ணீர் அளவு குறைந்தால் தலைவலி, சோர்வு, தலைச் சுற்றல் போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும். உணவு உண்பதற்கு 30 நிமிடத்திற்கு முன்னும், சாப்பிட்டு 30 நிமிடம் கழித்தும் தண்ணீர் குடிப்பது, செரிமானம் சீராக நடைபெறுவதற்கு உதவும். உடலில் அதிகமாக உள்ள கலோரிகளை எரிக்கவும், சாப்பிடும் உணவில் உள்ள சத்துக்களை உடல் சரியான முறையில் உறிஞ்சவும் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். இதனால் உடல் எடையும் சீராகக் குறையும்.

தனியாகத் தண்ணீர் குடிக்க விருப்பம் இல்லாதவர்கள், எலுமிச்சம் பழச் சாற்றை தண்ணீரில் கலந்து குடிக்கலாம். இது செரிமானத்தை ஊக்குவிக்கும். எலுமிச்சையில் உயிர்ச்சத்து சி மற்றும் டையூரிடிக் பண்புகள் உள்ளன. இதனால் உடலில் உள்ள நச்சுப்பொருட்கள் நீங்குவதுடன், தேவையற்ற கொழுப்பு கரையும். சர்க்கரை சேர்த்த பானங்கள் அதிக கலோரிகளைக் கொண்டிருப்பதால் உடல் எடையை அதிகரிக்கச் செய்யும். பழச்சாறு, தேநீர், பச்சைத் தேயிலை தேநீர் போன்றவற்றை சர்க்கரை சேர்க்காமல் பருகலாம். அதிக பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சாப்பிடுவது உடல் எடை குறைப்பதற்கு உதவுவதோடு, கெட்டக் கொழுப்பு அதிகரிக்கும் அபாயத்தையும் குறைக்கும்.

# இந்த ஆண்டின் சிறந்த விளம்பர தூதர் யார்?






திரைத்துறையில் கோலோச்சும் எடிசன் திரை விருதுகள் வழங்கும் நிறுவனம் விளம்பர படங்களில் நடிக்கும் திரை பிரபலங்கள், விளம்பர இயக்குனர்கள், விளம்பர நிறுவனங்கள் போன்றவர்களுக்கு ஏழாம் ஆண்டு எடிசன் திரை விளம்பர விருதுகள் செப்டம்பர் மாதம் 10ம் திகதி சென்னை கலைவாணர் அரங்கில் வழங்க உள்ளது. அந்நிகழ்வில் 2021 2022 ஆம் ஆண்டுகளில் வெளியீடு கண்ட விளம்பரங்களுக்கு, இணைய மூலம் வாக்குகள் பெற்று அதிகமாக வாக்குகள் பெற்ற விளம்பரங்களுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன. அந்த விருதில் 33 வகையான விளம்பரங்கள் வகைப் படுத்தி ஒவ்வொரு வகையிலும் குறைந்த பட்சம் ஐந்து விளம்பரங்கள் என 200 மேற்பட்ட விளம்பரங்கள் போட்டியில் உள்ளன. இதில் வெற்றி பெறும் விளம்பரங்களுக்கு விளம்பர தூதர், விளம்பர இயக்குனர், விளம்பர நிறுவனர் என விருதுகள் வழங்கப்பட உள்ளன. இந்நிகழ்வில் பல்வேறு நாட்டு தூதர்கள், விளம்பர நிறுவனங்கள், திரைத்துறை சார்ந்த பிரபலங்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்நிகழ்வு பல்வேறு நாடுகளில் உள்ள தனியார் தமிழ் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாக உள்ளது. வாக்களிக்க www.edisonawards.in மூலமாகவும் மற்றும் Edison Awards செயலியை பதிவிறக்கம் செய்யலாம். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை எடிசன் விருது குழு தலைவர் செல்வகுமார் மற்றும் எடிசன் விருது குழு பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர் மலேசிய தீனதயாளன் ஆகியோர் செய்து வருகின்றனர். வாக்களிக்க www.edisonawards.in மூலமாகவும் மற்றும் Edison Awards செயலியை பதிவிறக்கம் செய்யலாம்.

# (அவளுக்கு) her







இலங்கையில் அண்மையில் திரையிடப்படவுள்ள அவளுக்கு என்ற திரைப்படமானது மும்மொழி ரசிகர்களும் கண்டு களிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தை ஆனந்த எஸ் லியனகே சுஜித் லியனகே தயாரித்துள்ளதுடன் கதை மற்றும் நெறியாள்கையை எரங்க சேனாரத்ன மிக சிறப்பாக செயற்படுத்தியுள்ளார். இத்திரைப்படத்தில் எமது மொழிக்கலைஞர் தர்சன் தர்மராஜ் சகோதர மொழி பிரபலங்களான யாஸ் வீரசிங்க, உமேசி விக்ரமசிங்க, மானேல் வானகுரு, சாலனி பாலசூரிய, சாந்த குணவர்தன, மேதானந்த வித்தானகே, கிரண் ஜி சொய்சா, கீர்த்தி ரஞ்சித் பீரிஸ், மில்டன் செபஸ்டியன், ஓமல் நயனா விஜேரத்ன இவர்களுடன் நட்புக்கான சிறப்புத் தோற்றத்தில் தில்ஹானி ஏக்க நாயக்க போன்றோர் நடித்துள்ளார்கள். திரைக்கதை வசனத்துடன் பாடல்களையும் தினாலி ரொசாந்தி சேனாரத்ன எழுதியுள்ளதுடன் ஒளிபதிவை தயா சூரியாராச்சி திறன்பட செய்துள்ளார். உதவி இயக்குராக சந்தன எதிரிசிங்கவும், கலை இயக்குனராக சுரங்க பிரதீப்குமாரவும் பணியாற்றியுள்ளனர். ஒளிபடத்தொகுப்பை தசுன் ரணசிங்கவும் வர்ணக்கலவையை சாஹான் அல்விஸ், 5.1 கலவையை லஹிரு மயாதுண்ணவும் செய்துள்ளனர். இதற்கான இசையை N M J வக்கியாலோ



வழங்கியதுடன் லஹிரு நிசான், ஜனாதர அலுத்கமகே ஒப்பனை பணியை மேற்கொண்டிருந்தனர் தயாரிப்பு முகாமைத்துவ நிர்வாகத்தை றொனால் டி சில்வா கவனித்ததுடன் திரைப்படத்துக்கான ஆங்கில உப தலைப்புக்களை ரமிஷ் உவைஷிம் புகைப்படங்களை மகேஷ் நிசாந்தவும் மேற்கொண்டிருந்தனர்.நாம் ஏனைய நாட்டின் படைப்பக்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது போல் எமது படைப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை என்பதே கசப்பான உண்மை. ஏன் இத்தனை பெயரையும் இதில் குறிப்பிடுகிறேன் என்றால் ஓர் திரைப்படம் திரைக்கு வருவதற்கு முன் எத்தனை கலைஞர்கள் எத்தனை விதமான பங்களிப்புக்களை செய்து அதனை ரசிகர்களுக்கு வழங்குகிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். எமது கலைபடைப்புகளுக்கு நாம் முக்கியதுவம் வழங்கும் போது எமக்குள் ஓர் சிறந்த கலைஞர் எனும் உருவாகுவார் அவர் சர்வதேசம் வரை பேசப்படுவார் என்பதை நாம் உணர வேண்டும். இன்னும் பல படைப்புக்கள் மும்மொழிகளுடன் விரைவில் திரைக்கு வரவுள்ளது. அதற்கான ஆதரவை நாம் வழங்கி எம்மவர்களுக்கு சர்வதேச அந்தஸ்தை பெற்றுக்கொடுக்க நாம் ஒத்துழைப்போம்.



A.K.இளங்கோ ...✍

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



## FILL IN THE MISSING LETTERS



__ arrot

__ emon

__ trawberry

__ pple

__ rapes



This is a cake.
It is my birthday cake.
The cake is big.
My mom baked it for me.

## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# தாயின் பெயரால் மாணவர்களை கௌரவித்து வரும் ஆசிரியர்








ஒட்டமாவடி கல்விக் கோட்ட பிரிவின் கீழ் உள்ள ஓட்டமாவடி தாறுல் உலூம் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியராக கடமையாற்றி வரும் எம்.எல்.எம். அமீன் என்னும் ஆசிரியர் மரணித்த தனது தாயின் பெயரால் மாணவர்களை ஒவ்வொரு ஆண்டும் கௌரவித்து பரிசுகளை வழங்கி வரும் ஒரு விநோதமான ஆசிரியராக இருந்து வருவது பிரதேசத்தில் அனைவரினதும் கவனத்தை ஈர்த்து வருகின்றது.

தரம்5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு பாடசாலைகளில் கற்பித்து வரும் பெயர் பெற்ற ஆசானான இவர் பிரதேச மாணவர்களின் நலன் கருதி தனது வீட்டிலும் பிரத்தியேக கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருபவர்.

2005ம் ஆண்டிலிருந்து ஓட்டமாவடி தேசிய பாடசாலை ஆசிரியராக கடமை பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டதிலிருந்து இன்றுவரை ஆரம்பக்கல்வி ஆசிரியராக கடமையாற்றுவதோடு விசேடமாக பிரதேசத்தில் தரம் 5 மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றார்.

தான் ஆசிரியப் பணியை தெய்வீக பணியாக நோக்குவதுடன் அதற்காக வேண்டி இலவசமாக பல பணிகளையும் செய்து வருவதாக கூறுகின்றார்.

தனது தந்தை கூலி வேலை செய்து வந்ததனாலும் வருமானம் போதாமையினால் தனது தாய் தையல் வேலை செய்து தந்தைக்கு ஆதரவாக இருந்து தனது பெற்றோர் கஷ்டப்பட்டு உழைத்து வருவதை தான் உணர்ந்து வந்ததனால் மரணம் அடைந்த தனது தாயின் பெயரால் ஆசிரியர் நியமனம் கிடைத்ததற்கு பிறகு இவ்வாறு மாணவர்களை கௌரவித்து வருவதாக அவர் குறிப்பிடுகின்றார். தனது தாயான அகமது லெப்பை சகீனா உம்மா ஞாபகார்த்தமாக "சகீனத் பவுன்டேசன்"எனும் அமைப்பை உருவாக்கி தன்னிடம் கற்று வரும் மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவினை சுமார் 10வருடமாக செய்து வருவதாகவும் தன்னிடம் தரம்5ல் கற்ற அதிகமான மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பெருமையோடு கல்விப்பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளிலும் திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதாக அவர் தெரிவிக்கின்றார்.

கொரோனா தொற்று காலத்தில் தரம்5 மாணவர்களின் நலன் வேண்டி நாடளாவிய ரீதியில் நிகழ்நிலை கற்றலை சகீனத் பவுன்டேசன் ஊடாக வழங்கி வைத்ததாகவும் அதற்கு நாடளாவிய அங்கீகாரம் தனக்கு கிடைத்ததாகவும் 1000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் வீட்டிலிருந்து தனது இலவச கற்பித்தல் நடவடிக்கையினால் பயன் அடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரையிலும் தன்னிடம் முழு நேரமாக கற்று 120 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகவும் பகுதிநேர வகுப்புக்களில் கலந்து கொண்டு 150 மாணவர்கள் இதுவரையில் வெட்டுப்புள்ளிகளை கடந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாணவர்களின் உளவியல் தாக்க நெருக்கடிகளுக்கு தீர்வு சொல்லும் முகமாக சில சந்தர்ப்பங்களில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கும் கற்றல் ஆர்வத்தை அதிகரிக்கும் நோக்கில் பரிசுகளை வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது வீட்டிலேயே கௌரவிப்பு விழா நடைபெறுவதோடு ஆசிரியையாக கடமையாற்றும் தனது மனைவி மற்றும் குடும்ப உறவுகளின் உதவிகளைக் கொண்டு இதனை சிறப்பாக நடாத்தி முடிப்பதாகவும் அவர் தனது நேர்காணலில் தெரிவித்தார்.

யு.எல்.எம்.ஹரீஸ்...
(வாழைச்சேனை விசேட நிருபர்)

தனது ஆரம்ப கல்வி மற்றும் இடைநிலை கல்வி என்பவற்றை ஓட்டமாவடி தேசிய பாடசாலையிலும் உயர்தரக்கல்வியை வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையிலும் கற்று வெளியேறிய எம்.எல்.எம்.அமீன் ஆசிரியர் காலி றுகுனு தேசிய கல்வியல் கல்லூரியில் கற்பித்தல் பயிற்சி பெற்றவரும் ஆவார். அத்துடன் தனது இளமாணி பட்டத்தை கிழக்கு பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளதுடன் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் நிறைவு செய்த தொழில்சார் வாண்மை அபிவிருத்தி ஆசிரியரும் ஆவார்.தாய்க்காக வருடாந்தம் மாணவர்களை ஊக்குவிக்கும் இத்தகைய முன்மாதிரியான ஆசான்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# பேய்த் திருமணம்

இந்த வயதிற்கு மேலேயும் "சிங்கிள்டா... கெத்துடா..." என்று சுற்றிக்கொண்டு இருந்தால் கடைசி வரைக்கும் கல்யாணம் ஆகாது என்கிற பீதி லேசாக எட்டிப் பார்க்க தொடங்கியதும் திருமணமாகாத பெரும்பாலானோர்கள் வந்து நிற்கும் ஒரு இடம் மெட்ரிமோனியல் அப்ஸ் மற்றும் வெப்சைட்களே ஆகும்.

என்னதான் டீடெயில் ஆக ப்ரொபைல் அனுப்பி, ஜாதகம் பார்த்து, 10 பொருத்தங்கள் பார்த்து திருமணம் செய்து கொண்டாலும் கூட புரிதல், நேசிப்பு, விட்டுக்கொடுத்தல், பகிர்தல், குறைகளை ஏற்றுக்



கொள்ளுதல் போன்ற "சமாச்சாரங்கள்" உங்கள் இல்லற வாழ்க்கையில் இல்லை என்றால்... "உன்னை கல்யாணம் பண்ணதுக்கு பதிலா ஒரு பேயை கல்யாணம் பண்ணி இருக்கலாம்!" என்கிற டயலாக்கை நீங்கள் சொல்ல வேண்டிய நிலையோ அல்லது கேட்க வேண்டிய நிலையோ ஏற்படலாம்!



என்னப்பா ரொம்ப பயமுறுத்துறீங்க... இதெல்லாம் நமக்கு செட் ஆகாது. நான் கடைசி வரைக்கும் சிங்கிள் ஆகவே வாழ்ந்துடுறேன் என்பவர்கள் தயவு செய்து சீனா பக்கம் சென்றுவிட வேண்டாம். ஏனெனில் நீங்கள் சிங்கிள் ஆகவே வாழ்ந்து செத்தாலும் கூட.. உங்களுக்கு கல்யாணம் செய்து வைக்காமல் விடாத "பேய் திருமணம்" என்கிற ஒரு விசித்திரமான வழக்கம் அங்கே உள்ளது.

ஆம்! சீனாவின் சில பகுதிகளில் கடந்த 3000 ஆண்டுகளாக "பேய் திருமணம்" என்கிற நம்பிக்கை, வழக்கம் நீடித்து வருகிறது. அதாவது, ஒருவர் திருமணம் ஆகாமலேயே இறந்து விட்டார் என்றால், அவருக்கும் அவரை போலவே திருமணம் செய்து கொள்ளாமல் மரணத்தை தழுவிய இன்னொருவருக்கும் செய்து வைக்கப்படும் திருமணமே பேய் திருமணம் ஆகும்.

இப்படி செய்வதன் வழியாக ஒருவர் மரணத்திற்கு பிறகான வாழ்க்கையில் தனிமையில் வாட மாட்டார் என்று சீனர்கள் நம்புகிறார்கள்.

அதெப்படி ஒரே நேரத்தில் 2 திருமணம் ஆகாதவர்களின் சடலங்கள் கிடைக்கும்? எப்படி இந்த திருமணம் சாத்தியமாகும்? என்று குழப்பம் அடைய வேண்டாம். திருமணம் ஆகாமல் இறந்து போன ஒரு "மணமகளின்" எலும்புகளை தோண்டி எடுத்து "மணமகனின்" கல்லறையில் வைப்பதே பேய் திருமணம் ஆகும்.



அதாவது யார் எப்போது வேண்டுமானாலும் இறந்து இருக்கலாம்; ஆனால் இந்த பேய் திருமணத்திற்கு, திருமணம் ஆகாமல் இறந்து போன ஒரு பெண்ணின் எலும்புகள் தேவை; இங்கே தான் சிக்கல்களும் ஆரம்பிக்கிறன.

ஏனெனில் ஆரம்ப காலத்தில், இந்த நடைமுறை "கண்டிப்பாக" இறந்தவர்களுக்காக மட்டுமே என்கிற நிலை இருந்தது, ஆனால் சமீப காலங்களாக, உயிருடன் இருக்கும் ஒருவரை இறந்தவருக்கு ரகசிய முறையில் திருமணம் செய்து வைக்கும் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இதுகுறித்து ஷாங்காய் பல்கலைக்கழக சீனத் துறைத் தலைவர் ஹுவாங் ஜிங்சுன் கூறுகையில், "மணப்பெண்ணின்" எலும்புகளின் விலை, குறிப்பாக இளமையாக இருந்தால், விலை மிகவும் உயர்ந்துள்ளது.

அவரது ஆராய்ச்சியின்படி, இப்படியான எலும்புகள் 30,000 முதல் 50,000 யுவான்கள் வரை விற்பனை செய்யப்படுகின்றன.

சில நேரங்களில் இந்த விலைகள் 100, 000 யுவான் வரையும் கூட செல்லுமாம். இதுபோல சடலங்களை விற்பனை செய்வது கடந்த 2006 ஆம் ஆண்டிலேயே தடைசெய்யப்பட்டு விட்டாலும் கூட இதை ஒரு வியாபாரமாக செய்யும் "கல்லறைக் கொள்ளையர்கள்" இதன் மூலம் வரும் பணத்திற்காக பெண்களை கொலை செய்யும் சம்பவங்களும் கூட நடந்துள்ளது.

# ஔவன் கவிதை

## பரி அல்லது சொல்

இளஞ்சூர்யன் நின்ற உச்சியின் நிழல்
குதிரையின் குழம்பொலியில் படிந்திற்று

பரியின் வேகத்தையொத்தன சொற்கள்
கால்த்தடத்தின் வழி ஏகினேன்

ஒவ்வொரு சொல்லின்
சூடும் தணிந்தில்லை

கிளம்பிப் பறக்கும் புழுதியில்
துலங்கின சொற்கள்

குழம்பொலியின் குரலைப் பருகிய
தாகத்தின் சொற்கலவை

எத்திசை நோக்கிய விரைவு
எத்திசை தொடங்கிய
கனவு

எத்திசையும் தோற்றில சொற்கள்

குழம்பொலியின் இசை கேட்கிறது
அந்திமம் வரை..

வெள்ளை நிறக்குதிரை
எங்ஙனம்
செந்நிறத்தது?

குழம்பொலியின்
நிழலில் கரைகிறேன்
நான் எனும் நாமுமாகி



# மறுசொல்

முல்லை முஸ்ரிபா



## பிரதி உரையாடல்

பிரதிகளுடனான உரையாடல் உயிர்ப்பு மிக்க இலக்கிய வெளியைத் திறக்கவல்லது. பிரதியாளனின் கடும் உழைப்பு அல்லது வியர்வை சிந்தப்படுமிடம் பிரதிதான். அத்தகைய பிரதியை உரையாடுதலூடாக பிரதியாளனின் முகம் பிரதிவாசிப்பாளனின் முகத்தின் வெளிப்படுத்தும் புள்ளியாகவும் பிரதி உரையாடுபவனின் தொழிற்பாடு அமைகிறது.

இன்றைய இலக்கியப் புலத்தில் பிரதி உரையாடல் அல்லது திறனாய்வுத்துறை மீதான கனதியான பார்வை அவசியமாகிறது.

'மறு சொல்லில்' புதுப் பிரதியாளர்கள் தங்களின் பிரதிகள் குறித்த உரையாடலை அல்லது எதிர்வினையை நிகழ்த்துவதற்கென அனுப்பி வைக்கலாம். (077) புதுப்பிரதிகளால் உரையாடலை உயிர்ப்பிப்போம்.

# கவிதை மக்களுக்கான மொழி

நமக்குத் தொழில் கவிதை. கவிதையின் தொழில் மக்களைப் பாடுதல். மானுட வாழ்வின் வெட்டு முகம்தான் கவிதை. கவிதை மொழி ஓர் அற்புதம். மொழியால் இழைக்கப்படும் கவிதையின் உட்கிடக்கைப் பொருளும், அது வாசக மனசில் தோற்றுவிக்கும் உணர்வெழு கோலமும் மிகுந்த கனதியானது.

கவிதை மொழி ரம்மியமானது. லயித்துச் சிலிர்க்க விடுவது. இத்தகைய கவிதைமொழி ஹைரி மன்ஸூரின் அகப்பெயராக வருகிறது. பலஸ்தீன மேற்குக் கரை அகதி முகாம்காரனான ஹைரி, இஸ்ரேலியரால் துரத்தப்பட்டவர்,

பலஸ்தீனின் துயர் கவிந்த வாழ்வின் மீத்துயரத்தை குருதியின் பாடல்களாக 1981இல் பாடியவர். 1983இல் கடல்களெடுத்த மாலையை வரைந்தவர். ஹைரி மன்ஸூரின் மொழியை மறு சொல்லில் பரிமாறுகிறோம்.

அது கல்லுக்கான ஒரு மொழி
தன் சொந்தப் பெயரின் கீழ் அது
நிர்வாணமாய் உட்கார்ந்திருக்கும் போது
அவற்றின் கனிகள் அழியும் போது

அது மழைக்கான ஒரு மொழி
இருவர் ஒரு குடையின் கீழ் அணையும் போது
நடை வழியில் அல்லது லி.ஃப்டில் விரையும் போது

அது மக்களுக்கான ஒரு மொழி
அவர்கள் அழும்போது அல்லது சிரிக்கும் போது
அவர்கள் உண்மைக்கு உண்மையாய் இருக்கும்போது



ஓவியம்: கனிவுமதி

# மாயப் பேய் வெருட்டி



சொற்கள் புகைத்துக் கொண்டிருந்தன. சந்தனப் புகை வாசம் நாசியில் ஏறிக்கொண்டிருந்தது. புகைச்சுருளிடையே துர்நாற்றமொன்றும் கிளம்பிக்கொண்டிருந்தது...

சொற்கள் – பெருத்தசொற்கள், விறைத்தசொற்கள், கொடூரச்சொற்கள், கறுத்தசொற்களென கரும் புகைச்சுருளில் அலைந்தன.

சில மென்சொற்கள்; இனியசொற்கள்;, சாந்திச்சொற்கள்;, வெள்ளைச்சொற்கள் வெண் புகைத்தன. சாந்தமிக்க சொற்களின் வாசனையை ஆரவாரத்தின் இழிசொற்கள் புணர்ந்தன.

அதுவொரு புகைக்கூடம், புராதன ஓலைச் சுவடிகளால் இழைக்கப்பட்ட குடிசை. இருள் மங்கிய மழைப் பொழுதொன்றில் பொழுபொழுத்த நூல்கள் குடிசையில் சங்கீதமிசைத்தன. ஒற்றை வழிப்பாதையில் வளைந்து நெளிந்து குறுகி நிமிர்ந்து பின் குனிந்து உள்ளே நுழைதல் வேண்டும்.

வாசலில் அங்குமிங்குமெனக் குறுக்கும்நெடுக்குமாக சொற்கள் கிடந்தன. சில மழையில் நனைந்தும், வேறு சில முன்னரடித்த வெயிலில் வரண்ட்டும் கிடந்தன. வாசலருகில் சில பழைய சொல் மூட்டைகள் நீர்த்துக் கிடக்கின்றன. முடிச்சவிழ்ந்து அல்லது தெருநாய் கடித்து இழுத்து வெளியே எறிந்த குறைச் சொற்களும் கொட்டுண்டு கிடந்தன. இவற்றையெல்லாம் கடந்து உட்புக வேண்டும். மூக்கைப் பொத்திக்கொண்டு சில பொழுது கண்களைப் பாதி மூடியபடி நடக்கிறேன் நான் எனும் அபங்காப்பிடாரி.

மேலும் சில புஸ் பிடித்த சொற்கள் பிடித்திழுக்கின்றன. நெருப்புச்சொற்கள் நெஞ்சில் முட்டுண்டன. முள்ளுடைச்சொற்கள் காலைத் தைத்தன... உள்ளே நுழையும் ஆவல் பெருத்த பிடாரி நான். உள்ளே காலெடுத்து வைக்கிறேன்.

கொத்துக்கொத்தாக இனம்புரிய முடியாத – அர்த்தம் விளங்க இயலாத சொற்கட்டுகள் பனுவல்கள் போல் அடுக்குகளில் கிடந்தன. கி.மு காலம் என ஊகிக்கிறேன். அவையொத்த வேறும் புதுவாசம் கிளம்பும் சொற்கள் பெக்கிங் உடைக்காமல் கிடந்தன. சொல்லடுக்குகளிலிருந்து தூசும் மாசும் கிளம்பின.

குடிசையின் மையத்தில் கண்கள் குத்திட்டன. வலக்கையில் நவீன எழுத்தாணி திறந்தபடி இருந்தது. அதிலிருந்தொழுகிய எழுத்துத்துளிகள் திறந்திருந்த பனுவலின் இருபத்தோராம் பக்கத்தில் சிந்தின. சிந்தச்சிந்த புதுக்கோலம். வர்ணம் பூசிய கிறுக்கல் ஓவியம் போல எழுத்துகளின் சொற்கலவை. அள்ளி முகரவும் அருந்தித் திளைக்கவுமென பக்த கோடிகள் – வாசக கோடிகள் குடிசை வாசலில் ஒற்றைக்காலில் கிடந்தன.

பக்த கோடிகளின் வரிசை அதிசயமானது. முகநூலிகள், சமூக வலைஞர்கள், வானொலி வாசிகள், தொலைக்காட்சி தொந்திகள், பனுவலிகள் என வரிசையொரு வரைபடம். நான் எத்தனையாம் படம் என்னையே கேட்டேன்.

வெளியே இருட்டில்; முழக்கம் இடி, மின்னல் உள்ளிருந்த மாய வெருட்டியின் அண்டையிலிருந்தேன். பேய்விரட்டுபவன் போல் உச்சாடத்தில் பொங்கியெழுந்தது வெருட்டி. அதன் முன் சொற்குவியல்கள் உதறலெடுத்தன. நவீனத்தை – பின் நவீனம் வெருட்டியது. பின் நவீனத்தை மெஜிக் ரியலிஸம் வெருட்டிக்கொண்டிருந்தது.

பழைய செய்யுளில் செதுக்கிய சொற்கூட்டம் உடைந்து இடைவெளிவிட்டு புதிய வடிவமெடுத்தது. யாப்பணிகலன்கள் உடைந்து சிதறின. குழப்பத்தின் மயக்கத்தில் அமர்ந்தேன். எந்தச்சொல் எனக்கானது. மூடிய கைவிரலை வலுக்கட்டாயமாக நீக்கி என் உள்ளங்கையில் ஒரு சொல்லைத் திணித்தது வெருட்டி. அந்தச் சொல்தான் மெஜிக் ரியலிசத்தின் அடுத்த சொல் முட்டை. முட்டையை முழுங்கி வெளியே ஓடுகிறேன். என்னை விரட்டுகிறது மாயப்பேய் வெருட்டி..

– பொன்மீரா

# பாவேந்தல் எனும் பொன்னெழுத்து



ஈழத்து இலக்கியப் புலத்தில் ஆளுமை நாமமாக இருபவர்களுள் முக்கியமானவர் தன் ஊரின் பெயரை தன் பெயரின் முன்னொட்டாய்க் கொண்டவர் பாவேந்தல் என்கிற புகழ்ப் பெயர் கொண்ட பாறூக் அவர்கள்.

கிழக்கின் பாலமுனை மடியில் 1954ஆம் வருடத்தின் முதல்நாளில் பிறந்த இவர் கல்முனை சாஹிராவில் உயர்தரம் கற்றவர், வணிக முகாமைத்துவத்தின் உயர் கற்கையாளரான பாறூக் வங்கித் துறையில் 36 வருடங்கள் பணி புரிந்தவர்.

எழுபதுகளில் எழுத்தில் துளிர்த்த இவர் ஐம்பதாண்டுகள் பொன்னெழுத்துத் தந்தவர். பதம் (1987) முதல் மீளப் பறக்கும் நங்கணங்கள் (2020) வரை இதுவரை ஒன்பது பொன்னெழுத்து பனுவல்களைத் தந்துள்ளார். இவற்றுக்கென விருதுகள் பல சூடிய பாவேந்தல், இலக்கியத் திலகம், கலாபூஷணம் பாலமுனை பாறூக் மரபுக் கவிதைக்கும் நவீன கவிதைக்குமான இடைவினை நிகழ்த்துபவர். கவிதை, காவியம், குறும்பா, திறனாய்வு, கவிதைவாசிப்பு என இலக்கிய எழுத்தின் தளங்களில் பிரகாசிக்கும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் கிழக்கின் வாசனைச் சொற்களைக் குழைத்தெடுத்து அழகுக் குரலில் கவி சொல்ல வல்லவர்.

இவரது 'மீளப் பறக்கும் நங்கணங்கள்' நவீன காவிய எழுத்தின் இன்னொரு பரிமாணம்.

மகாகவியின் நவீன காவிய மரபின் தொடர்ச்சியாக முகிழ்க்கும் பாலமுனை பாறூக் தனது மூன்று நவீன காவியங்களுக்குப் பிறகு அண்மையில் இந்நவீன காவியத்தை பொன்மயப் படுத்தியுள்ளார். முதுமைப் பெற்றோர் பிள்ளைகளின் உறவுநிலை குறித்த பேசு பொருளை முன்னெடுக்கும் கவிஞர் ஈழத்து நவீன காவிய எழுத்தின் அழுத்தப் புள்ளியாக வெளிப்படுகிறார்.

அறுபதை அடைந்த அகமது மாஸ்டர் (இயல் 1) தொடங்கி விஷேடமாய் நடந்த விருந்துபசாரம் (இயல் 12) வரை வளரும் இக்காவியம், முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல் கோலத்தை உணர்வு பூர்வமாகப் பின்னியிருக்கிறது. எளிய மொழியாடல், யதார்த்த சம்பவக்கோர்வை, படிப்பினைகளைப் பிடித்திழுக்கும் திருப்பங்கள், மானிட மனோபாவங்கள்.... என காவிய நகர்ச்சி பெறுமானம் பெறுகிறது.

'அறுபது வயது அகமது மாஸ்டர் அரும்பணி புரிந்து அதிபருமாகி பள்ளிக்கூடப் பணியினை முடித்தார்' எனத் தொடங்கி, 'ஆமீன் ஆமீன் என்ற குரல்கள் அந்த வீடெல்லாம் நிறைந்து ஒலித்தது' என நிறைவுறும் மீளப் பறக்கும் நங்கணங்கள் பனுவல் குறித்து பேராசிரியர் செ.யோகராசா, கலாநிதி க.கலாமணி ஆகியோர் அணிந்துரைக்கின்றனர். பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் பின்னுரைக்கிறார். முஸ்லிம் படைப்பு வெளியில் பாவேந்தலின் வரலாற்றியல் குறித்து சிலாகிக்கிறார். இவரது முன்னைய மூன்று காவியங்களின் பெறுமானத்தைப் பதிவு செய்கிறார். பண்பாட்டையும் மரபுகளையும் நினைவூட்டியபடி மனதைத் தாக்கும் கிழக்குப் பிராந்திய முஸ்லிம் பிரச்சினைகள் சிலவற்றை இக்காவியங்கள் மூன்றும் பேசுவதாக அவருரைக்கிறார். கிண்ணியா அமீரலி, எழுகவி ஜலீல் ஆகியோர் இரசனைக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர். ஜீவநதியின் 176வது வெளியீடாக பாலமுனை பாறூக் மீளவும் வெளிப்படுகிறார்.

மேலும் நவீன எழுத்தின் உந்துதலை அவாவும் இன்றைய இலக்கியப் புலத்தில் பொன்னெழுத்தின் வரவு மேலானது. பாவேந்தல் பொன்னேடு தந்த பாலமுனையார் வென்மேரி ட்ரஸ்ட் இன் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் நினைவாக ஆக்க இலக்கியத் துறைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருதினைக் கடந்த வாரம் பெற்றிருக்கிறார். பண்பட்ட பாவேந்தல் எனும் பொன்னெழுத்து வாழட்டும்.

# பிரபல தென்னிந்திய பாடகி "ஜிக்கி"

பிரபல தென்னிந்திய பாடகி "ஜிக்கி" என்ற கிருஷ்ண வேணி 1935 நவம்பர் 3 ஆம் திகதி பிறந்தார்.

ஜிக்கி கிருஷ்ணவேணி புகழ் பெற்ற தமிழ்த் திரைப்பட பின்னணிப் பாடகி. இவர் பாடிய பாடல்கள் பத்தாயிரத்திற்கும் அதிகமானவை. தமிழ்த் திரைப்படங்களில் மாத்திரமன்றி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சிங்களம் ஆகிய மொழிப்படங்களிலும் பாடியுள்ளார். 1943 இல்

பந்துலம்மா திரைப்படத்தில் நடிகையாகவும், பின்னணிப் பாடகியாகவும் அறிமுகமாகி 2002 வரை, கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகள் திரையுலகில் பாடியிருக்கிறார். எழுபது வயது நெருங்கும் சமயத்திலும் இவருக்குப் பாடல் வாய்ப்பு கிடைத்திருந்தது. இவர் பின்னணிப் பாடகர்

ஏ. எம். ராஜாவின் மனைவி ஆவார். ஜிக்கி தனது 6 ஆவது வயதிலேயே இசையார்வம் கொண்டிருந்தார். இவர் தனது 11 ஆவது வயதிலேயே இவரது தாய்மாமன் சிட்டிபாபுவின்

முயற்சியினால் இசையமைப்பாளர் எஸ். வி. வெங்கட்ராமனின் இசையில், ஞானசௌந்தரி 1948

திரைப்படத்தில் பாலஞான சௌந்தரி பாடுவதான பல்லவி

அருள்தாரும் தேவமாதாவே ஆதியே இன்ப ஜோதியே என்ற பாடலைப் பாடினார். தொடர்ந்து பந்துலம்மா, தியாகையா, கொல்லபாமா,

மனதேசம்(என்.டி.ராமராவின் முதல் படம்) ஆகிய தெலுங்குப் படங்களில் வாய்ப்புக் கிடைத்தது. இப்படங்களின் பாடல்களைக் கேட்ட இசையமைப்பாளர்



ஜி. ராமநாதன், ஜிக்கியின் 13வது வயதில், 1950 இல் மொடேர்ன் தியேட்டர்சின் மந்திரி குமாரி திரைப்படத்தில் வாராய் நீ வாராய், உலவும் தென்றல் காற்றினிலே முதலிய டூயட் பாடல்களைத் திருச்சி லோகநாதனுடன் சேர்ந்து பாடவைத்தார். இப்படமும் பாடல்களும் பெற்ற வெற்றியானது 1950 1960 காலப்பகுதியில் ஜிக்கியின் பொற்காலத்தை உறுதி செய்தது. 1952 இல்

கே.வி.மகாதேவன்

இசையமைத்த குமாரி படத்தில் தனது வருங்காலக் கணவரான ஏ. எம். ராஜாவுடன் ஜிக்கி முதன்முதலில் பாடினார். ராஜாவுடன் இணைந்து ஜிக்கி நூற்றுக் கணக்கான காதல் பாடல்களும், சோகப்பாடல்களும் பாடியுள்ளார். வட இந்திய நடிகரான ராஜ்கபூரின் சொந்தத் தயாரிப்பான "ஆஹ் "

ஹிந்திப்படத்தின் தமிழ்ப்பதிப்பு அவன் என்பதில் ஜிக்கி ராஜாவுடன் சேர்ந்து பல இனிய பாடல்களைப் பாடினார். மேலும் பல்வேறு பின்னணிப் பாடகர், பாடகிகளுடனும் ஜிக்கி பாடினார்.ஜிக்கி ஆந்திராவின் சந்திரகிரியைப் பூர்வீகமாகக் கொண்ட கஜபதிநாயுடுவுக்கும், சென்னையைச் சேர்ந்த ராஜகாந்தம்மாவுக்கும் பிறந்த ஒன்பது பிள்ளைகளில் மூத்தவர்.

1955 இல் மகேஸ்வரி படத்தின் அழகு நிலாவின் பவனியிலே பாடலின் ஒத்திகை இடைவேளையின் போது, ஏ. எம். ராஜா தனது காதலை ஜிக்கியிடம் வெளியிட்டார்.1958 இல் பெற்றோர் ஆசியுடன் ஜிக்கி ஏ. எம். ராஜாவைத் திருமணம் செய்து கொண்டார்.

**இவர் பாடிய சில பிரபல பாடல்கள்:**

அருள்தாரும் தேவமாதாவே,
ஆசைநிலா சென்றதே,
காதல் வாழ்வில் நானே,
கண் கான்பதற்குள் மனம் கனிந்து விடும்,
மானைத் தேடி மச்சான் வரப் போறான் (நாடோடி மன்னன்),
என் இன்பம் எங்கே (நாடோடி மன்னன்),
மயக்கும் மாலைப்பொழுதே (குலேபகாவலி),
ஜீவிதமே சபலமோ,
கிராமத்தின் இதயம் பேரன்பின் நிலையம்,
கள்ளங்கபடம் தெரியாதவனே,
காதல் வியாதி பொல்லாத,து
ஊரெங்கும் தேடினேன்,
துள்ளாத மனமும் துள்ளும்,
நான் வாழ்ந்ததும் உன்னாலே,
பச்சைக்கிளி பாடுது,
அழகோடையில் நீந்தும் அன்னம்,
நாடகமெல்லாம் கண்டேன்,
பூவாமரமும் பூத்ததே,
உள்ளம் ரெண்டும் ஒன்று,
இன்று நமதுள்ளமே,
கொக்கரக் கொக்கரக்கோச் சேவலே,
சின்னப்பெண்ணான போதில,
கண்களால் காதல்காவியம்,
யாரடி நீ மோகினி,
பேசும்யாழே பெண்மானே,
அன்பே என்றன் முன்னாலே,
மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ,
காதலெனும் கோயில் (வட்டத்துக்குள் சதுரம் 1978),
ராத்திரி பூத்தது காட்டு ரோஜா (தாயம் ஒண்ணு 1988),
நினைத்தது யாரோ (பாட்டுக்கொரு தலைவன்),
வண்ண வண்ண சொல்லெடுத்து (செந்தமிழ்ப் பாட்டு 1994)..... ,

2004 ஒகஸ்ட் 16அன்று ஜிக்கி அமரரானார்.

கலைஞர்கள் மண்ணை விட்டு மறைந்தாலும் அவர்கள் விட்டுச் சென்ற கானக் குரல்கள் வாயிலாக ரசிகர்களின் மனங்களில் என்றென்றும் வாழ்கின்றனர்.



# ஒரு விரல் கிருஷ்ணா ராவ்

ஒரு விரல் கிருஷ்ணா ராவ் இந்திய திரைப்பட நடிகராவார். இவர் தமிழ்த் திரைப்படங்களில் நகைச் சுவை நாயகனாக நடித்துள்ளார்.

கலைமாமணி விருது இவருக்கு தமிழக அரசு வழங்கியுள்ளது. 1965ல் ஒரு விரல் எனும் தமிழ் திரைப்படத்தில் நடித்தமையால், ஒரு விரல் கிருஷ்ணா ராவ் என்று அறியப்படுகிறார்.இவர் 600க்கும் அதிகமான தமிழ், தெலுங்குத் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

ஒரு விரல் கிருஷ்ணா ராவ் பிறப்பு1929.

ஆகஸ்ட் 16. 2002 அகவை 73 சென்னையில் காலமானார்.

வண்ணக் கோலங்கள் தொலைக்காட்சி தொடரில் நடித்துள்ளார்.

வெள்ளை ரோஜா, தில்லு முல்லு போன்ற படங்களில் இவரின் நகைச் சுவை அபாரம்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

## அஸ்பக் அகாடமி ஏற்பாட்டில் வரலாற்றில் முதன்முறையாக ஓட்டமாவடியில் இடம்பெற்ற கால்மேசைப்பந்து அறிமுகம்





இலங்கையின் 71வது விளையாட்டாக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கால்மேசைப்பந்து (Teqball) விளையாட்டினை மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகம் செய்யும் நிகழ்வும், சர்வ தேச சம்மேளனத்தினால் இணைய வழியில் இடம்பெற்ற Level C கால்மேசைப்பந்து விளையாட்டின் நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த நடுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அஸ்பக் அகாடமி ஏற்பாட்டில் ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட தேசிய சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளரும் ASSPEK அகாடமியின் பணிப்பாளருமான ஏ.எல்.எம்.இர்பானின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் கலந்து சிறப்பித்தார். அத்துடன், சிறப்பதிதியாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம்.ராசிக் (LLB) அவர்களும் ஏனைய அதிதிகளாக ASSPEK விளையாட்டுக்கழகத் தலைவர் ஏ.எல்.எம்.இர்ஷாத், முன்னாள் விளையாட்டு உத்தியோகத்தர் பீ.வீ.பிஸ்தாமி ரவூப், கிராம சேவை உத்தியோகத்தர்களான எம்.எம்.சாதாத், எம்.சஜி, மனிதம் அமைப்பின் செயலாளர் எம்.ஷாஜகான், ஏ.எல்.எம்.லியாப்தீன் JP ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் போது கால்மேசை அறிமுகம், கால்மேசைப்பந்து விளையாட்டு நடுவர்கள் (Teqbatti) சீருடை அறிமுகம் என்பன இடம்பெற்றதோடு, நடுவர் பரீட்சையில் சிந்தியடைந்த 35 நடுவர்களுக்கான அடையாள அட்டை, சான்றிதழ்கள் மற்றும் சீருடைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# அஸ்பக் அகாடமி ஏற்பாட்டில் வரலாற்றில் முதன்முறையாக ஓட்டமாவடியில் இடம்பெற்ற கால்மேசைப்பந்து அறிமுகம்



இலங்கையின் 71வது விளையாட்டாக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கால்மேசைப் பந்து (Teqball) விளையாட்டினை மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகம் செய்யும் நிகழ்வும், சர்வதேச சம்மேளனத்தினால் இணைய வழியில் இடம்பெற்ற Level C கால்மேசைப்பந்து விளையாட்டின் நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த நடுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அஸ்பக் அகாடமி ஏற்பாட்டில் ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இடம் பெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.